364

தமிழ்நாடு
சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
ஏப்ரல் 16, 1999 தொகுதி 73
எண் 1.

D
V2II,31'N99
N99.73.1.
279078

வெளியீடு 18-02-2000 Issued 18-02-2000

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

**வெள்ளிக்கிழமை, ஏப்ரல் 16, 1999 - தொகுதி 73 - எண் 1**

**Friday, 16th April, 1999—Volume 73 - No. 1**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009*

**Legislative Assembly Secretariat, Fort St. George,**
**Chennai - 600 009**

விலை ரூ. 3.00] [Price Rs. 3.00

16-04-1999

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் | iii-vi |
| Personnel of the Government of Tamil Nadu | vii-x |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் பட்டியல் | xiii-xiv |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி) | xv-xxv |
| *1.* ***வினாக்கள்-விடைகள்--*** | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 1-39 |
| *2.* ***கவன ஈர்ப்பு--*** | |
| பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டக் கால்வாய் பகுதியில் ஒரு மடை விட்டு ஒரு மடை பாசன முறை அமல்படுத்தல் | 40-43 |
| *திரு. ம. சண்முகம் | 40-42 |
| திரு. ப. மோகன் கந்தசாமி | 43 |
| *3.* ***அறிக்கை அளித்தல்--*** | |
| பொதுக் கணக்குக் குழு | 44 |

| | பக்கங்கள் |
|---|---|
| 4. மானியக் கோரிக்கைகள், 1999-2000, விவாதமும் வாக்கெடுப்பும்--தொடர்ச்சி (அ) கோரிக்கை எண் 13 - நீதி நிருவாகம் (ஆ) கோரிக்கை எண் 14 - சிறைச்சாலைகள் | 44-139 |
| *மாண்புமிகு திரு. ஆலடி அருணா | 44,49,54, 62,63,79, 82,90,98, 116,120-134 |
| *திரு. ஆர். சொக்கர் | 54-65 |
| திரு. கே.எம். விஜயகுமார் | 65-69 |
| திரு. ம. அப்துல் லத்தீப் | 69-80,91 |
| *திரு. நா. பெரியசாமி | 80-86 |
| திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத் | 87-92 |
| திரு. வெ.அ. ஆண்டமுத்து | 93-96 |
| *திரு. ஏ. ராசேந்திரன் | 96-100 |
| *திரு. பி.என். வல்லரசு | 101-104 |
| திரு. மா. இராமச்சந்திரன் | 104-108 |
| திரு. சி. ஞானசேகரன் | 86,108-120,133 |
| 5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்-- | 139-140 |


221078



## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

## ஆளுநர்--நீதிபதி செல்வி மீ. பாத்திமா பீவி

## அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. **முதலமைச்சர்** : **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி :** பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, மாவட்ட வருவாய் அதிகாரிகள், உள் துறை, நிதி, திட்டம், தொழில்கள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, சிறுபான்மையினர் நலன், கடவுச் சீட்டு மற்றும் வணிக வரிகள்.

2. **கல்வி அமைச்சர்** : **மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் :** தொழிற்கல்வி உள்ளிட்ட கல்வி, சட்டமன்றம், தேர்தல்கள், மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல், விளையாட்டு மற்றும் இளைஞர் பணிப்படை மற்றும் முன்னாள் இராணுவத்தினர்.

3. **மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலம் மற்றும் மின்சாரம்.

4. **வருவாய்த் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் :** வருவாய், வருவாய் வாரியம், மாவட்ட வருவாய் நிருவாகம் மற்றும் மாவட்டத் துணை ஆட்சியாளர்கள்.

5. **ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. கோ.சி. மணி :** நகராட்சி நிருவாகம், சமுதாய வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் ஊரகக் கடன்கள், நகர்ப்பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்.

6. வேளாண்மைத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம் :
வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக்கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்புப் பயிர் மேம்பாடு.

7. பொதுப்பணித் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. துரைமுருகன் :
பொதுப்பணிகள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டம் மற்றும் செயற் திட்டப் பணிகள்.

8. போக்குவரத்துத் துறை அமைச்சர் : மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி :
போக்குவரத்து, நாட்டுடைமை யாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம் மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

9. நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. பசும்பொன் நா. கிருட்டிணன் :
நெடுஞ்சாலைகள் மற்றும் துறைமுகங்கள்.

10. தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் : மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன் :
தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை.

11. உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. கா. நா. நேரு :
உணவு, விலைக் கட்டுப்பாடு மற்றும் குடிமைப் பொருட்கள் வழங்கல், பொது விநியோக முறை, கூட்டுறவு மற்றும் புள்ளிவிவரங்கள்.

12. பால்வளத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. க. சுந்தரம் :
பால், பால்பண்ணை வளர்ச்சி, குடிசை மாற்றுத் திட்டம் மற்றும் இடவசதிக் கட்டுப்பாடு.

13. தொழிலாளர் நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான் :
தொழிலாளர் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, இரும்பு மற்றும் எஃகுக் கட்டுப்பாடு, பத்திரிகை அச்சுக் காகிதக் கட்டுப்பாடு மற்றும் இசுலாமிய அறக்கட்டளை (வக்ஃப்).

14. சட்டத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. ஆலடி அருணா :
சட்டம், நீதிமன்றங்கள், சிறைச் சாலைகள், எடைகள் மற்றும் அளவைகள் குறித்த சட்டம், கம்பெனிகள் பதிவு, கடன் வழங்கல் பற்றிய சட்டமியற்றல் உட்பட கடன் நிவாரணம் மற்றும் சிட்டு நிதி பற்றிய சட்டம் இயற்றுதல்.

15. கைத்தறித் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி :
கைத்தறி, துணித் தொழில்.

16. பிற்படுத்தப் பட்டோர் நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் :
பிற்படுத்தப்பட்டோர் நலன், மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலன் மற்றும் சீர் மரபினர் நலன், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டோர்.

17. வனத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி :
வனம், சின்கோனா மற்றும் சுற்றுச்சூழல் மாசுக் கட்டுப்பாடு.

18. வீட்டு வசதித் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி :
வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி, நகர அமைப்புத் திட்டமிடல் மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சி.

19. **ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. இ. பெரியசாமி :**
*கிராமக் குடிசைத் தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், பதிவுத் துறை, முத்திரைத் தாள் சட்டம் மற்றும் சத்துணவு.*

20. **செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன் :**
*செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை மற்றும் அரசு அச்சகம்.*

21. **கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு புலவர் பூ. ம. செங்குட்டுவன் :**
*கால்நடைப் பராமரிப்பு*

22. **சமூக நலத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திருமதி எஸ். பி. சற்குண பாண்டியன் :**
*மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உட்பட சமூக நலன், இரவலர் காப்பு இல்லம், அனாதை இல்லங்கள், குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டம்.*

23. **ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு :**
*ஆதிதிராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்.*

24. **சுற்றுலாத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன் :**
*சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.*

25. **கதர்த் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு :**
*கதர் வாரியம், பூமிதானம் மற்றும் கிராமதானம்.*

26. **மீன் வளத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன் :**
*மீன் வளம் மற்றும் மீன் வளர்ச்சிக் கழகம்.*



## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

### GOVERNOR—Justice Selvi M. FATHIMA BEEVI

### MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1. **Chief Minister** .. **The Hon. Kalaignar M. Karunanidhi :**
Public, General Administration, Indian Administrative Service, District Revenue Officers, Home, Finance, Planning, Industries, Prohibition and Excise, Minorities Welfare, Passports and Commercial Taxes.

2. **Minister for Education** .. **The Hon. Prof. K. Anbazhagan :**
Education including Technical Education, Legislature, Elections, Electronics, Science and Technology, Sports and Youth Service Corps and Ex-Servicemen.

3. **Minister for Health and Electricity** .. **The Hon. Thiru Arcot N. Veerasamy :**
Health, Medical Education and Family Welfare and Electricity.

4. **Minister for Revenue** .. **The Hon. Thiru Nanjil K. Manoharan :**
Revenue, Board of Revenue, District Revenue Establishment and Deputy Collectors.

5. **Minister for Rural Development and Local Administration** .. **The Hon. Thiru Ko. Si. Mani :**
Municipal Administration, Community Development, Panchayats, Panchayat Unions and Rural Indebtedness and Urban and Rural Water Supply.

6. **Minister for Agriculture** .. **The Hon. Thiru Veerapandi S. Arumugam:** Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development.

7. **Minister for Public Works** .. **The Hon. Thiru Duraimurugan:** Public Works, Irrigation including Minor Irrigation and Programme Works.

8. **Minister for Transport** .. **The Hon. Dr. K. Ponmudi:** Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Chennai Metropolitan Development Authority.

9. **Minister for Highways** .. **The Hon. Thiru Pasumpon Tha. Kiruttinan:** Highways and Ports.

10. **Minister for Tamil Official Language, Tamil Culture and Hindu Religious and Charitable Endowments** .. **The Hon. Dr. M. Thamizhkudimagan:** Tamil Official Language, Tamil Culture and Hindu Religious and Charitable Endowments.

11. **Minister for Food, Public Distribution System and Co-operation** .. **The Hon. Thiru K. N. Nehru:** Food, Price Control and Civil Supplies, Public Distribution System, Co-operation and Statistics.

12. **Minister for Milk** .. **The Hon. Thiru K. Sundaram:** Milk and Dairy Development, Slum Clearance and Accommodation Control.



13. **Minister for Labour** .. **The Hon. Thiru A. Rahman Khan:** Labour, Census, Employment and Training, Iron and Steel Control, Newsprint Control and Wakf.

14. **Minister for Law** .. **The Hon. Thiru Aladi Aruna:** Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits.

15. **Minister for Handlooms** .. **The Hon. Thiru N.K.K. Periasamy:** Handlooms, Textiles.

16. **Minister for Backward Classes** .. **The Hon. Thiru M.R.K. Panneer-selvam:** Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Indians Overseas, Refugees and Evacuees.

17. **Minister for Forest** .. **The Hon. Thiru Pongalur N. Palanisamy:** Forest, Cinchona and Environmental Pollution Control.

18. **Minister for Housing** .. **The Hon. Thiru K. Pitchandi:** Housing, Rural Housing Development, Town Planning and Urban Development.

19. **Minister for Rural Industries and Registration** .. **The Hon. Thiru I. Periasamy:** Rural Industries including Village and Cottage Industries, Registration and Stamp Act and Nutritious Meals.

| | | |
|---|---|---|
| 20. | **Minister for Information, Publicity and Printing** | .. **The Hon. Thiru V. Mullaivendan:** Information and Publicity, Film Technology and Cinematography Act, Stationery and Printing and Government Press. |
| 21. | **Minister for Animal Husbandry** | .. **The Hon. Pulavar P. M. Senguttuvan:** Animal Husbandry. |
| 22. | **Minister for Social Welfare** | .. **The Hon. Tmt. S. P. Sarkunapandian:** Social Welfare including Women's and Children's Welfare, Beggars Home, Orphanages and Correctional Administration and Integrated Child Development Services Scheme. |
| 23. | **Minister for Adi-Dravidar and Tribal Welfare** | .. **The Hon. Thiru Samayanallur S. Selvarasu:** Adi-Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour. |
| 24. | **Minister for Tourism** | .. **The Hon. Thiru N. Suresh Rajan:** Tourism and Tourism Development Corporation. |
| 25. | **Minister for Khadi** | .. **The Hon. Thiru Andhiyur P. Selvarasu:** Khadi Board, Bhoodan and Gramdan. |
| 26. | **Minister for Fisheries** | .. **The Hon. Tmt. S. Jenefer Chandran:** Fisheries and Fisheries Development Corporation. |



# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

*பேரவைத் தலைவர்*

மாண்புமிகு திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்

*பேரவைத் துணைத் தலைவர்*

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி

*மாற்றுத் தலைவர்கள் பட்டியல்*

திரு. சி.டி. தண்டபாணி

டாக்டர் காஞ்சனா கமலநாதன்

திரு. பெ. ஆசையன்

டாக்டர் ஆ. ஞானசேகரன்

டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்

திரு. வை. சிவபுண்ணியம்

*செயலாளர்*

திரு. டி. சாலமன் ஜெயபால்

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் பட்டியல்

| | | | |
|---|---|---|---|
| 1. | திரு. வெ. இராசாராமன், பி.எஸ்சி., பி.எல். | .. | கூடுதல் செயலாளர் |
| 2. | திரு. செ.ஏ. துரைபாண்டியன், பி.ஏ., பி.எல். | .. | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 3. | திருமதி பானுமதி அனந்தராஜன், பி.எஸ்சி., பி.ஜி.எல். | .. | இணைச் செயலாளர் |
| 4. | திரு. இரா. வெங்கடேசன், எம்.ஏ., எல்.எல்.பி. | .. | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 5. | திரு. கி. சாயிநாதன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | இணைச் செயலாளர் |
| 6. | திருமதி வீ.நா. உமா, பி.ஏ. | .. | குழு அலுவலர் |
| 7. | திருமதி பவானி சுப்பையா, பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 8. | திரு. சா. கணேசன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 9. | திரு. தி. திருமாவளவன், பி.எஸ்சி., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 10. | திரு. வெ. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.எல். | .. | பேரவைத் தலைவரின் சிறப்புத் தனிச் செயலர் |
| 11. | திரு. மு. ஆறுமுகப்பெருமாள், எம்.ஏ., பி.லிட். | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 12. | திரு. சு. ராஜகுரு | .. | குழு அலுவலர் |
| 13. | திரு. சௌரி அய்யாத்துரை | .. | பேரவைத் தலைவரின் சிறப்பு நேர்முக உதவியாளர் |
| 14. | திரு. க. சம்பத்ராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 15. | திரு. கோ. ஸ்ரீராமன், பி.காம். | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 16. | திரு. எம். ஜோபாய், பி.காம்., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 17. | திரு. இரா. முருகானந்தம், பி.எஸ்சி., பி.எல். | .. | துணைச் செயலாளர் |

18. திரு. இல. மாரியபபன், பி.ஏ. .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்)
19. திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல். .. துணைச் செயலாளர்
20. திரு. ஜி. அனீஸ் அகமத், எம்.ஏ., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்
21. திரு. மா. செல்வராஜ், பி.எஸ்சி., பி.எல். .. சார்புச் செயலாளர்
22. திரு. வெ.சி. சுப்பிரமணியன், எம்.ஏ., பி.எல். .. சார்புச் செயலாளர்
23. திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். .. சார்புச் செயலாளர்
24. திருமதி என். துளசிபாய், பி.ஏ. .. சார்புச் செயலாளர்
25. திரு. கோ. ரவீந்திரன், எம்.ஏ., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்
26. திரு. ஊ.கு. சுப்பிரமணியன், எம்.ஏ. .. சார்புச் செயலாளர்
27. திரு. டி. கோவிந்தராஜு, எம்.ஏ., பி.எல். .. சார்புச் செயலாளர்
28. திரு. எ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்சி., பி.எல். .. சார்புச் செயலாளர்
29. திரு. ம. பிலிப், எம்.ஏ., பி.ஜி.எல். .. தலைமை நிருபர்
30. திருமதி சி. கனகவல்லி, டி.சி.பி. .. தலைமை நிருபர்
31. திரு. வெ. வெங்கடேசன், எம்.ஏ. .. தலைமை நிருபர்
32. திரு. ச. பாலகிருஷ்ணன், பி.எஸ்சி., பி.எல். .. சார்புச் செயலாளர்
33. திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். .. சார்புச் செயலாளர்
34. திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்
35. திரு. நா. நடராஜன், பி.ஏ. .. தலைமை நிருபர்
36. திருமதி என். மீனாட்சி, எம்.ஏ., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்
37. திரு. மு. பொன்னுரங்கம், எம்.ஏ.,பி.எல்., .. தலைமை நிருபர்
38. திரு. தி. உமாபதி, பி.ஏ., .. தலைமை நிருபர்
39. திருமதி பி. சரஸ்வதி .. சார்புச் செயலாளர்



## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
## உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி)

### பெயர்களும் தொகுதிகளும்

1. அசோகன், திரு. அ. .. திருவாரூர் (செ.வ.)
2. அந்தியூர் ப. செல்வராசு, திரு. .. அந்தியூர் (செ.வ.)
3. அபுல்ஹசன், திரு. எம். எம். எஸ். .. மயிலாடுதுறை
4. அப்துல் நாசர், திரு. அ.வ. .. புவனகிரி
5. அப்துல் லத்தீப், திரு. ம. .. வாணியம்பாடி
6. அப்பாவு, திரு. மு. .. ராதாபுரம்
7. அமரமூர்த்தி, திரு. டி. .. அரியலூர்
8. அய்யலுசாமி, திரு. வி. .. கோவில்பட்டி
9. அருண்குமார், திரு. பா. .. மேட்டுப்பாளையம்
10. அழகராஜா, திரு. என்.ஆர். .. தேனி
11. அழகிரி, திரு. ச. .. சிதம்பரம்
12. அழகுவேலு, திரு. ச. .. கண்டமங்கலம் (செ.வ.)
13. அன்பழகன், திரு. வ. .. செய்யார்
14. அன்பழகன், பேராசிரியர் க. .. துறைமுகம்
15. அன்பில் பொய்யாமொழி, திரு. .. திருச்சிராப்பள்ளி-2
16. ஆசையன், திரு. பெ. .. ஆண்டிப்பட்டி
17. ஆண்டமுத்து, திரு. வெ.அ. .. பவானிசாகர்
18. ஆருண் ரஷீத், திரு. ஜே.எம். .. வில்லிவாக்கம்
19. ஆலடி அருணா, திரு. .. ஆலங்குளம்
20. ஆவுடையப்பன், திரு. இரா. .. அம்பாசமுத்திரம்

21. ஆறுமுகம், திரு. தி.ப. .. திருச்செங்கோடு
22. ஆற்காடு நா. வீராசாமி, திரு. .. அண்ணா நகர்
23. ஆனந்தன், திரு. பால. .. வந்தவாசி (செ.வ.)
24. இரகுமான்கான், திரு. அ. .. இராமநாதபுரம்
25. இராசமாணிக்கம், திரு. க.வெ.வீ. .. மேலூர்
26. இராசமாணிக்கம், திரு. பி. .. ஒரத்தநாடு
27. இராசன், திரு. வி. பி. .. ராஜபாளையம் (செ.வ.)
28. இராசேந்திரன் என்கிற தீரன், திரு. ஆ. .. ஆண்டிமடம்
29. இராமசாமி, டாக்டர் வை. .. பண்ருட்டி
30. இராமசாமி, திரு. கே.ஆர். .. திருவாடனை
31. இராமச்சந்திரன், திரு. ஓ.ஆர். .. கம்பம்
32. இராமச்சந்திரன், திரு. சி.இரா. .. தொண்டாமுத்தூர்
33. இராமச்சந்திரன், திரு. மா. .. திருவோணம்
34. இராமலிங்கம், திரு. ஏ. .. காட்டுமன்னார்கோவில் (செ.வ.)
35. இராமலிங்கம், திரு. செ. .. திருவிடைமருதூர்
36. இராமன், டாக்டர் இ. எஸ். எஸ். .. பள்ளிப்பட்டு
37. இராமஜெயம், திரு. ந.பூ. .. மயிலாப்பூர்
38. இராஜரெட்டி, திரு. ச. .. தளி
39. இராஜேந்தர், திரு. டி. .. பூங்கா நகர்
40. இளங்கோ, திரு. கோ. .. அவினாசி (செ.வ.)
41. ஈஸ்வரன், திரு. ரா. .. வாசுதேவநல்லூர் (செ.வ.)
42. உதயசூரியன், திரு. தா. .. சங்கராபுரம்



43. உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். .. தஞ்சாவூர்
44. கணேசன், திரு. ஐ. .. எடப்பாடி
45. கணேசன், திரு. கே. சி. .. ஜெயங்கொண்டம்
46. கருணாநிதி, கலைஞர் மு. .. சேப்பாக்கம்
47. கருப்பசாமி, திரு. சொ. .. சங்கரநயினார்கோவில் (செ.வ.)
48. கருப்பண்ண உடையார், திரு. ந. .. பாபநாசம்
49. கருப்புசாமி, திரு. டி. .. உப்பிலியாபுரம் (ஆ.வா.)
50. கன்னையன், திரு. க. .. தொட்டியம்
51. காஞ்சனா கமலநாதன், டாக்டர் .. கிருஷ்ணகிரி
52. காந்தி, திரு. ஆர். .. இராணிப்பேட்டை
53. கிருஷ்ணசாமி, டாக்டர் க. .. ஒட்டப்பிடாரம் (செ.வ.)
54. கிருஷ்ணன், திரு. எஸ். வி. .. நாங்குநேரி
55. கிருஷ்ணன், திரு. சீ. வெ. .. வேடசந்தூர்
56. குண்டன், திரு. டி. .. உதகமண்டலம்
57. குத்தாலம் பி. கல்யாணம், திரு. .. குத்தாலம்
58. குமாரதாஸ், டாக்டர் தே. .. கிள்ளியூர்
59. கும்மிடிப்பூண்டி கி. வேணு, திரு. .. கும்மிடிப்பூண்டி
60. குழந்தை தமிழரசன், திரு. .. விருத்தாசலம்
61. கோதண்டம், திரு. ஏ. .. ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)
62. கோபால், திரு. பா. .. மேட்டூர்
63. கோபு, திரு. சி. .. அணைக்கட்டு
64. கோமதி சீனிவாசன், திருமதி .. வலங்கைமான் (செ.வ.)
65. கோவிந்தன், திரு. ப. .. தாரமங்கலம்

66. கோவிந்தன், திரு. வெ. .. பேரணாம்பட்டு (செ.வ.)
67. சக்ரபாணி, திரு. ஆர். .. ஒட்டன்சத்திரம்
68. சண்முகம், திரு. கோ. .. திருப்பத்தூர்
69. சண்முகம், திரு. சி. .. ஆலந்தூர்
70. சண்முகம், திரு. ம. .. கிணத்துக்கடவு
71. சந்தானம், திரு. வா. .. சோழவந்தான்
72. சந்திரசேகரன், திரு. சி. .. சேந்தமங்கலம் (ஆ.வா.)
73. சந்திரசேகரன், திரு. துரை. .. திருவையாறு
74. சமயநல்லூர் எஸ். செல்வராசு, திரு. .. சமயநல்லூர் (செ.வ.)
75. சம்பத், திரு. ஏ.ஜி. .. முகையூர்
76. சரஸ்வதி, திருமதி ஆர். .. தாராபுரம் (செ.வ.)
77. சற்குணபாண்டியன், திருமதி எஸ்.பி. .. டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்
78. சாமிநாதன், திரு. மு.பெ. .. வெள்ளக்கோவில்
79. சிங்காரவேலு, திரு. வி.பி. .. வால்பாறை (செ.வ.)
80. சிவபுண்ணியம், திரு. வை. .. மன்னார்குடி
81. சிவராமன், திரு. ஆர். .. திருப்பத்தூர்
82. சிவராஜ், திரு. சு. .. ரிஷிவந்தியம்
83. சிவலிங்கம், திரு. எஸ்.ஆர். .. பனமரத்துப்பட்டி
84. சிவானந்தம், திரு. ஆர். .. ஆரணி
85. சிவாஜி, திரு. இ.ஏ.பி. .. திருத்தணி
86. சின்னய்யா, திரு. வெ. .. திருமயம்
87. சீனிவாசன், திரு. ஏ.ஆர்.ஆர். .. விருதுநகர்



88. சுகவனம், திரு. இ.ஜி. .. பர்கூர்
89. சுடலைமுத்து, திரு. அ. .. போடிநாயக்கனூர்
90. சுதர்சனம், திரு. டி. .. பூந்தமல்லி
91. சுந்தரம், திரு. க. .. பொன்னேரி (செ.வ.)
92. சுந்தரம், திரு. ந. .. காரைக்குடி
93. சுந்தரம், திரு. பி.ஆர். .. இராசிபுரம்
94. சுந்தர், திரு. கே. .. உத்திரமேரூர்
95. சுப்பராயன், திரு. கே. .. திருப்பூர்
96. சுப்பிரமணி என்கிற சி.சு. மணி, திரு. சி. .. திருவள்ளூர்
97. சுப்பிரமணி, திரு. பி.என். .. ஆற்காடு
98. சுப்பிரமணியன், திரு. அ.லெ. .. திருநெல்வேலி
99. சுப்புலட்சுமி செகதீசன், திருமதி .. மொடக்குறிச்சி
100. சுரேஷ் ராசன், திரு. என். .. கன்னியாகுமரி
101. செங்குட்டுவன், புலவர் பூ.ம. .. மருங்காபுரி
102. செங்கை சிவம், திரு. .. பெரம்பூர் (செ.வ.)
103. செல்லக்குமார், டாக்டர் அ. .. தியாகராய நகர்
104. செல்வம், திரு. ரெ. .. குளித்தலை
105. செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன், திரு. .. கொளத்தூர் (செ.வ.)
106. செல்வராஜ், திரு. து. .. உடுமலைப்பேட்டை
107. சேகரன், திரு. ஆர்.ஆர். .. ஓமலூர்
108. சேதுநாதன், திரு. ரா. .. திண்டிவனம்
109. சைதை கா. கிட்டு, திரு. .. சைதாப்பேட்டை

110. சொக்கர், திரு. ஆர். .. சிவகாசி
111. சொக்கலிங்கம், திரு. ஜி. .. திருப்போரூர் (செ.வ.)
112. ஞானசேகரன், டாக்டர் ஆ. .. மேல்மலையனூர்
113. ஞானசேகரன், திரு. சி. .. வேலூர்
114. டேவிட் செல்வின், திரு. எஸ். .. ஸ்ரீவைகுண்டம்
115. தங்கமணி, திரு. கே. .. மானாமதுரை (செ.வ.)
116. தங்கம் தென்னரசு, திரு. .. அருப்புக்கோட்டை
117. தங்கவேலன், திரு. சுப. .. கடலாடி
118. தங்கவேல், திரு. அ. ல. .. சேலம்-2
119. தண்டபாணி, திரு. சி. டி. .. கோயம்புத்தூர் மேற்கு
120. தமிழ்க்குடிமகன், முனைவர் மு. .. இளையான்குடி
121. தமிழ்ச்செல்வன், திரு. ஆர். .. அரக்கோணம் (செ.வ.)
122. தமிழ்மணி, திரு. வீ. .. செங்கல்பட்டு
123. தளபதி, திரு. கோ. .. சேடப்பட்டி
124. தனபாலன், திரு. கே.ஆர்.ஜி. .. சேலம்-1
125. தனபால், திரு. வி. ஜி. .. குடியாத்தம்
126. தாமரைக்கனி, திரு. இரா. .. ஸ்ரீவில்லிபுத்தூர்
127. திசைவீரன், திரு. உ. .. பரமக்குடி (செ.வ.)
128. திருஞானசம்பந்தம், திரு. எஸ்.வி. .. பேராவூரணி
129. திருநாவுக்கரசு, திரு. எஸ். .. அறந்தாங்கி
130. திருவேங்கடம், திரு. பெ. சு. .. கலசப்பாக்கம்
131. துரைசாமி, திரு. பா. .. வரகூர் (செ.வ.)
132. துரை, திரு. கே. .. திருவொற்றியூர்



134. தெய்வநாயகம், திரு. எ. .. மதுரை மத்தி
135. தேவராஜன், டாக்டர் மு. .. பெரம்பலூர் (செ.வ.)
136. நடராசன், திரு. ஆ. .. பேரூர்
137. நடராஜன், திரு. த. .. செஞ்சி
138. நயினா முகமது, திரு. கோ. .. கடையநல்லூர்
139. நன்னன், திரு. கொ. வீ. .. செங்கம் (செ.வ.)
140. நாகரத்தினம், திரு. ச. .. கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
141. நாஞ்சில் கி. மனோகரன், திரு. .. திருவல்லிக்கேணி
142. நிஜாமுதீன், திரு. ஜி. .. நாகப்பட்டினம்
143. நெல்லிக்குப்பம் அ. மணி, திரு. .. நெல்லிக்குப்பம்
144. நேரு, திரு. கா.நா. .. லால்குடி
145. பசும்பொன் தா. கிருட்டிணன், திரு. .. சிவகங்கை
146. பத்மா, டாக்டர் .. நன்னிலம் (செ.வ.)
147. பரணிகுமார், திரு. பா. .. திருச்சிராப்பள்ளி-1
148. பரிதி இளம்வழுதி, திரு. .. எழும்பூர் (செ.வ.)
149. பழனிசாமி, திரு. ஜி. .. திருத்துறைப்பூண்டி (செ.வ.)
150. பழனிவேல் ராஜன், திரு. பி.டி.ஆர். .. மதுரை மேற்கு
151. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. .. குறிஞ்சிப்பாடி
152. பன்னீர்செல்வம், திரு. மு. .. சீர்காழி (செ.வ.)
153. பாண்டுரங்கன், திரு. ந. .. பெரணமல்லூர்
154. பாலகிருஷ்ணன், திரு. சோ. .. முதுகுளத்தூர்
155. பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.என். .. பவானி
156. பாலசுப்பிரமணியன், திரு. ப. .. பட்டுக்கோட்டை

157. பிச்சாண்டி, திரு. கு. .. திருவண்ணாமலை
158. புகழேந்தி, திரு. இ. .. கடலூர்
159. புரட்சிமணி, திரு. ச. .. மங்களூர் (செ.வ.)
160. பூவேந்தன், திரு. த. .. பழனி (செ.வ.)
161. பெரியசாமி, திரு. இ. .. ஆத்தூர்
162. பெரியசாமி, திரு. என். .. தூத்துக்குடி
163. பெரியசாமி, திரு. என்.கே.கே. .. ஈரோடு
164. பெரியசாமி, திரு. நா. .. பெருந்துறை
165. பெருமாள், திரு. வி. .. ஏற்காடு (ஆ.வா.)
166. பெர்னார்டு, திரு. இரா. .. குளச்சல்
167. பொங்கலூர் நா. பழனிசாமி, திரு. .. சிங்காநல்லூர்
168. பொன்முடி, டாக்டர் க. .. விழுப்புரம்
169. பொன்முடி, திரு. எஸ்.எஸ். .. பல்லடம்
170. பொன்னம்மாள், திருமதி ஏ.எஸ். .. நிலக்கோட்டை (செ.வ.)
171. மகேந்திரன், திரு. இரா. .. நாட்ராம்பள்ளி
172. மணிக்கண்ணன், திரு. ஆ.செ. .. திருநாவலூர்
173. மணி, டாக்டர் அ. .. உளுந்தூர்பேட்டை (செ.வ.)
174. மணி, திரு. கோ.சி. .. கும்பகோணம்
175. மணி, திரு. டி. .. விளவங்கோடு
176. மணி, திரு. ஜி.கே. .. பெண்ணாகரம்
177. மணி நாடார், திரு. எஸ்.எஸ். .. சாத்தான்குளம்
178. மணிமாறன், திரு. இரா. .. திண்டுக்கல்



179. மணிவர்மா, திரு. க. .. தண்டராம்பட்டு
180. மதிவாணன், திரு. இரா. .. இராயபுரம்
181. மதிவாணன், திரு. செ. .. அச்சரப்பாக்கம் (செ.வ.)
182. மனோகரன், திரு. கு. .. தருமபுரி
183. மாயவன், திரு. தி.ப. .. ஸ்ரீரங்கம்
184. மாரி அய்யா, திரு. பே. .. புதுக்கோட்டை
185. மாரிமுத்து, திரு. அ. .. வானூர் (செ.வ.)
186. முகம்மது இஸ்மாயில், திரு. எஸ். எஸ். .. அரவக்குறிச்சி
187. முகம்மது கோதர் மைதீன், திரு. .. பாளையங்கோட்டை
188. முத்து, திரு. வி. .. சங்கரி (செ.வ.)
189. முத்துராமலிங்கம், திரு. ம. .. திருமங்கலம்
190. முபாரக், திரு. பா.மு. .. கூடலூர்
191. முருகேசன், திரு. பொ. .. காஞ்சிபுரம்
192. முல்லைவேந்தன், திரு. வ. .. மொரப்பூர்
193. முனிரத்தினம், திரு. ஆ.மு. .. சோளிங்கர்
194. மூக்கப்பன், திரு. இரா. .. சின்னசேலம்
195. மூக்கையா, திரு. எல். .. பெரியகுளம்
196. மோகனதாசன், திரு. கோ. .. பூம்புகார்
197. மோகன் கந்தசாமி, திரு. ப. .. பொங்கலூர்
198. மோசஸ், டாக்டர் எம். .. நாகர்கோவில்
199. ரங்கநாதன், திரு. எம். .. குன்னூர் (செ.வ.)
200. ரங்கநாதன், திரு. ப. .. புரசைவாக்கம்
201. ரவி அருணன், திரு. கே. .. தென்காசி

| | | |
|---|---|---|
| 202. ரவிசங்கர், திரு. கு. | .. | விளாத்திகுளம் |
| 203. ராசேந்திரன், திரு. ஏ. | .. | போளூர் |
| 204. ராணி, செல்வி க. | .. | தலைவாசல் (செ.வ.) |
| 205. ராமசாமி, திரு. ஏ.எம். | .. | ஆத்தூர் |
| 206. ராமச்சந்திரன், திரு. செ. | .. | திருப்பரங்குன்றம் |
| 207. ராஜு, திரு. எஸ். | .. | பொள்ளாச்சி |
| 208. ராஜேந்திரன், திரு. எஸ்.கே. | .. | சத்தியமங்கலம் |
| 209. ராஜ்குமார் மன்றாடியார், திரு. என்.எஸ். | .. | காங்கேயம் |
| 210. லட்சுமணன், திரு. வி.கே. | .. | கோயம்புத்தூர் கிழக்கு |
| 211. வல்லரசு, திரு. பி. என். | .. | உசிலம்பட்டி |
| 212. வாசுகி முருகேசன், திருமதி | .. | கரூர் |
| 213. விஜயகுமார், திரு. கே.எம். | .. | சாத்தூர் |
| 214. விஜயன், திரு. டி.சி. | .. | திருவொற்றியூர் |
| 215. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், திரு. | .. | வீரபாண்டி |
| 216. வீரப்பன், திரு. கே.கே. | .. | கபிலர்மலை |
| 217. வெங்கடசாமி, திரு. பி. | .. | ஓசூர் |
| 218. வெங்கடாசலம், திரு. அ. | .. | ஆலங்குடி |
| 219. வெங்கடாசலம், திரு. ஜி.எல். | .. | பாலக்கோடு |
| 220. வெங்கடேசன், திரு. ச.க. | .. | மதுராந்தகம் |
| 221. வெங்கடேசன், திரு. பி.வி.எஸ். | .. | காவேரிப்பட்டினம் |
| 222. வெங்கிடு, திரு. ஜி. பி. | .. | கோபிச்செட்டிப் பாளையம் |
| 223. வேடம்மாள், திருமதி ஏ.ஆர். | .. | அரூர் (செ.வ.) |



| | | |
|---|---|---|
| 224. வேதரத்தினம், திரு. எஸ்.கே. | .. | வேதாரண்யம் |
| 225. வேலாயுதன், திரு. சி. | .. | பத்மநாபபுரம் |
| 226. வேலுசாமி, திரு. வ. | .. | மதுரை கிழக்கு |
| 227. வேல்சாமி, திரு. க. | .. | நாமக்கல் (செ.வ.) |
| 228. வேல்துரை, திரு. பா. | .. | சேரன்மகாதேவி |
| 229. வைதியலிங்கம், திரு. மீ.அ. | .. | தாம்பரம் |
| 230. ஜெனிபர் சந்திரன், திருமதி எஸ். | .. | திருச்செந்தூர் |
| 231. ஜோதிகண்ணன், திரு. மு.ந. | .. | முசிறி |
| 232. ஸ்டாலின், திரு. மு.க. | .. | ஆயிரம் விளக்கு |
| 233. ஆன் டி' மான்டி, திருமதி | .. | நியமனம் |
| 234. வெற்றிடம் | .. | நத்தம் |
| 235. வெற்றிடம் | .. | திருவட்டாறு |

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. கே.வி. வெங்கடபதி .. அரசு தலைமை வழக்கறிஞர்

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## சித்திரை 3, பிரமாதி - திருவள்ளுவர் ஆண்டு 2030

## 1999 ஏப்ரல் 16, வெள்ளிக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்** அவர்கள் தலைமையில் காலை 9.30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"ஓர்ந்துகண் ணோடா(து) இறைபுரிந்து யார்மாட்டும்

தேர்ந்துசெய் வஃதே முறை"

குற்றம் இன்னதென்று ஆராய்ந்து, எந்தப் பக்கமும் சாயாமல் நடுவுநிலைமை தவறாமல் வழங்கப்படுவதே நீதியாகும்.

### 1. வினாக்கள்-விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள். வினா எண் 401, திரு. சி. ஞானசேகரன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**401—**

### ஆம்பூரில் பெண்கள் கலைக் கல்லூரி

***14598—திரு. சி. ஞானசேகரன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆம்பூரில் புதிதாகப் பெண்கள் கலைக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

[1999 ஏப்ரல் 16

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய வேலூர் மாவட்டத்தில், ஆம்பூர் பகுதி இஸ்லாமியப் பெண்கள் அதிகமாக வாழக்கூடிய ஒரு பகுதி. இஸ்லாமியப் பெண்களுக்கு வெளியில் வந்து கல்வி கற்கக்கூடிய வாய்ப்புகள் மிகக் குறைவாக இருக்கக்கூடிய காரணத்தினாலே, ஆம்பூரில் மிக மிக அவசியமாக ஒரு பெண்கள் கல்லூரி தேவைப்படுகிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அரசுக் கல்லூரிகளை இனிமேல் நாம் தொடங்கப்போவதில்லை என்ற கொள்கை முடிவு எடுத்திருந்தாலும்கூட, அரசு இந்த இஸ்லாமியப் பெண்களுக்காக அதைத் தளர்த்தி வருகிற ஆண்டில் ஒரு பெண்கள் கல்லூரியை நிறுவுவதற்கு அமைச்சர் அவர்கள் ஆணையிடுவாரா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதி இல்லாமல் ஆணையிடுகிற பழக்கம் எனக்கில்லை. இரண்டாவதாக, ஆம்பூரில் மஜ்ஹரூல் உலூம் கல்லூரி என்னும் அரசு உதவிக் கல்லூரி மகளிருக்காக இருக்கிறது. (திரு. சி. ஞானசேகரன் உட்கார்ந்து கொண்டு பேசிக்கொண்டிருந்தார்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன், உட்கார்ந்து கொண்டே பேசிக்கொண்டிருக்கிறீர்களே; அப்புறம் உங்களுக்கு எதற்குக் கேள்வி?

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆம்பூரில் இருக்கக்கூடிய மஜ்ஹரூல் உலூம் கல்லூரி என்பது ஆண்கள் கல்லூரி. பொதுவாக, இஸ்லாமியப் பெண்கள், ஆண்களும், பெண்களும் கலந்து படிக்கக்கூடிய கோ-எஜூகேஷனை வரவேற்பதில்லை. ஆண்கள் கல்லூரி என்று தனியாக இருக்கக்கூடிய காரணத்தினாலே, அதைத் தவிர்த்து ஒரு பெண்கள் கல்லூரி நிச்சயமாகக் கொண்டு வந்தால்தான் நன்மை பயக்கும். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதைக் கருத்தில் கொண்டு வருகிற ஆண்டில் - நிதி இல்லை என்று சொன்னார்கள். நிதி பக்கத்திலேயே இருக்கிறது. அங்கிருந்து நிதியைப் பெற்று உடனடியாக வருகிற ஆண்டில் - பெண்கள் கல்லூரியைத் தொடங்க ஆணையிடுவாரா என அறிய விரும்புகிறேன்.



1999 ஏப்ரல் 16]

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பக்கத்திலே இருப்பதையெல்லாம் நான் கையாள்வதில்லை. (சிரிப்பு) மேலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிதியமைச்சராக இருந்தாலும்கூட, பல்வேறு சமூக நல அடிப்படையிலே, அடிப்படைப் பணிகள் பலவற்றை நிறைவேற்ற வேண்டிய ஒரு காலகட்டத்திலே இருப்பதால், கல்லூரிகள் தொடங்கலாம் என்பதைப் பொதுவாக ஏற்க முடிவதில்லை. இரண்டாவதாக, பல்வேறு பகுதிகளில் சுய நிதிக் கல்லூரிகளைக் கொண்டுவரும்படி அந்தந்த வட்டாரத்தைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்களிடத்திலே அவர்கள் வேண்டுகோள் வைக்கும் போதெல்லாம் தெரிவித்திருக்கிறேன். அதே நியாயத்தை மாண்புமிகு ஞானசேகரன் அவர்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 402, திரு. இரா. பொன்னார்டு, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**402—**

### மருத்துவமனைகளுக்குக் கூடுதல் வசதி

***915—திரு. இரா. பொன்னார்டு:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள அரசு தலைமை மருத்துவமனை மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் போதிய படுக்கை வசதி இல்லாததை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், கூடுதலாகப் படுக்கை வசதி அமைத்துக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) கன்னியாகுமரி மாவட்டம் அரசு தலைமை மருத்துவமனையிலும் மற்றும் அம்மாவட்டத்தில் உள்ள அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் போதிய படுக்கை வசதிகள் உள்ளன.

(ஆ) இவ்வினா எழவில்லை.

**திரு. இரா. பெர்னார்டு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் அரசு தலைமை மருத்துவமனை, மாவட்டத்தின் மிக முக்கியமான பகுதியில் இருக்கிறது. நூற்றுக்கணக்கான கிராமங்களைச் சார்ந்த மக்கள் அங்கே மருத்துவ சிகிச்சைக்காக வருகிறார்கள். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு இத்துறைக்கு அதிகமான நிதி ஒதுக்கீடும் தனிக் கவனமும் செலுத்தி வருகிறார்கள். முதல்வர் கலைஞருடைய எண்ணங்களை ஈடேற்றுகின்ற வகையில் விரைந்து செயல்படுகின்ற மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர், சக்தியும், திறனும், வீரியமும் உடைய மருந்துகளைக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். ஆகவே, அந்தப் பகுதியிலுள்ள மக்கள் - ஏழை எளிய மக்களும், நடுத்தர மக்களும் தனியார் மருத்துவமனையை நம்பாமல் - அங்கு விரும்பி வருகிறார்கள். தற்போது அந்த மருத்துவமனையில் 370 பொதுப் படுக்கைகளும் 32 படுக்கைகள் கண் சிகிச்சைப் பிரிவிலும் 30 படுக்கைகள் அறுவை சிகிச்சைப் பிரிவிலும் உள்ளன. இவை போதுமானதாக இல்லை. கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கின்ற 30 ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் 5 முதல் 8 படுக்கைகளே உள்ளன. இவைகளையெல்லாம் கருத்தில்கொண்டு, மக்கள் நல்வாழ்வில் அக்கறை காட்டுகின்ற மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரவர்கள்......

முற்பகல் 9-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் வினாவிற்கு வாருங்கள்.

**திரு. இரா. பெர்னார்டு:** படுக்கை வசதிகளை அதிகரித்துத்தர மறுபரிசீலனை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மூன்று ஆண்டு காலத்தில் கன்னியாகுமரி மாவட்டத்திலே உள்ள நாகர்கோவில் தலைமை மருத்துவமனைக்கு என்னென்ன செய்ய முடியுமோ, அதையெல்லாம் இந்த அரசு செய்திருக்கிறது. 402 படுக்கைகள் இப்போது அங்கே இருக்கின்றன. சராசரியாக ஒரு நாளைக்கு 1982 பேர் புறநோயாளிகளாக வந்துகொண்டிருக்கிறார்கள். வேறு எந்த மருத்துவமனையிலும் இல்லாத அளவிற்கு மொத்தம் 15 சிறப்பு மருத்துவப் பிரிவுகள் உள்ளன.



குழந்தைகள் நலப் பிரிவு, தோல் சிகிச்சைப் பிரிவு, கண் சிகிச்சைப் பிரிவு, அறுவை சிகிச்சைப் பிரிவு, எலும்பு சிகிச்சைப் பிரிவு, காச நோய்ப் பிரிவு, காது, மூக்கு, தொண்டைப் பிரிவு, பல் சிகிச்சைப் பிரிவு, மனநலப் பிரிவு, விபத்து மற்றும் அவசரப் பிரிவு, பால்வினை நோய்ப் பிரிவு, மகப்பேறு பிரிவு, பொதுப் பிரிவு, பொது நல ஆய்வுப் பிரிவு, சர்க்கரை நோய்ப் பிரிவு என இவ்வளவு பிரிவுகளோடும் மிகச் சிறப்பாக அந்த மருத்துவமனை செயல்பட்டு வருகிறது. ஆயிரக்கணக்கான நோயாளிகள் பயன்பெற்று வருகிறார்கள்.

அதைப்போலவே அந்த மாவட்டத்திலே 4 இடங்களில் 24 மணி நேரமும் செயல்படுகின்ற ஆரம்ப சுகாதார நிலையங்களும் மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னது போன்று அந்த ஆஸ்பத்திரியில் அனைத்து சிகிச்சைப் பிரிவுகளும் இருக்கின்றன. மருத்துவர்களும் ஓரளவிற்கு நன்றாகப் பணியாற்றுகின்றார்கள். ஆனால் படுக்கை வசதி இல்லை என்பது உண்மை. வராண்டாவிலிருந்து உள்ளே செல்ல முடியாத அளவிற்கு, நடந்து போக முடியாத அளவிற்கு அவர்கள் கீழேயே படுத்திருக்கக்கூடிய அளவிலேதான், எங்கு பார்த்தாலும் காட்சியளிக்கின்றது. எனவே குறைந்தபட்சம், 50 படுக்கைகளாவது கூடுதலாகக் கிடைத்தால் ஓரளவிற்கு நன்றாக இருக்கும். அதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில நேரங்களில் மாண்புமிகு உறுப்பினர் போய்ப் பார்க்கின்ற நேரத்திலே அப்படி இருந்திருக்கக்கூடும். ஆனால், ஏற்கெனவே 402 படுக்கைகள் அங்கே இருக்கின்றன. சராசரியாக உள்நோயாளிகளுடைய எண்ணிக்கை 361 தான். எனவே, புதிதாகப் படுக்கைகளை அதிகரிக்க வேண்டிய அவசியம் தற்போதைக்கு இல்லை. தேவைப்பட்டால் அரசு நிச்சயமாகப் பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்ப சுகாதார நிலையங்களில் குறிப்பாக, இடைக்கோடு ஆரம்ப

சுகாதார நிலையத்தில் போதுமான கட்டடங்கள் இருந்தும், அவை பழுதுபார்க்கப்படாமலும், அதுபோன்று மின் இணைப்பு கிடைக்காத காரணத்தினாலும் நோயாளிகளை அங்கே படுக்க வைப்பதில்லை. எனவே, அரசு வழங்கிய சட்டமன்ற உறுப்பினர் தொகுதி நிதியிலிருந்து கடந்த ஆண்டில் 10 படுக்கைகளுக்குண்டான நிதியை ஒதுக்கிக் கட்டடம் ஒன்றைக் கட்டியிருக்கின்றார்கள். ஆனால் அதிலேகூட மின்சாரம் அளிப்பதற்கான ஏற்பாடு உண்டா என்று கேட்டால், இதுவரையிலும் சரியான பதிலே தரவில்லை.

அதேபோன்று தூத்தூரில் இருக்கின்ற ஆரம்ப சுகாதார நிலையம். அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் அங்கேயும் 20 படுக்கைகளை ஏற்படுத்துவதற்கான சில ஏற்பாடுகளைச் செய்திருக்கிறார்கள். இருந்தும், மின்சார வசதி இல்லாத ஒரு குறைபாடு இருக்கின்றது. அதைக்கூட பூர்த்தி செய்கின்ற வகையில் அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி வளர்ச்சி நிதியிலிருந்து ஒரு கணிசமான தொகையைக் கொடுத்ததற்கு நன்றி. மின்சாரம் அந்தப் பகுதிக்கு, அந்த மருத்துவமனைக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறதா என்று கேட்டார்கள். கொடுக்கவில்லையென்றால், உடனடியாகக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 403, திரு. கே. ரவி அருணன், மாணபுமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**403—**

**மருத்துவமனைக்குக் கூடுதல் படுக்கை வசதிகள்**

***15138—திரு. கே. ரவி அருணன் :**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கோட்டை வட்ட மருத்துவமனையில் உள்நோயாளிகளின் எண்ணிக்கை அதிகமாக உள்ளதால் கூடுதல் படுக்கை வசதிகளை ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?



**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1-7-1998-க்குப் பிறகு செங்கோட்டை தாலுகாவில் இரண்டு பேரூராட்சிகள் உட்பட, பல கிராமங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. அங்கே மருத்துவமனைக்கு வருகின்ற உள்நோயாளிகளின் எண்ணிக்கையும் கணிசமான அளவு அதிகரித்துள்ளது. ஏற்கெனவே மருத்துவமனைக்குச் சொந்தமாக 15 ஏக்கர் நிலப்பரப்பு அங்கே உள்ளது. அம்மருத்துவமனையைக் கூடுதல் படுக்கை வசதிகளைக் கொண்ட மருத்துவமனையாக உயர்த்துவதற்கு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்வாரா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-40

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே 10 கிலோமீட்டர் தூரத்தில் தென்காசி அரசு மருத்துவமனை மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. செங்கோட்டை மருத்துவமனையிலே 4 ஆண் மருத்துவர்களும், ஒரு பெண் மருத்துவரும் பணியாற்றி வருகிறார்கள். 41 உள்நோயாளிகளும், 550 புறநோயாளிகளும் அன்றாடம் பயனடைகின்றனர். மேலும், செங்கோட்டை மருத்துவமனையை விரிவுபடுத்த வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 1999-2000 ஆம் ஆண்டு பகுதி-2 திட்டத்தின்கீழ் 50 படுக்கைகள் கொண்ட கட்டடம் கட்டுவதற்குரிய நிதியை வழங்கியிருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கோட்டை மருத்துவமனையை மேலும் 50 படுக்கை வசதி கொண்ட மருத்துவமனையாக உயர்த்துவதற்கு உத்தரவிட்ட மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். செங்கோட்டை வட்ட மருத்துவமனையில், பல மருத்துவர் பணியிடங்கள் காலியாகவுள்ளன. மயக்க மருத்துவர் பணியிடம் காலியாக உள்ளதால் அங்கே குடும்ப நல அறுவை சிகிச்சைகூட செய்ய முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆகவே,

காலியாகவுள்ள மருத்துவர் பணியிடங்களை நிரப்ப அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வோராண்டும் குறைந்தபட்சம் 500 மருத்துவர்கள் நம்முடைய தமிழ்நாடு தேர்வாணையத்தாலே தேர்ந்தெடுக்கப்பட்டு, இலாகாவிற்கு ஒதுக்கப்பட்டு வருகிறார்கள். இப்போது, எழுத்துத் தேர்வு எழுதி நேர்காணல் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த மாத இறுதிக்குள்ளாக, தேர்வாணையம், பட்டியலைத் தமிழக அரசுக்கு வழங்கும். வழங்கியவுடனே எங்கெங்கே அப்படிப்பட்ட குறைபாடுகள் இருக்கின்றனவோ அவற்றைப் போக்குவதற்கு அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 404, திரு. ஐ. கணேசன். மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

**404—**

**விவசாயிகளுக்கு நிலப்பட்டா**

***17633—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டத்தில் புறம்போக்கு நிலங்களில் விவசாயம் செய்ய, நிலமற்ற ஏழை விவசாயிகள் நிலப்பட்டா வேண்டி எவ்வளவு பேர் விண்ணப்பம் செய்துள்ளனர்?

(ஆ) அதில் எத்தனை பேருக்குப் பட்டா வழங்கப்பட்டுள்ளது? இன்னும் எத்தனை பேருக்கு வழங்கப்பட வேண்டும்?

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) நாமக்கல் மாவட்டத்தில் புறம்போக்கு நிலங்களில் விவசாயம் செய்ய 529 நபர்கள் விண்ணப்பம் செய்துள்ளனர்.

(ஆ) அதில் 507 நபர்களுக்குப் பட்டா வழங்கப்பட்டுள்ளது. இன்னும் 22 நபர்களுக்குப் பட்டா வழங்கப்பட வேண்டும். இதில்





15 மனுக்கள் விசாரணை மற்றும் இதர நடவடிக்கைகளுக்காக நிலுவையில் உள்ளன. விசாரணைக்குப்பின் தகுதி இருப்பின் நிலப்பட்டா வழங்கப்படும். மீதி 7 மனுக்களில் மனுதாரர்கள் ஒப்படை கேட்ட நிலம் தடை செய்யப்பட்ட அரசு நிலமாக உள்ளதாலும் மற்றும் ஊராட்சி மன்றங்கள் மற்றும் மக்கள் ஆட்சேபணை செய்ததாலும், இந்த 7 நபர்களுக்கும் நிலப்பட்டா வழங்கப்படவில்லை.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீதியுள்ளவர்களுக்கு இந்த அரசு விரைவில் பட்டா வழங்க ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 15 மனுக்களில் நில அடமானம் கோரும் நிலங்கள் தடை செய்யப்பட்ட ஓடை, வெள்ளவாரி நிலங்களாக உள்ளதால், இவைகளின்பேரில் பொதுப்பணித் துறையினரின் கருத்து வரப்பெற வேண்டியுள்ளது. மற்றும் சில மனுக்கள் விசாரணையில் உள்ளன. இவைகளின்பேரில் முடிவான அறிக்கை வரப்பெற்றவுடன் இது குறித்த முன்மொழிவினை சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர் அவர்களுக்கு அனுப்பி அனுமதி பெற்று, நிலப்பட்டா வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 405, திரு. ச. அழகிரி, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**405—**

**மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு மின் ஆக்கி வசதி**

***13922—திரு. ச. அழகிரி:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடலூர் மாவட்டம், திருமுட்டம் பேரூராட்சியில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு மின் ஆக்கி வசதி செய்து தரப்படுமா?

[1999 ஏப்ரல் 16

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருமுட்டம் பேரூராட்சியில் வக்கார மாரியம்மன் காலனி அருகில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு அருகே ஏற்கெனவே டிரான்ஸ்ஃபார்மர் ஒன்று அமைக்கப்பட்டு மின்சாரம் தங்குதடையின்றிக் கிடைத்து வருவதால், தனியாக மின் ஆக்கி வசதி தேவையில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ச. அழகிரி, இருக்கையில் இல்லை. டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிமக்களுக்கு சிறந்த குடிநீர் வழங்க வேண்டும் என்பதிலே மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கொண்டுள்ள அக்கறையைப் பாராட்டுகின்றேன். அதேநேரத்திலே குடிநீருக்கான awareness— விழிப்புணர்ச்சி மக்களிடையே வந்திருக்கின்றது. மினரல் வாட்டர் என்ற பெயரிலே உரிமம் பெறாமல், தகுந்த முறையில்லாமல், பல பேர் பாதுகாக்கப்பட்ட குடிநீர் என்ற பெயரிலே பாக்கெட்டுகளிலே வியாபாரம் செய்து மக்களிடம் கொள்ளையடிக்கிறார்களே, இதற்காக அரசு ஏதாவது விதிமுறை வைத்திருக்கிறதா அல்லது விதிமுறை வைத்துச் செய்ய உத்தேசிக்கப்பட்டிருக்கிறதா என்பதனைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகின்றேன்.

முற்பகல் 9-45

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது சுகாதாரத் துறை எடுக்க வேண்டிய நடவடிக்கை. தவறு ஏதாவது இருந்தால், சம்பந்தப்பட்டவர்களுக்குத் தெரிவித்தால் உடனடியாக நடவடிக்கை எடுப்பார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் கேள்வி கேட்க வேண்டும் என்பதற்காகக் கேட்கிறார்.

**வினா** எண் 406, திரு. நா. பெரியசாமி, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.



1999 ஏப்ரல் 16]

**406—**

## சந்தைக்கு இலவச நிலம்

***22150—திரு. நா. பெரியசாமி:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிக்கோவில் பேரூராட்சியில் சந்தை அமைக்க இலவசமாக நிலம் வழங்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், புதிய இடத்தில் சந்தை எப்போது முதல் செயல்படும்?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை இங்கே அளிக்கிறேன்.

(அ) காஞ்சிக்கோவில் பேரூராட்சியில் ஏற்கெனவே 2 ஏக்கர் பரப்பளவில் 50 ஆண்டுகளுக்கு மேலாக ஒரு சந்தை இயங்கி வருகிறது. இப்பேரூராட்சியில் திரு. கே.பி. கிருஷ்ணசாமி என்பவர் கவுந்தப்பாடி செல்லும் சாலையில் 1.40 ஏக்கர் நிலத்தை இலவசமாகக் கொடுப்பதாக அறிவித்தார். கவுந்தப்பாடி சார் பதிவாளர் அலுவலகத்தில் 5-4-1999 அன்று பதிவு செய்யப்பட்ட, பத்திர எண் 689 மற்றும் 691 மூலம் முறையே 2 ஏக்கர் 92 சென்ட் மற்றும் 16 சென்ட் ஆக மொத்தம் 3 ஏக்கர் 8 சென்ட் நிலத்தைப் பேரூராட்சிக்கு தானமாகக் கொடுத்துள்ளார். ஆனால், நிலம் முறைப்படி பேரூராட்சியிடம் இன்னும் ஒப்படைக்கப்படவில்லை.

(ஆ) முறைப்படி ஒப்படைக்கப்பட்டபின் அரசின் அனுமதி பெற்று உரிய இடத்தில் பேரூராட்சியால் சந்தை அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிக்கோவில் பேரூராட்சிக்காக சந்தை அமைப்பதற்காக சின்னப்பன் என்பவர் 14-10-1998 அன்று இலவசமாக நிலம் வழங்கியிருப்பதாகச் சொல்லப்படுகிறது. அந்த நிலத்தினைப் பேரூராட்சி

தனது நிர்வாகத்தின்கீழ் எடுத்துக்கொண்டதா? அப்படி எடுத்துக்கொண்டால் அந்த இடத்திலே சந்தை அமைப்பதற்கான பணிகள் தொடங்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் ஒரு பெயரைச் சொல்கிறீர்கள். மாண்புமிகு அமைச்சர் கிருஷ்ணசாமி என்ற பெயரைச் சொல்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** நான் குறிப்பிடுவது, மாண்புமிகு அழகிரி அவர்கள் எழுப்பிய கேள்வி திருமுட்டம் பேரூராட்சியைப் பற்றிய கேள்வி. அது முடிந்து போயிற்று. இது. (குறுக்கீடுகள்) காஞ்சிக்கோவில் என்பதே திரு. பெரியசாமியினுடைய கேள்விதான். இதையொட்டிய கேள்வி இருந்தால் கேட்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. அதைத்தான் கேட்கிறார். அவர் தப்பாகக் கேட்கிறார். நீங்கள் கிருஷ்ணசாமி என்ற பெயரைச் சொன்னார்கள். அவர் சின்னப்பன் என்ற பெயரைச் சொல்கிறார். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** இல்லை. கிருஷ்ணசாமி என்றுதான் என்னிடத்திலே கொடுத்திருக்கிற தகவல். அதைக்கூட, மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் ஒரு விழாவிலே பேசுகின்றபோது அவரைக் கேட்டுக் கொண்டு, அவரும் ஒத்துக்கொண்டு, அதன் பிறகு அளிப்பதாகச் சொல்லி அளிக்காமல் இருந்த தகவல் விடையாக வந்தது. ஆனால், அதற்குப் பிறகு எனக்கு ஒரு சந்தேகம் ஏற்பட, மீண்டும் நேற்று இரவு தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு, 'பதிவு செய்தாகிவிட்டது, ஆனால் எங்களுக்கு முறைப்படி இன்னும் பத்திரம் கிடைக்கவில்லை' என்ற தகவல் வந்த பிறகுதான் இந்த விடையையே அனுமதி பெற்றுத் திருத்தி படித்திருக்கிறேன். கிருஷ்ணசாமிதான், சின்னப்பன் என்ற பெயர் அல்ல.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பெரியசாமி அவர்கள் கேட்க சில குறிப்புகளை என்னிடத்தில் கொடுத்து அதைக் கேள்வியாகக் கேட்கச் சொன்னார். அதன் அடிப்படையிலேதான் அந்தக் கருத்தை நான் சொல்லியிருக்கிறேன். 14-10-1998 அன்று சின்னசாமி என்பவர் பேரூராட்சிக்காக இந்த இடத்தை இலவசமாக அளித்திருப்பதாக திரு. பெரியசாமி குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார். (குறுக்கீடு)



**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த இடத்தைத் தானமாக வழங்கியவர், சின்னப்பன் என்பது அவருடைய பெயர். அவரை அழகேசன், பொன்னுச்சாமி, பொன்னு என்று பலவிதத்திலே கூப்பிடுவார்கள். நான் கலந்து கொண்ட விழாவிலேதான் சந்தைக்காக அந்த இடத்தை அவர் தருவதாகக் கூறினார். ஆனால், அதற்குப் பின்பு சட்டப்பூர்வமான நடவடிக்கை எடுத்து இன்னும் நம்முடைய பேரூராட்சிக்கு அளிக்கப்படவில்லை. அளித்த பின்பு நடவடிக்கைக்கு வாய்ப்பு உண்டு.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலம் கொடுத்திருக்கிற பட்டியலிலே உள்ள பெயரைத்தான் என்னால் அறிவிக்க முடியும். பதிவு செய்து கொடுத்திருக்கிற பெயர் கிருஷ்ணசாமி என்றுதான் இருக்கிறது. என்னால் வேறு ஒரு பெயரை இங்கே அறிவிக்க இயலாது; கூடாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 407. திரு. ஜி.கே. மணி. மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**407—**

## வேளாண்மைக் கல்லூரி அமைத்தல்

***18678—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், பவானி பகுதி மிகவும் பின்தங்கிய பகுதியாக இருப்பதால் அங்கு வேளாண்மைக் கல்லூரி ஒன்று அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

முற்பகல் 9-50

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

[1999 ஏப்ரல் 16

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி, இருக்கையில் இல்லை. திரு எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஈரோடு மாவட்டம் பவானி ஒன்றியத்திலே அமைந்துள்ள பவானி நகருக்கு அருகிலுள்ள விவசாயப் பண்ணையில் வேளாண்மைக் கல்லூரி — அமைத்து எதிர்காலத்திலே நாட்டினுடைய அடிப்படைப் பொருளாதாரம், விவசாயத்தினை அடிப்படையாகக் கொண்டிருக்கக்கூடிய இந்தச் சூழ்நிலையில் விவசாயக் கல்லூரியில் படித்த இளைஞர்கள் நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி எதிர்காலத்திலே சுயமாக விவசாயத்தில் ஈடுபடக்கூடிய அளவிற்கு ஈரோடு மாவட்டத்திலே வேளாண்மைக் கல்லூரி—அமைத்துக் கொடுக்க அரசு மறுபரிசீலனை செய்து ஆவன செய்ய வேண்டும்; செய்து கொடுப்பார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அந்தக் கேள்விக்குத்தான் "இல்லை" என்று பதில் அளித்திருக்கின்றேன். தற்போதுள்ள சூழ்நிலையில் பரிசீலிக்க இயலாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பின்தங்கிய பகுதியான பவானிக்கு நாம் கல்லூரி அளிக்காவிட்டால் போகிறது. அந்த இடத்திலே, Land Improvement Board என்ற ஒன்று ஏற்கெனவே Land Improvement Scheme Act பிரகாரம் இருக்கிறது. அதில் இந்த அவையிலே நீங்கள் என்னையும், மாண்புமிகு உறுப்பினர் அருண்குமார், மாண்புமிகு உறுப்பினர் அன்பில் பொய்யாமொழி போன்றவர்களையும் அந்தக் குழுவிலே உறுப்பினராகப் போட்டீர்கள். அதற்குத் தலைவர் நம்முடைய விவசாயத் துறை அமைச்சர்தான். ஆனால் கடந்த இரண்டாண்டுகளாக அந்த Land Improvement Board என்பது செயல்படாமலேயே இருக்கிறது. அது பற்றிய தகவலையாவது எங்களுக்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் தருவார்களா? ஏனென்றால் தகவல் பெறக்கூடிய உரிமை எங்களுக்கு இருக்கிறது. ஆனால் நான் இரண்டு முறை சொல்லியும் அது செயல்படவே இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதோடு நிறுத்திக்கொள்ளுங்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இரண்டாண்டு காலமாக அது செயல்படவில்லை



1999 ஏப்ரல் 16]

என்று உறுப்பினர் ஒரு குற்றச்சாட்டை இந்தக் கேள்விக்குச் சம்பந்தமில்லாத முறையிலே இங்கே சொல்லியிருக்கிறார்கள். அந்த Land Improvement Board-அந்தக் குழு 1998-ல் நியமிக்கப்பட்டு, அது வேளாண்மைப் பொறியியல் துறைக்கு அனுப்பி வைக்கப்பட்டு, அவர்கள் அதைப்பற்றி ஒரு கூட்டம் கூட்டுவதற்கு எனக்குக் கோப்பு அனுப்பியிருந்தார்கள். அதற்கிடையிலே திரு. வி.சி. குழந்தைசாமி தலைமையிலே அமைந்த மற்றொரு குழு ஓர் அறிக்கை தந்து, அந்தக் குழுவினுடைய பரிந்துரையை நிறைவேற்றுவதற்காக அரசு மட்டத்திலே, அதிகாரிகள் மட்டத்திலே, பரிசீலனை செய்து கொண்டிருந்தார்கள். அந்த முடிவும் தெரிந்த பிறகு அந்தக் கூட்டத்தைக் கூட்டலாம் என்று கருதித்தான் இதுவரை அந்தக் கூட்டம் கூட்டப்படாமல் இருந்தது. இப்பொழுது கூட்டம் கூட்டுவதற்கான தேதி குறிக்கப்பட்டிருக்கிறது. விரைவில் மாண்புமிகு உறுப்பினரவர்களுக்கு அந்தத் தகவல் தெரிவிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா 408, திரு. பொ. முருகேசன். மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

**408—**

### மஞ்சள்நீர்க் கால்வாயைச் சீர்படுத்தும் பணி

***9596—திரு. பொ. முருகேசன்:**

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா:

காஞ்சிபுரம் நகராட்சியிலுள்ள மஞ்சள்நீர்க் கால்வாயைச் சீர்படுத்தும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

காஞ்சிபுரம் நகராட்சியிலுள்ள மஞ்சள்நீர்க் கால்வாய் கழிவு நீரோடையாக மாறிவிட்டதால், இந்நீரைப் பாசனத்திற்குப் பயன்படுத்துவதில்லை. அவ்வப்போது நகராட்சியினரே பராமரிப்புச் செய்துகொள்வதால், இக்கால்வாய்ச் சீரமைப்பிற்கான திட்டம் ஏதும் வரையப்படவில்லை.

**திரு. பொ. முருகேசன்:** மாண்புமிகு பேரவைத்தலைவரவர்களே, அழகுமிகு காஞ்சி என்ற பெயருக்குக் களங்கமாக இருப்பதுதான் இந்த மஞ்சள்நீர்க் கால்வாய். அமைச்சரவர்கள் சொன்னதுபோல,

[1999 ஏப்ரல் 16

இன்றைக்கு அந்த மஞ்சள்நீர்க் கால்வாய் கழிவு நீரோடையாக இருக்கின்ற காரணத்தினால், அதிலே கொசுத் தொல்லை அதிகமாகி அதன் காரணமாக நகர மக்கள் வியாதிகளுக்கு ஆளாகிக் கொண்டிருக்கிறார்கள். எனவேதான் இந்தக் கால்வாயைச் சீர்படுத்தித்தர வேண்டுமென்று கேட்டிருக்கிறேன். அதைவிட முக்கியமானது என்னவென்று சொன்னால், மழைக் காலங்களிலே காஞ்சி நகரத்திலே வழிந்தோடுகின்ற தண்ணீரெல்லாம் இந்தக் கால்வாயின் மூலமாக வெளியே செல்ல வேண்டும். 1996-ல் நாம் ஆட்சிக்கு வந்த நேரத்தில், கடுமையான மழை பெய்தபோது, இந்தக் கால்வாய் சீராக இல்லாத காரணத்தால் மழைத் தண்ணீரெல்லாம் கால்வாயின் மூலமாக வெளியேற முடியாமல், காஞ்சி நகரமே வெள்ளக்காடாகக் காட்சியளித்தது; அன்றைக்கு மக்கள் பெரிதும் அவதிக்குள்ளானார்கள். எனவேதான்— இந்தக் கால்வாயைச் சீரமைத்து, சிமெண்ட் கால்வாயாகக் கட்டித்தர வேண்டுமென்றுகூட நம்முடைய முதல்வரவர்களுக்கு பட்ஜெட் கூட்டத்திற்கு முன்னாலேயே ஒரு மனுவைக் கொடுத்திருக்கிறேன். எனவே, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சரவர்கள், நம்முடைய முதல்வரவர்களோடு கலந்து பேசி, அந்தக் கால்வாயைச் சீரமைத்து, சிமெண்ட் கால்வாயாகக் கட்டித்தர ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-55

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுப்பணித் துறை எந்த, எந்தப் பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்பதற்குச் சில நியதிகள் உண்டு. ஓடையோ, கால்வாயோ, ஊரில் ஓடுகிறதா, காட்டில் ஓடுகிறதா என்பதல்ல பிரச்சினை. அதிலே வருகின்ற நீர் பாசனத்திற்குப் பயன்படுமானால்தான் பொதுப்பணித் துறை அந்தப் பணியை ஏற்றுச் செய்யும். இந்த மஞ்சள் நீரோடையைப் பொறுத்தவரையில், ஒரு காலத்திலே அல்லாபுத்தூர் ஏரியிலே போய்க் விழுந்து கொண்டிருந்தது. ஆனால், இப்போது கழிவு நீராக மாறிவிட்ட காரணத்தினால், பாசனத்திற்குப் பயன்படுவதில்லை. எனவே, கொசு வந்தாலும், மழைநீர் மிகுதியாக வந்தாலும், அதைப் பராமரிக்க வேண்டியது உள்ளாட்சித் துறைதான். எனவே, அந்தத் துறையின் மூலமாக அந்தப் பணியைச் செய்வதற்கு, உறுப்பினர் முருகேசனோடு சேர்ந்து நானும் அந்த அமைச்சருக்குப் பரிந்துரை செய்கிறேன். பொதுப்பணித் துறை இதை இப்போது எடுத்துக் கொள்வதற்கில்லை.



1999 ஏப்ரல் 16]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 409, திரு. ஜி.எல். வெங்கடாசலம், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்

**409—**

**நீர்த்தேக்கம் அமைத்தல்**

***9708—திரு. ஜி.எல். வெங்கடாசலம்:**

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாலக்கோடு வட்டம், சாஸ்திரமுட்லு கிராமத்திற்கு அருகே செல்லும் பொப்பனூர் ஹல்லா காட்டோடையின் குறுக்கே நீர்த்தேக்கம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது தொடங்கப்படும்?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பாலக்கோடு வட்டம், சாஸ்திரமுட்லு கிராமத்திற்கு அருகே செல்லும் பொப்பனூர் ஹல்லா காட்டோடையின் குறுக்கே நீர்த்தேக்கம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

**திரு. ஜி.எல். வெங்கடாசலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொப்பனூர் ஹல்லா காட்டோடை என்பது புல்வெளி, மலைப் பகுதி மற்றும் வனப் பகுதிகளில் இருந்து ஆரம்பமாகி, சனத்குமரா நதியில் கலக்கின்ற காட்டோடையாகும். இந்தக் காட்டோடையில் மழைக் காலங்களில் அதிகமாகத் தண்ணீர் வந்தாலும் அந்தப் பகுதியில் உள்ள மக்களுக்கு எந்தவிதப் பயனும் இல்லாமல் இருக்கிறது. ஆகவே, அந்தப் பகுதி மக்களின் நீண்டநாள்—25 ஆண்டு காலக்-கோரிக்கை, அங்கே காட்டோடையின் குறுக்கே அணை அமைக்க வேண்டுமென்பதாகும். ஆகையால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த மக்களின் நீண்டநாள் கோரிக்கையை ஏற்று— அணை இல்லை என்று சொன்னாலும், பொன் வைக்கின்ற இடத்தில் ஒரு பூவையாவது வைப்போம் என்று சொல்லுகின்ற அளவில்— ஒரு நல்ல ஏரியை அமைத்து, அந்தப் பகுதி மக்களின் விவசாயத்திற்குப் பயன்பெறுகின்ற வகையில் அதற்கான நடவடிக்கை எடுக்க முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலில் இந்த அணையைப் பொறுத்தவரையில் Benefit cost ratio என்பார்கள்; அது இல்லையென்று 1984 ஆம் ஆண்டிலே ரத்துச் செய்து விட்டார்கள். பிறகு, 1989-90-ல் கலைஞர் ஆட்சிக்கு வந்தபோது இப்படிப்பட்ட கோரிக்கை வந்தவுடன் அதைப்பற்றி ஆராயச் சொன்னார்கள். ஆராய்ந்ததற்குப் பிறகு, 5½ கோடி ரூபாயில் அதற்கான திட்டம் தயாரிக்கப்பட்டது. அது சின்னாற்றின் உப நதி. சின்னாறு, காவிரியினுடைய உபநதி. எனவே, அதன் அடிப்படைக் காரணமாக, காவிரி குறித்து நடுவர் மன்றத்தில் வழக்கு இருக்கிற காரணத்தினால் இப்படிப்பட்ட இடங்களிலே அணை எதுவும் கட்டக்கூடாது என்று அரசு உத்தரவு பிறப்பித்திருக்கிறது. ஆகவேதான், அது நின்றுபோய் இருக்கிறது. தீர்ப்பு வந்த பிறகு இதுகுறித்து ஆராயப்படும். மாண்புமிகு உறுப்பினர் புதிய யோசனை ஒன்றைத் தெரிவித்திருக்கிறார்கள், ஏரி ஒன்று அமைக்கப்படுமா என்று. அது குறித்து அரசு ஆராயும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எல். மூக்கையா, பாலக்கோடுக்கும் உங்களுக்கும் என்ன சம்பந்தம்? (குறுக்கீடு) சரி, கேளுங்கள்.

**திரு. எல். மூக்கையா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொடைக்கானல் மலைப்பகுதி விவசாயிகளுக்கு ஆற்றுப் பாசனமோ, கிணற்றுப் பாசனமோ, கண்மாய்ப் பாசனமோ கிடையாது. அந்தப் பகுதி விவசாய மக்கள் மானாவாரியாகத்தான் உருளைக்கிழங்கு, முட்டைக்கோஸ், கேரட், பூண்டு, நூல்கோல், பட்டர் பீன்ஸ் போன்ற காய்கறிகளைப் பயிரிடுகிறார்கள். எனவே, அந்தப் பகுதி விவசாய மக்களின் நலன் கருதி, அந்தப் பகுதியில் பூம்பாறை கிராமத்தில் குண்டம்பாச்சி நீர்த்தேக்கம், மன்னமனூர் கிராமத்தில் அறம்பள்ளிப்பாறை நீர்த்தேக்கம், பூண்டி கிராமத்தில் அருங்காட்டுக்குளம் நீர்த்தேக்கம், கூக்கால் கிராமத்தில் பேரிஜம் நீர்த்தேக்கம் ஆகிய நீர்தேக்கங்களை எல்லாம் கட்டுவதற்கு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்ட நிலையில் இருக்கின்றன. மலைப் பகுதி விவசாயிகளின் நலன் கருதி, நம்முடைய அரசு அந்த விவசாயிகளுக்கு முன்னுரிமை கொடுத்து, விவசாயிகளுடைய கஷ்டத்தை உணர்ந்து, அவர்களுக்கு இப்படிப்பட்ட நீர்த்தேக்கங்களைக் கட்டித்தர முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.





ஒரு திட்டத்தை என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வருவாரேயானால், மலைப் பகுதி மக்களுக்குச் செய்வதற்கு என்று நிதி ஒதுக்கப்பட்டு, அந்த நிதியிலிருந்து அந்தத் திட்டத்தை நிறைவேற்றித்தர அரசு முயற்சிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 410, திரு. கொ.வீ. நன்னன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**410—**

## பேருந்துகளில் திருக்குறளுக்கு விளக்கவுரை

***20228—திரு. கொ.வீ. நன்னன்:**

· மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசுப் பேருந்துகளில் எழுதி வைத்திருக்கும் திருக்குறளுக்கு அதன் கீழே விளக்க உரையையும் எழுத அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது எழுதப்படும்?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) விளக்க உரை எழுதும் கருத்துரு தற்பொழுது இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. கொ.வீ. நன்னன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது தமிழ் மறை தாத்தா, வான்புகழ் வள்ளுவப் பெருந்தகை அவர்கள் 'தெளியாத தமிழ் நெஞ்சம் தெளியட்டும்' என்று கருதி, தமிழனுக்காகத் தேன் தமிழில் செய்து வைத்த திருக்குறள் அரசுப் பேருந்துகளில் எல்லோரும் புரிந்துகொள்ளும் வகையில் எழுதி வைக்கப்பட்டுள்ளது. அது ஓர் அருமையான திட்டம்தான். ஆனால், பேருந்துகளில் பயணம் செய்யும் பாமர மக்களுக்கு அதன் பொருள் புரிய வாய்ப்பு இல்லை. எனவே, அனைவருக்கும் எளிய முறையில் பொருள் புரியும்படி அந்தக் குறளுக்கு அடியில் விளக்க உரையும் [illegible]க்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-00

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருக்குறளே பெரும்பாலும் எளிமையாக இருப்பதுதான். படிக்கிறபோதே பொருளைப் புரிந்துகொள்கிற அளவிற்கு இருக்கிற குறள்கள்தான் பேருந்துகளில் எழுதப்படுகின்றன. இது எழுதப்படுவதன் நோக்கமே, தமிழர்களுக்கு அந்தத் தமிழ் உணர்வும், திருக்குறளைப் படிக்க வேண்டுமென்ற உணர்வும் ஏற்பட வேண்டும் என்பதற்குத்தானே தவிர, பேருந்திலேயே அனைத்தையும் படித்துத் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற எண்ணத்தில் எழுதப்படுவது அல்ல. அப்படியென்றால், 1330 குறள்களையும் எழுதி, அதற்கு விளக்க உரையையும் பேருந்துகளில் எழுத முடியாது. அந்த உணர்வை உருவாக்குகிற வகையிலே ஓர் எடுத்துக்காட்டாக திருக்குறள் எழுதப்படுகிறது. எளிமையான குறள்கள்தான் பேருந்துகளிலே எழுதப்படுகின்றன. ஆகவே, விளக்க உரை எழுதுகின்ற நோக்கம் அரசுக்கு இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 411, திரு. பா. வேல்துரை, மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

**411—**

**வளைவுச் சாலையை நேர் சாலையாக மாற்றுதல்**

***4801—திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதியில் பாளையங்கோட்டை-அம்பாசமுத்திரம் சாலையில் பத்தமடைக்குக் கீழ்ப்புறம், உள்ள சாலையில் அபாயகரமான வளைவுகள் இருப்பதால் அதனை நேர் சாலையாக மாற்ற அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுடைய அனுமதியோடு திருத்தப்பட்ட விடையைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

(அ) மற்றும் (ஆ) இந்தப் பணி, விபத்துத் தடுப்புத் திட்டத்தில் 1998-99 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்படுவதாக இருந்தது. ஆனால்,



அதை நேர்படுத்துவதற்கு பொதுப்பணித் துறை ஏரிக்குள்ளே வரவேண்டிய அவசியமும், சிறிது நிலம் கையகப்படுத்த வேண்டிய அவசியமும் இருந்த காரணத்தால் இந்தத் திட்டம் பரிசீலனையில் இருக்கிறது.

**திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாளையங்கோட்டை-அம்பாசமுத்திரம் சாலையில் மேலச்செவலுக்கும், பத்தமடைக்கும் இடைப்பட்ட இடம் மிகவும் குறுகலாகவும், குளத்துப் பகுதியாகவும் இருக்கிறது. ஆனால், நில ஆர்ஜிதம் செய்ய வேண்டிய தேவையில்லை என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன். அங்கே பொதுப்பணித் துறை அனுமதி மட்டும்தான் வாங்க வேண்டும். பொதுப்பணித் துறையினுடைய அனுமதியை வாங்குவதற்கு நமது அமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள்; வாங்கிவிடலாம். அதில் ஒன்றும் சிக்கல் இல்லை. அதேபோன்று, அதே பாளையங்கோட்டை-அம்பாசமுத்திரம் சாலையிலே 27-வது கிலோ மீட்டருக்கும், 28-வது கிலோ மீட்டருக்கும் இடையிலே, 27, 28-க்கும் இடையிலே, வீரவநல்லூர் பக்கத்திலே மிகவும் மோசமான, ஆபத்தான வளைவு இருக்கிறது. அதுபோன்று, சேரன்மகாதேவிபனகுடி சாலையிலே 6/4-லிருந்து, 7/2 வரை குளத்துக் கரை சாலை மிகவும் மோசமாக இருக்கிறது. அதுபோன்று திருநெல்வேலி-பொட்டல்புதூர் சாலையிலேயும், முக்கூடலுக்கும் அரியநாயகிபுரத்திற்கும் இடையிலே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள், மூலவினாவிற்கும், உங்கள் துணை வினாவிற்கும் ஒரு பட்டியலையே படித்துக் கொண்டிருக்கிறீர்கள், உட்காருங்கள்.

**திரு. பா. வேல்துரை:** வினாவை முடித்து விடுகிறேன், ஐயா. அரியநாயகிபுரத்திற்கும், முக்கூடலுக்கும் இடைப்பட்ட பகுதி மிகவும் மோசமாக இருக்கிறது. ஆக, இந்த நான்குமே **accident-prone zone** - விபத்துப் பகுதியிலே எடுக்கப்பட்டிருக்கிறது. பல ஆண்டுகளாகக் கிடப்பிலே இருக்கிறது. எனவே, இந்த ஆண்டு கண்டிப்பாக நீங்கள் இந்த நான்கு பணிகளையும் நிறைவேற்றித் தரவேண்டும், நிறைவேற்றித் தருவீர்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வினாவிலே குறிப்பிட்டிருக்கிற இடங்கள் பற்றிய விளக்கம்தான் என்னிடத்திலிருக்கிறது. மற்ற மூன்று இடங்களைப் பற்றிய விவரம் தற்போது என்னிடத்தில் இல்லை. இருந்தாலும்,

அதுபற்றியும் இந்த அரசு பரிசீலிக்கத் தயாராக இருக்கிறது. சேரன்மகாதேவி தொகுதியிலே இருக்கக்கூடிய பாளையங்கோட்டை-அம்பாசமுத்திரம் சாலை முன்பு மாவட்டச் சாலையாக இருந்தது. இப்போது மாநிலச் சாலையாக மாற்றப்பட்டிருக்கிறது. விபத்துக்குரிய இடம் என்றும் இந்த இடம் கண்டறியப்பட்டிருக்கிறது. நேர்பாடு செய்வதற்கு முயற்சி எடுத்துக்கொண்டபோது, பத்தமடைக் கரை வழியாகப் போகிற அந்தச் சாலை ஏரிக்குள்ளே போக வேண்டிய அவசியம் இருக்கிறது. நிலம் கையகப்படுத்தப்பட வேண்டிய அவசியமும் இருக்கிறது. பொதுப்பணித் துறையினுடைய அனுமதி கிடைத்திருக்கிறது. நிலத்தைக் கையகப்படுத்துகிற பணி நடைபெறுகிறது. இந்தப் பணி, நிதிநிலைமைக்குத் தக்கவாறு, நிச்சயம் எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. முகம்மது கோதர் மைதீன்.

**திரு. முகம்மது கோதர் மைதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதே அம்பாசமுத்திரம் ரோட்டில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய சிறப்புத் திட்டத்தின்கீழ், தமிழகத்திலே 104 பாலங்களைக் கட்டக்கூடிய ஒரு நல்ல திட்டத்தின் அடிப்படையில், என்னுடைய தொகுதியிலே இருக்கக்கூடிய தருவை கிராமத்திற்கு அருகே இருக்கக்கூடிய ஒரு தாம்போகியில் புதிதாக ஒரு பாலம் கட்டுவதற்கு நம்முடைய அரசு திட்டம் தீட்டியிருக்கிறது. இந்தப் பாலம் கட்டுவதற்காக அனுமதி அளித்த முதலமைச்சர் அவர்களுக்கும், நம்முடைய நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு, இந்தப் பணி எப்போது தொடங்கும்; இதற்கான திட்டச் செலவுகள் எவ்வளவு; இந்தத் திட்டம் எப்போது முடியும் என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-05*

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாலம் கட்டுகிற பணி விரைவாகத் தொடங்கப்படவிருக்கிறது. டெண்டர்கள் முடிந்திருக்கின்றன. இந்த மாத இறுதியிலே பணிகள் தொடங்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



**திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாளையங்கோட்டை-அம்பாசமுத்திரம் சாலை, மாநிலச் சாலையாக மாற்றப்பட்டு கடந்த ஆண்டே அறிவிக்கப்பட்டது. Road Sector Project மூலமாக அந்த மேம்பாட்டுத் திட்டங்கள் எல்லாம் நடைபெறும் என்று சொன்னார்கள். ஆனால், இதுவரை நடைபெறவில்லை. அந்தத் திட்டம் என்ன நிலையில் இருக்கிறது? அந்தச் சாலையை மேம்படுத்துவதற்கு வேறு ஏதாவது சிறப்புத் திட்டங்கள் இருக்கின்றனவா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Road Sector Project சார்பில் ஏறத்தாழ 1500 கோடி ரூபாய்க்குத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. இது உலக வங்கி நிதி ஆதாரத்தையொட்டி செய்யக்கூடிய பணி, இதிலே கிழக்குக் கடற்கரைச் சாலையும் முழுமையாக வருகிறது, இதிலே இந்தச் சாலையும் வருகிறது. எனவே, உலக வங்கியிலிருந்து நிதி கிடைத்த பிறகு, இந்தப் பணி எடுத்துக் கொள்ளப்படும். அதற்கான தீவிரமான வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி, உங்களுக்கும், அம்பாசமுத்திரத்திற்கும் என்ன சம்பந்தம்? (குறுக்கீடு) சரி, கேளுங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்டச் சாலைகளை மாநிலச் சாலைகளாக எடுத்துக் கொள்வதற்கு, எத்தனை கிலோ மீட்டர் தூரம் தேவைப்படுகிறது. எந்த மாதிரி அடிப்படையில் அந்தச் சாலைகள் எடுக்கப்படுகின்றன என்பதைத் தங்கள் மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முக்கிய மாவட்டச் சாலைகள்— எம்.டி.ஆர். என்று இருக்கக்கூடிய சாலைகளை மாநிலச் சாலைகளாக நாம் தரம் உயர்த்துகிறோம். அதற்கு எவ்வளவு நீளம் இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. முக்கியமான நகரை இணைக்கக்கூடிய அல்லது பேரூராட்சியை இணைக்கக்கூடிய சாலையாக இருக்குமானால், அது எம்.டி.ஆர். என்று முக்கிய மாவட்டச் சாலையாக இருக்குமானால், மாநிலச் சாலையாக மாற்றப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ம. அப்துல் லத்தீப்.

[1999 ஏப்ரல் 16

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாலங்கள் பல கட்டப்பட்டு வருகின்றன. பகுதிகள் இணைக்கப்பட்டு வருகின்றன. அதற்காக, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அதேநேரத்தில், எங்கள் ஊரில் நகர்மன்றத்திற்கு உட்பட்ட பகுதியில் தேசிய நெடுஞ்சாலைக்கு உட்பட்ட ஒரு பாலம் இடிந்து, ஏறக்குறைய 15 மாதங்கள் ஆகின்றன. இரண்டு பகுதிகளும் பிரிக்கப்பட்டிருக்கின்றன. மக்கள் பெரும் துயரத்திற்கும், கஷ்டத்திற்கும் ஆளாக்கப்பட்டு இருக்கிறார்கள். அரசு இது குறித்து முன்னுரிமை வழங்கி, அதனைக் கட்டித் தருவதற்கு ஆவன செய்யுமா; நிதி ஒதுக்கீடு செய்யுமா; அரசு அதற்கு முன்னுரிமை வழங்க முயலுமா; அந்தப் பாலம் எப்போது கட்டப்படும் என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய நெடுஞ்சாலையில் அந்தப் பாலம் இருக்குமானால், அதற்குரிய நடவடிக்கை ஏற்கெனவே மேற்கொள்ளப்பட்டிருக்கும். முனிசிபாலிடிக்கு உள்ளே இருக்கிறது என்று சொன்னால், அது ஒருவேளை நகராட்சிக்கு உட்பட்ட பாலமாகக் இருக்கக்கூடும். ஏற்கெனவே ஒருமுறை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதுகுறித்துச் சொல்லியிருக்கிறார்கள். அது நகராட்சிக்குட்பட்ட பாலம் என்று பதில் தெரிவித்திருக்கிறேன். இருப்பினும், அவர்கள் இப்போதும் தெரிவித்திருக்கிற காரணத்தால் மறுபடியும் அதைப் பரிசீலித்து தேசிய நெடுஞ்சாலையாக இருந்தாலும் சரி, மாநில நெடுஞ்சாலையாக இருந்தாலும் சரி, நெடுஞ்சாலைக்கு உரிய பாலமாக இருந்தால், உடனடியாகக் கட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்படும். அது நகராட்சிக்கு உட்பட்டதாக இருந்தால், தயவுசெய்து நகராட்சியின் மூலமாக அதைக் கட்டுவதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *412*, திரு. வெ. கோவிந்தன், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

**412—**

## மேம்பாலம் அமைத்தல்

***18251—திரு. வெ. கோவிந்தன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



1999 ஏப்ரல் 16]

(அ) பேரணாம்பட்டு-மதினாபள்ளி ஆற்றில் மேம்பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) அந்தப் பணிக்குப் பெருந்தொகை தேவைப்படும் என்ற காரணத்தினால், இப்பணியை அண்மைக் காலங்களில் மேற்கொள்ளும் சாத்தியக்கூறுகள் இல்லை.

**திரு. வெ. கோவிந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மதினாபள்ளி ஆறு, பேரணாம்பட்டுக்கும் ஆம்பூருக்கும் இடையிலே உள்ள ஆறு. மழைக் காலம் வந்தால் 10, 15 நாட்களுக்குப் போக்குவரத்து பாதிக்கப்படுகிறது. இதனால், ஆம்பூருக்குச் செல்கின்ற கல்லூரி மாணவர்கள், தோல் தொழிலில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்கள், விவசாயப் பெருமக்கள் மற்றும் பல்வேறு தரப்பினர் ஆம்பூருக்குச் செல்ல முடியாத சூழ்நிலை ஏற்படுகிறது. அவர்கள் ஆம்பூருக்குச் செல்ல வேண்டுமென்றால் 60, 70 கிலோ மீட்டர் தூரம் காட்பாடிக்குச் சென்று, செல்ல வேண்டியிருக்கிற நிலை இருக்கிறது. ஆகவே, இப்பகுதி மக்கள் நலன் கருதி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீண்டும் மறுபரிசீலனை செய்வார்களா என்று அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வினாவில் குறிப்பிட்டுள்ள மேம்பாலம் கட்டுவதற்கு உரிய இடமானது, ஆம்பூர்— சாத்கர் சாலையில் மலட்டாறு குறுக்கிடும் இடத்தில் கட்டப்பட இருக்கிறது. இதற்கு ஏறத்தாழ 700 இலட்சம் ரூபாய் தேவைப்படுகிறது என்று மதிப்பீட்டில் தெரிவித்து இருக்கிறார்கள். தற்போது உள்ள நிதி நெருக்கடி காரணமாகத்தான் இந்தப் பாலத்தை உடனடியாக எடுத்துக்கொள்ள இயலாத நிலை இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, இந்தப் பாலத்தினுடைய முக்கியத்துவத்தைத் துறை உணர்ந்திருக்கிறது. தோல் தொழிற்சாலைகள், பொது மக்கள் ஆகியோர் பயன்படுத்தக்கூடிய இந்தப் பாலத்தைக் கட்டுவதற்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1999 ஏப்ரல் 16

முற்பகல் 10-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 413, திரு. ந. பாண்டுரங்கன், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

**413—**

### அருள்மிகு இலக்குமிநரசிம்மசுவாமி கோவில் தேரோட்டம்

***15990—திரு. ந. பாண்டுரங்கன்:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், ஆவணியாபுரம் அருள்மிகு இலக்குமிநரசிம்மசுவாமி திருக்கோவிலின் நின்றுவிட்ட தேரோட்டத்தை மீண்டும் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு, மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) புதிய மரத் தேர் செய்ய உத்தேசிக்கப்பட்டு, அப்பணிக்கு திருப்பணிக் குழு அமைக்க மேற்படி கிராமம் மற்றும் சுற்றுவட்டாரக் கிராமங்களில் உள்ள சமுதாய செல்வாக்கு, தெய்வசிந்தனையுள்ள நபர்களை அணுகி ஒப்புதல் பெறவும், மரத் தேர்ப் பணிக்கு மதிப்பீடு தயார் செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**திரு. ந. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் குறிப்பிட்டிருக்கின்ற அத்திருக்கோவிலின் திருத்தேர் 1980-லிருந்து ஓடாமல் இருக்கிறது. பொதுமக்களும் தங்களுடைய பங்குப் பணத்தைத் தரத் தயாராக இருக்கிறார்கள். எவ்வளவு காலத்திற்குள் இந்தத் திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அரசுக்கு அளிக்கப்படும்? அரசு இந்த வருடத்திற்குள்ளே அந்தத் திருத்தேரை ஓட்டுவதற்கு முயற்சிக்குமா? மேலும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒருமுறை அந்தத்



1999 ஏப்ரல் 16]

திருக்கோவிலை வந்து பார்வையிடுவார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாகவே தமிழ்நாட்டில் ஏற்கெனவே இருக்கின்ற கோவில்கள் பழுதடைந்து, சீர்கேடான நிலை இருக்குமானால், அவற்றைத் திருப்பணி செய்வதற்காக எடுத்துக்கொள்கிற வாய்ப்பைத்தான் இந்தத் துறை முன்னுரிமையாக எடுத்துக்கொள்கிறது. அதுபோக, தமிழ்நாட்டில் ஏராளமான கோவில்களின் தேர்கள் பழுதுபட்டிருக்கின்றன. இந்தக் கோவிலினுடைய தேர் 30 ஆண்டு காலமாகப் பழுதுபட்டிருக்கிறது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். எனினும், அந்தக் குறிப்பிட்ட நாளில் அங்கிருக்கின்ற மக்கள் தற்காலிகமாக ஒரு தேர் அமைத்துக்கொண்டு அந்தத் தேரோட்டத்தை நடத்துகிறார்கள். அதனால்தான், அந்தத் தேரோட்டத்தை நடத்துவதற்கும், தேரைச் சீர் செய்வதற்கும் துறை ஒப்புக்கொண்டுள்ளது என்றாலும், அதற்குச் செலவு ரூபாய் 10 இலட்சத்திற்கு மேலாகும் என்றும் நான் குறிப்பிட விரும்புகிறேன். எனவே, பொதுமக்கள் எந்த அளவிற்குத் தொகையைத் திரட்டித் தருகிறார்கள் என்பதை வைத்துத்தான் இந்தத் துறை அதனுடைய சார்பில் நிதியை ஒதுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 414, திரு. மா. இராமச்சந்திரன், மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**414—**

### அமுதம் அங்காடிக்குக் கட்டடம்

***20453—திரு. மா. இராமச்சந்திரன்:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், ஒரத்தநாடு ஒன்றியம், கரைமீண்டார்கோட்டை கிராமத்தில் உள்ள வாடகைக் கட்டடத்தில் செயல்படும் அமுதம் அங்காடிக்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

[1999 ஏப்ரல் 16

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், ஒரத்தநாடு ஒன்றியம், கரைமீண்டார்கோட்டை கிராமத்தில் 1998-99 ஆம் ஆண்டு ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் ஒரு நியாய விலைக் கடைக் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கட்டடம் கட்டி முடிப்பதற்கு முன்னால் இந்த வினா எழுப்பப்பட்டது. ஆகையினாலே, இந்த வினா தாமதமாக வந்திருந்தாலும், காரியம் நிறைவேற்றப்பட்டிருப்பதைக் கண்டு மகிழ்ச்சியடைகிறோம். நம்முடைய அமைச்சர் பெருமானுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 415, திரு. கே. சுப்பராயன், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**415—**

### கட்டுமானத் தொழிலாளர்களுக்கு மழைக்கால நிவாரணம்

***21683—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மீனவர்களைப் போல் கட்டுமானத் தொழிலாளர்களுக்கும் மழைக்கால நிவாரணம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இத்திட்டம் குறித்து பரிசிலனை செய்யப்படும் என்று இந்த மாமன்றத்தில் இந்த அரசு ஏற்கெனவே உறுதி அளித்துள்ளது.



1999 ஏப்ரல் 16]

(ஆ) அதன் அடிப்படையில் இது குறித்து தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம் பரிசீலித்து வருகிறது.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது builder-களிடமிருந்து வாங்கப்படுகிற சந்தாத் தொகை 0.3% ஆகத்தான் இருக்கிறது. அதனால், அரசுக்குச் சில பிரச்சினைகள் வருகின்றன. எனவே, தொழிற்சங்கத்தின் தரப்பில், அதை 2 சதவீதமாக உயர்த்த வேண்டுமென்று கோரி வருகின்றனர். அதை ஒரு சதவீதமாகவாவது உயர்த்துவதற்கு அரசு பரிசீலனை செய்யுமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வி, மீனவர்களைப் போல கட்டுமானத் தொழிலாளர்களுக்கும் மழைக்கால நிவாரணம் வழங்கப்படுமா என்று கேட்டார்கள். திரு. கே. சுப்பராயன் அவர்கள் இதுபோன்று கேள்வி எழுப்புவதற்கு முன்பாகவே, அதனுடைய நியாயத்தை உணர்ந்து, இப்போது கட்டுமான வாரியம் அதுகுறித்து ஆய்ந்து வருகிறது. அரசு அதுகுறித்துப் பரிசீலித்து அந்தக் கட்டுமான வாரியம் கொடுத்திருக்கக் கூடிய கோரிக்கையின் அடிப்படையிலே மத்திய அரசு, மாநில அரசு, அதைப்போலவே தொழிலாளர்களுடைய பங்கேற்பு எல்லாம், பொருளாதார ரீதியாக ஒத்துவருகிறதா, நடைமுறைக்கு வருகிறதா என்பது குறித்த அந்தக் கட்டுமான வாரியத்தின் முடிவு அரசுக்கு அனுப்பப்பட்டதற்குப் பிறகு வரும். அது ஆய்ந்து கொண்டிருக்கிறது. அதுகுறித்து மாண்புமிகு உறுப்பினர் கேட்கவில்லை. ஆனால், இன்னொன்றைப்பற்றிக் கேட்டார். குறிப்பாக, செஸ் பற்றி குறிப்பிடுகிறபோது கட்டடம் கட்டுவதற்காகும் மொத்தச் செலவிலே 0.1% என்று இருந்ததை 0.3% ஆக உயர்த்தியதும் இந்த அரசுதான். ஆனால் ஏற்கெனவே உயர்த்தாததைப் போலவும், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் ஏற்கெனவே இருந்ததை உயர்த்தியிருக்கிறோம் என்கிற உண்மையைச் சொல்லாமல் இருப்பதற்கும் வருந்துகிறேன்.

முற்பகல் 10-15

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 0.3% உயர்த்தப்பட்டது என்பதைச் சொல்லித்தான் நான் கேட்டேன். மூலக் கேள்விக்குச் சம்பந்தப்பட்ட துணைக் கேள்வியைத்தான் நான் கேட்டிருக்கிறேன். எப்படி என்று சொன்னால், மழைக் காலத்திலே கட்டடத் தொழிலாளர்களுக்கு நிவாரணம் வழங்குவது, நிதி

சம்பந்தப்பட்ட ஒரு விஷயம். நிதியின் வரவு அதிகம் இல்லை என்றால், கோரிக்கை நிறைவேறுவது பின்தங்கிப் போகும் என்பதால், 0.3% என்பதை 2% ஆக மாற்ற வேண்டும் என்று தொழிற்சங்கங்கள் கோரி வருகின்றன. 2% என்று மாற்ற இயலவில்லை என்றாலும்கூட, 1% ஆக மாற்றப்படுமா என்பதுதான் என்னுடைய கேள்வி. நான் கேட்க விரும்புவது, மாநில அரசு அறிவித்த அந்த நலவாரிய அறிவிப்பிலேயே ஈ.எஸ்.ஐ., பி.எஃப். திட்டங்கள் கட்டடத் தொழிலாளர்களுக்கு அமலாக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு இருக்கிறது. அறிவிக்கப்பட்ட அந்த அறிவிப்பை, கொள்கை ரீதியாக நடைமுறையில் நிறைவேற்ற முற்படுகிறபோது, மாநில அரசுக்கு பி.எஃப்., ஈ.எஸ்.ஐ. நிறுவனங்களிடமிருந்து தடைகள் ஏற்படுகின்றன. அதாவது, சட்ட ரீதியாக சில பிரச்சினைகள் இருக்கின்றன. ஆகவே, இவற்றை நிறைவேற்றுவதில் தடைகள் இருக்கின்றன என்று அவர்கள் சொல்கிறார்கள். நான் மாநில அரசைக் கேட்டுக்கொள்ள விரும்புவது, மாநில அரசு அறிவித்தபடி, பி.எஃப்., ஈ.எஸ்.ஐ. ஸ்கீம் கட்டடத் தொழிலாளர்களுக்கும் பொருந்துகிற முறையில், பொருத்தமான சட்ட மாற்றங்களைச் செய்ய மாநில அரசு முன்வருமா என்று.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கட்டடத் தொழிலாளர்களைப் பொறுத்தவரையில், Employer, Employee—வேலை அளிப்போர், பணியாற்றுவோர் என்ற உறவு முறை இருந்தால்தான் இந்த பிராவிடண்டு ஃபண்டு, ஈ.எஸ்.ஐ. போன்றவைகள் எல்லாம் வழங்கமுடியும் என்று அரசின் சார்பாக நாங்கள் அதைக் கேட்ட நேரத்திலே எங்களுக்கு அந்தப் பதில் வந்திருக்கிறது. இருந்தாலும் அதற்கு, சட்ட ரீதியான சிக்கலைத் தீர்த்து, கட்டடத் தொழிலாளர்களுக்கு அந்தப் பலனைப் பெற்றுத் தருவதற்காக இந்த அரசு தொடர்ந்து கடிதங்கள் எழுதி, பேசி—நானே பல முறை அந்த அலுவலர்களை எல்லாம் அழைத்துப் பேசி—வந்திருக்கிறேன். இன்னொன்று சொன்னார்கள். இந்த நிதியை ஒதுக்குவதன் மூலமாக, உயர்த்துவதன் மூலமாக, செஸ்ஸை உயர்த்துவதன் மூலமாக மட்டுமே இந்த மழைக்கால நிவாரணம் கொடுத்துவிட முடியாது. இப்போது மீனவர்களுக்கு மத்திய அரசு பங்கு அளிக்கிறது; மாநில அரசின் பங்கு இருக்கிறது; சொசைட்டியிலே பதிவு செய்த மீனவர்களும் பங்கு அளிக்கிறார்கள். ஆக, 3 பங்குகள் சேர்ந்துதான் அந்தத் தொகை மாதம் 270 ரூபாய் கொடுக்கப்படுகிறது. அதேபோல, கட்டடத் தொழிலாளர்களுக்கு, மத்திய அரசின் பங்கு என்ன, மாநில அரசின் பங்கு என்ன, கட்டடத் தொழிலாளர்களின்



பங்கு என்ன என்பது குறித்து ஆய்ந்துதான், அதைச் செயல்படுத்த முடியும். நம்முடைய திரு. சுப்பராயன் போன்றவர்களுடைய கட்சிப் பிரதிநிதிகள் அந்தக் கட்டுமான வாரியத்திலே இருந்தும்கூட, அவர் இந்தக் கேள்வியை எழுப்புவது வியப்பாக இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 416, திரு. பி.என். வல்லரசு, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

**416—**

**பெண்கள் கல்லூரி நிறுவுதல்**

***4788—திரு. பி.என். வல்லரசு:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கள்ளர் சீரமைப்புத் திட்டத்தின்கீழ் மதுரை மாவட்டம், உசிலம்பட்டியில் பெண்கள் கல்லூரி நிறுவும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**திரு. பி.என். வல்லரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய உசிலம்பட்டி தொகுதி, கல்வி ரீதியாக மிகவும் பிற்பட்ட தொகுதியாகும். 40 சதவிகித மக்கள்தான் அங்கு கல்வி அறிவு பெற்றுள்ள நிலை உள்ளது. அதிலும், பெண்கள் கல்வியினுடைய நிலையை எண்ணிப்பார்க்கும்போது, மிகவும் பிற்பட்ட ஒரு நிலை இருக்கிறது. எனவே, பெண்கள் கல்வியினுடைய நிலையை மேம்படுத்தவும், பெண் சிசு பலி போன்றவை நடைபெறாமல் தடுக்கவும், பெண் கல்வி மேம்பாட்டுக்கு தமிழக அரசு, டாக்டர் கலைஞர் அவர்களுடைய அரசு, கனிவோடு பரிசீலனை செய்து கள்ளர் சீரமைப்புத் துறையின் மூலம் உசிலம்பட்டியில் பெண்கள் கல்லூரியை மீண்டும் நிறுவ முன்வருமா என நான் அறிய விரும்புகிறேன்.

[1999 ஏப்ரல் 16

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத் துறையின்கீழ் மதுரை, திண்டுக்கல் மற்றும் தேனி மாவட்டங்களில் வாழும் சீர்மரபினர் வகுப்பு மாணவர்களுக்காக, பள்ளிகள் இத்துறையின்கீழ் இயங்கி வருகின்றன. கல்லூரிகள் தொடங்குவதற்கு இத்துறையினால் அனுமதி வழங்கப்படுவதில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத்** தலைவர் வினா எண் 417, திரு. பி. வெங்கடசாமி, மாண்புமிகு வனத் துறை அமைச்சர்.

**417—**

**சந்தன மரக்கன்றுகள் நடுதல்**

***21708—திரு. பி. வெங்கடசாமி:**

*மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தருமபுரி மாவட்டம், ஓசூர் வட்ட வனப் பகுதி மற்றும் அஞ்செட்டி பகுதிகளில் அதிகமாகச் சந்தன மரங்கள் நடும் பணி குறித்த செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?*

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*1998-99-ல் அஞ்செட்டி வனப் பகுதிகளில் 50 எக்டேரில் ரூ. 6.9 இலட்சம் செலவில் சந்தன மரங்களின் வளத்தைப் பெருக்க பல்வேறு பணிகள் செய்ய ஆணையிடப்பட்டுள்ளது. இந்தப் பகுதியில் தனியாக சந்தன மரங்கள் நடும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் இல்லை.*

**திரு. பி. வெங்கடசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓசூர் வட்டம் வனப் பகுதியிலும், அஞ்செட்டி வனப் பகுதியிலும் இயற்கையாகவே சந்தன மரங்கள் வளர்ந்து வருகின்றன. அதனால், அரசாங்கத்தில் ஒரு Crash Programme செய்து நல்லபடியாக இன்னும் வெளியே வளர்ப்பதற்கும் வாய்ப்புகள் இருக்கின்றன. அதற்கு அரசு உதவி செய்யுமா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சந்தன மரங்களைப் பொறுத்தவரையில் இம்மரங்கள் வளருவதற்குத் தோதான இடங்களான சேலம், வேலூர், திருப்பத்தூர், திருவண்ணாமலை, தருமபுரி போன்ற மாவட்டங்களில் கடந்த ஆண்டுகளில் சந்தன மரங்கள் எழுப்ப முயற்சிக்கப்பட்டு, அவைகள் இயற்கையாக வளர்ந்த மரங்களின் தன்மையைக் கொண்டிராத காரணத்தால், அம்முயற்சி கைவிடப்பட்டுள்ளது. எனினும், இந்த அரசு பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு, மீண்டும் புதிய யுக்திகள் மூலம் மேற்படி இடங்களில் சந்தன மரங்கள் நடப்பட்டு வளர்க்கப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தின் மூலம் மேற்படி மாவட்டங்களில் சந்தன மரங்கள் வளரும் இடங்களைக் கண்டறிந்து, அங்கு ஆண்டுக்கு ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட மரக் கன்றுகளை வளர்க்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், கிழக்கு மலைத் தொடர்ச்சி திட்டத்தின்கீழும் இப்பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1999 ஏப்ரல் 16]

*முற்பகல் 10-20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. மனோகரன்.

**திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டத்திலே சித்தேரி மலைப்பகுதியிலே உலகிலேயே உயர்தர சந்தன மரங்கள் கிடைப்பதாகக் கூறப்படுகிறதே! அதை மேலும் வளர்க்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது என்பதையும், மத்திய அரசு சந்தன மர ஏற்றுமதிக்கான அனுமதியை தமிழக அரசுக்கு வழங்கியுள்ளதால் தமிழக அரசுக்கு இதனால் ஏற்படும் வருவாய் எவ்வளவு என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. சித்தேரி மலைப் பகுதியில் கிழக்கு மலைத் தொடர்ச்சி திட்டத்தின் கீழும், மேலும் தமிழ்நாடு காடு வளர்ப்பு திட்டத்தின் கீழும் சந்தன மரங்கள் வளர்க்க முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. தற்போது மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ள 1,500 டன் ஏற்றுமதியின் மூலம் சுமார் 100 கோடி ரூபாய் வருமானம் வருமென்று எதிர்பார்க்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1992 ஆம் ஆண்டு மாநில அரசு சந்தன மரத்தை ஏற்றுமதி செய்யக் கூடாது என்று மத்திய அரசு தடை விதித்திருந்தது.

[1999 ஏப்ரல் 16

தமிழக முதலமைச்சர் பாரதப் பிரதமருக்கு எழுதி, அதற்கான அனுமதியை அவர்கள் கொடுத்திருப்பதாக தகவல் வந்திருக்கிறது. ஆரம்பத்தில் ஆண்டுக்கு 1,500 டன் ஏற்றுமதி செய்யலாம் என்ற அனுமதி கிடைத்திருக்கிறது. ஆனால் நம்மிடம் கைவசம் இருப்பதோ, 6,000 டன்கள். எனவே, மேற்கொண்டு அந்த அனுமதியை அதிகரித்துக் கேட்கின்ற வாய்ப்பு அரசுக்கு உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெளிநாட்டு மார்க்கெட்டில் சந்தன மரங்களின் தேவை சுமார் 2,000 டன் தான். ஆகவே, நாமாகவே அதிகமாகக் கொண்டு சென்று, அந்த மார்க்கெட்டில் விலையைக் குறைக்கக்கூடாது. ஆகவேதான் 1,500 டன்னுக்கு அனுமதி என்று அவர்கள் கொடுத்ததை ஏற்றுக் கொண்டு வந்திருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி ஆர். சரஸ்வதி.

**திருமதி ஆர். சரஸ்வதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 3 ஆண்டுகளில் வனத் துறை மூலம் எத்தனை டன் சந்தன மரங்கள் விற்பனை செய்யப்பட்டன? அதன் மதிப்பு எவ்வளவு? தற்போது கையிருப்பில் எத்தனை டன்கள் உள்ளன என்பதை உங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு, கலைஞர் அரசு பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பிறகு மேற்கொண்ட தீவிர முயற்சிகள் காரணமாக, பல்வேறு தடைகள் இருந்தாலும்கூட, 1,536.2 டன் சந்தன மரங்கள் 72,71,70,300 ரூபாய்க்கு கடந்த 3 ஆண்டுகளில் விற்பனை செய்யப்பட்டன. மேலும் இந்த மாதக் கடைசியிலே 1,480 டன் சந்தன மரங்கள் ஏலத்தில் விற்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண். 418, திரு. ந. கருப்பண்ண உடையார், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்.



1999 ஏப்ரல் 16]

**418—**

### கடமங்குடியில் ஆதிதிராவிடர் நலப் பள்ளி

***2799—திரு. ந. கருப்பண்ண உடையார்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பாபநாசம் தொகுதி, மகாராஜபுரம் ஊராட்சி, கடமங்குடி கிராமத்தில் ஆதிதிராவிட நலப் பள்ளியைத் தொடங்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பகுதி ஆதிதிராவிட மக்கள் அதிகமாக வாழ்கின்ற பகுதியாக இருக்கின்ற காரணத்தால், சென்ற 3 ஆண்டுகளுக்கு முன்பு கொடுக்கப்பட்ட இந்த கேள்வியை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீண்டும் மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் பாபநாசம் பகுதியிலே உள்ள ஆதிதிராவிட நலப் பள்ளிகளை இந்த ஆண்டு சீரமைத்துக் கொடுப்பார்களா என்பதையும் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வித் துறையின் மூலம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிகள் ஆதிதிராவிடர்கள் குடியிருப்புகளுக்கு அருகில் தொடங்கப்படுவதால், இத்துறையின் மூலம் புதிதாக ஆதிதிராவிடர் நல ஆரம்பப் பள்ளிகள் எதுவும் தொடங்கப்படுவதில்லை. பள்ளிக் கல்வித் துறை மூலம் தொடங்கப்படும் தொடக்கப் பள்ளிகளில் 18 விழுக்காடு ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கு அருகிலே தொடங்க பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கல்வித் துறைக்கு தன்னுடைய கோரிக்கைகளை அனுப்பினால் பரிசீலித்து தக்க நடவடிக்கை எடுக்கப்படும். இல்லையென்றால் ஆதி திராவிடர் நலத் துறைக்கு நீங்கள் அனுப்பிவைத்தால் பரிந்துரை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். குறிப்பாக, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தொகுதியில் எந்தப் பள்ளிக்கு அவசியமான, அத்தியாவசியமான அடிப்படைத் தேவைகள்

[1999 ஏப்ரல் 16

இருக்கின்றன என்பதைச் சுட்டிக்காண்பித்தால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 419, திரு. உ. திசைவீரன், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்.

**419—**

**கட்டுமானப் பணிகள்**

***15272—திரு. உ. திசைவீரன்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலகம் மூலம் என்னென்ன கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன?

(ஆ) எந்த முறையில் பணம் ஒதுக்கப்படுகிறது?

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் மூலம் விடுதி மற்றும் பள்ளிகள் பராமரிப்புப் பணிகள் மற்றும் கட்டடப் பராமரிப்புப் பணிகள் மட்டும் மேற்கொள்ளப்படுகின்றன. விடுதிகள் மற்றும் பள்ளிக் கட்டடப் பணிகள் தமிழ்நாடு ஆதிதிராவிடர் மேம்பாட்டுக் கழகம் மூலம் செய்யப்படுகின்றன.

(ஆ) மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர்களைப் பொறுத்தவரை பணிகள் சம்பந்தமாக ஒருமுறை செய்யப்படும் வேலைகள் மதிப்பு ரூ. 5,000-க்கு மிகாமலும், குடிநீர் கிணற்றைப் பொறுத்தவரை ரூ. 7,500-க்கு மிகாமலும் மேற்கொள்ள ஒப்புதல் அளிக்கப்படுகிறது. தற்போது மேற்கண்ட பணிகளைப் பொறுத்தவரையில் ரூ. 30,000-க்கு மிகாமல் செய்து முடிக்க அரசு ஆணை (நிலை) எண் 42, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன், நாள் 26-3-1999-ல் ஆணையிடப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1999 ஏப்ரல் 16]

**திரு. உ. திசைவீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலகத்திலே பணிபுரிகின்ற இளம் பொறியாளர்களின் செலவு [illegible] உச்சவரம்பை ரூ. 5,000-லிருந்து ரூ. 30,000 வரை உயர்த்தி இருப்பதை நான் வரவேற்கிறேன். ஆனால் ஊராட்சி ஒன்றியத்திலே பணிபுரிகின்ற ஓவர்சீயர்களுக்கு இன்றைக்கு ரூ. 50,000 ஆக உயர்த்தியிருக்கிறார்கள். அதேபோல அந்த உச்சவரம்பை உயர்த்தி மேலும் கிராமங்களில் [illegible]ப்பாக, ஆதிதிராவிடர்கள் குடியிருப்புகளில் மயானச் சாலை, [illegible] வசதி, அடி பம்ப் போன்ற எந்த வசதியும் இல்லாது இருக்கிற [illegible] நிலையை மாற்றி ஒவ்வொரு ஆதிதிராவிடர் குடியிருப்புக்கும் மயானக் கூரை, மின்விளக்கு, சடங்குகள் செய்வதற்காக ஒரு அடி பம்ப் [illegible] கொட்டகை போன்றவற்றை அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப் போன்று இளம் பொறியாளர்களுக்குக் கடந்த 20 ஆண்டுகளில் ரூ. 5,000 என்றுதான் உச்சவரம்பு இருந்தது. இப்போது தலைவர் கலைஞர் பொறுப்பேற்ற பிறகுதான் ரூ. 5,000 என்பது விலைவாசி ஏற்றத்திற்குத் தகுந்தபடி அதன் பணிகளைப் பார்க்க முடியாது என்ற நிலையை உணர்ந்து, ரூ. 5,000 என்பதை இப்போது ரூ. 30,000 ஆக உயர்த்தியிருக்கிறோம். மேலும் அவர் சொல்வதைப் போன்று மயானப் பாதைகள் அமைப்பது என்பது இந்தத் துறையின் மூலம் கையாளப்பட்டு வருகிறது. அதேபோல மேலும் மின்விளக்கு அமைக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார். விளக்கு அமைப்பதைப்பற்றி அரசின் ஆய்வில் இருக்கிறது. மேலும் கான்கிரீட் கொட்டகை அமைக்க வேண்டுமென்றும் சொல்லியிருக்கின்றார். கடந்த காலத்தில் கான்கிரீட் கொட்டகை அமைப்பதில், கொள்ளி வைத்த இடத்தில் கூட அள்ளிவிட்டுச் சென்றதால் மக்கள் பாதிக்கப்பட்டு இப்போது தற்காலிகமாக அது நீதிமன்றத்திலே இருக்கின்ற காரணத்தினால், வழக்கு நிலுவையில் இருக்கின்ற காரணத்தினால் கான்கிரீட் கொட்டகை அமைப்பதை தற்காலிகமாக இந்த அரசு ஒத்தி வைத்திருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 420, திரு. வி.கே. லட்சுமணன், மாண்புமிகு சுற்றலாத் துறை அமைச்சர்.

**420—**

**சுற்றுலா மையமாக அறிவித்தல்**

***10430—திரு. வி.கே. லட்சுமணன்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூருக்கு மிக அருகில் உள்ள கோவைக் குற்றாலம், வைதேகி நீர்வீழ்ச்சி, மேட்டுப்பாளையத்திற்கு அருகில் தனியார் துறையில் உள்ள பிளாக் தண்டர் ஆகிய இடங்களைச் சுற்றுலா மையங்களாக அறிவிக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன், சுற்றுலாத் துறை அமைச்சர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கோயம்புத்தூருக்கு மிக அருகிலுள்ள கோவைக் குற்றாலம், வைதேகி நீர்வீழ்ச்சி, மேட்டுப்பாளையத்திற்கு அருகில் தனியார் துறையில் உள்ள பிளாக் தண்டர் ஆகிய இடங்களை சுற்றுலா மையமாக அறிவிக்கும் கருத்துரு தற்போது அரசிடம் ஏதும் இல்லை.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிக வேகமாக வளர்ந்து வளம் குறைந்துபோன ஒரு நகரமாகக் கோவை நகரம் இன்றைக்கு மாறி வந்தாலும்கூட, உதகமண்டலத்திற்குச் செல்கிற மக்கள் அந்த வழியாகத் தான் செல்கிறார்கள். ஓரிருநாள் கோவையில் தங்கிச் செல்கின்றார்கள். இன்றைக்கு அவர்களுக்குச் சுற்றுலாத் தலமாக அருகில் இருப்பது மருதமலை கோவில், பேரூர் கோவில்தான். அதுமட்டுமல்லாமல், வெயில் காலங்களில் கல்லூரி, பள்ளி மாணவர்கள் தங்களுடைய பொழுதை இன்பமாகக் கழிப்பதற்குரிய சுற்றுலா மையம் எதுவும் அருகிலே கிடையாது. இருப்பது இரண்டே இரண்டு அருவிகள்தான். ஆகவே, இந்த அருவிகளை சுற்றுலா மையமாக அறிவிப்பதோடு திருச்சி சாலையிலே சிங்காநல்லூர் குளத்திலே படகு விடுவதாக ஏற்பாடு செய்யப்பட்டது. ஆனால் இன்றைக்கு அந்த குளம் முழுவதும் ஆகாயத் தாமரை நிறைந்துவிட்ட காரணத்தாலே அங்கே படகும் விட முடியவில்லை. ஆகையினால் அருகிலே உள்ள சுண்டக்காமுத்தூர் குளம், பெரிய குளம் ஆகிய குளங்கள் எல்லாம் பறவைகள் சரணாலயமாக மிக விரைவாக மாறிவருகின்றன. எனவே அந்தப் பெரிய குளத்திலாவது படகுகளை விட அரசு முன்வருமா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.





முற்பகல் 10-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்அனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூரிலுள்ள வைதேகி நீர் வீழ்ச்சியைப் பொறுத்தமட்டில் அது வனத் துறையால் தகுந்த முறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றது. அங்கு பல சுற்றுலாப் பயணிகள் வருகை தந்து கொண்டிருக்கிறார்கள். பெரியகுளத்தில் படகு வசதியை உருவாக்க வேண்டுமென்ற மாண்புமிகு உறுப்பினருடைய கருத்தை நிச்சயமாக இந்த அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சிங்காநல்லூர் குளத்திலே படகு விடவேண்டுமென்றும் ஆனால் அதிலே ஆகாயத் தாமரை படர்ந்துவிட்டது என்றும் தெரிவித்தார்கள். நான் அவர்களுக்கு ஒன்றைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அந்தக் குளத்தை பொதுப்பணித் துறை மூலம் ஆழப்படுத்திக் கொடுத்தோம். சுற்றுலாத் துறை மூலம் படகு விட்டார்கள். அதிலே ஆகாயத் தாமரை படர்ந்திருக்கின்றது. வேறொன்றுமில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 'நமக்கு நாமே' என்கிற அற்புதமான திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். 10 பேர் சேர்ந்து ஒரு பாதாள கொலுசைப் போட்டு இழுத்து இருந்தால், ஆரம்பத்திலேயே ஆகாயத் தாமரை அகற்றப்பட்டிருக்கும். அதைக் கூட அரசாங்கம் அகற்றிவிடும் என்று விட்டுவிட்ட காரணத்தால், கொஞ்சம் கொஞ்சமாக அது வளர்ந்திருக்கிறது. நான் போனமுறை சென்றபோது பார்த்தேன். இப்பொழுதுகூட ஒன்றும் குடி முழுகிப் போய்விடவில்லை. மாண்புமிகு உறுப்பினரே அந்த ஆகாயத் தாமரையை அகற்றும் நடவடிக்கையில் முயலவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[*குறிப்பு:* ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. கவன ஈர்ப்பு

### பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டக் கால்வாய் பகுதியில் ஒரு மடை விட்டு ஒரு மடை பாசன முறை அமல்படுத்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, பேரவை விதி 55-ன் கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. திரு. ம. சண்முகம் அவர்கள் ஓர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். இதே பொருள் குறித்து திரு. ப. மோகன் கந்தசாமி அவர்களும் அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். அவருக்கும் வினா எழுப்ப வாய்ப்பு கொடுக்கப்படும். முதலில் திரு. ம. சண்முகம்.

* **திரு. ம. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிணத்துக்கடவு, பொள்ளாச்சி, உடுமலை, ஆனைமலைப் பகுதி பரம்பிக்குளம்—ஆழியாறு திட்டக் கால்வாய்களில் ஒரு மடை விட்டு ஒரு மடை நீர்ப்பாசன முறையை அமல்படுத்த வேண்டிய அவசியம் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

***மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

### அறிக்கை

ஒரு மடை விட்டு ஒரு மடை பாசன முறையை அமல்படுத்துவது தொடர்பாக பி.ஏ.பி. பாசனப் பகுதி விவசாயிகளின் கருத்தரங்கு 24-12-1998 அன்று பொள்ளாச்சியில் நடைபெற்றது. இக்கருத்தரங்கில் மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர், மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச் சூழல் துறை அமைச்சர், பொதுப்பணித் துறை அரசுச் செயலாளர், மாவட்ட ஆட்சியர், கோவை மாவட்டம் மற்றும் கோவை, ஈரோடு மாவட்டத்தைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்களும், பி.ஏ.பி. பாசனப் பகுதி விவசாய சங்கத் தலைவர்களும் பி.ஏ.பி. பாசனப் பகுதி விவசாய பெருங்குடி மக்களும் கலந்து கொண்டார்கள்.

தற்போது பரம்பிக்குளம்—ஆழியாறு திட்டக் கால்வாய்களில் உலக வங்கி உதவியுடன் சீரமைப்புப் பணிகள் நடைபெறுவதால், அனைத்துப் பணிகளும் முடிவுற்றபின் பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டக்





கால்வாய்களில் ஒரு மடை விட்டு ஒரு மடை பாசனம் செய்வது தொடர்பான கோரிக்கையை பரிசீலனைக்கு எடுத்து நிபுணர் குழு அமைத்து தொழில்நுட்ப ரீதியாகவும் சட்ட நுணுக்கங்களின் அடிப்படையிலும் விரிவாக ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டபின் நிபுணர் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் முடிவெடுக்கப்படும். அரசு ஆணை நிலை எண் 113, பொதுப்பணி (க்யூ) துறை, நாள் 3-3-1999-ன் படி கோவை மாவட்டம், பரம்பிக்குளம்—ஆழியாறு (பி.ஏ.பி.) திட்ட பாசனப் பகுதியில் உள்ள விவசாய பெருமக்கள் ஒரு மடை விட்டு ஒரு மடை பாசன முறையை நடைமுறைப்படுத்துவது குறித்துப் பரிசீலிக்க 5 நபர்கள் கொண்ட உயர்மட்டக் குழுவை அரசு அமைத்துள்ளது. இந்தக் குழு கோரிக்கையை பரிசீலித்து அறிக்கை கொடுத்தவுடன் அரசு தக்க நடவடிக்கை எடுக்கும்.

**திரு. ம. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். பி.ஏ.பி. பகுதியில் 1993 ஆம் ஆண்டு முதல் 4 மண்டல பாசனம் அறிமுகப்படுத்தப்பட்டது. அதன் பிறகு பி.ஏ.பி. பகுதியில் பாசனத்திற்காக ஏரியா அதிகரிக்கப்பட்டவுடன் எடுக்கப்படும் தண்ணீரின் கால இடைவெளி 1½ ஆண்டிலிருந்து 2 ஆண்டுகளாகி, மழைப் பொழிவு குறைவான காலங்களில் கால இடைவெளி 2 ஆண்டிலிருந்து 3 ஆண்டுகள் வரை அதிகரிக்கப்பட்டுள்ளது. அந்தப் பகுதியில் கிட்டத்தட்ட ஒரு கோடி தென்னை மரங்கள் பயிரிடப்பட்டு இருக்கின்றன. புள்ளி விவரப்படி 3 இலட்சத்து 75 ஆயிரம் ஏக்கர் நிலங்களுக்குப் பாசனத்திற்காக தண்ணீர் விடவேண்டிய கட்டாயம் நமது அரசுக்கு இருக்கிறது. பி.ஏ.பி. திட்டத்தில் பாசனம் இல்லாத காலங்களில் நிலத்தடி நீரும் சுமார் 500 அடி முதல் 900 அடி வரை கீழே சென்று விட்டது. சில பகுதிகளில் சொட்டுநீர் பாசனத்திற்குக்கூட தண்ணீர் போதவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் வினாவைப் படிக்காதீர்கள், பேசுங்கள்.

**திரு. ம. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதன் அவசியத்தை, முக்கியத்துவத்தை அறிந்து மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் நிபுணர் குழு ஒன்றை அமைத்து இருக்கிறார்கள். அந்தக் குழுவின் அறிக்கை கிடைத்த பின்பு தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கூறி இருக்கிறார்கள். அந்தக் குழுவில் அந்தப் பகுதி சட்டமன்ற உறுப்பினர்களையும் சேர்த்துக்கொள்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரம்பிக்குளம்-ஆழியாறு பகுதியில் 4 மண்டலங்களாக அந்தப் பாசனப் பகுதி பிரிக்கப்பட்டிருக்கிறது. உயர் நீதிமன்றத்தின் ஆணையும் இதிலே இருக்கிறது. எனவே, அந்த ஆணையை மீறி, ஒரு மடை விட்டு ஒரு மடை முறையை அமல்படுத்துவது என்பது நீதிமன்றத் தீர்ப்புக்கு முரணானது ஆகும். இரண்டாவது, அதனுடைய நிலைமையை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். 30½ டி.எம்.சி. நமக்கு வரவேண்டும். ஆனால், ஆண்டொன்றுக்கு நமக்கு 25 டி.எம்.சி. கூட இதுவரை எட்டவில்லை. மூன்றாவதாக, 2 இலட்சம் ஏக்கராக இருந்த அந்த இடம் 3 இலட்சத்து 75 ஆயிரம் ஏக்கராக இப்பொழுது இருக்கிறது. எனவே, ஒரு மண்டலம், இரண்டு மண்டலமாகி, இரண்டு மண்டலம் மூன்று மண்டலமாகி இப்போது மூன்று மண்டலம் நான்கு மண்டலமாக உள்ளது. அதேநேரத்தில் 110 கோடி ரூபாய்க்கு கலைஞருடைய அரசு பரம்பிக்குளம்—ஆழியாறு பிரதானக் கால்வாய், மற்ற கால்வாய்களைச் சீரமைக்க பணம் ஒதுக்கி அந்தப் பணியும் நடந்து வருகிறது. எனவே, எவ்வளவு தண்ணீர் மிச்சப்படும், எவ்வளவு தண்ணீர் நமக்கு வரும், ஆனைமலையாறு, நல்லாறு திட்டங்கள் எப்பொழுது நிறைவேறும் என்பதையெல்லாம் கணக்கில் கொண்டு, நீதிமன்றத்தின் தீர்ப்பையும் கணக்கில் கொண்டு, ஆய்ந்து சொல்வதற்குத்தான் நம்முடைய நீரியல் நிபுணர் திரு. மோகனகிருஷ்ணன் அவர்கள் தலைமையில், பொதுப்பணித் துறையின் ஓய்வுபெற்ற முன்னாள் தலைமைப் பொறியாளர் திரு. ஆர்.என். கிருஷ்ணன், மதுரை மண்டல தலைமைப் பொறியாளர் திரு. என். ஈஸ்வரமூர்த்தி, பொள்ளாச்சி மண்டல தலைமைப் பொறியாளர் திரு. கிருஷ்ணசாமி ஆகியோர் கொண்ட நிபுணர் குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அது purely technical side. மாண்புமிகு உறுப்பினர் அவருடைய அவருடைய கோரிக்கையைத் தெரிவித்து விட்டார்கள். அந்தக் கோரிக்கை கருத்தரங்கிலும் சொல்லப்பட்டது. எனக்கும் அந்தக் கோரிக்கையின் விவரம் தெரியும். எனவே, இது purely technical side-ல் இருக்கிற காரணத்தால், நிபுணர் குழுவை அமைத்திருக்கிறோம். உங்கள் யோசனையை அந்த நிபுணர் குழு அந்தப் பகுதிக்கு வரும்பொழுது நீங்கள் தெரிவிக்கலாமேயொழிய, சட்டமன்ற உறுப்பினர்களையும் அதில் உறுப்பினர்களாகச் சேர்க்க இயலாது.

முற்பகல் 10-35

**திரு. ம. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.





எங்களுடைய பகுதியில் இருக்கின்ற பிரதான கால்வாய்கள் எல்லாம் மிகச் சிறப்பான முறையில் பராமரிக்கப்பட்டு வருவதற்காகவும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. மோகன் கந்தசாமி.

**திரு. ப. மோகன் கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுடைய நீண்ட கனவான ஒரு மடை விட்டு ஒரு மடை நீர்ப்பாசன முறையைக் கொள்கையளவிலாவது ஏற்றுக்கொண்ட அமைச்சர் அவர்களுக்கு முதற்கண் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம். குறிப்பாக, நீண்டகாலப் பயிரான தென்னைக்குத் தேவையான நிலத்தடி நீர் கீழேபோய் 500 அடிகள், 1000 அடிகள் போர் போடவேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கின்ற காரணத்தால் நிலத்தடி நீர் வேண்டுமென்பதற்காகவாவது, ஒரு மடை விட்டு, ஒரு மடை பாய்ந்தால் நிலத்தடி நீர்ப்பிடிப்பு ஏற்பட்டு, விவசாயிகளுக்கு அது பயனுள்ளதாக இருக்கும் என்ற எண்ணத்தில்தான் இந்த ஒரு மடை விட்டு ஒரு மடை பாய வேண்டுமென்று கேட்டோம். அரசு, இதைக் கொள்கை அளவில் ஒத்துக்கொண்டதற்காக நாங்கள் நன்றி தெரிவித்துக்கொள்கிறோம். குறிப்பாக, எங்களுடைய பகுதி விவசாயிகள் பயப்படுவதெல்லாம் ஒரு காரியத்தைத் தள்ளிப்போட வேண்டுமென்று சொன்னால், ஒரு கமிட்டியைப் போடுவது பொதுவாக அரசிடம் இருக்கின்ற பழக்கம். ஆகவே, இந்தக் கமிட்டி எத்தனை நாட்களுக்குள்ளாக தங்களுடைய அறிக்கையை கொடுப்பார்கள் என்பதை தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிரச்சினையைத் தள்ளிப்போட வேண்டும் என்ற எண்ணம் இந்த அரசுக்கு இல்லை. இருந்திருந்தால் நீர்ப்பாசனக் கருத்தரங்கிலேயே அதை நான் தெளிவாகத் தெரிவித்திருப்பேன். காரணம், எங்களுக்கு ஒன்றும் அதில் இலாபம் இல்லை. விவசாயிகளுக்கு ஒரு திட்டம் பயன்படுமேயானால் அதைச் செய்வதுதான் அரசின் நோக்கம். அந்தப் பரம்பிக்குளம்—ஆழியாறு பகுதியிலே எனக்கோ, முதலமைச்சருக்கோ எந்த நிலமும் இல்லை. உங்களுக்கு இருக்கிறது. உங்களுக்கு என்ன வேண்டுமோ அதைச் செய்து கொடுப்பதுதான் அரசினுடைய எண்ணம். இதுகுறித்து உச்ச நீதிமன்றத்திலே ஒரு தீர்ப்பு உரைக்கப்பட்டிருக்கிறது. எவ்வளவு நிலங்களுக்கு, எவ்வெப்போது தண்ணீர் தரவேண்டுமென்று திட்டவட்டமாகத் தீர்ப்புச் சொல்லப்பட்டிருக்கிறது. அதை மாற்றினால் நீதிமன்றத்தை அவமதித்த குற்றமாகும். ஆகவேதான் இதுகுறித்து ஆய்ந்து

தெரிவிக்கவேண்டுமென்று நாங்கள் ஒரு கமிட்டியைப் போட்டிருக்கிறோமே தவிர, தள்ளிப்போடுவதற்காக அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இவ்வளவு நாட்களில் தரவேண்டுமென்று நான் அவர்களைக் கட்டாயப்படுத்த முடியாது. ஆனால், விரைவில் தாருங்கள் என்று நான் கேட்டுக்கொண்டிருக்கிறேன்.

## 3. அறிக்கை அளித்தல்

### பொதுக் கணக்குக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல், பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் திரு. ப. ரங்கநாதன்.

***திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1998-99-ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் நூற்று அறுபத்து நான்காவது முதல் நூற்று அறுபத்து எட்டாவது வரையிலான 5 அறிக்கைகளைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

## 4. மானியக் கோரிக்கைகள், 1999-2000, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

### (அ) கோரிக்கை எண் 13—நீதி நிருவாகம்

### (ஆ) கோரிக்கை எண் 14—சிறைச்சாலைகள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, 1999-2000 ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 13—நீதி நிருவாகம், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"நீதி நிருவாகம் பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.121,98,31,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 2774, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



"வேலூர் மாவட்ட நீதிமன்ற வளாகத்தில் 'ஏ' பிளாக் கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"நீதி நிருவாகம் பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.121,98,31,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1863, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சேலம் மாவட்டம், எடப்பாடி தாலுகா, எடப்பாடியில் ஒரு சப்கோர்ட் தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"நீதி நிருவாகம் பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.121,98,31,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3091, திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"மதுரையில் உயர் நீதிமன்ற கிளை தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.121,98,31,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4629. திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சென்னை உயர் நீதிமன்றத்திற்கு நிரந்தர தலைமை நீதிபதி நியமிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"நீதி நிருவாகம் பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.121,98,31,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2280, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழகத்தில் நீதிமன்றங்களில் காலியாக உள்ள நீதிபதிகளின் பணியிடங்களை நிரப்ப வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.121,98,31,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4164, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பேராவூரணி சட்டமன்றத் தொகுதி பேராவூரணியில் நீதிமன்றம் தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 13 ஆம் எண் மானியக்கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.121,98,31,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2713, திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கன்னியாகுமரி மாவட்டம், இரணியல் உரிமையியல் நீதிமன்றத்திற்குக் கட்டடம் கட்டிக் கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 13 ஆம் எண் மானியக்கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.121,98,31,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3588, திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"நாகை வருவாய் மாவட்டப் பகுதிகள் நாகை மாவட்டத்திலுள்ள நீதிமன்றங்களின் நிர்வாக எல்லையின்கீழ் அமையும் வண்ணம்



நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 13 ஆம் எண் மானியக்கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.121,98,31,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2828, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"திருவாரூர் மாவட்டம், கூத்தாநல்லூர் நகராட்சி மற்றும் சுற்றுப்புறக் கிராமங்கள் பயன்பெறும் வகையில் கூத்தாநல்லூரில் ஒரு சப்-மாஜிஸ்திரேட் நீதிமன்றம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 13 ஆம் எண் மானியக்கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.121,98,31,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1495, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"செந்துறையில் மாஜிஸ்ட்ரேட் கோர்ட் அமைப்பதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"நீதி நிருவாகம் பற்றிய 13 ஆம் எண் மானியக்கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.121,98,31,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2886, திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பாபநாசம் சட்டமன்றத் தொகுதி பாபநாசத்தில் உரிமையியல் நீதிமன்றத்திற்கு புதிய கட்டடம் கட்டிக் கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.121,98,31,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 517. திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"திருப்பூரில் மேலும் கூடுதல் நீதிமன்றம் ஒன்றை நிறுவ வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 13-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.121,98,31,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2481. திரு. ஆர்.ஆர். சேகரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2839, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பள்ளிப்பட்டில் ஏற்கெனவே அரசால் அறிவிக்கப்பட்ட சார்பு நீதிமன்ற தொடக்கப் பணிகளை விரைவுபடுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.121,98,31,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3666, திரு. பி. வெங்கடசாமி.

**THIRU B. VENKATASAMY**: Hon. Speaker, Sir, 'To discuss the need to start a First Class Magistrate Court at Hosur', I Move—

"That the allocation of Rs.121,98,31,000/- under Demand No. 13—Administration of Justice, be reduced by Rs.100/-."



முற்பகல் 10-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3757, திரு. கே. ரவி அருணன்.

**திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"திருநெல்வேலி மாவட்டம், சுரண்டை பகுதியில் சார்பு நீதிமன்றங்கள் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.121,98,31,000-ல் ரூ.100 குறைக்கவேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3978, திரு. பா. வேல்துரை.

**திரு. பா. வேல்துரை :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சேரன்மகாதேவி தொகுதி, சேரன்மகாதேவியில் நீதிமன்றக் கட்டடம் கட்டிக் கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.121,98,31,000-ல் ரூ.100 குறைக்கவேண்டும்."

## (ஆ) கோரிக்கை எண் 14 — சிறைச்சாலைகள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 14-சிறைச்சாலைகள், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சிறைச்சாலைகள் பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.56,54,01,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 2771, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"வேலூர் ஆண்கள் மத்திய சிறைச்சாலை, பெண்கள் மத்திய சிறைச்சாலை ஆகிய சிறைச்சாலைகளில் கூடுதல் அறைகள் கட்டியும், பழைய அறைகளைச் செப்பனிட்டுப் புதுப்பிக்கவும் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறைச்சாலைகள் பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.56,54,01,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1877, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புதிதாக உருவாக்கப்பட்ட நாமக்கல் மாவட்டத்திற்கு மத்திய சிறைச்சாலை புதிதாக உருவாக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறைச்சாலைகள் பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.56,54,01,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 519, திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"10 ஆண்டுகள் சிறையில் கழித்த ஆயுள் தண்டனை சிறைக் கைதிகளை நிபந்தனை இன்றி விடுதலை செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறைச்சாலைகள் பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.56,54,01,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3124, திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கன்னியாகுமரி மாவட்டம், குழித்துறையில் இருக்கும் சிறைச்சாலைப் பணிகளை விரைவில் முடித்து செயல்பட வைக்க வேண்டியதன்



அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"சிறைச்சாலைகள் பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.56,54,01,000-ல் ரூ.100 குறைக்க் வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4019, திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறைச்சாலைகள் பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.56,54,01,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2282, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"ஈரோடு மாவட்டத்தில், மத்திய சிறை ஒன்று அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறைச்சாலைகள் பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.56,54,01,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4207, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தஞ்சை மாவட்டத்தில் ஒரு திறந்தவெளி சிறைச்சாலை அமைப்பதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறைச்சாலைகள் பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.56,54,01,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2770, திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"வேலூர் சிறைச்சாலையில் அதிகாரிகள் தீவிரவாதிகளால் தாக்கப்பட்டதால் சிறை அதிகாரிகள் குடும்பத்தாருக்கு தகுந்த பாதுகாப்பு வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறைச்சாலைகள் பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 56,54,01,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2826, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"மன்னார்குடி நகரில் இயங்கி வரும் கிளைச் சிறைச்சாலையை புதுப்பித்து தேவையான வசதிகள் செய்திட வேண்டியது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறைச்சாலைகள் பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 56,54,01,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4431, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறைச்சாலைகள் பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 56,54,01,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2895, திரு. ந. கருப்பண்ண உடையார்.



**திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் தலை அவர்களே,

"பாபநாசம் தொகுதி, பாபநாசம் கிளைச் சிறைச்சாலையில் உ கைதிகளுக்குத் தரமான உணவு அளிக்க வேண்டியதன் அவ குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மான மொழிகிறேன்:

"சிறைச்சாலைகள் பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையி ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 56,54,01,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலை அவர்களே,

"பள்ளிப்பட்டில் கிளைச் சிறைச்சாலை ஒன்று புதிதாக அமை வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்க வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறைச்சாலைகள் பற்றிய 14 ஆம் எண் மானி கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 56,54,01,000-ல் ரூ. 100 குறை வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3 திரு. கே. ரவி அருணன்.

**திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு பேரவைத் தலை அவர்களே,

"தென்காசியில் உள்ள சிறைச்சாலைக்குப் புதிய கட்டடம் கட் கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நா கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறைச்சாலைகள் பற்றிய 14 ஆம் எண் மானி கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 56,54,01,000-ல் ரூ. 100 குறை வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3( திரு. பி. வெங்கடசாமி.

**THIRU B. VENKATASAMY:** Hon. Speaker Sir, 'To discuss the need to supply Colour TVs to all the Jails in Tamil Nadu' I move-

"That the sum of Rs.56,54,01,000 allocated under Demand No.14-Jails be reduced by Rs.100."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும், வெட்டுத்தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதி நிருவாகம் மற்றும் சிறைச்சாலைகள் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்புகளை[@] நான் இந்த அவையில் படித்ததாகக் கருதி சட்டமன்றப் பதிவேட்டில் பதிந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய அரிய கருத்துக்களைத் தெரிவித்த பின்னர் என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கான விளக்கத்தை அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சொக்கர் அவர்கள் விவாதத்தைத் தொடங்கி வைப்பார்கள்.

***திரு. ஆர். சொக்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய மானியக் கோரிக்கைகள்மீது பேசக்கூடிய வாய்ப்பு, தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சியின் சார்பாக எனக்கு கிடைத்தமைக்கு நான் மகிழ்ச்சியடைகிறேன்.

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

நான் இன்று பேசுவதற்கு மிக முக்கிய காரணம், இன்று காலையிலே என் வீட்டிலிருந்து எனக்குத் தொலைபேசி வந்தது. என்னுடைய மனைவி பேசினார்கள். பேசியதன் காரணம் என்னவென்றால், விருதுநகரிலே முத்துராமன்பட்டி பகுதியிலே, ஒரு வீட்டிலே முனியம்மாள் என்ற ஒரு பெண் வேலை செய்கின்றார். மூன்று

@ 141 முதல் 220 வரையிலான பக்கங்களில் இணைப்புகள் I மற்றும் II ஆக அச்சிடப்பட்டுள்ளன.



மாதங்களுக்கு முன்பாக அவருடைய மகன் மிகவும் நோய்வாய்ப் பட்டிருந்த காரணத்தினால், வைத்தியச் செலவிற்காக வேலை பார்க்கக்கூடிய வீட்டிலே ஆயிரம் ரூபாயைத் திருடிவிட்டார். வழக்கு பதிவு செய்யப்பட்டு, அது இப்போது நீதிமன்ற விசாரணைக்கு வந்திருக்கிறது. அந்த முனியம்மாள், நேற்று என்னுடைய மனைவியிடம் வந்து, "இந்த மாதிரி கேஸ் எல்லாம் ஆகிவிட்டது; கோர்ட்டிலேயிருந்து எனக்கு சார்ஜ் ஷீட் கொடுக்கப் போகிறார்களாம்; எனக்கு சார்ஜ் ஷீட் கொடுக்கக்கூடாது" என்று சொல்லியிருக்கின்றார். அதை என்னுடைய மனைவி எனக்குச் சொன்னார். "ஏன் சார்ஜ் ஷீட் கொடுக்கக்கூடாது என்று சொல்கிறார்" என்று கேட்டேன். "முனியம்மாவிற்குப் படிக்கத் தெரியாதாம்; அதனாலே சார்ஜ் ஷீட் வாங்க மாட்டேனென்று சொல்கிறார்" என்று என்னுடைய மனைவி எனக்குச் சொன்னார். நான் வேடிக்கைக்காகச் சொல்லவில்லை, உண்மையிலேயே நடந்தது. "படிக்கத் தெரியவில்லை என்றால் சார்ஜ் ஷீட் வாங்காமலா இருக்க முடியும்? வக்கீல் படித்துக் காட்டுவார் அல்லவா; கேஸ் நடக்கட்டும்; நமக்குத் தெரிந்த வக்கீலைத்தானே ஏற்பாடு பண்ணியிருக்கிறது; எப்படியாவது காப்பாற்றுவார்" என்று சொன்னேன். "இல்லை, இல்லை. மெட்ராசிலே சசிகலா அம்மையாருக்கு இங்கிலீஷ் தெரியாது என்பதனாலே தமிழில் அவர்களுக்கெல்லாம் . . . . .

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, Point of order.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இதில் என்ன Point of order, சொல்லுங்கள். (குறுக்கீடு) திரு. சொக்கர் உட்காருங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவையில் இல்லாதவர்களைப்பற்றி, சசிகலாவைப்பற்றி சொக்கர் பேச வேண்டிய அவசியம் என்ன இருக்கிறது?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவையில் இல்லாதவர்களைப்பற்றித் தவறாகவோ, இட்டுக்கட்டியோச் சொன்னால்தான் அது Point of order-லே வரும். பேசக்கூடாது என்பது தவறு. அவர் உண்மையைத்தான் சொல்கிறார். அதனால் நீங்கள் உட்காருங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதிலே என்ன உண்மை இருக்கிறது? அவையில் இல்லாதவர்களைப்பற்றி . . .

முற்பகல் 10-45

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சொக்கர் தொடர்ந்து பேசுங்கள்.

**திரு. ஆர். சொக்கர்:** சசிகலா அம்மையாருக்கு ஆங்கிலம் தெரியாது என்ற காரணத்திற்காக நீதிமன்றத்திலே அவருக்குப் புரியக்கூடிய தாய்மொழியில், தமிழ் மொழியில் அதனை மொழிபெயர்த்துத் தரவேண்டும் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்திருக்கிறது. ஆகவே, தீர்ப்பினுடைய நோக்கம் குற்றஞ்சாட்டப்பட்ட ஒருவருக்கு புரியக்கூடிய மொழியில் அந்த சார்ஜ் ஷீட் கொடுக்கப்பட வேண்டும் என்று இருக்குமேயானால், எழுதப் படிக்கத் தெரியாத அந்த முனியம்மாவுக்கு சார்ஜ் ஷீட்டே கொடுக்கு முடியாது அல்லவா என்று என்னுடைய மனைவி கேட்டார்கள். நான் அப்படியே யோசனை செய்தேன். இதையெல்லாம் போய் பேசிக் கொண்டிருக்க முடியாது என்றேன். அது எப்படி திராட்சைத் தோட்ட சொந்தக்காரிகளுக்கு, 1000 கோடி கொள்ளை அடித்தவர்களுக்கு ஒரு நீதி, முத்துராமன்பட்டி முனியம்மாவிற்கு ஒரு நீதியா? நீங்கள் எல்லாம் எம்.எல்.ஏ.-வாக இருந்து என்ன செய்யப் போகிறீர்கள்; நீங்கள் பேசுங்கள். இன்றைக்கு பொதுவாக ஒரு பேச்சு இருக்கிறது. நீங்கள் சொன்னீர்கள் என்றால் நியாயம் கிடைக்கும் என்று சொல்கிறார்கள். ஆகவே, சட்டமன்றத்திலே பேசிப் பாருங்கள். சட்டத் துறை அமைச்சர் அவர்கள் அதற்கு...... (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முனியம்மாவுக்காக தயவுசெய்து நீங்கள் நீதிமன்றத்திலே ஒரு வழக்கை தொடுக்கச் சொல்லி, எனக்குத் தமிழ் அறிவு இல்லை என்று சொல்லச் சொல்லுங்கள். ஒருவேளை நீதிமன்றம் அவர்களைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பி படிக்க வைக்கும். அவர் அறிவு பெற்ற பிறகு வேண்டுமானால் வழக்கைப் பதிவு செய்யலாம். (சிரிப்பு)

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ் மொழிதான் தெரியும். தமிழில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யக்கூடிய அளவுக்கு வாய்ப்புகள் வந்ததற்குப் பிறகு எனக்கு வாசிக்கத் தெரியாது, எனவே நீதிபதியையோ அல்லது யாரையாவது ஒரு ஆளை என்னிடம் அனுப்பி எனக்குப் புரியும்படி சொல்லச் சொல்லுங்கள் என்று சொன்னால் அது மிகவும் சிறப்பாக



இருக்கும். ஆனால் அப்படி ஒரு நிலை வந்தால் நீதிமன்றத்தின் பிரச்சினை அதிகமாகிவிடும். எனவே, இதுபோன்ற அதாவது, எழுத, வாசிக்கத் தெரியாது என்று சொல்லும்போது, ஆளை அனுப்பி எனக்குப் புரியும்படி சொல்லுங்கள் என்று கேட்கக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டுவிடக்கூடாது என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

* **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, இந்த முனியம்மா விவகாரம் கோர்ட்டில் நடைபெறும்போது வேலாயுதன் நோட்டிஃபிகேஷன் கொடுக்காமல் இருந்தால் நல்லது. (சிரிப்பு)

**திரு. ஆர். சொக்கர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது ஏதோ வேடிக்கையாக இருந்தாலும்கூட இன்று பாரத நாடு முழுவதும், ஒரு சிந்தனையைத் தூண்டக்கூடிய, நீதித் துறை சம்பந்தப்பட்ட ஒரு விஷயமாக இருக்கிறது. நீதிமன்றத்திலே குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் எப்படி வேண்டுமானாலும் சட்டத்தை வளைத்து, நீதி விசாரணையைத் தள்ளிக்கொண்டே செல்லலாம் என்ற ஒரு நிலை ஏற்படுமேயானால் நீதிக்குப் பற்றாக்குறை ஏற்பட்டு விடும். என்னவோ நான் அன்றைக்கு நிதிநிலை அறிக்கையில் பேசினேன். அங்கே நிதிக்குப் பற்றாக்குறை. இன்றைக்கு நீதித் துறையில் பேசினால் நீதிக்கும் பற்றாக்குறை ஏற்படும் அளவுக்கு சில திராட்சைத் தோட்டத்து ராணிகள் தங்களுடைய பண பலத்தால் அதை ஆட்டிப் படைக்க முடியும் என்று நம்புகின்றார்கள். மூன்று மாதங்களுக்கு முன்னால் நான் இரயிலில் ஒரு தடவை விருதுநகருக்குப் போய்க் கொண்டிருந்தேன். என்னுடன் 4, 5 பேர் travel பண்ணினார்கள். அவர்களுக்கு என்னை அடையாளம் தெரியவில்லை. அதிலே ஒருவர் செல்வி ஜெயலலிதா அவர்களோடு பள்ளிக்கூடத்தில் படித்த சிநேகிதியாம். அவர்கள் எல்லாம் பேசிக் கொண்டு வருகிறார்கள். அந்த அம்மா English நன்றாகப் படிப்பார்கள், கணிதம் நன்றாகத் தெரியும். ஆனால் தமிழ் எழுத்து எழுதுவதற்கு ஆரம்பத்தில் கொஞ்சம் சங்கடம் இருந்திருக்கிறது. (குறுக்கீடு) Train-ல் பேசிக் கொண்டு வந்தவர்களைப்பற்றி நான் சொல்கிறேன். அது உண்மை. அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால் (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சுந்தரம், நீங்கள் என்னைப் பார்த்துத்தான் பேச வேண்டும். நான் சொல்வதைக் கேளுங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ............

[1999 ஏப்ரல் 16

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** திரு. சுந்தரம், உங்களை நான் ஒன்று கேட்கிறேன், நீங்கள் சொல்லுங்கள். இந்த மன்றம் என்ன, உங்களுக்கே சொந்தமா?

(உறுப்பினர் திரு. பி.ஆர். சுந்தரம் நின்றுகொண்டே இருந்தார்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சுந்தரம், அவையின் மரபை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும். அமைச்சர் நின்று பேசும்போது நீங்கள் உட்கார வேண்டும், உட்காருங்கள். திரு. சுந்தரம், உட்காருங்கள். திரு. சுந்தரம், உங்களை உட்காருமாறு பணிக்கிறேன். நீங்கள் உட்காருகிறீர்களா, இல்லையா? நான் சொல்வதை நீங்கள் கேட்க வேண்டும். (குறுக்கீடு) நீங்கள் என்னைப் பார்த்து கையை நீட்டிப் பேசக்கூடாது. முதலிலே நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) எனக்கு நீங்கள் உத்தரவு போடமுடியாது. நான்தான் உத்தரவு போடுவேன். முதலில் உட்காருங்கள். நான் சொல்கிறேன் உட்காருங்கள். முதலில் நீங்கள் உட்காருங்கள். நான் சொல்லியே நீங்கள் உட்காரவில்லை என்றால் எப்படி? முதலில் உட்காருங்கள்.

முற்பகல் 10-50

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திரு. சொக்கர் அவர்கள் பேசும்போது, ஒரு குறிப்பிட்ட பெயரைச் சொன்னதன் காரணமாகவே அது ஒரு Point of order என்ற அளவுக்கு வந்துவிட முடியாது. குறிப்பிட்ட பெயரைச் சொல்லி, அவர்மீது ஏதாவது குற்றச்சாட்டைச் சொன்னால்தான், அதிலே குறுக்கிட்டு, யாரும் விளக்கம் அளிக்கவோ, கேள்வி கேட்கவோ முடியும். அவர் ஒருவர் பெயரைச் சொல்கிறார். நல்லதைச் சொல்கிறாரா, அல்லது வேறு எந்தவிதமாகச் சொல்கிறார் என்பதைப் பொறுத்திருந்து பார்த்து, அதற்குப் பிறகு திரு. சுந்தரம் அவர்கள் அதைப்பற்றி விளக்கம் அளித்தால் ஏற்றுக்கொள்ளத் தயார்.

(உறுப்பினர் திரு. பி.ஆர். சுந்தரம், எழுந்து நின்று ஏதோ பேசிக்கொண்டிருந்தார்.)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர் திரு. சுந்தரம் உட்காருங்கள். நானும் அதைத்தான் சொல்ல வந்தேன். அவர் சொல்வதை முழுமையாகக் கேட்டு, அதிலே ஏதாவது ஒழுங்குப் பிரச்சினை இருந்தால், எழுப்புங்கள். நான் அனுமதிக்கிறேன். இப்போது உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். உட்காரவில்லை யென்றால், வெளியேற்ற வேண்டிவரும். நான் சபையை நடத்தவேண்டும்.



1999 ஏப்ரல் 16]

**திரு. ஆர். சொக்கர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் இரயிலில் போகும்போது, அவ்வாறு பேசிக் கொண்டு வருகிறார்கள். அவர்களிலே ஒருவர் முன்னாள் முதலமைச்சர் மாண்புமிகு செல்வி ஜெயலலிதாவோடு பள்ளியில் படித்த தோழி. அவர்கள் எல்லாம் பேசிக் கொண்டு வருகிறார்கள். நானும் கேட்டுக் கொண்டு வருகிறேன். தமிழ் எழுத்து எழுவதிலே, அவரிடத்திலே ஆரம்ப காலத்திலே கொஞ்சம் சிரமம் இருந்திருக்கிறது. 'நிதி' என்பதை வேகமாக எழுதிவிடுவார்களாம். 'நீதி' என்பதை எழுதுவதற்கு வராமல் இருந்திருக்கிறது. தமிழாசிரியர் திரும்பத் திரும்ப சொல்லிக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்; புரியவேயில்லை. 'நிதி'யை நீட்டு; நீட்டினால் அது 'நீதி'; 'நிதி'யை நீட்டினால் 'நீதி' வந்துவிடும் என்று சொன்னார். ஆகவே, செல்வி ஜெயலலிதா அவர்களுக்குச் சொல்லிக் கொடுத்த அந்தத் தமிழாசிரியரை நான் தேடிக்கொண்டே இருக்கிறேன். (சிரிப்பு) ஒழுங்காக அதைச் சொல்லிக் கொடுத்திருந்தால், இந்தமாதிரி...

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள். அவர் முழுமையாகப் சொன்ன பிறகு உங்களுக்கு அனுமதி தருகிறேன்.

**திரு. ஆர். சொக்கர்:** ஆகவே, ஏதோ ஒரு நல்லதற்காக ஒரு தமிழாசிரியர் சொல்லிக் கொடுத்ததை, இன்று அதை எப்படி வேண்டுமானாலும் பயன்படுத்திக் கொள்ளலாம் என்ற அளவிலே, இந்த நீதித் துறை வளைக்கப்பட்டு, ஒருசிலரால், அந்த நிலைக்கு அது உட்படுத்தப்படுமேயானால், இங்கே நீதிக்குப் பற்றாக்குறை வந்து விடலாம். நிதிப் பற்றாக்குறை வந்தால்...

(உறுப்பினர் திரு. பி.ஆர். சுந்தரம் எழுந்து நின்று ஏதோ பேசி கொண்டிருந்தார்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சுந்தரம் அவர்களைக் காவலர்கள் வெளியேற்றலாம். Allow பண்ணுகிறீர்களா, இல்லையா என்று எனக்கு உத்தரவு போடக் கூடாது. முதலில் அவரை வெளியேற்றுங்கள்.

(அவைக் காவலர்கள் உறுப்பினர் திரு. பி.ஆர். சுந்தரம் அவர்களை வெளியேற்ற உள்ளே வந்ததும், உறுப்பினர் தம் இருக்கையில் அமர்ந்துகொண்டார்)

**திரு. ஆர். சொக்கர்:** நிதிப் பற்றாக்குறை இருந்தாலும்கூட, வருமானத்தைப் பெருக்கி, செலவினத்தைக் கட்டுப்படுத்தி, நிதிப் பற்றாக்குறையைச் சமாளிக்க முடியும். ஆனால், ஒருவேளை நீதிக்கு பற்றாக்குறை வந்துவிடுமேயானால், இந்த ஜனநாயக அமைப்பின்மீது மக்கள் நம்பிக்கை இழந்து, இந்த ஜனநாயகமே வலுவிழந்து போகக்கூடும். ஆனால், இன்று தமிழகத்திலும் சரி, உச்ச நீதிமன்றத்திலும் சரி, நீதிபதிகள் எந்தவிதமான அச்சுறுத்தலுக்கும் பயப்படாமல், திறமையாக, செம்மையாகச் செயல்பட்டு வருவதை நான் உண்மையிலேயே பாராட்டுகிறேன். ஏதோ நீதித் துறைக்கு ஐஸ் வைப்பதற்காக நான் பேசவில்லை. ஊழல் செய்தவர்கள் மீது போடப்பட்ட வழக்குகள் தாமதப்படுத்தப்படலாம். தேவையில்லாத காரணங்களைச் சொல்லி, அவர்கள் இந்த நீதியைத் தாமதப்படுத்துவதற்காக அனைத்து முயற்சிகளையும் எடுக்கிறார்கள். ஒருவேளை நீதிபதிகள், அவர்கள் கேட்கின்ற கேள்விகளுக்கு அந்த வாய்ப்பைக் கொடுக்காமல் இருப்பார்களேயானால், "அவசரப்பட்டு தீர்ப்புக் கொடுக்கிறார்கள்; நாங்கள் என்ன கேட்டாலும் மாட்டேன் என்று சொல்கிறார்கள்" என்று எதிர்காலத்திலே குற்றம் சாட்டக்கூடிய நிலைமைக்கு வந்துவிடலாம். ஆகவே, என்ன ஒரு filmsy ground-லே அவர்கள் போட்டாலும்கூட, சரி பரவாயில்லை; அடுத்த வாய்தாவுக்கு வாருங்கள்; அடுத்த வாய்தாவுக்கு வாருங்கள்; அதற்கு பதிலைச் சொல்லுங்கள் என்று சொல்லி, இதுவரையிலும் நீதி செம்மையாக, சரியான திசையிலே சென்று கொண்டிருப்பதாகத்தான் நான் அறிகிறேன். கடந்த ஆட்சிக் காலத்திலே, முன்னாள் முதலமைச்சர் சம்பந்தப்பட்ட ஒரு வழக்கு, நீதியரசர் திரு. ஏ.ஆர். லட்சுமணன் அவர்கள் முன்னால் வந்தது. அவர் ஒரு மிகவும் நேர்மையான நீதிபதி. எந்தவித அச்சுறுத்தலுக்கோ அல்லது ஆசைக்கோ அடிபணியவில்லை. அதற்காக என்ன செய்தார்கள் என்றால், ஜஸ்டிஸ் லட்சுமணன் மருமகன் மேலே கள்ள கஞ்சா வழக்குப் போட்டார்கள். அதாவது—N.I.B.—Norcotic Intelligence Bureau—என்ற அதன் மூலமாக கள்ள கஞ்சா வழக்குப் போட்டு, நீதிபதியினுடைய மருமகனையே சிறையிலே அவர்கள் அடைத்து வைத்தார்கள். அவரைச் சிறையிலே அடைத்தவுடனே, நீதிபதி திரு. ஏ.ஆர். லட்சுமணன் அவர்கள், நான் இனிமேல் அந்தக் கேஸை விசாரிக்க முடியாது; மாற்றி விடுங்கள் என்று சொல்லக்கூடிய அளவுக்கு கடந்த காலத்திலே நடந்தது என்றால் அந்த அளவுக்கு இந்த நீதித் துறை மிரட்டப்பட்டது, அச்சுறுத்தப்பட்டது என்பதைப் பார்க்கும்போது, நமக்கெல்லாம் வேதனையாக இருக்கிறது. அப்படி இருந்த சூழ்நிலையிலேகூட, ஜஸ்டிஸ் சீனிவாசன்—அவர்களைச் செல்லமாக



டர்பன் சீனிவாசன் என்று சொல்வார்கள்—அவர் ஒரு Terror. நீதியிலே, அவருடைய தீர்ப்புகளையெல்லாம் படிக்கும்போது, அப்படியே கண்ணிலே எடுத்து ஒற்றிக்கொள்ளலாம் என்பது மாதிரி இருக்கும். எந்தவிதமான அச்சுறுத்தலுக்கும் பயப்படாமல் தீர்ப்பு அளிக்கக்கூடியவர். அவர்தான் Pleasant Stay Hotel வழக்கில் மிக அற்புதமான தீர்ப்புகளையெல்லாம் கொடுத்தார். இந்த ஜனநாயக நாட்டிலே மக்களுக்கு மிகுந்த பொறுப்பு இருக்கிறது. ஊழல்வாதிகள், ஊழல் குற்றம் சுமத்தப்பட்டவர்கள்மீது வழக்குகள் வரும்போது, அந்த வழக்குகள் எந்தத் திசையில் செல்கின்றன, எப்படி நடக்கின்றன என்பதை இந்திய நாட்டிலுள்ள 100 கோடி மக்களும் அதைக் கண்காணிக்க வேண்டும். ஏதோ நீதிமன்றத்தினுடைய தீர்ப்பு, அதைப் பற்றிப் பேசக்கூடாது, விமர்சிக்கக்கூடாது என்றெல்லாம் நினைக்கத் தேவையில்லை. ஆக்கபூர்வமான முறையில், அனுமதிக்கப்பட்ட முறையில் அவைகளும் விவாதிக்கப்படலாம், ஜனநாயகத்தில் விவாதிக்கப்பட வேண்டுமென்கின்ற வகையில் இதுவரையிலும், நீதிமன்றங்களினுடைய செயல்பாடுகள் திருப்தி அளிப்பதாகவே எனக்குத் தெரிகின்றது. இன்னும் தொடர்ந்து எந்தவிதமான அச்சத்திற்கும், எந்தவிதமான மிரட்டலுக்கும் பணியாது இன்று ஜனநாயகத்தைக் கட்டிக் காக்கக்கூடிய வகையில் நீதியரசர்கள் நீதியை நிலைநாட்டுவார்கள் என்று நம்புகின்றோம், விரும்புகின்றோம்.

*முற்பகல் 10-55*

அடுத்தபடியாக, சில கோரிக்கைகள் வந்திருக்கின்றன. துறையூரில் சார்-நீதிமன்றம் வேண்டுமென்று கேட்டு இருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்காக இதை நான் சொல்கிறேன். எங்களுடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் சொல்லியிருக்கிறார்கள். என்னுடன் மாநிலக் கல்லூரியிலே படித்த என்னுடைய இனிய நண்பர் தமிழருவி மணியன் அவர்களுடைய நண்பர் துறையூர் பார்-அசோசியேஷனுடைய முன்னாள் செயலாளர் ஏ. கணேசன் அவர்களும், இன்னும் உப்பிலியாபுரம் தொகுதியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர் திரு. கருப்புசாமி அவர்களும், துறையூரிலே Sub-Court வேண்டுமென்று கேட்டிருக்கின்றார்கள். அதற்கு உயர்நீதிமன்றமும் பரிந்துரை செய்திருக்கின்றது.

அதேபோல, பரமக்குடியிலும் ஒரு Sub-Court வேண்டும் என்ற கோரிக்கை இருக்கிறது. சிவகாசி, என்னுடைய தொகுதியிலே, சார்-நீதிமன்றத்திற்கு நீங்கள் ஏற்கெனவே அனுமதி அளித்திருக்கின்றீர்கள்.

அதற்கு மனம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதற்கு ஒரு கட்டடமும் நீங்கள் கட்டித் தர ஏற்பாடு செய்ய வேண்டும். சிறையும், சிறைக் கட்டடமும் அங்கே தேவைப்படுகிறது. அதையும் நீங்கள் செய்துதர வேண்டுமென்ற கோரிக்கையை கேட்டுக்கொண்டு. அடுத்து சிறைத் துறைக்கு வரலாம் என்று நினைக்கின்றேன்.

சிறைச்சாலையைப் பொறுத்தவரையில்-சொல்வார்கள்— தீயைத் தொடாத தங்கமும், உளியைச் சந்திக்காத சிற்பமும், மக்கள் செல்வங்களைப் பெறாத பெண்ணும் எப்படி வாழ்க்கையிலே முழுமையடைவதில்லையோ, அதுபோல சிறைச்சாலையைச் சந்திக்காத அரசியல்வாதிகளுடைய வாழ்க்கையும் முழுமையடைவதில்லை என்று சொல்வார்கள். 1989-லே அந்த இனிய வாய்ப்பு எனக்கு கிடைத்தது. 15 நாட்கள் ரிமாண்டிலே இருந்தேன். அங்கு இருந்ததனுடைய அனுபவமே தனி. அந்த அனுபவத்தின் தொடர்பாக இந்த அரசும், முதலமைச்சர் அவர்களும், சட்டத் துறை அமைச்சர் அவர்களும் ஒரு கோரிக்கையைப் பரிசீலனை செய்ய வேண்டுமென்று வேண்டுகிறேன். ஜெயிலிலே ரிமாண்ட் பிரிசினர்ஸ் என்று இருக்கிறார்கள். அவர்கள் குற்றம் செய்தவர்களாக நிரூபிக்கப்பட்டவர்கள் அல்ல. குற்றம் சாட்டப்பட்டவர்கள். இதில் பலர் மீது, நீதிவிசாரணைக்குப் பிறகு, அவர்கள் குற்றவாளியல்ல என்று சொல்லக்கூடிய நிலைமைகூட இருக்கிறது என்பதை நாம் பார்க்கிறோம். அதனாலே ரிமாண்ட் பிரிசனர்ஸ்-ஐ ரெகுலர் சிறைச்சாலையில் வைக்கக்கூடாது. ரெகுலர் சிறைச்சாலையிலே வைக்கக்கூடாது என்றால், இதை உடனே இன்றைக்கு முடிவு எடுத்து செய்துவிட முடியாது. இதனைக் கொள்கை ரீதியாக சரி என்று ஏற்றுக்கொண்டால், அவர்களுக்கு தனியாக ஹாஸ்டல் என்ற அமைப்புதான் இருக்கவேண்டும். அதற்கு சிறைச்சாலை என்றுகூட பெயர் இருக்கக்கூடாது. சட்டப்படி அவர்களைப் பாதுகாப்பாக ஒரு இடத்திலே வைத்திருக்க வேண்டியிருக்கிறது. கோர்ட்டிலே அவர்களை முன்னிலைப்படுத்த வேண்டியிருக்கிறது என்ற ஒரு காரணத்திற்காக அவர்களைத் தனியாகப் பிரித்து அந்த அமைப்பினை ஏற்படுத்திட வேண்டுமென்பது என்னுடைய நீண்ட நாள் ஆசை. ஏனென்றால், ரிமாண்ட் பிரிசினர்ஸ் என்று இருந்துவிட்டு, தீர்ப்பிற்கு பிறகு குற்றவாளியில்லை என்றால்.....

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விசாரணைக் கைதிகள் சிறைச்சாலையில் தனியாக



குவாரன் டைனில் தான் வைக்கப்படுகிறார்கள். அவர்களுடைய சொந்த உடையை அவர்கள் அணிந்துகொள்ளலாம். தண்டிக்கப்பட்ட சிறைக் கைதிகளைப் போல உடைகளை அவர்கள் அணிய வேண்டிய அவசியமில்லை. தண்டிக்கப்பட்ட கைதிகளையும் இவர்களையும் நடத்துவதில் வித்தியாசம் இருக்கிறது, சலுகை இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். But they are all alleged persons என்பதை மறந்துவிடக்கூடாது.

**திரு. ஆர். சொக்கர்:** என்னுடைய கருத்தைத்தான் சொல்லியிருக்கிறேன். நான் சிறைச்சாலையிலே இருக்கிறபோது, நான் பார்த்த என்னுடைய மனதிலேபட்ட அழுத்தங்களை இங்கே தெரிவித்திருக்கின்றேன். சரி என்றால் ஏற்றுக்கொள்ளுங்கள், முடியாது என்றால் விட்டுவிடுங்கள். சிறைச்சாலையில் அவர்களைத் தனித்தனியாக வைத்திருக்கிறோம் என்று சொல்கிறீர்கள். நாங்கள் இருந்து பார்த்தவரையில் தனித்தனியாக வைக்கப்பட்டிருந்தாலும்கூட காலையிலே இரண்டு மணி நேரம் திறந்து விடுகிறார்கள். மாலையிலே இரண்டு மணிநேரம் திறந்துவிடுகிறார்கள். மற்ற கைதிகளோடு அவர்கள் எல்லாம் கலந்துகொள்ளக்கூடிய ஒரு வாய்ப்பு இருக்கிறது. அதுவெல்லாம் இருக்கக்கூடாது என்பது என்னுடைய கருத்து.

இன்னொன்று, அவர்கள் நிரபராதிகள் என்று நிரூபிக்கப்பட்டபிறகு சமுதாயத்திலே என்ன சொல்கிறார்கள், ஜெயிலிலே இருந்தவன், ரிமாண்டிலே 3 மாதம் இருந்தவன், அப்படி என்று சொன்னால், தண்டனை அடைந்திருந்தானா, இல்லையா, என்பதையெல்லாம் பார்க்காமல், சிறைச்சாலையிலே இருந்து வந்தவன் என்ற ஒரு பழிச்சொல்லுக்கு அவன் ஆளாக வேண்டியிருக்கிறது என்ற கருத்தை அருள் கூர்ந்து பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) சீக்கிரம் பேசி முடித்துவிடுகிறேன்.

முற்பகல் 11-00

இன்னொன்று, அந்த ஜெயிலிலே இருந்தபோது அப்சர்வ் பண்ணியது. அன்றைக்கு செல்வராஜ் என்பவர் ஜெயிலராக இருந்தார். அவரிடம் பேசிக் கொண்டு இருக்கும்போது சொன்னேன். சார், ஜெயிலிலே இன்மேட்ஸ் சமூக ரீதியாக யார் கூடுதலாக இருக்கிறார்கள் என்று கேட்டபோது, மீண்டும் என்னுடைய மனதை அழுத்தக்கூடிய ஒரு பதில்தான் அங்கே கிடைத்தது. தாழ்த்தப்பட்டவர்கள், பிற்படுத்தப்பட்டவர்கள், மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள் எண்ணிக்கையில் மிகுதியான அளவிலே இருந்தார்கள். நான் அவரிடம்

கேட்டேன்; பிராமணர்கள் ஜெயிலுக்கு வந்திருக்கிறார்களா என்று கேட்டபோது, அவர்கள் வருவது ரொம்ப ரேர் என்று சொன்னார். நான் இருந்த அந்த 15 நாளில் இரண்டே இரண்டு பிராமணர்கள் மட்டும் இருந்தார்கள். அவர்கள் யார் என்று பார்த்தபோது அவர்கள் நார்த் இண்டியன்ஸ். ஏதோ, அவர்கள் படித்ததை சொல்லிக் கொடுப்பதற்கு மதுரையிலே ஒரு சர்டிபிகேட் கோர்ஸ் ஆரம்பித்திருக்கிறார்கள். சட்டப்படி அவர்கள் செய்தது தவறாக இருக்கலாம். அவர்கள் படித்ததை சொல்லிக் கொடுப்பதற்கு வந்தார்கள். இருந்தாலும்கூட முறையாக அவர்கள் அனுமதி பெறவில்லை. ஆகவே, அவர்களை சிறைச்சாலையிலே அடைத்தார்கள். அவர்கள்கூட அங்கே வந்துவிட்ட பிறகு என்ன செய்தார்கள் என்றால், காலையிலே 5½ மணிக்கு எழுந்து குளித்துவிட்டு, உள்ளே இருக்கிற பிள்ளையார் சிலை ஒன்றை குளிப்பாட்டி, மலர்களைப் பறித்து, பிள்ளையாருக்கு முன்பாக வைத்து, எங்கே இருக்கின்றோம் என்பதைப்பற்றி சிறிதும் கவலைப்படாமல் தெய்வ நம்பிக்கையோடு, கடவுளைக் கும்பிட்டு, அவர்கள் அந்த மாதிரி ஒரு வரைமுறையை செய்தார்கள். தந்தை பெரியார் அவர்கள், பெருந்தலைவர் காமராஜர் அவர்கள், பேரறிஞர் அண்ணா அவர்கள் எல்லாம் தாழ்த்தப்பட்டவர்களும், பிற்படுத்தப்பட்டவர்களும், மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களும் மாற வேண்டும் என்பதற்காக எவ்வளவு பாடுபட்டார்கள், அந்தக் கருத்துக்கள் எல்லாம் இன்னும உரிய முறையில் அவர்களைச் சென்று அடையவில்லையோ என்றுதான் என்னுடைய மனதிலே தாக்கம் இருக்கின்றது. அவர்களை எல்லாம் அறிஞர்களாக மேதைகள் நிறைந்த சபையிலே பார்க்க வேண்டும் என்று ஆசைப்படுகின்ற நாம், இங்கே அதிக எண்ணிக்கையிலே அவர்களை சிறைச்சாலைகளிலே பார்க்கிறோமே அதற்கு என்ன காரணம் என்பதையெல்லாம் கலைஞரைப் போன்றவர்கள், எங்களுடைய மக்கள் தலைவர் மூப்பனாரைப் போன்றவர்கள் எல்லாம் சிந்தித்து, சரியான வழியைக் காட்டி, அவர்களுடைய மனதிலே, இங்கே செல்லக்கூடாது, நீ செல்லக்கூடிய இடம் வேறு இருக்கின்றது என்று அவர்கள் மனதை தயார் பண்ண வேண்டும். ஒரு பிராமணருக்கும், முதலியாருக்கும் சண்டை வந்திருக்கிறதா? அதை நாம் எங்கேயாவது பார்த்திருக்கிறோமா? அவர்களுக்குள் சமூக கலாட்டா வந்திருப்பதைப் பார்த்திருக்கிறோமா? ஒருவருக்கு ஒருவர் அடிதடி கலாட்டா பண்ணியிருக்கிறார்களா? அவர்கள் பண்ணுவதில்லை. ஏன் தாழ்த்தப்பட்டவர்கள், பிற்படுத்தப்பட்டவர்கள், மிகவும்



பிற்படுத்தப்பட்டவர்கள் ஒருவருக்கொருவர் அடித்துக்கொள்ள வேண்டும் என்ற நிலையைப்பற்றி அவர்களைச் சிந்திக்கச் செய்து, அவர்கள் செல்லக்கூடிய இடம் சிறைச்சாலை இல்லை, மேதைகள் நிறைந்த இடம் என்ற ஒரு கருத்தை ஏற்படுத்த வேண்டுமென்று கூறி, இந்த நல்ல நேரத்தில் என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே.எம். விஜயகுமார்.

**திரு. கே.எம். விஜயகுமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்திலே நீதி நிருவாகம் மற்றும் சிறைச்சாலைகள் பற்றிய மானியக் கோரிக்கையிலே என்னைப் பேசுவதற்கு அனுமதி அளித்து, என்னை இந்த சட்டமன்ற உறுப்பினராகப் பணி செய்வதற்கும் ஒரு வாய்ப்பளித்த எங்கள் குடும்பத் தலைவர் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு என்னுடைய பணிவான வணக்கத்தையும் நன்றியையும் கூறி என்னுடைய உரையைத் தொடங்குகிறேன்.

நீதி நிருவாகம் பற்றிய இந்த மானியக் கோரிக்கையிலே பேசும்போது எனக்கு முன்பாக பேசிய சட்டமன்ற உறுப்பினர், மரியாதைக்குரிய சொக்கர் அவர்கள் இங்கே குறிப்பிட்டதைப்போல, பணக்காரர்களுக்கு ஒரு நீதி, ஏழைகளுக்கு ஒரு நீதி என்ற நிலை மாற வேண்டும் என்பதை தன்னுடைய மனதிலே தனியாத தாகமாகக் கொண்டுள்ள, தானைத் தலைவர் டாக்டர் கலைஞருடைய ஆட்சியிலேதான், கடந்த 3 ஆண்டுகளில் நீதி இலகுவாகக் கிடைப்பதற்கு ஏதுவாக ஏறக்குறைய 25 நீதிமன்றங்களுக்குக் குறையாமல், புதிய நீதிமன்றங்கள் ஒவ்வொரு வட்டத் தலைநகரங்களிலும், கோட்டத் தலைநகரங்களிலும் ஆரம்பிக்கப்பட்டு இருக்கின்றன. இந்த ஆண்டும் புதிய நீதிமன்றங்கள் பல தொடங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகள் இருந்தாலும், மூன்றே மூன்று புதிய நீதிமன்றங்கள் மட்டுமே தொடங்கப்படவிருக்கின்றன என்ற விவரம் இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது.

என்னுடைய அரசியல் ஆசான் என்னை வழி நடத்திச் சென்ற மறைந்த அமைச்சர் தங்கபாண்டியன் அவர்களுடைய நீண்டநாள் கோரிக்கையாக இருந்து, வந்த அருப்புக்கோட்டை வருவாய் கோட்டத்தை தலைமையிடமாகக் கொண்டு, அருப்புக்கோட்டை

நகரத்திலே ஒரு சார்பு நீதிமன்றம் அமைத்திட வேண்டுமென்ற கோரிக்கையை ஏற்கெனவே இந்த மன்றத்திலே வைத்திருந்தார்கள். சென்ற ஆண்டு நான் இந்த மன்றத்திலே பேசும்போதும் இதைக் குறிப்பிட்டுச் சொன்னேன்.

முற்பகல் 11-05

கடந்த ஜனவரி மாதம் அருப்புக்கோட்டை வழக்கறிஞர்கள் சங்கத்திலேயிருந்து இங்கே சென்னையில் வந்து மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களைச் சந்தித்து இந்தக் கோரிக்கை மனுவை என் மூலமாகவே கொடுத்தேன். இந்த ஆண்டு எப்படியும் அந்த சார்பு நீதிமன்றம் அருப்புக்கோட்டையில் அமையும் என்ற நம்பிக்கையோடு இருந்தவர்களுக்கு இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே அது பற்றி குறிப்பிடாதது ஏமாற்றமாக அமைந்துள்ளது. இந்த ஆண்டு கொள்கை விளக்கக் குறிப்பிலே கூறப்பட்டுள்ளதிலே சார்பு நீதிமன்றம் எதுவும் புதியதாக அமைக்க இருப்பதாகக் குறிப்பிடப்படவில்லை. எனவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் அதனை மறுபரிசீலனை செய்து, இந்த ஆண்டு அருப்புகோட்டை. நகரிலே சார்பு நீதிமன்றம் தொடங்க வேண்டுமென்ற ஒரு பணிவான கோரிக்கையினை இங்கே நான் முதலிலே வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த மூன்று ஆண்டுகளிலே, ஜனநாயகத்தினுடைய மூன்று தூண்களிலே ஒரு தூணாக இருக்கின்ற இந்த நீதித் துறை சுதந்திரமாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை மக்களும் மனமாரப் பாராட்டிப் பேசிக்கொண்டிருக்கின்றார்கள். முன்னோடித் திட்டம் என்ற ஒரு திட்டத்தின் மூலமாக, அந்த நீதி நிருவாகம் விரைவிலே வழக்குகளை முடிப்பதற்கான வகையில் ஒரு நல்ல திட்டமாக 4, 5 ஆண்டுகாலமாகச் செயல்பட்டு வருகின்றது. அதை இன்னும் அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்த வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நீதி நிருவாகம் நம்முடைய தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியிலே மிகச் சிறப்பான ஒரு இடத்தைப் பெற்றிருக்கிறது. மக்கள் நீதிமன்றத்தின் மேல் நம்பிக்கை வைத்து தங்களுக்கு அதிக அளவிலே நீதி பெற்றுக் கொண்டிருக்கின்றார்கள். இப்படிப்பட்ட காலகட்டத்திலே நம்முடைய தலைவர் அவர்களுடைய காலத்திலே, அருப்புக்கோட்டை நகரிலே சார்பு நீதிமன்றத்தை அமைக்க வேண்டும், அமைத்துத் தர வேண்டும் என்று மீண்டும் ஒரு முறை



பணிவோடு கேட்டுக்கொண்டு என்னுடைய தொகுதி பற்றிய சில கோரிக்கைகளை முன்வைப்பதற்கு விழைகின்றேன்.

அருப்புக்கோட்டை நகரத்திலே இருக்கின்ற மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் மற்றும் குற்றவியல் நடுவர் மன்றம் ஆகியவற்றிற்கும், பொது நீதிமன்றக் கட்டட வளாகம் கட்டுவதற்கான நில ஆர்ஜிதகுத்திற்காக ஏற்றதாக அருப்புக்கோட்டை நகரிலே இருக்கின்ற கால்நடைப் பராமரிப்புத் துறைக்குச் சொந்தமான கோழி விரிவாக்கப் பண்ணையிலே ஏறக்குறைய 5 ஏக்கர் நிலம் இப்போது காலியாக இருக்கிறது. அது அந்தத் துறைக்குப் பயன்படாமல் இருக்கிறது என்ற ஒரு கருத்தைப் பெற்று, அந்தத் துறையின் மூலமாக அந்த இடத்திலே இரண்டு ஏக்கர் நிலத்தை நீதிமன்ற வளாகக் கட்டடம் கட்டுவதற்காக ஆர்ஜிதம் செய்வதற்கு அனுமதி கேட்டு, பரிந்துரையும் வரப்பெற்றுள்ளது. அந்த இடத்தில் நீதிமன்றக் கட்டடம் கட்டுவதற்கு, நீதித் துறைக்கு அந்த இடத்தை வழங்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் முன்வர வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

சாத்தூர் நகரிலே அமைந்திருக்கின்ற வட்டாட்சியர் அலுவலக வளாகத்திலே ஏற்கெனவே அமைந்திருந்த சாத்தூர் நகரக் காவல் நிலையக் கட்டடம் மிகவும் பழுதாகிவிட்ட காரணத்தினால் அந்த இடத்திலே தொடர்ந்து அந்தக் காவல் நிலையத்தைச் செயல்படுத்த முடியாது, இயக்க முடியாது என்ற காரணத்தினால், அதைக் காலி செய்து வேறு ஒரு வாடகைக் கட்டடத்திலே தற்போது இயங்கிக்கொண்டிருக்கிறது. ஏற்கெனவே காவல் நிலையக் கட்டடம் இயங்கி வந்த இடத்திலே புதியதோர் காவல் நிலையக் கட்டடம் கட்டுவதற்கு இந்த ஆண்டு தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதை நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

சாத்தூர் நகரத்திலே குடிதண்ணீர் தேவை அதிக அளவிலே இருந்துவருகிறது என்பதைக் கருத்தில்கொண்டு, ஏற்கெனவே நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் உத்தரவின் பேரில் அங்கே புதியதோர் குடிதண்ணீர் திட்டத்திற்கான பணிகள் ஆய்வு செய்யப்பட்டு, முடிவு செய்யப்பட்டு, ஏறக்குறைய ரூ.5.25 கோடி செலவிலே புதிய குடிநீர்த் திட்டம் ஒன்று இந்த ஆண்டு தொடங்கப்படும் என்று அவர்கள் உறுதி அளித்திருக்கிறார்கள். அதற்காக அவருக்கு தொகுதி மக்களின் சார்பாக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-10

அருப்புக்கோட்டை நகரிலே இருக்கின்ற இரயில்வே மேம்பாலம் ஒன்று மிகவும் குறுகியதாக இருந்து வருகிறது. அதை நான் இரண்டு முறை இந்த மாமன்றத்திலே குறிப்பிட்டுப் பேசியிருக்கின்றேன். இந்த ஆண்டு, குறுகலாக இருக்கின்ற இரயில்வே மேம்பாலத்தை விரிவுபடுத்தி, அகலம் கூட்டி, அதைச் செப்பனிட்டு, பொதுமக்கள் மற்றும் பேருந்துகள் எந்தவொரு பயமும் இன்றி, விபத்துக்களுக்கு உள்ளாகாதவாறு அந்தப் பாலம் செப்பனிடப்பட்டு விரிவுபடுத்தப்பட வேண்டும் என்பதை நமது மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகின்றேன்.

அருப்புக்கோட்டை நகரிலே இருக்கின்ற குடிநீர்த் திட்டம் போதுமானதாக இல்லை. அதற்கும் சுமார் 12 கோடியிலே ஒரு புதிய திட்டம் ஆய்வுப் பணியிலே இருக்கிறது என்று மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்தப் பணியையும் விரைவுபடுத்தி, அந்தப் புதிய கூடுதல் குடிநீர்த் திட்டத்தையும் நிறைவுபடுத்திக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கின்றேன்.

சாத்தூர் நகரிலே ஒரு சிறு தொழிற்பேட்டை அமைத்திட ஏற்கெனவே கோரிக்கை வைத்து, அதற்காக மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதியிலே நேரிலே பார்த்து குறிப்பிட்டபடி, ஏறக்குறைய மதுரை-கன்னியாகுமரி நெடுஞ்சாலையிலே 25 ஏக்கர் நிலமும் அதற்காகப் பார்த்து வைக்கப்பட்டிருக்கிறது. அந்த நிலத்தின் சொந்தக்காரர்கள்கூட அந்த நிலத்தை தொழிற்பேட்டை அமைப்பதற்குத் தருவதற்கு ஒத்துக்கொண்டுள்ளார்கள். விரைவிலே, சாத்தூர் நகரிலே சிறு தொழிற்பேட்டை ஒன்று அமைத்துத்தர ஆவன செய்ய வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

சாத்தூர் நகரிலே தீப்பெட்டித் தொழிலும், நிப்புத் தொழிலும் வேறு எங்கும் இல்லாத அளவிற்குக் குவிந்திருக்கிறது. இந்தியாவிலேயே நிப்பு-பேனா நிப்பு-தயாரிக்கின்ற ஒரு தொழிற்சாலை சாத்தூர் நகரிலேதான் இருக்கிறது. இப்போது அதனுடைய பணிகள் மிகவும் குறைந்து, அதைக் காப்பாற்றவேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. அதற்கான புதிய திட்டங்களை அரசு தீர்மானித்து (மணியடிக்கப்பெற்றது)



ஒரேயொரு நிமிஷம். அந்தப் பணியிலே இருக்கின்ற தொழிலாளர்களை ஊக்கப்படுத்தும் வகையில் அந்தத் தொழில் பாதுகாக்கப்பட வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். தீப்பெட்டித் தொழில், அது சிறு தொழிலாக அங்கே செயல்பட்டு வருகிறது. ஏறக்குறைய 3 ஆண்டுகளுக்கு முன்னால், 3000 தீப்பெட்டித் தொழிற்சாலைகள் இருந்த அந்த சாத்தூர் வட்டாரத்திலே இப்போது 1000 தீப்பெட்டித் தொழிற்சாலைகள்தான் இருக்கின்றன. இதனால், பொதுமக்கள் அநேகம்பேர் வேலையிழக்கின்ற ஒரு சூழ்நிலை இருக்கிறது. எனவே, குடிசைத் தொழிலாகச் செய்யப்பட்டு வருகின்ற தீப்பெட்டித் தொழிலைப் பாதுகாக்கும் முகமாக யாதொரு இயந்திரத் தொழிலுக்கும் அனுமதி அளிக்கக் கூடாது என்ற என்னுடைய பணிவான வேண்டுகோளை இந்த இடத்திலே முன்வைத்து, எனக்கு வாய்ப்பளித்த அனைவருக்கும் நன்றிகூறி விடை பெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ம. அப்துல் லத்தீப்.

முற்பகல் 11-15

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஜனநாயகத்தின் அடிப்படையாகச் சட்டம்தான் இருக்க வேண்டும்; இருந்து வருகிறது. சட்டத்தை வியாக்கியானம் செய்கின்ற முழுப் பொறுப்பும் நீதிமன்றத்திற்கு இருக்கிறது. அதைத்தான் நம்முடைய அரசமைப்புச் சட்டம் ஒரு ஏற்பாடாக விதித்திருக்கிறது. சட்டத்தை மீறுபவர்களைத் தண்டித்து சிறையில் அடைத்தால்தான் சமுதாயம் ஒழுக்கமாக இருக்க முடியும் என்பதற்காகத்தான் பொதுப் பணத்திலேயிருந்து ஏறக்குறைய 57 கோடி ரூபாயை சிறை நிர்வாகத்திற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கோரிக்கையாக வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பில், 'இந்திய அரசமைப்புச் சட்டத்தில் குறிப்பிட்டுள்ள கோட்பாடுகளுக்கிணங்க அனைத்து குடிமக்களுக்கும் நீதி கிடைக்கச் செய்வது இவ்வரசின் கொள்கை ஆகும். நீதியை நிர்வகிப்பது நீதிமன்றங்களின் பொறுப்பாகும்' என்பதைத் துல்லியமாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், நடைமுறையில் நம்முடைய நாடு விடுதலை பெற்ற பிறகு—நான் மிகுந்த வேதனையோடு சொல்லிக்கொள்கிறேன். வெள்ளையன் ஆண்ட காலத்தில் அவன் சட்டங்களை இயற்றினான். அந்தச் சட்டங்களை இயற்றிவிட்டு, சட்டங்களை நடைமுறைப் படுத்துகின்ற பொறுப்பு யாருக்கு அளிக்கப்பட்டதோ அவர்களுடைய நிர்வாகத்திலே வெள்ளையன்

எங்கேயும் தலையிட்டது பரவலாகப் பேசப்படவில்லை. அந்தச் செய்திகள் வரவில்லை. மக்களும் வெள்ளையன் ஆட்சியை முறையாக எதிர்த்தார்களே தவிர, சட்டத்தை அவர்கள் மீறினார்கள், சட்டத்தை ஊனப்படுத்தினார்கள், அதை ஆட்சி பார்த்துக்கொண்டிருந்தது என்ற நிலை மட்டுமல்ல, மக்களும் ஓரளவிற்கு இயற்றப்பட்ட சட்டங்களுக்கு ஏற்ப தங்களுடைய வழியை அமைத்துகொண்டார்கள் என்பது வரலாறு. ஆனால் கடந்த 50 ஆண்டுகாலமாக ஜனநாயகத்தினுடைய பெயரால் சட்டம் எங்கெல்லாம் வளைகிறது; வளைந்து கொடுக்க முற்படுகிறது என்று பார்க்கும் போது சட்டத்தின்மீது இருக்கக்கூடிய நம்பிக்கை சிறிது சிறிதாகக் குறைந்து வருகிறதோ என்றுதான் நாம் எல்லாம் அஞ்சவேணடியவர்களாக இருக்கிறோம். நம்முடைய அரசியலமைப்புச் சட்டம் நீதி பரிபாலனத்தை முழுமையாக, நீதித் துறைக்கு வழங்கியிருககிறது. நீதித்துறையினுடைய அந்த நீதி பரிபாலனத்தில் நிர்வாகம் தலையிடக்கூடாது. நீதிமன்றம் கேட்கிற விளக்கங்களை நீதிமன்றத்திற்கு அளித்து நிர்வாகத்தின் சார்பாக நீதி பரிபாலனத்திற்கு அவர்கள் உதவியாக இருக்க வேண்டும் என்பதுதான் நம்முடைய ஏற்பாடு. ஆனால், இன்றைக்குப் பார்க்கும்போது, இங்கே எனக்கு முன்பு நம்முடைய திரு. சொக்கர் அவர்கள் பேசினார்கள்; நீதிமன்ற பரிபாலனத்திலே பல பேர் தலையிடுகிறார்கள் என்று. அந்த நிர்வாகம் நீதி பரிபாலனத்திலே தலையிடுவது மட்டுமல்ல, தன்னுடைய வரம்பை மீறி, வளாகத்தைத் தாண்டி, வேலியைத் தாண்டி எப்படியெல்லாம் சில பேர் முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறார்கள், நம்முடைய ஜனநாயக அமைப்பிலே, ஜனநாயக முறையிலே ஏற்படுத்தப்பட்ட நிர்வாகம், எப்படி இந்தச் சட்டத்தை அவர்கள் நடைமுறைப்படுத்தியிருக்கிறார்கள் என்றெல்லாம் பார்க்கும்போது இந்தப் பணத்தை ஒதுக்குவது பயனுடையதுதானா? மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 57 கோடி ரூபாய்க்கு மேற்படாத தொகை இந்தத் துறைக்கு வழங்கப்பட வேண்டும் என்று அந்த மானியக் கோரிக்கையை வைக்கும்போது நம்முடைய சிந்தனையில் எழுவது, இது பயனுள்ள ஓர் ஒதுக்கீடுதானா? அதனாலே நீதி பரிபாலனம் நடைபெறுவதற்கு அது பயனுள்ளதுதானா அல்லது நீதியைச் சீர்படுத்தக்கூடிய அந்தத் துறைக்கு நாம் வழங்கும் பணமா என்றெல்லாம்கூட கேள்வி எழுப்பினால் இதைப்பற்றி யாரும் குற்றம் காண முடியாது. நம்முடைய நாட்டில்—சட்டத்திற்கு என்றே ஒரு தெய்வத்தை வணங்குகிற நாடு இது. கல்விக்கு ஒரு தெய்வத்தை வணங்குகிறோம். ஆனால், கல்வி எல்லோருக்கும் கிடைக்கக்கூடிய ஒன்றாக இல்லை பணம் உள்ளவர்கள்,



குணம் உள்ளவர்கள் என்று தங்களை இனம் காட்டிக்கொள்ள முடியும் என்ற நிலை நீடிப்பது, நாம் கொண்டிருக்கிற நம்பிக்கைக்கே முழுவதும் மாறுபட்டதாக, இன்று எப்படி இருக்கிறதோ அப்படித்தான் நாம் சட்டநாதனை வணங்குகிறோம். உலகத்தில் சட்டத்தைத் தெய்வமாக வைத்து வணங்குகிற நாடு வேறு எந்த நாடும் இல்லை. ஆனால், நம்முடைய நாட்டிலே சட்டநாதன் என்றே ஒரு பெயரிட்டு, தெய்வத்தை வணங்குகிற நாடு என்று சொன்னால் சட்டத்தை மதிக்கிறார்கள்; தெய்வமாக வணங்குகிறார்கள்; தெய்வத்தை மதிக்கிறார்கள் என்ற நம்பிக்கையின் அடிப்படையில்தான் நம்முடைய நாட்டில் சட்டநாதனை வணங்குகிற ஒரு மேன்மையான எண்ணம் இருக்கிறது. ஆனால் அதற்கு மாறாக இன்றைக்கு நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட நேற்றையதினம் பத்திரிகையாளர்களிடையே பேசும்போது நிர்வாகத் துறையில்கூட தலையீடு இருக்கிறது; எப்படி நடைபெறுகிறது என்பதை விளக்கிச் சொல்லியிருக்கிறார்கள். இங்கே நீதித் துறையிலே தலையிடுவதைப்பற்றிச் சொன்னார்கள். ஆனால், நிர்வாகத் துறையிலே எப்படியெல்லாம் நாம் தலையிடுகிறோம், நிர்வாகத்திலே இருக்கக்கூடியவர்கள் சட்டத்தை மீறி, சட்டத்தை வளைத்து, இப்படியெல்லாம் நடக்க வேண்டும் என்று தனக்கு இருக்கிற அவசியங்களை விளக்கிச் சொல்லி அப்படிதான் நிர்வாகமே நடைபெற வேண்டும் என்று சொல்லியிருக்கின்ற சில உண்மைகளை அவர்கள் அத்தாட்சிகளோடு விளக்கியிருக்கிறார்கள் என்பதை இன்றைக்கு நாம் பார்க்கும்போது வேதனைப்படக்கூடிய ஒருநிலையிலே இருக்கிறோம்.

முற்பகல் 11-20

இதைச் செய்ய வேண்டும்; இதைச் செய்யக் கூடாது என்று நிர்வாகத்திலே இருக்கக்கூடியவர்கள் நீதிக்குப் புறம்பாகச் சில உத்தரவுகளைப் பிறப்பித்தார்கள் அல்லது வேண்டுகோள்களை வைத்தார்கள் அல்லது வேண்டுகோள்களையே அவர்கள் உத்தரவாக வெளியிட்டார்கள் என்றெல்லாம் இன்றைய பத்திரிகையிலே வந்திருக்கின்ற செய்திகளைப் பார்க்கும்போது, இந்த நிலையை நாம் எண்ணிப் பார்க்கக் கூடியவர்களாக இருக்கிறோம். தயவுசெய்து நான் கேட்டுக்கொள்கிறேன், ஒவ்வொன்றுக்கும் ஒரு எல்லையை நம்முடைய சட்டம் நிர்ணயிக்கிறது, அந்த எல்லையை மீறக்கூடிய நிலை தொடர்ந்து செல்லுமேயானால், மீறிக்கொண்டே நாம் இருப்போமானால், ஒருநாளைக்கு அரசமைப்புச் சட்டமே இல்லாமல் ஆக்கப்பட்டுவிடும்.

Anarchy-அந்த நிலைதான் இந்த நாட்டிலே நீடிக்கும். குற்றங்கள் நாட்டிலே பரவிவிடக் கூடாது; குற்றவாளிகள் நல்லவர்களோடு பழகிவிடக் கூடாது; அந்த வியாதியை அவர்கள் தொத்து வியாதியாக நாட்டிலே பரப்பக்கூடாது என்பதற்காகத்தான் சிறைச்சாலை. ஆனால், சிறைச்சாலையே குற்றங்களுடைய கூடாரமாக மாறுகிறது என்று பத்திரிகைகளிலே செய்திகளைப் பார்க்கும்போது நம்மால் வேதனையடையாமல் இருக்க முடியவில்லை.

போலீஸ் துறை வெளியே பணியாற்றுவதா அல்லது சிறைச் சாலைக்குள்ளேயே சென்று பணியாற்றுவதா என்று கேள்வி கேட்கும்போது, வெளியே இருப்பவர்கள் பரவாயில்லை; சிறைச்சாலையில் அடைக்கப்பட்டவர்கள்தான் இன்றைக்கு மேலும் மேலும் கட்டுப்படுத்தப்படக்கூடிய அளவுக்கு முறையான போலீஸ் ஸ்டேஷன் ஒன்றை சிறைச்சாலையிலேயே ஏற்படுத்த வேண்டுமென்ற நிலைக்கு 'இன்றைக்கு நிலைமை இருந்துகொண்டிருக்கிறது. எனவே, சிறைச்சாலை மானியத்தை, சிறைச்சாலைகள் நடக்க வேண்டுமே என்பதற்காகத்தான் நாம் இந்த மானியத்திற்கு அங்கீகாரம் அளிக்கலாமேயொழிய, என்னைப் பொறுத்தவரையிலே மிகுந்த தயக்கதைக் காட்டுகிறேன். Why should we waste our public money? சிறைச்சாலையிலேயே குற்றங்கள் நடைபெறுகின்றன என்றால் என்ன செய்வது? எனவே, தயவு செய்து சிறைச்சாலையிலே நீங்கள் சட்டம் ஒழுங்கை நிலை நாட்டுங்கள்; வெளியிலே நிலை நாட்டுவது இருக்கட்டும்; சிறைச்சாலையிலே சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட வேண்டுமென்று சொன்னால், சிறையிலே இருக்கிற கைதிகள் மட்டுமல்ல; சிறைச்சாலையை நிர்வகிக்கக் கூடியவர்கள்கூட குற்றங்கள் புரிகிறார்கள். குற்றங்கள் புரிந்த காரணத்தினாலே சிறைச்சாலையில் அடைக்கப்பட்டவர்களோடு கைகோர்த்து அவர்கள் வெளியே செய்வது எது குற்றமோ அதை உள்ளே செய்கிறார்கள் வசதியாக என்று இருக்கும்போது, இந்தச் சிறைச்சாலை மானியத்தை நான் மனதார அல்ல, வேறு வழியில்லையே என்பதற்காக இதை நான் ஆதரித்து, அதற்கு மானியம் வழங்க வேண்டுமென்று கேட்கக்கூடிய நிலையிலே இருக்கிறேன். இன்றையதினம் பத்திரிகையிலே (மணியடிக்கப்பெற்றது) கொஞ்சம் இருங்கள் சார். அதனாலேதான் நான் பேசுவதே இல்லை, இந்தமாதிரி மானியத்திலே. நான் மானியத்திலே இப்படிப் பேசுவதைத்



தவிர்த்து வருகிறேன்; எங்களுடைய உறுப்பினர்களுக்கு விட்டுவிடுகிறேன். காரணம் என்னவென்றால், நாங்களெல்லாம் விளக்கமாகப் பேசிப்பேசிப் பழக்கப்பட்டவர்கள். எனவே, உடனடியாக நீங்கள் ஒரு முறை வைக்க வேண்டும்.

இந்த மாதிரி பத்திரிகையிலே செய்திகள் வருவது நியாயம்தானா? முன்னால் ஆட்சியிலே இருந்தவர்கள் சிலர் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்; அந்த நடவடிக்கையைக் கைவிட வேண்டும், ஒரு ஐ.ஏ.எஸ்., ஆபீசர் அவரைக் குறிப்பிட்டு, அவர்களின் தற்காலிக வேலை நீக்கத்தை விலக்கிக் கொள்ளவேண்டும்; C. இராமச்சந்திரன், ஐ.ஏ.எஸ்., அவர்கள் தற்காலிக வேலை நீக்கம், என்பது விலக்கிக் கொள்ளப்படவேண்டும் என்று முன்னால் ஆட்சியில் இருந்தவர்கள் (குறுக்கீடு) யாரோ, எழுதினார்கள், என்று முதலமைச்சரவர்களே நேற்றையதினம் சொல்லியிருக்கிறார்கள்; பத்திரிகையிலே வந்திருக்கிறது.

நெய்வேலி நிலக்கரி நிறுவன முன்னாள் தலைவரும், நிர்வாக இயக்குநருமான பூபதி அவர்களின் இடைக்கால வேலை நீக்கத்தை ரத்து செய்ய வேண்டும். ரத்து செய்ய வேண்டுமென்றால், விசாரணை இருக்கிறது; விசாரணையில் இடைக்கால வேலை நீக்கத்திற்கு முகாந்திரம் இல்லாவிட்டால், ரத்து செய்யவேண்டியதுதான். அப்பாவி யாரும் தண்டிக்கப்படக்கூடாது. ஆனால் அதை யார் சொல்ல வேண்டும்? நிர்வாகத்திலே இருக்கக்கூடிய தலைமைப் பொறுப்பிலே இருப்பவர்களே உத்தரவிடும்போது — உத்தரவிடும்படியாக ஒரு வேண்டுகோளை வைப்பது— அதை என்னாலே ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அன்று இருந்தவர்கள் மட்டுமல்ல என்றும் இருக்கக்கூடிய, நிர்வாகத்திலே இடம் பெற்றிருக்கக்கூடியவர்கள் மிக ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்பதைத்தான் இது சுட்டிக்காட்டுகிறது. எனவே, இன்றைக்கு எல்லைகள் மீறப்படுகின்றன; தொல்லைகள் வரவழைக்கப்படுகின்றன; அரசமைப்புச் சட்டமும், நிர்வாக அமைப்பும் நமக்கு ஏற்படுத்தித் தந்திருக்கிற நெறிமுறைகள் திட்டமிடப்பட்டு, நாட்டில் அராஜகம் வளர்வதற்கு, யார் அராஜகத்தை அடக்குவதற்குப் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிறார்களோ அவர்களே... இப்படி நடந்து கொண்டிருக்கிறார்கள் என்று கேள்விப்படும்பொழுது— அதுவும் இதைப்பற்றி நான் பேசியிருக்க மாட்டேன்.

பொறுப்பிலே இருக்கக்கூடிய முதலமைச்சர் அவர்களே இதுகுறித்து நேற்றையதினம் பத்திரிகையாளர்களிடத்திலே குறிப்பிட்டிருக்கின்றார்கள்—முதலமைச்சர் அவர்களே சொன்ன காரணத்தினால்தான் அதிலே இருக்கக்கூடிய ஆழத்தை, அழுத்தத்தை, உண்மையை, அந்த உண்மை நமக்கு எடுத்துச் சொல்கிற மிகப்பெரிய பேரபாயத்தை நாம் எண்ணிப் பார்க்கவேண்டும் என்பதற்காகத்தான் இதைச் சுட்டிக்காட்டுகிறேனே தவிர வேறல்ல. நான் இதுகுறித்து இவ்வளவுதான் சொல்ல விரும்புகிறேன். சட்டங்களோடு... (குறுக்கீடு)

**திரு. டி. சுதர்சனம்:** Sir, I am on a point of clarification. யார் அதுபோன்று எல்லாம் மத்திய அரசைச் கேட்டுக் கொண்டார்கள் என்பதை விவரமாக இந்த அவையிலே தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** சரியாகச் சொல்லியிருக்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே நேற்று பத்திரிகையாளர்களிடத்திலே கூறியிருக்கிறார்கள்; யார் என்று. சுதர்சனம் அவர்களுக்குத் தெரியும். முன்னாள் முதலமைச்சர் அவர்களைப்பற்றி இன்னாள் முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். எனவேதான் நான் அந்தப் பிரச்சினையினுடைய அழுத்தத்தை, அதிலே இருக்கின்ற மிகப் பெரிய ஆபத்தை சுட்டிக்காட்டவேண்டும் என்பதற்காகத்தான் சொல்கிறேனே தவிர, வேறு விளக்கம் தேவையிருந்தால் முதலமைச்சர் அவர்களே சபையிலேயே அதற்கான விளக்கங்களைத் தரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று, முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரவேண்டியது - தடா சட்டம் செத்துவிட்டது என்பது. செத்துப்போன பிணத்தை ஒன்று நாம் தகனம் செய்யவேண்டும், இல்லாவிட்டால் அடக்கம் செய்யவேண்டும். ஆனால் நாடு முழுவதும் இன்றைக்கு அது தொடர்ந்து பயன்படுத்தப்படுகிறது என்றால், என்னால் புரிந்துகொள்ளமுடியவில்லை. சட்டம், சட்டப்படிதான் நிர்வகிக்கப்படவேண்டும். விசாரணை வேண்டும், விசாரணையின் அடிப்படையிலே, அதை யார் விசாரணை செய்யவேண்டுமோ அவர்கள்தான் விசாரணை செய்யவேண்டும். அப்படி விசாரணை செய்து, குற்றம் இருக்கிறது என்று திருப்திப்பட்டால், விசாரணை



அதிகாரிக்கு அதனால் திருப்தி ஏற்பட்டால், அவர்களைத் தண்டிக்கலாம். ஆனால் அதற்கு மாறாக யார் காலத்திலோ எப்படியோ கொண்டுவரப்பட்ட ஒரு சட்டம், இன்றைக்கும் தொடர்ந்து நடைமுறையில் இருந்து கொண்டு, அதன் அடிப்படையிலே பல அப்பாவிகளைக் கைது செய்தால் ஓராண்டு வரையிலே அதற்கு விசாரணை கிடையாது, அதற்காக ஒரு கமிஷன் நியமிக்கப்படுகிறது, அந்தக் கமிஷன்தான் அதற்கான முடிவுகளை எடுக்கவேண்டும், ஓராண்டு வரையிலே முடிவுகள் எடுக்கப்படுவதில்லை, விளக்கங்கள் கேட்கப்படுவதில்லை, எழுத்து மூலமாக விளக்கங்கள் கொடுக்கப்பட்டாலும் அது படிக்கப்படுவதுமில்லை, அது குறித்து அந்தக் கமிஷன் ஆய்வு செய்வதுமில்லை, ஓராண்டுக்குப் பிறகு விருப்பம்போல் அவர்கள் எதை விரும்பினாலும் செய்யலாம் என்று இருக்கக்கூடிய ஒரு சட்டத்தின் அடிப்படையிலே அப்பாவிகள் கைது செய்யப்பட்டு தொடர்ந்து அடக்கப்பட்டுவருவது தடா சட்டத்திலே இன்றைக்கு இருக்கிறது. 'தடா' சட்டமாவது பரவாயில்லை. 'தடா' சட்டத்திற்கு அப்பனாக இருக்கிற 'பொடா' சட்டம். Onus of Proof இல்லை. Burden of Proof இல்லை. அக்யூஸ்டுதான் தன்னை innocent என்று நிரூபிக்க வேண்டும். சட்டம் அக்யூஸ்டை innocent என்று ஏற்றுக்கொண்டால்தான் விடுதலை. இப்போது அவனைப் பிடித்த உடனேயே அவன் குற்றவாளிதான் என்று ஒரு presumption இருக்கின்ற வகையில் ஒரு சட்டத்தை, 'பொடா' சட்டம் என்று கொண்டு வந்து, இந்த அவையில் நிறைவேற்றப்பட்டது. நாங்கள் அதை வேண்டாம் என்றோம். அப்போதே நாங்களும் கோரிக்கை வைத்தோம். இதை தயவுசெய்து குறைந்தபட்சம் நன்றாக ஆய்வு செய்யும் வகையில் பொறுக்குக் குழுவுக்காவது அனுப்பி, செய்யுங்கள் என்று அன்றைக்கு சொன்னோம். நாம் சொன்னபடி, குடியரசுத் தலைவர் அவர்கள், அதிலே இருக்கக்கூடிய ஊனங்களைக் குறித்து, சட்டப்புறம்பான அம்சங்களைக் குறித்து, இந்தச் சட்டம் சட்டப்புறம்பான பல நெறிமுறைகளை, பல வழிமுறைகளைக் கண்டிருக்கிறது, எனவே இது செல்லாது, இதற்கு நான் என்னுடைய அங்கீகாரத்தை அளிக்கமாட்டேன் என்ற வகையிலே குடியரசுத் தலைவர் அவர்கள் அதை வைத்திருக்கிறார்களா அல்லது திருப்பி அனுப்பியிருக்கிறார்களா என்பது எல்லாம் எனக்குத் தெரியாது... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இந்திய தேசிய லீக்கினுடைய தலைவர், அப்துல் லத்தீப் அவர்கள் சொல்கிற சட்டம், தடா சட்டம் அல்ல. தடா சட்டம் இப்போது இல்லை. தடா சட்டம் திரும்பப் பெறப்பட்டுவிட்டது. ஆனாலும், ஏற்கெனவே தடா சட்டத்தின்படிக் கைது செய்யப்பட்டவர்கள் மேல் உள்ள வழக்குகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அவர்கள் இப்போது குறிப்பிடுவது Prevention of Terrorists Act, அதாவது POTA என்று சுருக்கமாக அழைக்கப்படுகின்ற சட்டமாகும்.

அது இந்த அவையிலே கொண்டுவரப்பட்டு, அந்தச் சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பட்டபோது, அவையிலே பெரும்பாலான உறுப்பினர்கள், எதிர்க்கட்சி உட்பட அனைவருமே அந்தச் சட்டம் அப்போது தேவை என்ற அளவுக்கு எடுத்துரைத்திருக்கின்றார்கள். ஏனென்றால், கோயம்புத்தூரிலே நடைபெற்ற தொடர் குண்டிவெடிப்பு, பலர் மாண்ட நிகழ்ச்சி, அதையொட்டி தீவிரவாதத்தைத் தடுக்கவேண்டும் என்பதற்காக அந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டது. தடா சட்டத்தையே ஏற்றுக்கொள்ளாத முற்போக்குவாதிகள், ஏன், திராவிட முன்னேற்றக் கழகம் உட்பட, இந்த 'பொடா' சட்டத்தைக் கொண்டுவரவேண்டிய அவசியம் ஏன் ஏற்பட்டது என்பதை நாட்டுமக்கள் அனைவரும் நன்றாக உணர்வார்கள். மாண்புமிகு உறுப்பினர்களும் உணர்வார்கள்.

முற்பகல் 11-30

தீவிரவாதத் தடுப்புச் சட்டம் என்று தமிழிலே அதற்குப் பெயர். இதை, குடியரசுத் தலைவர் ஏற்றுக்கொள்ள முடியாது என்று சொல்லிவிட்டதாக மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்கள் சொல்கிறார்கள். அதுவல்ல. அது குடியரசுத் தலைவர் அவர்களுடைய பார்வைக்குச் செல்வதற்கு முன்பே மத்திய அரசினுடைய உள்துறையிலிருந்து அது நமக்கு அனுப்பப்பட்டு, சில விளக்கங்களைக் கோரியிருந்தார்கள், சில clarification— களைக் கேட்டிருந்தார்கள். கேட்கப்பட்ட நாள், 1998, 10-வது மாதம் என்று கருதுகிறேன். 16 அல்லது 17 ஆம் தேதி, 10/98-ல், அது இங்கே திருப்பி அனுப்பப்பட்டு— தேவையில்லை என்ற எண்ணத்தோடு திருப்பி அனுப்பப்படவில்லை அதிலே சில விளக்கங்கள் கோரப்பட்டிருந்தன. நாட்டிலே உள்ள நிலை, கட்சிகளுடைய கருத்துகள் ஓரளவுக்கு அமைதியான சூழ்நிலை திரும்புகின்ற கால கட்டம். எனவே, அவர்கள் விளக்கம் கேட்டதைச்



சாக்காக வைத்துக்கொண்டு, அதற்கு இங்கேயே ஒரு கமிட்டியைப் போட்டு விட்டோம்.

இங்கே நம்முடைய உறுப்பினர் ஒருவர் பேசும்போது சொன்னாரே, 'கமிட்டியைப் போடு, இல்லாவிட்டால் தள்ளிப்போடு' என்று. அதைப்போல, ஒரு கமிட்டியை, சட்ட அமைச்சருடைய தலைமையிலே ஒரு கமிட்டி போடப்பட்டு, 'இதை ஆராய்ந்து சொல்லுக' என்று சொல்லியிருக்கிறோம். அது ஆராய்ந்து சொல்லப்பட்ட பிறகுகூட, நான் இப்போது இந்த அவைக்கு உறுதியளிக்கின்றேன், இந்த POTA சட்டம் ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் போன்றவர்கள் இங்கே எடுத்துக் கூறியதைப்போல, மற்றும் கம்யூனிஸ்ட் கட்சி சார்பாகவும், இங்கே எடுத்துக் கூறியதற்கொப்ப, அது Select Committee -க்கு நிச்சயமாக அனுப்பப்படும். உடனடியாக நடைமுறைக்கு வராது என்பதை இங்கே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அந்தக் காலத்திலே 'கடிதோச்சி மெல்ல எறிக' என்று வள்ளுவரே சொல்லியிருக்கிறார். அந்த அளவிலே,

'கடிதோச்சி மெல்ல எறிக நெடிதாக்கம்
நீங்காமை வேண்டு பவர்.'

என்ற அந்தக் குறளுக்கேற்ப, நீண்டநாள் செல்வாக்கோடு இருக்க வேண்டும் என்று எண்ணுகின்றவர்கள், கையை ஓங்கி மெதுவாக அடிக்க வேண்டும். 'கடிதோச்சி மெல்ல எறிக' என்று இருக்கிறது. அப்படி கடிதோச்சப்பட்டதுதான் POTA சட்டம், இப்போது மெல்ல எறிகிற கட்டத்திற்கு வந்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. அதோடு, அவர்கள் இருக்கக்கூடிய இந்த ஆட்சியிலே நம்முடைய தலைவர்களுக்கு இருக்கக்கூடிய நல்ல எண்ணத்தை அன்று மட்டுமல்ல, என்றும் புரிந்து கொண்டவர்கள் நாம். யாரையும், சட்டத்திற்கு மீறி, சட்டத்திற்குப் புறம்பாக, அதுவும் இயலாதவர்களை, சிறுபான்மை மக்களை இம்சிக்க வேண்டுமென்ற எண்ணம் உங்களுக்குக் கிஞ்சித்தும் இருக்கிறது என்று சொல்லக்கூடியவர்கள் நாங்கள் அல்ல. ஆனால், அதேநேரத்தில் சூழ்நிலைகளை எல்லாம் மாற்றக்கூடிய ஆற்றல் படைத்தவர்கள், பேரறிஞர் அண்ணா அவர்களால் வளர்க்கப் பட்டவர்கள், பெரியார் அவர்களால் வளர்க்கப்பட்டவர்கள். எனவே,

நம்முடைய எண்ணங்களையும், உள்ளங்களையும் சூழ்நிலை பக்குவப்படுத்தக் கூடாது. நாம்தான் சூழ்நிலையைப் பக்குவப்படுத்த வேண்டும் என்ற அடிப்படையில், இந்தச் சட்டத்தை அன்றைக்கே நாம் எதிர்த்தோம். இது அரசமைப்புச் சட்டத்திற்கு முரணான சட்டம் என்பது எங்களுக்கு இருக்கக்கூடிய அழுத்தமான எண்ணம். சாதாரணக் குடிமகன் என்ற முறையிலே மட்டுமல்ல, நான்கூட அரசியல் சட்டத்தினுடைய மாணவன் என்ற அந்த முறையிலே, இதை எந்த வகையிலேயும் ஏற்றுக்கொள்ள முடியாது. எனவே, இதை அவர்கள் திருப்பி அனுப்பியிருக்கும்போது, கடைசி மூச்சு விட்டுக் கொண்டிருக்கிற அந்தச் சட்டத்தை . . .

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, சில விஷயங்களை ஒப்புக்கொண்ட பிறகும், அதை ஏன் சொன்னோம் தெரியுமா என்று, அதைப்பற்றிப் பேசிக் கொண்டிருப்பது நல்லதல்ல. ஒப்புக்கொண்டாகிவிட்டது. கிட்டத்தட்ட Select Committee-க்கு போகிறது என்றால், அதனுடைய கதி என்ன என்பது நன்றாகத் தெரிந்த காரணத்தினால்தான், திரு. சுப்பராயன் போன்றவர்கள் கைதட்டி வரவேற்றிருக்கிறார்கள். எனவே, அப்துல் லத்தீப் அவர்களும் அதை ஏற்றுக்கொள்வார்கள் என்று நான் கருதுகின்றேன்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** ஏற்றுக்கொண்டேன். நீங்கள் Select Committee -க்கு விட்டு, மீண்டும் அதைப் பரிசீலனை செய்வதைவிட, அதை முழுமையாகக் கைவிடுவது என்பது ஏற்புடையது என்ற முறையிலே என்னுடைய கோரிக்கையை வைத்து, அடுத்த கட்டத்திற்கு நான் போகிறேன்.

நம்முடைய மாண்புமிகு சட்டத் துறை அமைச்சருடைய கனிவான கவனத்திற்கு, என்னுடைய தொகுதியின் சார்பாக ஒரு கோரிக்கை. வாணியம்பாடி, உங்களுக்குத் தெரியும், அவர்களுக்கும் தெரியும், எல்லோருக்கும் தெரியும், அங்கே உரிமையியல் நீதிமன்றம் இல்லை. அது ஒரு பெரிய நகரம். தொழிற்சாலைகள் நிறைந்த இடம். தொழிற்சாலைகளில் பெரும்பகுதியைக் கொண்டிருக்கக்கூடிய ஒரு வட்டமாகும். எனவே, தயவுசெய்து அங்கே District Munsif Court அல்லது Sub-court ஒன்றை ஏற்படுத்துவதற்கு, நான் பல நாட்களாக ஒவ்வொரு மானியக் கோரிக்கையிலும் கோரி வருகிறேன். அதுபற்றி இந்த மானியக் கோரிக்கையிலாவது அந்த இனிப்பான செய்தியை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வெளியிடுவார்கள் என்று நான் வெகு நம்பிக்கை கொண்டிருக்கின்றேன்.



*முற்பகல் 11-35*

உயர் நீதிமன்ற ஒப்புதல் தேவை என்று சொல்கிறார், உயர் நீதிமன்றம் 60 இடங்களுக்கு ஒப்புதல் தந்திருப்பதாக எனக்குத் தகவல் கிடைத்திருக்கிறது. நானும் உயர் நீதிமன்றத்திலே இருக்கக்கூடியவன்தானே, அதோடு தொடர்பு உடையவன்தானே, எனவே, நீதிமன்றம் அதற்கு இசைவு அளித்திருக்கிறது, அல்லது அமைச்சர் அவர்கள் சொன்னால் இசைவு அளிப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது. எனவே, தயவுசெய்து நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வது, அங்கே உடனடியாக ஓர் உரிமையியல் நீதிமன்றம் வேண்டும். வழக்கறிஞர்கள் போராடுகிறார்கள்; அவர்கள் கோர்ட் வளாகத்திலே மட்டுமல்ல, என்னுடைய வீட்டிற்கே வந்து போராடுகிறார்கள். 'நீ கூட வழக்கறிஞர்தானே, உனக்கு அக்கறை இல்லையா' என்று கேட்கிறார்கள். நான் முதலமைச்சர் அவர்களிடத்திலே எடுத்துச்சொல்லி, சட்டமன்றத்திலே பேசி, அது நிச்சயம் வருவதற்கு ஏற்பாடு செய்கிறேன் என்ற உறுதியைக் அவர்களுக்கு அளித்திருக்கிறேன். தயவுசெய்து முதலமைச்சர் அவர்கள் என்னுடைய உறுதியைக் காப்பாற்றும் வகையில், அதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று எனக்கு இருக்கிற உரிமையின் காரணமாகவும், கடமையின் காரணமாகவும் முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன், இந்த மானியத்தில் எவ்வளவோ பேசவேண்டும்.....

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உயர் நீதிமன்றத்தால் பரிந்துரைக்கப்பட்ட நீதிமன்றங்களில் எதிர்பாராத விதமாகவோ அல்லது வேறு என்ன காரணத்தாலோ வாணியம்பாடி இடம்பெறவில்லை என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். அதனாலே, உங்களுக்குச் நீதிமன்றம் கிடையாது என்ற பொருளிலே சொல்லவில்லை. உயர் நீதிமன்றம் பரிந்துரைக்கவில்லை என்ற தகவலை உங்களுக்கு சொல்லவேண்டியது என்னுடைய கடமை, அதற்காகச் சொல்கிறேன்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** தலைவரவர்களே, பரிந்துரைக்காவிட்டாலும் அரசு அதிலே அக்கறை எடுத்துக்கொண்டு, அரசு பரிந்துரைத்தால் நீதிமன்றம் பரிந்துரைக்கும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். தயவுசெய்து . . .

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** தலைவர் அவர்களே, என்னுடைய தவறான தகவலுக்கு நான் வருந்துகிறேன்; வாணியம்பாடி இருக்கிறது. (சிரிப்பு)

**திரு. ம. அப்துல் லத்தீப்:** அதைத்தான் நான் சொன்னேன். அவர்களோடு தொடர்பு வைத்திருக்கக்கூடியவன் நான். எனவே, நீதிமன்றத்திற்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன், நீண்ட நாளைய ஒரு கோரிக்கை நிறைவேறியதற்காக.

சிறைச்சாலைகளிலே சில ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். அண்மையிலே ஒரு பத்திரிகையிலே ஒரு செய்தி வந்தது. ஒருவர் ஒரு மனு கொடுத்து இருக்கிறார். என்னவென்றால், சிறைச்சாலைகளில் ஆயுள் கைதியாக இருக்கக்கூடியவர்களுக்கு. அவர்களுடைய துணைவியார்களை முறையாகச் சந்திக்க வைத்து, ஒரு இடத்தை ஏற்பாடு செய்து...(சிரிப்பு) அதாவது, சிறைச்சாலை அதிகாரிகளுடைய தகவலின் பேரிலே, அவர்களுடைய அனுமதியோடு சந்திக்க வேண்டும். தெரியாமல் சந்திப்பது, திடீரென்று அவர்களை விட்டுவிடுவது என்று சொன்னால், பல சிக்கல்கள் ஏற்படும். ஒருவேளை குழந்தை ஏதாவது ஏற்பட்டுவிட்டால், அதற்கு இவர்தான் தந்தை என்றும் நிர்ணயிக்கப்படக்கூடிய அளவுக்கு, அங்கே ரெக்கார்டுகள் ஏற்படவேண்டும். அந்தவகையிலே,—It is a Psychological one உளநூல் சாஸ்த்திரப்படி—அதிலே ஒரு உளவியல் சாஸ்திரமே அடங்கி இருக்கிறது. எனவே, அப்படி ஏதாவது செய்ய முடியுமா என்று பார்க்க வேண்டும். அப்படி என்று சொன்னால், சிறைச்சாலையா, என்ற கேள்வி எழும். இருந்தாலும், அதைச் செய்ய முடியுமா என்பதை அரசு சிந்திக்க வேண்டும். எப்படிச் செய்ய வேண்டும் என்பதை நீங்கள்தான் முடிவு செய்யவேண்டும் என்று கேட்டு, ஒட்டுமொத்தமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய மானியத்தை ஆதரித்து அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி.

***திரு நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கிற மானியக் கோரிக்கைகள் மீது, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக ஒருசில கருத்துக்களைத் தெரிவிப்பதற்கான வாய்ப்பு தந்தமைக்கு தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டிலே பெரும்பாலான மக்கள், நம்முடைய மாநில அரசு இந்தச் சட்டப்பேரவையிலே நிறைவேற்றி அனுப்பிய POTA சட்டத்தைப் பற்றி பல்வேறு கருத்துக்களைத் தெரிவித்திருக்கிற வேளையிலே, நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு நல்ல முடிவை அறிவித்ததற்காக, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



முதலாவதாக, என்னுடைய கருத்துக்களை நீதி நிருவாகத்தின்மீது தெரிவிக்க விரும்புகிறேன். தாமதிக்கப்பட்ட நீதி, மறுக்கப்பட்ட நீதி என்பார்கள். அதேபோல, நம்முடைய நீதிமன்றங்கள் எல்லாம், நீதிமன்றத்திலே தேங்கிக் கிடக்கிற வழக்குகளை விரைவாகத் தீர்வு காண்பதற்கான, நடவடிக்கைகளை எடுப்பதற்கான உள்கட்டமைப்பு வசதிகளை அதிகப்படுத்த வேண்டுமென்று நான் வலியுறுத்திக் கேட்டுகொள்கிறேன்.

முற்பகல் 11-40

தற்போதுள்ள கட்டமைப்பு வசதிக்காக 140 கோடி ரூபாய்க்கு மேல் நிதி ஒதுக்கம் செய்திருந்தாலும், உயர் நீதிமன்றம் போன்ற பெரிய நீதிமன்றங்களில் பணிகள் எல்லாம் கணினிமயமாக்கப்படுகின்றன என்றாலும், இன்னும் நம்முடைய மாநிலத்தில் பல்வேறு பகுதிகளில் இருக்கின்ற நீதிமன்றங்களில் எல்லாம், அடிப்படையான உள்கட்டமைப்பு வசதி போதுமான அளவு இல்லாது இருக்கிற காரணத்தினால், அதனுடைய பணிகள் வேகமாக நடைபெறுவதிலே இடர்பாடுகள் ஏற்பட்டு வருகின்றன. அதோடு, நீதிமன்றத்திலே நீதிபதிகளுக்கான பணியிடங்கள் அதிகபட்சம் நிரப்பப்படாமல் இருக்கின்றன. உயர் நீதிமன்றத்திலேகூட, கொள்கை விளக்கக் குறிப்பிலே அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள், 42 நீதிபதிகள் இருக்க வேண்டிய இடத்தில் 30 நீதிபதிகள் மட்டுமே இருக்கிறார்கள், 12 நீதிபதிகள் குறைவாக இருக்கிறார்கள் என்று.

மாவட்ட அளவிலும், அதற்கும் கீழே உள்ள நீதிமன்றங்களில் நிரப்பப்பட வேண்டிய பணியிடங்கள் நிறைய உள்ளன. சில இடங்களில் உரிமையியல் வழக்குகளையும், குற்றவியல் வழக்குகளையும் சேர்த்தே நீதிபதிகள் கவனித்து வருகிறார்கள். அப்படி, தமிழ்நாடு முழுவதும் 43 நீதிமன்றங்கள் செயல்படுவதாக கொள்கை விளக்கக் குறிப்பிலே அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். இப்படி நீதிபதிகள் பதவிகள் நிரப்பப்படாமல், பல்வேறு இடங்களில் நீடித்து இருப்பது, உள்கட்டமைப்பு வசதி போதுமான அளவுக்கு இல்லாமல் இருப்பது, உரிய நேரத்திலே வழக்குகளின் மீது தீர்வு காண்பதற்கு உதவியாக இல்லை. வழக்குகள் பற்றிய விவரங்களும் கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிடப்பட்டிருக்கின்றன. ஆண்டு ஒன்றுக்கு, என்னுடைய கணக்கீட்டின்படி 58,129 வழக்குகள் தேங்கிக்கிடக்கின்றன. இதுவரையில் கணக்குப் பார்த்தோமானால் 11,64,398 வழக்குகள் நிலுவையாக இருக்கின்றன என்று கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிடப் பட்டிருக்கிறது. இந்த வழக்குகளில் எல்லாம் தீர்வுகாண, தீர்வு

ஏற்படுத்துவதற்கான வகையில், விரைவாக நீதி நிர்வாகத்திலே காலியாக இருக்கின்ற பணியிடங்கள் நிரப்பப்பட வேண்டும். உள்கட்டமைப்பு வசதிகள் விரிவாக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்திக் கூறுகிறேன். ஒன்றை மட்டும், குறிப்பாக மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். மாநில அரசு மிகச் செம்மையாகச் செயல்பட வேண்டுமானால், தங்களுடைய பணியாளர்கள் மனம்கோணாமல் இருப்பதற்கு பல நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும். அப்படி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஊதிய விகிதங்கள் என்ற அடிப்படையில் அவர்களுக்குச் சலுகைகளை வழங்கி உயர்த்தியிருக்கிறார்கள். ஆனால், பணியாளர்கள், அவர்களுக்கு ஏற்பட்டிருக்கின்ற குறைகளைத் தெரிவிக்கின்ற தமிழ்நாடு நிர்வாகத் தீர்ப்பாயம் TAMIL NADU ADMINISTRATIVE TRIBUNAL. அதற்கு இரண்டு பெஞ்சுகள் உள்ளன. அந்தத் தீர்ப்பாயத்திற்கு 4 நீதிபதிகள் வேண்டும். ஆனால், இப்போது ஒரே ஒரு நீதிபதி மட்டும்தான் இருக்கிறார். நடைமுறையிலே தமிழ்நாடு நிர்வாகத் தீர்ப்பாயம் என்பது, செயல்படாமல் இருக்கிறது என்பதுதான் யதார்த்தமான உண்மை. இதிலே 70,000 வழக்குகள் தேங்கிக் கிடக்கின்றன. அந்த 70,000 வழக்குகளில் 2000 வழக்குகள் நீதிமன்ற அவமதிப்பு என்ற அடிப்படையில் வந்திருக்கிற வழக்குகளாக இருக்கின்றன. எனவே, இதிலே அரசுப் பணியாளர்கள் தங்களுடைய மனக் குறைகளை, அவர்களுக்கு ஏற்பட்டிருக்கின்ற இடர்பாடுகளை நிவர்த்தி செய்துகொள்வதற்கான தீர்ப்பாயம் என்ற அடிப்படையில், அந்தத் தீர்ப்பாயத்தை அணுகுகின்றபோது, அதனுடைய வேலையும் செம்மையாக நடைபெறவில்லை என்பதை அரசு கவனத்திலே கொண்டு .....

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் தீர்ப்பாயம் தொடர்பாக, ஏற்கெனவே கடந்த கால அரசாங்கத்திலே தீர்ப்பாயம் தேவையில்லை என்று முடிவு எடுக்கப்பட்டது. நீதிபதி நீடித்துக்கொண்டிருக்கிறார். இந்த அரசும் தீர்ப்பாயம் தேவையில்லை என்ற முடிவுக்கு வந்தாலும், மத்திய சர்க்காரினுடைய ஒப்புதல் இல்லாமல் அந்தத் தீர்ப்பாயத்தைக் கலைக்க முடியாது. எனவே, மத்திய சர்க்கார் ஒப்புதலைப் பெறமுடியவில்லை என்ற நிலையில், மீண்டும் அந்தத் தீர்ப்பாயத்திற்குப் புனர்வாழ்வு அளிப்பதற்கு எல்லா ஆணைகளும் பிறப்பிக்கப்பட்டுள்ளன. நீதிபதிகளும் நியமிக்கப்பட்டுள்ளார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கூறிய விளக்கத்திற்கு நன்றி. நீதிபதிகள் நியமித்திருப்பதற்கும் மகிழ்ச்சி. 70,000 வழக்குகளிலே சம்பந்தப்பட்ட பணியாளர்களுடைய குறைகள் தீரும் என்ற அளவிலும், அதைப் பாராட்டவும் கடமைப்பட்டிருக்கிறேன். இன்னொரு பிரச்சினை, நீதி நிருவாகத்தில் ஒரு கருத்து இருப்பதாக அறிகிறேன். தற்போது 15 நாட்கள் 'ரிமாண்ட்' வைக்கக்கூடிய நிலைமையை மாற்றி 30 நாட்கள் என்ற ஒரு சிந்தனைப் போக்கு நீதி நிருவாகத்தில் இருப்பதாக அறிகிறேன். அது எந்த வகையிலும் நல்ல கருத்தாக இருக்காது. அப்படிப்பட்ட சிந்தனைப்போக்கு பொருத்தமுடையதாக இருக்காது என்று கருதுகிறேன். இதற்குப் பதிலாக Family Courts என்று சொல்லக்கூடிய, குடும்ப நீதிமன்றங்களை அதிக அளவிற்கு அமைத்து, சிறுசிறு வழக்குகளுக்கெல்லாம் அந்தக் குடும்ப நீதிமன்றங்களில் தீர்வு ஏற்படுத்திக்கொள்ளலாம்.

அடுத்து, சொந்த ஜாமீனில் விடுதலை செய்வதற்கான வழிமுறையைப் பின்பற்றலாம். இன்றைக்கு வசதிபடைத்தோர் உடனடியாக ஜாமீனிலே வந்துவிடுகிறார்கள். வசதி இல்லாதவர்கள் பல பல மாதங்களாகச் சிறையிலே அடைபட்டுக் கிடக்கிறார்கள். இதற்குப் பதிலாக வழக்குகளின் தன்மையைப் பொறுத்து, நீதிபதிகளே சொந்த ஜாமீனில் குற்றம் சுமத்தப்பட்டவர்களை விடுதலை செய்வதற்கான வழிமுறைகளைப் பற்றியும் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-45

அடுத்து, உச்ச நீதிமன்றத்திலும், உயர் நீதிமன்றத்திலும் தடையாணை பெற்றிருக்கிற வழக்குகள் தவிர, மற்ற வழக்குகள் எல்லாம் இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக நடந்து வருமென்றால், நிலுவையாக இருக்குமென்றால், அந்த வழக்குகளுக்கு விரைந்து தீர்வு காண்பதற்கு ஒரு முன்னோடித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. அந்த முன்னோடித் திட்டத்திற்காகக் கூடுதல் நீதிமன்றம், 55 இடங்களில் அமைக்கலாம் என்று தீர்மானிக்கப்பட்டது. ஆனால், அப்படித் தீர்மானிக்கப்பட்ட இடங்களில், இன்னும் 37 இடங்களில் நீதிபதிகள் கிடைக்காத காரணத்தினாலே நீதிமன்றங்கள் அமைக்கப்படவில்லை என்பது மிகுந்த வருத்தத்திற்குரியது. அதுகுறித்து அரசு விரைந்து கவனத்திலே எடுத்து, நீதிபதிகளை நியமித்து அந்தக் கூடுதல் நீதிமன்றங்களை அமைத்து. தீர்வு காண வேண்டுமென்று வலியுறுத்துகிறேன்.

அடுத்து, சிறைத் துறைபற்றி ஓரிரு கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். ஏற்கெனவே, பல கூட்டங்களிலே, சட்டமன்றப் பேரவையிலே பேசுகிறபோது எங்கள் கட்சியின் சார்பாக வலியுறுத்தியிருக்கிறோம், ஆயுள் தண்டனைக் கைதிகளுடைய விடுதலை குறித்து. பல்வேறு மாநிலங்களில் ஆயுள் தண்டனைக் கைதிகளுக்கு சலுகை அளித்து, 7 ஆண்டுகள், 8 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனையை ஆயுள் தண்டனை அடிப்படையிலே கழித்திருப்பார்களேயானால், அவர்களை விடுதலை செய்வதற்காக, ஆந்திராவிலும், கேரளாவிலும் வழிவகை கண்டிருக்கிறார்கள். ஏதோ ஒரு உணர்ச்சி வேகத்தில், ஆத்திரம் அறிவுக் கண்ணை மறைத்துவிடும் என்பார்களே, அப்படி ஆத்திரப்பட்ட நேரத்தில், அவர்கள் செய்துவிட்ட குற்றத்திற்காக ஆயுள் தண்டனை அனுபவித்து வருபவர்களை விடுதலை செய்ய வேண்டுமென்று இந்த அவையிலே வலியுறுத்தியிருக்கிறோம். சென்ற ஆண்டு மாண்புமிகு முதலமைச்சரும் அந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொண்டு, அண்ணா பிறந்த நாளில் ஆயுள் தண்டனைக் கைதிகள், 10 ஆண்டுகள் சிறையில் கழித்திருந்தால் அவர்கள் விடுதலை செய்யப்படுவார்கள் என்று அறிவித்தார்கள். அப்படி விடுதலையும் செய்திருக்கிறார்கள். ஆனால், அதிலேயும் ஒரு குறை சிறை நிர்வாகத்திலே ஏற்பட்டிருக்கிறது. சின்னச் சின்ன தவறுகளுக்காக, ஏதோ சிறை அதிகாரி வந்த போது, இந்தக் குற்றவாளி எழுந்து நின்று மரியாதை செலுத்தவில்லை என்பதற்காக, ஏதோ தவறுதலாக அவர்களைக் கண்டும் காணாமல் இருந்த நேரத்திலே, தவறுதலாக பீடியைக் கையிலே வைத்திருந்தார்கள் என்பதற்காக, சாதாரண சின்னச் சின்னக் குற்றங்களுக்காக, 10 ஆண்டுகளுக்கு மேலே சிறையிலே இருப்பவர்கள்கூட, இன்றைக்கும் அவை குறும்புத்தனம் என்று கருதி, அதற்கும் தண்டனை வேண்டுமென்று கருதி, சிறையிலே அவதிப்பட்டு வருகிறார்கள், வேதனையுற்று வருகிறார்கள். மாண்புமிகு மூத்த உறுப்பினர், தேசிய லீக் தலைவர் எடுத்துச் சொன்னார்கள், எப்படி கைதிகளுடைய சமூக வாழ்வு கெட்டுவிடாமல் சிறைக்குள் இருக்கிறபோது நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று. அப்படிப்பட்ட மனிதநேயம் மேலோங்கி வருகின்ற இந்த நேரத்தில், ஆயுள் தண்டனை பெற்று 7 ஆண்டு காலம் சிறைக்குள்ளே இருந்திருக்கிற அனைத்துக் கைதிகளையும் ஒரு சிறப்புப் பார்வை, சிறப்பு இனமாகக் கருதி, பரிசீலித்து, இந்த 20 ஆம் நூற்றாண்டின் இறுதியில், இந்த ஆண்டில் அனைவரையும் விடுதலை செய்ய வேண்டுமென்று நான் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.



அடுத்து, இந்தச் சிறைச் சாலையிலே, உற்பத்தி செய்கிற தொழிற் கூடங்கள். இந்தத் தொழிற் கூடங்கள் அமைக்கப்பட்ட காலத்திலே வைக்கப்பட்ட இயந்திரங்கள்தான் இருக்கின்றன. அவ்வளவும் பழுதடைந்த பழைய காலத்து இயந்திரங்கள். அந்தப் பழைய காலத்து, காயலாங்கடைக்குப் போக வேண்டிய நிலையிலே இருக்கின்ற அந்த இயந்திரங்களை வைத்தே, சிறைக்குள்ளே கைதிகள் 4 கோடி ரூபாய் அளவிற்கு, உற்பத்தி மதிப்புக்கு, ஆண்டுதோறும் பொருள் உற்பத்தி செய்து வருகிறார்கள். ஆனால், உற்பத்தியில் ஈடுபடுகிற அந்தக் கைதிகளுக்கு, தொழில் செய்கிற கைதிகளுக்கு வழங்கப்படுகிற ஊதியம் இருக்கிறதே, அது எந்த மனித இருதயத்தாலும் ஏற்றுக்கொள்ள முடியாத அளவிற்கு மிகக் குறைந்த அளவிலே இருக்கிறது. இது ஆங்கிலேயர் காலத்திலே பிரசுரிக்கப்பட்ட சட்டம் என்ற காரணத்தினாலே, அது இன்னும் அதனுடைய பார்வையை விரித்துக் கொள்ளாத அளவிற்கு இருந்துகொண்டிருக்கிறது. நான் ஒன்றை வலியுறுத்த விரும்புகிறேன். ஒரு குற்றத்திற்கு ஒரு தண்டனை என்பதுதான் நீதியிலே வழங்கப்படுகிற முறையாக இருக்கிறது. ஆனால், வெளியே செய்த குற்றத்திற்குத் தண்டனை அனுபவிக்கிற குற்றவாளியாக, சிறைச் சாலைக்குள்ளே சென்றால், செய்கிற தொழிலின் அடிப்படையிலே ஊதியம் பெறுவதற்கு வழியில்லாத இன்னொரு தண்டனை கொடுப்பது, எந்தவகையிலும் மனித சமுதாயத்தில் ஏற்றுக்கொள்ளக்கூடிய நடைமுறையல்ல. சிறை சீர்திருத்தக் கமிட்டிகள்கூட, நரசிம்மன் அவர்களுடைய காலத்திலேயிருந்து போடப்பட்ட கமிட்டிகள்கூட, இந்த ஊதியம் பற்றிக் கூறியிருக்கின்றன. குறைந்தபட்ச ஊதியத்தை வழங்கி, அவர்களுக்கு, உணவுக்கு வேண்டுமானாலும் ஒரு தொகையைப் பிடித்துகொள்ளலாம் என்ற கருத்தை நீங்கள் பரிசீலிக்க வேண்டும்.

அடுத்து, இன்னொன்று. இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே தெரிவித்திருக்கிறார்கள். புனர்வாழ்வுக்காக 10 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்திருப்பதாகக் கூறியிருக்கிறார்கள். இந்தப் புனர்வாழ்வுத் திட்டத்தை அமல்படுத்துவதற்காக, மாவட்ட ஆட்சித் தலைவர், சிறைத்துறைத் தலைவர் ஆகியோர் இணையாக கூட்டுப் பொறுப்பாக்கப்பட்டிருக்கிறார்கள். (மணியடிக்கப்பெற்றது) ஒரே ஒரு நிமிடத்தில் பேசி முடித்துவிடுகிறேன். கூட்டுப் பொறுப்பாக ஆக்கப்பட்டிருப்பதால், மாவட்ட ஆட்சித் தலைவராக இருக்கின்ற காரணத்தினால், அவருக்குப் பல்வேறு பொறுப்புகள், நடைமுறை வேலைகள் இருக்கின்ற காரணத்தினாலே, இதிலே பெருமளவிற்குக்

கவனம் செலுத்த முடிவதில்லை. எனவே, மாவட்டத் ஆட்சித் தலைவரை நீக்கி, சிறைத் துறைத் தலைவருக்கே முழுமையான பொறுப்பைக் கொடுத்து செலவழிக்காமல் திரும்புகிற இந்த நிதியைச் செலவழித்து, புனர்வாழ்வுக்கு வழி வகுக்க வேண்டுமென்று வலியுறுத்துகிறேன்.

முற்பகல் 11-50

அடுத்து, நன்னடத்தைப் பிரிவு. இந்த நன்னடத்தைப் பிரிவு தனியாக அமைக்கப்பட வேண்டுமென்று 50 ஆண்டு காலமாகக் கோரி வருகிறார்கள். யார் தண்டனையைக் கண்காணிக்கிறார்களோ அவர்களே நன்னடத்தைக்கும் பொறுப்பாக இருப்பார்கள் என்று நாம் எதிர்பார்ப்பது பொருத்தமாக இல்லை. (மணியடிக்கப்பெற்றது) ஒரே ஒரு கருத்தைச் சொல்லி முடித்துவிடுகிறேன். நன்னடத்தைப் பிரிவைத் தனியாகப் பிரித்து,—வீரப்பன்களும், ஆட்டோ சங்கர்களும் உருவாகாமல் தடுப்பதற்கான வழிமுறைகளை ஆரம்பத்திலே கண்டு அறியக்கூடிய வகையிலே, நன்னடத்தைப் பிரிவை தனியாகப் பிரித்து— அமைத்து அதற்கான வழிமுறைகளைக் கண்டறிய வேண்டுமென்று கேட்டு வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத் (குறுக்கீடுகள்) திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பெரியசாமி பேசும்போது, ஒரு குற்றவாளியை ரிமாண்ட் செய்கிறபோது, 15 நாள் என்று இருப்பதை 30 நாளாக்குவதற்காக இப்போது நீதித் துறை தீர்மானித்துக் கொண்டு இருப்பதாக ஒரு கருத்தை இங்கே வெளியிட்டார்கள். Criminal Procedure Code, Section 167-ன்படி, 15 நாட்களுக்கு மேல் யாரையும் ரிமாண்ட் செய்ய முடியாது. ஆகவே, சட்டத்தைத் திருத்தினாலொழிய, நீதித் துறையில் தலையிட முடியாது என்பதை நான் அவைக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீதி நிர்வாகத்திலே அப்படி ஒரு சிந்தனை ஓட்டம் இருப்பதாகத்தான் குறிப்பிட்டேன். அந்தச் சிந்தனை ஓட்டத்தின் அடிப்படையில் அடுத்து ஒரு சட்டத் திருத்தம் வந்துவிடக்கூடாது என்ற அடிப்படையிலேதான் அதை முன்னெச்சரிக்கையாகத் தெரிவித்தேன்.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்.

**திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்னையிலே 4 நடமாடும் நீதிமன்றங்களை அனுமதித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு முதலிலே தமிழ் மாநிலக் காங்கிரஸ் சார்பிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியில், அம்பத்தூர் பகுதியிலே இருக்கின்ற நீதிமன்றம், நகராட்சியினுடைய இடத்தில் இருக்கின்றது. உடனடியாக அந்த நீதிமன்றத்தை அங்கிருந்து காலி செய்ய வேண்டுமென்று சொல்லுகிறார்கள். அதற்குப் புதிதாகப் கட்டடம் கட்டித் தர வேண்டுமென்று கோரிக்கையை ஏற்கெனவே கொடுத்து இருக்கிறோம். இதுவரை அந்தக் கோரிக்கை நிறைவேற்றப்படவில்லை. அங்கே இருக்கின்ற கோர்ட்டைக் கூட சப் கோர்ட் அந்தஸ்துக்கு உயர்த்த வேண்டும். காரணம், அது தொழிற்பேட்டைகள் நிறைந்த பகுதியாக இருக்கின்றது. அங்கு குற்றங்கள் நிறைய நடைபெறுகின்றன. வழக்குகளுக்காக அவர்கள் திருவள்ளூர் வரை சென்று வருவது கடினமாக இருக்கின்ற காரணத்தால், அங்கு ஒரு சப் கோர்ட் ஏற்படுத்த வேண்டும். என்னுடைய மாவட்டத்தில் சப் கோர்ட் ஏற்படுத்துவதாகச் சொல்லி இருக்கிறார்கள். பள்ளிப்பட்டு பகுதியிலே 1997-ல் சப் கோர்ட் அறிவித்தார்கள்; அந்த சப் கோர்ட்கூட இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை. முதுகுளத்தூர் பகுதியில் ஒரு கோர்ட் நடைபெற்று வந்தது. அந்த கோர்ட் ஒரு சிறுபான்மை சமுதாயத்தைச் சேர்ந்தவருடைய இல்லத்திலே இருந்தது. சமீபத்தில் நான் ஒரு கல்யாணத்திற்கு அங்கு சென்று இருந்தேன். அந்தக் கல்யாணத்திற்கு வந்தவர்கள் சொன்னார்கள்; அங்கே தாழ்த்தப்பட்ட மக்கள், இப்போது இருக்கின்ற கோர்ட் வளாகத்திற்குள் செல்ல முடியவில்லை. அது பெரும்பான்மை சமுதாய மக்கள் பலமாக இருக்கின்ற பகுதி என்பதனால், அந்தக் கோர்ட்டை மீண்டும் பழைய இடத்திற்கே மாற்ற வேண்டும் என்று அங்கு இருக்கின்றவர்கள் என்னிடத்திலே ஒரு கோரிக்கை வைத்தார்கள்.

நீதி நிர்வாகத்தின் மீது பேசும்போது, உண்மையிலேயே சமீப காலத்தில் பார்க்கும்போது, தமிழகத்திலே உயர் நீதிமன்றத்தினுடைய ஒரு கிளை மதுரையிலே ஆரம்பிக்கப்பட வேண்டுமென்று நீண்ட நெடுநாளைய கோரிக்கை கனவாகவே இருந்துகொண்டு வருகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மக்கள் மீது அக்கறை கொண்டவர்கள்,

அவர்களுடைய ஆட்சிக் காலத்திலேயே மதுரையிலே உயர் நீதிமன்றத்தின் கிளையை உடனடியாக நிறுவ வேண்டும்; அதை நிறுவி அவர்களுடைய ஆட்சிக் காலத்திலேயே அவர்களுடைய கையாலே திறக்க வேண்டுமென்பது என்னுடைய கோரிக்கை. எவ்வாறு உச்ச நீதிமன்றத்திற்கு நாம் டில்லி வரை சென்று வருகிறோமோ டில்லி வரை சென்று வரும்போது, அதுவே ஒரு தண்டனையாக அமைந்துவிடுகின்றது; உச்ச நீதிமன்றத்திற்குச் செல்லும்போது எல்லாம் வசதிபடைத்தவர்கள்கூட டில்லி மாநகரம் வரை சென்று வரும்போது, ஏழையாகி வந்துவிடுகின்றார்கள். கடந்த காலங்களில் எவ்வாறு சென்னை நீதிமன்றம்—தென்மாநிலங்களுக்கு முதன்மையான நீதிமன்றமாக இருந்ததோ— ஆந்திரா, கேரளா, கர்நாடகா போன்ற மாநிலங்களுக்கு முதன்மை நீதிமன்றமாக இருந்ததோ, அதே நிலை மீண்டும் இங்கே ஆரம்பிக்கப்பட வேண்டும். இந்த மாமன்றத்தின் வாயிலாக ஒரு தீர்மானத்தை இயற்றி, மத்திய அரசை வலியுறுத்தி உச்ச நீதிமன்றத்தினுடைய கிளையைத் தமிழகத்திலே தொடங்குவதற்கு நீங்கள் ஆவன செய்ய வேண்டும். POTA சட்டத்தை ஏறக்குறைய இரத்துச் செய்வதாக அறிவித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு எங்களுடைய சிறுபான்மைச் சமுதாயத்தின் சார்பிலே நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். காரணம், சமீப காலமாக குற்றம் ஏதும் செய்யாத சிறுவர்களை எல்லாம் குற்றவாளிகளாகக் கருதிக்கொண்டு காவல் துறையினர் அவர்களை உள்ளே அழைத்துச் சென்று அடிப்பது, உதைப்பது, நையப் புடைப்பது போன்ற வேலைகளில் ஈடுபடுகின்றார்கள். அதிலே குறிப்பாகச் சொல்லப்போனால், திருநெல்வேலி, மேலப்பாளையம் போன்ற இடங்களிலே பீடி சுற்றும் தொழில் செய்கின்றவர்கள், பீடி சுற்றிச் சுற்றி, வளைந்து இருக்கின்ற நிலையிலே இருக்கின்றவர்கள்கூட பெரிய பெரிய தீவிரவாதிகள் என்று சொல்கின்ற ஒரு நிலையைப் பார்க்கின்றோம்.

*முற்பகல் 11-55*

ஏற்கெனவே, திருநெல்வேலி, மேலப்பாளையத்தில் ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் காணாமல் போயிருக்கிறார்கள். அவர்களெல்லாம் எங்கே சென்றுவிட்டார்கள்? இந்த நாட்டை விட்டே ஓடிவிட்டார்களா என்பதை அரசு அறிவிக்க வேண்டும். சமீபத்தில் திருநெல்வேலி, மேலப்பாளையத்தில் சோதனை என்ற பெயராலே காவலர்கள் வீட்டிற்குள்ளே புகுந்து, ஏழையெளிய மக்களையெல்லாம், பெண்களையெல்லாம் துன்புறுத்திய காட்சி பத்திரிகைகளில் வந்ததைப்



பார்க்கும்போது, மக்கள் நலனில் அக்கறை கொண்டுள்ள ஓர் அரசின் மீது, காவல் துறை அதிகாரிகள் திட்டமிட்டு, சதி செய்து, சிறுபான்மையின மக்களோடு உள்ள உறவினைப் பிரிப்பதற்குச் சதி செய்கிறார்களோ என்று நாங்கள் அஞ்சுகிறோம்.

அதைப்போல, திருநெல்வேலியிலே அன்சர் என்ற ஒருவர் படுகொலை செய்யப்பட்டு, அவருடைய தலையைக் கொய்து, காளி கோயிலிலே வைத்திருக்கிறார்கள். அது உண்மையிலேயே வேதனைக்குரிய விஷயம். கண்டிக்கப்பட வேண்டிய ஒரு விஷயம். நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே பணிவோடு கேட்டுக் கொள்வது, அந்த வீட்டிலே ஒருவருக்கு வேலைவாய்ப்பு கொடுத்து, அந்தக் குடும்பத்திற்கு அரசு மானியமும் வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

உயர் நீதிமன்ற நீதிபதிகளை நியமிக்கும்போது, சாதாரண முன்சீப் கோர்ட் நீதிபதிகளை பிராசிகியூட்டர்களை நியமிக்கும்போது, சிறுபான்மையின மக்களுக்கு, அங்கே முன்னுரிமை அளிக்க வேண்டும். பக்ரீத் பெருநாள் நடந்தது. அந்தப் பண்டிகைக்கு முன்ப பாரதப் பிரதமராக இருக்கின்ற—இன்றைக்கு அரசியல் சூழலிலே சிக்கித் தவிக்கின்ற, தன்னுடைய எதிர்காலம் எப்படி இருக்குமோ என்று ஏங்கித் தவிக்கின்ற பாரதப் பிரதமர்—வாஜ்பாய் அவர்கள் திருச்சிக்கு வருகின்றார் என்ற காரணத்தால், காவல் துறையினர் வீடுவீடாகச் சோதனையிட்ட, அந்த நிகழ்ச்சிகளையெல்லாம், உண்மையிலேயே சிறுபான்மையின மக்கள் மத்தியிலே, மனதிலே வேல் பாய்ச்சிய ஒரு நிலையாக இருந்தது. அவர் வருகிறார் என்பதற்காக செய்த கொடுமைகள் கொஞ்ச நஞ்சமல்ல. மக்கள் அதிக அளவிலே பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இதுபோன்ற நிலைகளையெல்லாம் தவிர்க்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

சிறைச்சாலைகளிலே இருக்கிறவர்களெல்லாம், மாண்புமிகு உறுப்பினர் சொக்கர் அவர்கள் பேசும்போது விசாரணைக் கைதிகள் என்று சொன்னார்கள். ருசு செய்யப்படாத குற்றங்களை யார் செய்தாலும், ருசு செய்யப்படுகிற வரையில் அவர்கள் விசாரணைக் கைதிகள்தான். அவர்களுக்குரிய மரியாதை வழங்கப்படவேண்டும். அவர்களை அடித்து, நொறுக்கி, நையப்புடைத்து, பக்ரீத் பெருநாளன்று தொழக்கூட முடியாத ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தி, அவர்களை நையப்புடைத்து, முட்டிகளிலெல்லாம் அடித்து நொறுக்கியதால்,

அவர்கள் அன்றைக்குத் தொழ முடியவில்லை. வெறும் ஜட்டியோடு விட்டுவிட்டார்கள். ஜட்டியோடு இருந்தால், இஸ்லாமிய மரபுப்படி அவர்கள் தொழ முடியாது. மேலும், கேவலமான வார்த்தைகளையெல்லாம் பேசியிருக்கிறார்கள்.

மாண்புமிகு முதலமைச்சர், தேங்காய்ப்பட்டணம் சம்பவம் தொடர்பாக ஒரு நீதிபதியை நியமித்து, உண்மையான நிலையை மக்களுக்கு அறிவிப்பதற்காக, எவ்வாறு ஒரு நீதிபதியை நியமித்தார்களோ, நீதி விசாரணைக்கு உத்தரவிட்டார்களோ, அதேபோன்று, சமீப காலங்களிலே, தமிழகத்திலே, சென்னையிலே சிறைக் கொடுமைகளை விசாரிக்க ஒரு தனி நீதிபதியை நியமித்து, விசாரணை நடத்தி, உண்மை நிலையை மக்களுக்கு விளக்க வேண்டும்.

நாடாளுமன்றத்திலே குழு அமைக்கப்பட்டு, எந்தெந்த மாநிலத்திலே இதுபோன்ற சம்பவங்கள் நடைபெற்றாலும், நாடாளுமன்றக் குழுவினை அங்கே அனுப்பி விசாரணை மேற்கொள்வதைப் போல, இங்கே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்...

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், சிறையிலே அடைக்கப்பட்டவர்களை சிறை அதிகாரிகள் கொடுமைப் படுத்துகிறார்கள்; அவர்களுடைய மத உணர்வுகளைப் புண்படுத்துகிற வகையிலே நடத்தினார்கள் என்றெல்லாம் பொத்தாம்பொதுவாகச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு மிகப் பணிவன்போடு சொல்லிக் கொள்கிறேன். சிறைச்சாலையிலே யாராகயிருந்தாலும், எதற்காகவும், எந்தக் கொடுமையும் இழைக்கப்படவில்லை. சிறையிலே சோதனை நடத்தப்பட்டது என்பது உண்மை. அந்தச் சோதனையின்போது, அவர்களிடத்திலேயிருந்து ஆபத்தான ஆயுதங்கள் எதுவும் பறிக்கப்படவில்லை; கிடைக்கவும் இல்லை. அவர்கள் வைத்திருக்கவும் இல்லை. எனவே, இந்தச் சூழ்நிலையில் அவர்களைக் கொடுமைப்படுத்த வேண்டிய அவசியமும் எங்களுக்கு இல்லை. எனவே, யாரோ தவறாகச் சொல்லி பத்திரிகைகளிலே வந்த செய்தியை மையமாக வைத்து, மாண்புமிகு உறுப்பினர் பேச வேண்டாமென்று அன்போடு வேண்டிக்கொள்கிறேன்.

**திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இந்த மன்றத்திலே 3 முறை, தமிழகத்திலேயுள்ள சிறைச்சாலைகளிலிருந்து



எதுவும் கைப்பற்றப்படவில்லை என்று சொன்னார்கள். அதற்காக நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நான் கேட்பதெல்லாம், ஜனநாயகத்தின் குரல்வளையை நெரித்துவிடக்கூடாது என்பதுதான். ஆயிரம் குற்றவாளிகள் தப்பித்தாலும், ஒரு நிரபராதி தண்டிக்கப்பட்டு விடக்கூடாது என்பதற்காகத்தான்.

ஒரு பெண்மணி எனக்குக் கடிதம் எழுதியிருக்கின்றார். அதை நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு அனுப்பியிருக்கின்றேன். 'நான் என்னுடைய மகனைப் பார்த்தேயாக வேண்டும் என்று போராடிய பின்பு, இரண்டு நாள் போராடிய பின்பு, சிறைச்சாலை அதிகாரிகள் வண்டியிலே என் மகனை வைத்துத் தள்ளிக்கொண்டு வந்து, என்னிடத்திலே காண்பித்தார்கள். அவன் கண் கலங்கினான், நானும் கண் கலங்கினேன். வேறு ஒன்றும் என்னால் பேச முடியவில்லை, என்று கண்ணீர் மல்க எனக்குக் கடிதம் எழுதியிருக்கின்றார்கள். அந்தக் கடிதத்தினை நான் மாண்புமிகு முதலமைச்சருக்கு அனுப்பியிருக்கிறேன். உண்மை நிலையைக் கண்டறிய சட்டமன்ற உறுப்பினர்கள் அடங்கிய ஒரு குழுவை அனுப்ப வேண்டும். சட்டமன்ற அனைத்துக் கட்சி உறுப்பினர்கள் அடங்கிய ஒரு குழுவை அனுப்ப வேண்டும். பத்திரிகையாளர்கள் அடங்கிய குழுவை அனுப்பி, உண்மை நிலையை அறிந்து அதில் என்ன தவறு இருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிச்சயமாகக் கூர்ந்து கவனித்து ஆவன செய்வார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது.

நண்பகல் 12-00

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ம. அப்துல் லத்தீப்:

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஆரூண் குறிப்பிடுகிற அந்தக் கடிதம், முன்வரிசையில் இருக்கக்கூடிய அனைவருக்கும் கிடைத்திருக்கிறது. நாங்களெல்லாம் கையெழுத்துப் போட்டு, மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே கொடுத்திருக்கிறோம். எங்களுடைய வேண்டுகோள் என்னவென்றால், இதுகுறித்து பாரபட்சமின்றி விசாரணை செய்து, அந்தப் பிள்ளையை, அந்த இளைஞனை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும். அதற்குப் பிறகு வேண்டுமானால், நீங்கள் விசாரணை செய்து கொள்ளுங்கள். மிகப் பெரிய கொடுமை நடந்து இருப்பதாக எல்லோரும் நம்புகிறோம். அதற்கான முறையான நடவடிக்கையை மாண்புமிகு அமைச்சர் மேற்கொள்ளவேண்டுமென்பதுதான் எங்களுடைய வேண்டுகோள்.

**திரு. ஜே.எம். ஆருண் ரஷீத்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீதித் துறையினுடைய தனித்தன்மை காக்கப்பட வேண்டும். நீதித் துறையில் அரசியல் தலையீடுகள் இருக்கக்கூடாது என்பதை நாங்கள் முழுமையாக வரவேற்கின்றோம். சமீபகாலத்திலேகூட, கடந்த கால முதலமைச்சர் அவர்களைப் பற்றியெல்லாம் பேசும்பொழுது, நீதிமன்றங்கள் காலதாமதமாக விசாரணை நடத்துகிறது என்று அத்தனை மக்களும், தமிழகத்தில் ஒட்டுமொத்த மக்களும் வருத்தம் தெரிவித்தார்கள். (மணியடிக்கப்பெற்றது) ஒரே ஒரு நிமிடத்தில் பேசி முடித்துவிடுகிறேன். ஆகவே, அதுபோன்ற நிலை ஏற்பட்டுவிடக்கூடாது. நாங்கள் சொல்வதெல்லாம் உண்மை நிலையைக் கண்டறிய, வேண்டுமென்பதுதான்.

சிறுபான்மை மக்களுக்குப் பாதுகாவலராக இருக்கின்ற அரசாக, இந்த அரசு இருக்கும்போதே இந்த நிலை நடந்தால் நாங்கள் எங்கே சென்று முறையிடுவது? மக்கள் மன்றத்திலிருந்து எங்களுக்குத் தகவல் வருகிறது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறோம். அதிகாரிகள் திட்டமிட்டுச் சதி செய்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும், சிறுபான்மை சமுதாய மக்களுக்கும் நெருங்கிய உறவு இருக்கிறது. நான் தமிழ் மாநில காங்கிரஸில் இருந்தாலும்கூட, என் தாய்-தந்தையர் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வாக்களிக்கிறார்கள். என் அம்மாவிடம் பேசுகிறபோதுகூட, 'நீ போடா, நீ எங்கே இருந்தால் எனக்கு என்ன, நான் தி.மு.க.வுக்குத்தான் ஓட்டு போடுவேன்' என்று சொல்வார்கள். அந்தமாதிரி இருக்கிற உறவுகளைப் பிரிப்பதற்குச் சதி செய்கிறார்கள். நீங்கள் ஏன் விசாரணைக் கமிஷன் வைக்கக் கூடாது என்பதை இந்த நல்ல நேரத்திலே கேட்டுக்கொண்டு, சிறுபான்மையினர் நலன் காக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஜனநாயகத்தின் குரல்வளை நெரிக்கப்படக்கூடாது, சிறைத் துறை அதிகாரிகள் யார் தவறு செய்தாலும் விசாரணைக் கமிஷன் வைத்து, அவர்கள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். குறிப்பாக, சென்னையில் இருக்கிற ஒரு கண்காணிப்பாளர் ** என்று சொல்லிச் சொல்லி அடித்திருக்கிறார். அவர்மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றிகூறி விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அந்த வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. அடுத்து, திரு. வெ.அ. ஆண்டமுத்து.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



**திரு. வெ.அ. ஆண்டமுத்து:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீதி நிருவாகம், சிறைத் துறை ஆகிய மானியக் கோரிக்கைகளின்மீது இந்த மாமன்றத்தில் பேசுவதற்கு வாய்ப்புக் கொடுத்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், இளைய சமுதாயத்தின் எழுச்சிமிகு தலைவர், வணக்கத்திற்குரிய சென்னை மாநகர மேயர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களுக்கும், என் தொகுதி மக்களுக்கும் முதலில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஜனநாயக நாட்டின் முக்கியமான அம்சங்களான நீதி நிருவாகம், சட்டமன்றம் ஆகியவை சுதந்திரமாக இயங்கவேண்டும். அப்போதுதான் உண்மையான ஜனநாயகத்தை நாம் எதிர்பார்க்க முடியும். நீதித் துறை என்பது ஜனநாயகத்தின் முதுகெலும்பைப் போன்றது. சட்டத்தின் முன் அனைவரும் சமம். நாட்டில் ஜனநாயகம் சிறப்புற நடைபெற ஒரு பலமான எதிர்க்கட்சி அவசியம். இல்லாவிட்டால், ஆளும் கட்சியின் நடவடிக்கைகள் சர்வாதிகாரப் போக்காக மாறுவதற்கு இடமுண்டு. நமது தோழமைக் கட்சியான தமிழ் மாநிலக் காங்கிரஸ், பொறுப்புள்ள எதிர்க்கட்சியாகச் செயல்பட்டு, அவ்வப்போது சிறிய குற்றம் இருந்தால் அதை எடுத்துக்காட்டிச் சிறப்பான முறையில் செயல்பட்டு வருகிறது. நமது கழக அரசும் எதிர் கட்சிக்கு முக்கியத்துவம் கொடுத்து வருகிறது. ஆனால், அதைச் சரியாகப் பயன்படுத்தாமல் அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர் தாமரைக்கனி அவர்கள், மாண்புமிகு விவசாயத் துறை அமைச்சர் வீரபாண்டியார் அவர்களைத் தாக்கியது, ஜனநாயகத்தின் விரோதச் செயல். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், சட்டமன்றத்தின் இறையாண்மையையும், கண்ணியத்தையும் சிறந்த முறையிலே காப்பாற்றி வருவது பாராட்டக்கூடிய ஒரு விஷயமாகும்.

இன்று நான் பத்திரிகையிலே வந்த ஒரு தீர்ப்பைப் பார்த்தேன். முன்னாள் பாகிஸ்தான் பிரதமர் பெனாசீர் பூட்டோ அவர்களுக்கு ஐந்தாண்டு சிறை தண்டனையும், 36 கோடி ரூபாய் பெனால்டியும், மேலும் அரசியலில் இனிமேல் போட்டி போட முடியாத அளவிற்கும் தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. ஒரு சின்னஞ்சிறிய நாடான பாகிஸ்தானிலே அந்த நீதித் துறைக்கு அவ்வளவு மரியாதை கொடுத்திருக்கிறார்கள். ஆனால் நமது நாட்டிலே இன்னும் வழக்குகள் தேக்க நிலையிலேயே இருக்கின்றன. இது வருத்தத்தைக் தரக்கூடிய ஒரு செயலாக இருக்கிறது.

உயர் நீதிமன்ற நீதிபதிகள் பாதுகாப்புக்கென்று, தனி போலீஸ் பிரிவை ஏற்படுத்தவேண்டும். சமீபகாலங்களில் அடிக்கடி நீதிமன்றங்களில் ரவுடிகள், சமூக விரோதிகள் புகுந்து நீதிபதிகளையும்

வழக்கறிஞர்களையும் அச்சுறுத்தி வருகிறார்கள். ஆகையினால், அவர்களுக்குத் தகுந்த பாதுகாப்பு கொடுக்க வேண்டும்.

*பிற்பகல் 12-05*

தமிழகத்திலே உள்ள அனைத்து மாவட்ட நீதிமன்றங்களிலும் கணினியை அறிமுகப்படுத்தியிருப்பது, பாராட்டுக்குரிய விஷயம் ஆகும். மாவட்ட அளவிலும், உயர் நீதிமன்றத்திலும் தேங்கிக் கிடக்கும் வழக்குகளை விரைவாக முடிப்பதற்குக் காலியாக உள்ள இடங்களில் நீதிபதிகளை உடனடியாக நியமனம் செய்ய வேண்டும். சென்னை உயர் நீதிமன்றத்தின் கிளை, மதுரையிலே விரைவாகத் தொடங்கிச் செயலபட்டால், தெற்கு மாவட்டங்களில் உள்ள மக்களுக்கு விரைவாக நீதி கிடைப்பதற்கு ஏதுவாக இருக்கும். உயர் நீதிமன்றக் கட்டடத்திற்கு முன்பாக sub-way ஒன்று அமைக்க வேண்டும். இதனால் நெரிசல் மிக்க பகுதியான பாரிமுனையில் சாலையைக் கடந்து செல்வதற்கு வசதியாக இருக்கும். மேலும், கிராமப்புறங்களிலே இலவச சட்ட முகாம்களை அதிகமாக நடத்தி, அங்கிருக்கும் ஏழை எளிய மக்களுக்கு இலவசமாகச் சட்ட உதவி கிடைப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். தற்போது நிறைய இடங்களிலே District Munsif Court-ம் Judicial Magistrate Court-ம் ஒன்றாகவே, ஒரே நீதிபதியைக் கொண்டு நடந்து வருகிறது. ஒரே நீதிபதியைக் கொண்டுதான் இங்கே நடந்து வருகிறது. குறிப்பாக, குன்னூர், மேட்டுப்பாளையம் போன்ற இடங்களிலே தனித்தனியாக நீதிபதிகளை நியமனம் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதன் மூலம், வழக்குகளை விரைவாக முடிப்பதற்கும், மக்களுக்கு நீதித் துறைமீது நம்பிக்கை ஏற்படுவதற்கும் வாய்ப்பாக இருக்கும். மேலும், இந்திய அரசமைப்புச் சட்டத்தில் (Indian Constitutional Law) மேல்நிலைப் பட்டப்படிப்பு, சென்னையிலே University-ல் இருப்பதைப் போல, கோவை, மதுரை போன்ற இடங்களிலும் ஆரம்பித்தால் நலமாக இருக்கும். சட்டக் கல்லூரியிலே Diploma Course தனித்தனியாக ஆரம்பித்தால் நலமாக இருக்கும். Diploma in Labour Law, Diploma in Constitution, Diploma in Property போன்றவைகளை ஆரம்பித்தால், சாதாரண மக்களும் அரசமைப்புச் சட்டத்தைப் பற்றி, தெரிந்துகொள்வதற்கு ஏதுவாக இருக்கும். மேலும், சட்டத் துறையிலே பி.எச்.டி டாக்டர் பட்டம் படிப்பதற்கு வேண்டிய வசதி வாய்ப்புகளை அதிகரிக்க வேண்டும். அப்போதுதான் சட்ட நுணுக்கங்களைத் தெரிந்துக்கொள்ள விரும்பும் மாணவர்களுக்குச் சிறப்பாக சட்டங்களைக் கற்றுக்கொள்வதற்கு ஏதுவாக இருக்கும்.

**(மாண்புமிகு மாற்றுத் தலைவர் (டாக்டர் இ.எஸ். எஸ். இராமன்) தலைமை)**



சிறைச்சாலையிலே இப்போது சில தீவிரவாதிகள் மற்றும் பயங்கரவாதிகள் வன்முறையிலே ஈடுபட்டு, அடிக்கடிக் கலகங்களை ஏற்படுத்தி, சிறைக் காவலர்களுக்கு ஆபத்துக்களை ஏற்படுத்துகிறார்கள். அதைத் தவிர்ப்பதற்கு நன்றாகப் பயிற்சி பெற்ற சிறைக் காவலர்களை அதிக அளவிலே நியமனம் செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். மேலும், சிறையிலே அவர்கள் திருந்தி மறுவாழ்வு வாழ்வதற்கு சிறந்த பயிற்சிகளைக் கொடுக்க வேண்டும். சிறையை விட்டு வெளியே வந்தவுடன் அவர்களுக்குக் குறைந்த வட்டியில் வங்கியின் மூலம் கடன் கிடைக்க உதவி செய்து, தொழில் தொடங்க ஆவன செய்ய வேண்டும். குறிப்பாக கள்ளச்சாராயத்தை மட்டும் ஒழித்தால் பாதி கிரிமினல் குற்றங்கள் குறைவதற்கு ஏதுவாக இருக்கும். ஆகவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் அதில் தீவிர முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

என்னுடைய தொகுதிபற்றி சில கோரிக்கைகளை முன் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். நல்லூர் என்ற இடத்திலே இயங்கி வரும் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக மாற்ற வேண்டும். அதேபோல, காவிரிபாளையத்திலே இயங்கி வரும் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மாற்ற வேண்டும். கடத்தூர். ஓரப்பாளயம் காவல் நிலையங்களிலுள்ள காவலர்களுக்குக் குடியிருப்பு வசதிகள் செய்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன். இரு காவல் நிலையங்களும் சிறு கிராமங்களிலே அமைந்திருக்கின்றன. ஆகையால், ஒரு புறநகர்க் காவல் நிலையம் ஒன்றை அரசூரில் ஏற்படுத்த வேண்டும். மேலும், பவானி ஆற்றின் குறுக்கே ஒரு பாலம், அரசூர் அல்லது கொடிவேறு என்ற இடத்திலே கட்டிக் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். மேலும் L.F.P. Canal-அங்கு நிறைய இடங்களிலே பாசனப் பகுதி - இப்போது, அது ஒரு Industrial area - வாக மாற்றப்பட்டு, அங்கு பஞ்சாலைகள் நிறைய இருக்கின்றன. அந்த இடங்களில் எல்லாம், தொழிற்சாலையாக மாற்றப்பட்ட இடங்களுக்குப் பதிலாக, தண்ணீர் ஆயக்கட்டுக்கு உட்படாத பகுதிகளுக்கு மீண்டும் பாசன வசதி ஏற்படுத்திக் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். புளியம்பட்டியில் ஏராளமான பஞ்சாலைகள் இருப்பதால் அங்கு (மணியடிக்கப்பெற்றது) இரண்டு வருடத்திற்கு ஒரு முறை பேசுகிறேன். போன வருடம்கூட வாய்ப்பு இல்லை. ஒரு நிமிடம் கொடுங்கள்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்):** 5 நிமிடங்கள்தான் பேரவைத் தலைவர் கொடுக்கச் சொல்லி இருக்கிறார். (குறுக்கீடு) சரி, ஒரு நிமிடத்தில் உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. வெ.அ. ஆண்டமுத்து:** புளியம்பட்டியில் பஞ்சாலைகள் நிறைய இருப்பதால் அங்கு தீயணைப்பு நிலையம் அவசியமாகத் தேவைப்படுகிறது. மேலும் அங்கே ஆஸ்பத்திரி கிடையாது. 10 பேர் வருகிற அளவுக்குத்தான் அங்கு ஆஸ்பத்திரி இருக்கிறது. அதைத் தரம் உயர்த்தி அரசு மருத்துவமனையாக மாற்ற வேண்டும். அதை upgrade பண்ணி 24 மணி நேரமும் இயங்குகிற மாதிரி செய்து தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் வெட்டயம்பாளையத்தில் தாய் சேய் நல விடுதி ஒன்றை ஏற்படுத்திக் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். நன்றி.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்):** திரு. ஏ. ராசேந்திரன்.

*பிற்பகல் 12-10*

*** திரு. ஏ. ராசேந்திரன்:** மாண்புமிகு சட்டப் பேரவையினுடைய மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையில் பேசுவதற்கு எனக்கு வாய்ப்புத் தந்தமைக்காக முதலிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இது நீதிமான்கள் ஆண்ட நாடு; ஆளுகின்ற நாடு. சோழ மண்டலத்தில் மனுநீதி சோழனும், கையிலே தனி சிலம்பும் ஏந்தி, காவியுரும் நீரோடு, 'தேரா மன்னா! செப்புவதுடையேன்' என்று சொன்ன கண்ணகிக்கு, தன்னுயிரை மாய்த்துக் கொண்டு நீதி வழங்கிய பாண்டிய மன்னனும் வாழ்ந்த நாடு இது. அப்படிப்பட்ட இந்த நாட்டில், நம்முடைய கலைஞர் அவர்கள்,

"சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்தொருபாற்
கோடாமை சான்றோர்க் கணி"

என்று சொன்ன வள்ளுவனுடைய வாக்கிற்கிணங்க, நீதி தவறாமல் ஆட்சியை நடத்திக்கொண்டு வருகிறார்கள்.

இங்கு பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. சொக்கர் அவர்கள், சென்ற ஆட்சியில், நீதியரசர்கள் பட்ட பாடுகளை எல்லாம் சொன்னார்கள். நீதியரசர்கள், அரசுக்கு எதிராகத் தீர்ப்புச் சொன்னார்கள் என்ற ஒரே காரணத்திற்காக, அவர்களுடைய வீடுகளுக்கு வருகின்ற தண்ணீர்க் குழாய்களின் இணைப்புகளெல்லாம் துண்டிக்கப்பட்ட காலம் அன்றிருந்தது. ஆனால், இப்போது



அண்மையிலே சட்டமன்றத்திலே நடந்த நிகழ்ச்சிக்கு கூட, நீதித் துறை தலையிட்டபோது, மாண்புமிகு கலைஞர் அவர்கள், நீதிக்குத்தலை வணங்குவேன்; நீதி நிச்சயம் வெல்லும் என்று சொன்னதை இந்த நாடே போற்றுகிறது.

மோட்டார் வாகன விபத்துக்களைப்பற்றி ஒரே ஒரு கருத்தை மட்டும் நான் சொல்ல விரும்புகிறேன். சிறுவர்கள் மோட்டார் விபத்திலே பாதிக்கப்பட்டால், இழப்பீட்டுத் தொகை தருவது என்பதை வங்கியிலே வைப்புத் தொகையாக வைக்கிறார்கள். ஆனால், குழந்தைகளை இழந்து, மனைவியை இழந்து அல்லது கணவனை இழந்து வாடுகின்ற வயதானவர்களுக்குக்கூட அந்த இழப்பீட்டுத் தொகையை முழுவதுமாகத் தராமல், அதைக் குறைத்து, வங்கியிலே வைப்புத் தொகை வைப்பதன் மூலம், வங்கிகளுக்கு வேண்டுமானால் வட்டி வரலாமேயொழிய, மக்களுக்கு அது நன்மை பயப்பதாக இல்லை. அதை இந்த அரசு, குறிப்பாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்குத் தனிச் சட்டத் திருத்தத்தையே கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, வழக்கறிஞர்கள் நல நிதிக்காக இப்போது ஒவ்வொரு வழக்கறிஞரிடத்திலேயும் 5 ரூபாய் வசூலிக்கப்படுகிறது. அதற்கான ஸ்டாம்ப் ஒட்டும்போது, Advocate Welfare Fund என்று 5 ரூபாய்க்கு ஒட்டுகிறார்கள். ஆனால், அவர்கள் இறக்கும்போது, அவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று சொல்கின்ற பணம் மிகவும் குறைவாக இருக்கிறது. ஆகவே, 5 ரூபாய் என்பதை அதிகரித்து, அவர்கள் இயற்கை எய்தும்போது, 5 இலட்சம் ரூபாயாக உயர்த்தித் தருவதற்கு இந்த அரசு முனைய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்திலே பல்வேறு குற்றங்களுக்கு தனி நீதிமன்றங்கள் இருக்கின்றன. குறிப்பாக, சந்தனக் கட்டைகளைக் கடத்துபவர்களைத் தண்டிப்பதற்காக, வேலூர் மாவட்டம், திருவண்ணாமலை மாவட்டம் ஆகிய இரண்டையும் சேர்த்து, திருப்பத்தூரிலே ஒரு தனி நீதிமன்றம் இருக்கிறது. இந்த நீதிமன்றம் 22-11-1992 இல் ஏற்படுத்தப்பட்டதாகும். 1992-லிருந்து திருப்பத்தூரிலே செயல்படுகிறது. அதேபோல், சேலத்திலே ஒரு தனி நீதிமன்றம் இயங்கி வருகிறது, சந்தனக் கட்டை சம்பந்தப்பட்ட வழக்குகளுக்காக. இந்த இரண்டு நீதிமன்றங்களும் என்ன செய்கின்றன என்றால், வருகிற குற்றவாளிகளை காலையிலே ரிமாண்ட் செய்கிறார்கள். மாலையிலே, ரிமாண்ட் செய்த கைதிகளை விடுவிக்கிறார்கள். இந்த இரண்டு வேலைகள் மட்டும்தான் நடக்கிறனவே

தவிர, நீதிபதிகள் அந்த வழக்குகளை விசாரிப்பதற்கு நேரமே இல்லை. காரணம், இருக்கின்ற வேலைப் பளுவின் காரணமாக, காலையிலே மற்ற வழக்குகளை விசாரிக்க முடியாத நிலைமை ஏற்படுகிறது. இதை இந்த அரசு மிகவும் கவனமாக கவனித்து, ஏற்கெனவே இருந்ததைப்போல, தனித் தனி மேஜிஸ்ட்ரேட்டுகளுக்கு அந்த 'பவர்'-ஐக் கொடுக்கலாம். இல்லையென்றால், சந்தனக் கட்டைகள் அதிகமாகக் கடத்துகின்ற பகுதியிலே, போளூர் போன்ற பகுதிகளிலே, தனியாக தனி நீதிமன்றக் கிளையை ஆரம்பிக்க வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்திலே மொத்தம் 5 அரசு சட்டக் கல்லூரிகள் இருக்கின்றன. சென்னை, மதுரை, திருச்சி, கோவை, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில், மொத்தமாக 7581 பேர் ஒவ்வொரு வருடமும் சட்டம் பயில்கிறார்கள். இவற்றைத் தவிர, தனியார் சட்டக் கல்லூரிகளும் இருக்கின்றன. இப்போது நம்முடைய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் சொல்லும்போது, தனியார் இனி தமிழகத்தில் மருத்துவக் கல்லூரிகளை ஏற்படுத்த முடியாது; ஏற்படுத்த அரசு துணை செல்லாது என்று சொல்லி இருக்கிறார்கள். அதேபோல், இந்த அரசும் தனியார்களுக்கு சட்டக் கல்லூரிகளை நடத்த அனுமதியில்லை என்று சொன்னால்தான் நல்லது; ஏனென்றால் சட்டக் கல்லூரிகளிலே பயின்று வெளியேறுகின்ற மாணவர்கள், பட்டதாரிகள் எல்லாம் வேலை கிடைக்காமல் அலைந்து கொண்டிருக்கிறார்கள்; அவர்களுக்கு வருமானம் கிடைக்கவில்லை. இதைப் போக்குவதற்காகத்தான் நாங்கள் அடிக்கடி சொல்லிக்கொண்டு வருகிறோம். இப்போது, காவல் துறை சப்-இன்ஸ்பெக்டர்களைத் தேர்ந்தெடுக்கிறோம். அந்த சப்-இன்ஸ்பெக்டர்கள் சாதாரண பட்டதாரிகளாக பி.ஏ., அல்லது பி.எஸ்சி., அல்லது பி.காம். படித்துவிட்டு வருகிறார்கள். அல்லது தாழ்த்தப்பட்ட மக்களாக இருந்தால் பிளஸ் 2 படித்துவிட்டு வருகிறார்கள். அவர்களுக்கு.......

பிற்பகல் 12-15

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தனியார் சட்டக் கல்லூரியைத் தொடங்கக் கூடாது, அதற்கு அனுமதி கிடையாது என்பதுதான் அரசினுடைய நிலைமை. ஏற்கெனவே சேலத்திலே தொடங்கப்பட்டிருக்கின்ற தனியார் கல்லூரியை எதிர்த்து அரசே வழக்கு தொடர்ந்திருக்கிறது. வழக்கு உச்ச நீதிமன்றத்திலே இருக்கிறது. எந்தக் காரணத்தைக் கொண்டும் தனியார்களை நாங்கள் அனுமதிக்கமாட்டோம்.



**திரு. ஏ. ராசேந்திரன்:** சட்டம் படித்த பட்டதாரிகள் சார்பாக அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். காவல் துறையில் சட்டம் படித்த இளைஞர்கள், சட்டம் படித்த பட்டதாரிகள் இவர்களுக்கெல்லாம் வேலைவாய்ப்பினைத் தருகின்ற வகையில் ஏற்பாடு செய்ய வேண்டும். சாதாரணமாக, ஒவ்வொரு காவல் நிலையத்திலும் இரண்டு அல்லது மூன்று சப்-இன்ஸ்பெக்டர்கள் இருப்பார்கள். இப்போது சிறப்பு சப்-இன்ஸ்பெக்டர்கள் எல்லாம் நியமிக்கப்படுகிறார்கள். இவர்களில் ஒருவரை Prosecution Sub-Inspector என்ற ஒருவரை, சட்டம் படித்தவரை அந்தக் காவல் நிலையத்தில் வைத்தால், அவர்கள் சட்டத்தை முழுமையாகத் தெரிந்திருக்கின்ற காரணத்தினால் அரசினுடைய வழக்குகள் தோற்காமல் இருப்பதற்கு உதவியாக இருப்பார்கள். அதற்கு இந்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கட்டடங்களைப் பொறுத்தவரையில் பல நீதிமன்றங்கள் வாடகைக் கட்டடத்தில் இயங்கிக்கொண்டிருக்கின்றன. உதாரணத்திற்கு திருவண்ணாமலை மாவட்டம், போளூரில் 28-4-1982-ல் முன்சீப் கோர்ட் ஆரம்பிக்கப்பட்டது. அது இன்னும் வாடகைக் கட்டடத்திலேதான் இயங்கி வருகிறது. அதற்குச் சொந்தக் கட்டடம் இல்லாமல் இருக்கிறது. எனவே, அதற்குக் கட்டடம் ஒன்றைக் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஜவ்வாது மலையிலே ஒரு பிரச்சினை. திருவண்ணாமலை மாவட்டத்திலே ஜவ்வாது மலை இருக்கிறது. ஆனால், திருவண்ணாமலை மாவட்டத்திலே ஜவ்வாது ஒன்றியத்தில் இருக்கின்ற வழக்குகள் எல்லாம் வேறு ஒரு மாவட்டத்திற்குச் செல்கின்றன. மாஜிஸ்டிரேட் கோர்ட்டுக்கு, பக்கத்திலே இருக்கின்ற வாணியம்பாடிக்குப் போக வேண்டியிருக்கிறது. மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டுக்கு வாணியம்பாடி, செஷன்ஸ் கோர்ட்டுக்கு திருவண்ணாமலை என்று இப்படி இரண்டு மாவட்டங்களுக்கும் போலீஸ் அதிகாரிகள் சென்று அலைய வேண்டியிருக்கிறது. ஜவ்வாது மலையிலே இருக்கின்ற வழக்குகள் அத்தனையையும் போளூருக்கு மாற்ற வேண்டும். அப்படி மாற்றினால்தான், அந்த ஜவ்வாது மலையிலே இருக்கின்ற மக்களுடைய நியாயமான கோரிக்கை நிறைவேற்றப்படும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக, உயர் நீதிமன்றத்தினுடைய கிளையை மதுரையிலே ஆரம்பிக்க வேண்டுமென்று நம்முடைய அரசு பல்வேறு முயற்சிகளை சிரமப்பட்டு செய்து கொண்டிருக்கிறது. ஆனால், எதன் காரணமாக அது தாமதப்படுகின்றது என்று மக்கள் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். எனவே, அதற்கு உடனடியாக ஆவன செய்ய வேண்டும். அதுபோல உச்ச நீதிமன்றத்தினுடைய கிளையையும் சென்னையிலே ஏற்படுத்திட-வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக, விருத்தாசலத்திலுள்ள நீதிமன்றத்தைப் பற்றி இங்கு நம்முடைய நண்பர் குழந்தை தமிழரசன் சொன்னார்கள். அங்கு தற்போதுள்ள நீதிமன்றக் கட்டடத்தில் மூன்றாம் தளத்தைக் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உளுந்தூர்பேட்டையில் சார்பு நீதிமன்றத்தை விரைவில் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வேலூர் சிறையைப் பொறுத்தவரையில் ஓரே ஒரு கருத்தை மட்டும் சொல்ல நினைக்கிறேன். வேலூரில் முதல் வகுப்பு கைதிகள் இருக்கிற இடம் மிகவும் மோசமான நிலையிலே இருக்கிறது. அவற்றையெல்லாம் இவ்வரசு முனைந்து செயல்பட்டு சரி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆரணியில், வெள்ளைக்காரன் காலத்திலே ஜாகீராக இருந்த கட்டடங்கள் குதிரைகளை அடைத்து வைத்திருந்த கட்டடங்கள் எல்லாம் நீதிமன்றக் கட்டடங்களாக இருக்கின்றன. அவற்றையெல்லாம் மாற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், ஆரணிக்கு ஜூரிஸ்டிக்ஷனை அதிகப்படுத்தி அப்பகுதி மக்களுக்கு வாய்ப்பைத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக, ஒரே ஒரு கருத்தை மட்டும் சொல்லி விடைபெறுகிறேன். நீதிபதி பணி புனிதத்தன்மை வாய்ந்தது. ஆனால் நீதிபதி மட்டும் புனிதமானவர் என்று நினைத்துச் செயல்படும்போது தான் பிரச்சினை உருவாகிறது. தற்பெருமை இருக்குமிடத்தில் நியாய உணர்வு, பகுத்தறிவு, சட்டப்படி செயல்பட வேண்டுமென்ற எண்ணம் இரண்டாம் நிலையிலே இருக்கும். இதை நான் சொல்லவில்லை, உச்ச நீதிமன்றத்தினுடைய தலைமை நீதிபதி ஆனந்த் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (டாக்டர் இ.எஸ். எஸ். இராமன்) :** திரு. பி.என். வல்லரசு.



*** திரு. பி.என். வல்லரசு:** மாண்புமிகு சட்டப் பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, நான் சார்ந்துள்ள அகில இந்திய பார்வேர்டு பிளாக் கட்சியின் சார்பில் சில கருத்துக்களை முன்வைக்கிறேன். ஒரு நாட்டிலோ அல்லது ஒரு மாநிலத்திலோ நீதி நிருவாகம் சிறப்பாக இருந்தால்தான், அந்த நாட்டிலே அல்லது அந்த மாநிலத்திலே மக்கள் அமைதியாக வாழ முடியும். மன்னர் ஆட்சிக் காலத்திலேகூட நீதி பரிபாலனம் சிறப்பாக இருந்த ஒரு நாடுதான் சிறந்த நாடாக, சிறந்த மன்னர் ஆட்சியாகக் கருதப்பட்டது.

தமிழகத்தைப் பொறுத்தவரையில் பல்வேறு இடங்களில் குண்டு வெடிப்புகள் முறியடிக்கப்பட்டன. பல்வேறு ஜாதிக் கலவரங்கள் முறியடிக்கப்பட்டன. இன்று நீதி நிருவாகம் சிறப்பாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்றால் அது மிகையாகாது. அந்த அளவிற்கு இன்றையதினம் தமிழகத்தில் சட்டமும் ஒழுங்கும் சிறப்பாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12-20

மதுரையில் உயர் நீதிமன்றத்தினுடைய கிளை அமைக்கப்பட வேண்டுமென்பது தென் மாவட்ட மக்களின் நீண்டகாலக் கோரிக்கை ஆகும். ஆனால், தமிழக அரசைப் பொறுத்தவரையில், கலைஞர் அரசைப் பொறுத்தவரையில், இதைக் கொள்கை ரீதியாக ஏற்றுக்கொண்டு, தென் மாவட்ட மக்களுடைய கோரிக்கையை உடனே நிறைவேற்ற வேண்டும் என்பதை நன்கு உணர்ந்து செயல்பட்டுக் கொண்டிருக்கிற ஓர் அரசு என்பதை தென் மாவட்ட மக்களே நன்கு உணர்ந்து கொண்டிருக்கிறார்கள். அதற்காக நில ஆர்ஜிதம் செய்து ஏறக்குறைய 1 கோடியே 10 இலட்சம் ரூபாய் அரசு அதற்காக ஒதுக்கி, நிதி ஒதுக்கீடும் செய்திருக்கிறது. ஆனால், என்ன காரணத்தினாலோ தாமதம் ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது.

தென் மாவட்ட மக்களின் சார்பாக சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் நான் கேட்டுக்கொள்வதெல்லாம் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்ற ஓர் அரசு, மக்களுக்குப் பல்வேறு வாக்குறுதிகளைக் கொடுத்திருக்கிறது. அதேபோல், இந்த அரசு தென் மாவட்ட மக்களின் கோரிக்கையை ஏற்று மதுரையிலே உயர்நீதிமன்றத்தின் கிளையை அமைப்பதற்கு வாக்குறுதி கொடுத்திருக்கிறது. எனவே, மாநில அரசினுடைய அரசியல்

221078
V 211,31'N99
N99.73.1

கடமைகளை ஆற்றுவதற்கு, அவர்கள் அளித்த வாக்குறுதியை நிறைவேற்றுவதற்கு, உயர் நீதிமன்றக் கிளையை அமைப்பதற்கு சென்னை உயர் நீதிமன்றம் ஒத்துழைப்பாக இருக்க வேண்டும் என்பதுதான் தென் மாவட்ட மக்களுடைய நீண்டநாள் கோரிக்கையாகும். எனவே, வருகிற 2000 ஆவது ஆண்டிற்குள் மதுரையில் உயர்நீதிமன்றக் கிளையை அரசு நிறுவிட வேண்டும். உயர் நீதிமன்றதேதோடு நெருங்கிய தொடர்பு கொண்டு, உயர் நீதிமன்றத்தினுடைய கிளையை அங்கே நிறுவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏற்கெனவே அரசு அங்கிருக்கிற மாவட்ட நீதிமன்றக் கட்டடத்திலேகூட உயர் நீதிமன்றக் கிளையைத் தொடங்கத் தயார் என்று கூறியிருக்கிறது. எனவே, அதிலேயாவது துரிதமாக நடவடிக்கை எடுத்து, அதையாவது நிறைவேற்ற வேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல், தென் மாநில மக்களுடைய கோரிக்கை என்னவென்றால், உச்ச நீதிமன்றத்தினுடைய கிளை சென்னையிலே தொடங்கப்பட வேண்டுமென்பதுதான் டெல்லி நகர் இந்தியாவினுடைய வட கோடியிலே இருக்கிறது. எனவே, தென் மாநில மக்கள், சென்னையிலே இருக்கக்கூடியவர்கள், டெல்லியிலே இருக்கிற உச்ச நீதிமன்றத்தினுடைய கிளை சென்னையிலே நிறுவப்பட வேண்டும் என்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். மத்திய, மாநில அரசுகள் அதற்குரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அதை நிறைவேற்றித் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தொகுதியில் உசிலம்பட்டியில் சார்பு நீதிமன்றம் அமைக்கப்பட வேண்டுமென்று தொடர்ந்து நான் வலியுறுத்தி வருகிறேன். ஆனால், இன்னும் அது அமைக்கப்படவில்லை. ஒரு கோட்டாட்சியின் மையமாக உசிலம்பட்டி தொடர்ந்து இருக்கிற காரணத்தினால், அங்கே அனைத்து தகுதிகளும் இருக்கிற காரணத்தினால், இந்த ஆண்டாவது உசிலம்பட்டியில் சார்பு நீதிமன்றம் அமைத்துத்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உயர் நீதிமன்ற நீதிபதிகள் நியமனத்தின்போது, இங்கே பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களாக இருக்கின்ற தேவர் இன மக்களுக்கு உயர் நீதிமன்ற நீதிபதி நியமனத்தில் பிரதிநிதித்துவம் அளிக்க வேண்டுமென்று 2 கோடி தேவர் இன மக்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார்கள். ஏற்கெனவே கலைஞர்



அவர்கள் அன்று திரு. இரத்தினவேல் பாண்டியனை உயர் நீதிமன்றத்தினுடைய நீதிபதியாக, தேவர் இன மக்களின் பிரதிநிதியாகத் தேர்வு செய்தார்கள். அதேபோல், வருங்காலங்களிலே உயர் நீதிமன்ற நீதிபதிகள் தேர்வில் தேவர் இனத்திற்கு பிரதிநிதித்துவம் அளிக்க வேண்டுமென்ற கோரிக்கையை பரிசீலனை செய்து நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா அவர்களும், அவர்களுடைய அமைச்சர் பெருமக்களும் கடந்த கால ஆட்சியிலே செய்த கோடானுகோடி ரூபாய் ஊழல்களைக் கண்டுபிடிக்க வேண்டுமென்பதற்காகவும், தண்டிக்க வேண்டுமென்பதற்காகவும் சென்னை உயர் நீதிமன்றத்தினுடைய முழுமையான ஆலோசனையின்படி தனி நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அங்கே நீதிவிசாரணைகள் நடைபெற்று வருகின்றன. ஆனாலும்கூட, இன்று சட்டத்தின் சந்து பொந்துகளிலிருந்து தப்பித்துச் செல்ல அவர்கள் முயற்சிக்கின்ற காரணத்தினால், இந்தத் தனி நீதிமன்றங்கள் வாயிலாக அவர்களைத் தண்டிக்க முடியுமா என்ற அச்ச உணர்வு தமிழக மக்களுக்கு ஏற்பட்டுவிட்டது. உரிய காலத்திலே, குறிப்பிட்ட காலத்திலே அவர்களைத் தண்டிக்க முடியுமா என்ற கேள்விக்குறி ஏற்பட்டிருக்கிறது. காரணம், கோடானுகோடி ரூபாய் ஊழல் செய்திருக்கிற அவர்கள், கோடானு கோடி பணத்தை வெளியிலே வைத்திருக்கிற காரணத்தினால் அந்தப் பணத்தின் மூலம் அந்த ஊழல் வழக்குகளிலிருந்து எங்களால் தப்பிக்க முடியும் என்ற சூழ்நிலையை அவர்கள் உருவாக்கிக் கொண்டிருப்பதை நாட்டு மக்களும் நன்றாகத் தெரிந்து கொண்டிருக்கிற காரணத்தினால் அந்த ஊழல் பணத்திலிருந்து இன்றையதினம் கவனத்தை சிதற அடித்துக் கொண்டிருக்கின்ற காரணத்தால் இன்று தமிழக அரசை நான் கேட்டுக்கொள்வதெல்லாம், கலைஞருடைய அரசை கேட்டுக் கொள்வதெல்லாம், அவர்கள் எந்த விதத்திலாவது தப்பிக்கத்தான் பார்ப்பார்கள். குற்றவாளிகளைத் தப்பிக்க விடாத அளவிற்கு, சட்டத்தினுடைய சந்து பொந்துகளிலிருந்து தப்பிக்க விடாத நிலையை உருவாக்கித் தந்து, அவர்களைத் தண்டித்தே தீர வேண்டுமென்ற வகையில் அதற்கான தகுந்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். சட்டத்தின் முன்பு அனைவரும் சமம் என்று நாம் சொல்கிறோம். ஆனால், இன்றையதினம் இங்கே இரண்டு கொலை வழக்குகளிலே சம்பந்தப்பட்டிருக்கின்ற ஒரு சட்டமன்ற உறுப்பினர்மீது காவல் துறையும் நடவடிக்கை

எடுக்கவில்லை. சட்டமன்றமும் நடவடிக்கை எடுக்கவில்லை. சட்டமன்றமும் நடவடிக்கை எடுக்கவில்லை என்ற நிலையில் ஆளுக்கு ஒரு நீதியா என்று கேட்கின்ற ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. சிதம்பரத்திலே இருக்கின்ற வாண்டையார் சகோதரர்களுக்கு இன்று சட்டம் ஓடோடிப் பாய்கிறது. ஆனால், மற்றவர்கள்மீது அந்தச் சட்டம் பாயவில்லையே ஏன் என்று மக்கள் கேட்கின்ற கேள்விக்கு நாம் பதில் சொல்ல வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. எனவே, அதையும் அரசு கவனிக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். தமிழ்நாட்டிலே பி.சி.ஆர். ஆக்ட் ஏற்கெனவே நடைமுறைப் படுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது.

பிற்பகல் 12-25

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்):** அடுத்து, திரு. மா. இராமச்சந்திரன்

**திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இன்றையதினம் நீதி, நிர்வாகம் சிறைச்சாலை மானியக் கோரிக்கைகளிலே பேசுவதற்கு வாய்ப்பளித்த உங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நீதி, நிர்வாகம் என்பது இருக்கிற இலாகாக்களிலே மிகச் சிறந்த இலாகாவாக கருதப்படுகிற ஒன்று. காரணம், ஒரு சட்டத்தை இயற்றுகிறபோது அந்தச் சட்டம் சரியானபடி இயற்றப்படுகிறதா, அது அரசியல் நிர்ணயச் சட்டத்திற்குள் வருகிறதா என்பதைப் பார்த்து அந்தச் சட்டம் இயற்றப்படுகிற சூழ்நிலையை உருவாக்குகிற ஒரு தன்மையே நீதி நிர்வாகத்தில்தான் இருக்கிறது. ஆகையினால்தான் இது மிக முக்கியமான நிர்வாகமாகக் கருதப்படுகிறது. உயர் நீதிமன்றங்களிலோ, உச்ச நீதிமன்றத்திலே சட்டங்கள் சரியாக இயற்றப் படவில்லையென்றால் தோற்றுவிடுவதற்கான காரணத்தை அந்த நீதி நிர்வாகம் முறையாக செயல்படுகிறதா என்கிற தன்மையைப் பார்க்கிறபோதுதான் புரிந்துகொள்ள முடியும். அப்படிப்பட்ட ஒரு சிறந்த நிர்வாகமாக இன்றைக்கு நீதி நிர்வாகம் இருந்துகொண்டிருக்கிறது.

அதுமட்டுமல்ல, நீதிபதிகளை எப்படி நியமனம் செய்வது என்கின்ற வகையிலே உயர் நீதிமன்றம், உச்ச நீதிமன்றத்திற்கு, ஒரு நடைமுறை பின்பற்றப்பட வேண்டுமென்று நம்முடைய மரியாதைக்குரிய ஜனாதிபதி அவர்கள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். அந்த வகையிலே இன்றைக்கு உயர்நீதிமன்றங்களிலே, உச்சநீதிமன்றத்திலே எப்படி நீதிபதிகளை



நியமிப்பது என்பது வரையறைபடுத்தப்பட்டிருக்கிறது. அந்த வகையிலே நம்முடைய நாட்டைப் பொறுத்தவரையில், சட்டங்கள் எல்லாம் இயற்றியவர்கள்— அரசியல் சட்டத்தை இயற்றியவர்கள், மகாராஷ்டிர மாநிலத்திலே பிறந்த அம்பேத்கர் அவர்களுக்கு அந்த மாநிலத்திலே அவருக்கு ஒரு பெருமை இல்லை. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் எதிர்க்கட்சித் தலைவராக, எதிர்க்கட்சியாக இருக்கிறபோது அந்த மாநிலத்து முதலமைச்சருக்குக் கடிதங்கள் எழுதினார். அங்கே ஒரு பல்கலைக்கழகம் அமைப்பதற்கு இடைஞ்சலா, இடையூறா என்று கேட்டு எழுதினார். அவைகளை அங்கு பயன்படுத்த முடியவில்லை. ஆனால், நம்முடைய கழகத் தலைவர் கலைஞர் முதலமைச்சராக வந்த பின்னால் இந்தத் தமிழகத்தில் சட்டப் பல்கலைக்கழகம் என்ற ஒன்றை ஏற்படுத்தி, அதற்கு அம்பேத்கர் பல்கலைக்கழகம் என்கிற பெயரையும் வைத்திருக்கிறார். இது ஒரு எடுத்துக்காட்டாக, இந்தியாவிலே முதன்முறையாக அம்பேத்கர் அவர்களுக்கு மரியாதை செய்கிற ஒரு மாநிலமாக, மிகவும் தாழ்த்தப்பட்டவர்களுக்கு விடிவெள்ளியாக விளங்குகின்ற அம்பேத்கர் அவர்களுக்கு மரியாதை செய்கிற வகையிலே நம்முடைய முதல்வர் அவர்கள் ஒரு பல்கலைக்கழகத்தை ஏற்படுத்தியிருப்பதை நாம் எல்லாம் பாராட்டாமல் இருக்க முடியாது. தமிழகம் அதற்கு வழிகாட்டியாக இருக்கிறது; நம்முடைய முதல்வர் அவர்கள் வழிகாட்டியாக இருக்கிறார்கள்.

அதேபோல், இன்றைக்கு ஒவ்வொன்றாகப் பார்க்கும்போது நீதிபதிகள் சரியாகச் செயல்படுகிறார்களா அல்லது நியாயமான முறையிலே நடந்துகொள்கிறார்களா என்கிற வாதம் ஒன்று வருகிறது. சில சமயங்களில் நீதிபதிகள் மக்களுடைய பிரதிநிதிகளாவதுபோல் சில தீர்ப்புகளை வழங்கியிருப்பதைப் பார்க்கிறபோது அரசுக்கு இடையூறாகச் சில காரியங்களைச் செய்வதற்கு நீதிபதிகள் முன்வருகிறார்கள். ஆக, அவர்களும் மக்கள் பிரதிநிதிகளாக ஆக வேண்டுமென்கிற சூழ்நிலையை உருவாக்கிக்கொள்கிறார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலையை நீதிபதிகள் ஏற்படுத்தலாமா என்கிற ஐயம் மக்கள் மத்தியிலே வருகிறபோது அது விமர்சனத்திற்கு உள்ளாகிறது. நீதிபதிகளுடைய தீர்ப்புகளுக்கு விமர்சனம் வரக் கூடாது. தீர்ப்பை விமர்சனம் செய்யக் கூடாது சட்டப் பேரவை என்கிற வகையிலே ஒரு மரபு உண்டு. ஆனால் ஒரு காரியத்தைச் செய்கிறபோது அரசுக்கு விரோதமாக அல்லது சட்டத்திற்கு உட்பட்ட காரியங்கள் நடைபெறுகிறபோது, அதிலே இடைக்காலத் தடை என்ற

*பிற்பகல் 12-30*

ஒன்றை வைத்துக்கொண்டு இடைக்காலத் தடை என்ற ஒன்று இருக்கிறது. அதற்குப் பின்னாலே அதற்குத் தீர்ப்பும் வழங்கப்படும் என்கிற நிலை வருகிறபோது, இந்த இடைக்காலத் தடை வருகிறதே அதனாலே சட்டங்கள் சில சமயங்களிலே முறிக்கப்படுகின்றன, அவைகளிலே தொய்வு விழுகிறது. அப்போது, சரியாக சட்டங்களை நடைமுறைப்படுத்த முடியாத சூழ்நிலை வருகிறது, நீதிபதி அவர்கள் அதைச் செய்கிறபோது, உன்னிப்பாகக் கவனித்து செயல்படுத்த வேண்டும் என்பதிலே நாமெல்லாம் முனைப்பாக இருக்கிறோம் என்பதை இந்த அவையின் மூலமாகத் தெரிவிக்க வேண்டிய ஒரு சூழ்நிலை வருகிறது.

அதேபோல, நீதிபதிகளாக, உயர் நீதிமன்றத்தினுடைய நீதிபதிகளாக, தலைமை நீதிபதியாகப் பொறுப்பேற்கிறார்கள். இன்றைக்கு இருக்கிற சூழ்நிலை, மாநிலத்தை விட்டு மாநிலம் நீதிபதிகளை மாற்றுகிற சூழ்நிலை உச்ச நீதிமன்றத்தாலே, ஜனாதிபதி அவர்களால் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அப்படி ஏற்படுத்தப்பட்டு, இங்கே ஒரு உயர் நீதிமன்ற நீதிபதி அவர்கள் தமிழகத்திற்கு வருகிறார்கள் தலைமையேற்க. ஆனால், அந்த நீதிபதி அவர்களைச் சந்திக்கிற ஒரு வாய்ப்பை ஒரு குற்றவாளியாக இருக்கிறவர் ஏற்படுத்திக்கொள்கிறார். அதுதான் இதிலேயிருக்கிற ஒரு பெரிய கஷ்டமே. பல வழக்குகளிலே குற்றவாளியாக இருக்கிறவர்கள், குற்றவாளியாகக் கருதப்படுகிறவர்கள் அந்த நீதிபதியை அவருடைய வீட்டிலே சந்திக்கிற ஒரு வாய்ப்பை ஏற்படுத்துகிற சூழ்நிலை வருகிறபோது, நீதி சாய்ந்துவிடுமோ என்று மக்கள் மத்தியிலே ஒரு ஐயப்பாடு வருகிறது. இன்றைக்கு குற்றப் பத்திரிகை, முதல் தகவல் அறிக்கையிலே குற்றவாளியாகக் கருதப்படுகிறவர்கள், நாட்டிலே ஜனாதிபதியைச் சந்திக்கிறார்கள், பிரதம மந்திரியைச் சந்திக்கிறார்கள். இன்னும் பல நீதிபதிகளையும் சந்திக்கிறார்கள். ஆனால், அவர்கள்மேல் வழக்கு இருக்கிறது. அதேபோல வழக்கிருக்கிற ஒருவன் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டு, விடுவிக்கப் படுகின்றான் (மணியடிக்கப்பெற்றது). ஆனால், அதே சூழ்நிலையில் இருக்கிற ஒருவர் இன்றைக்கு எல்லோரையும் சந்திக்கிற ஒரு சூழ்நிலை இந்தியாவிலே வருகிறபோது மக்கள் என்ன நினைக்கிறார்கள் என்று சொன்னால் குற்றவாளியாகக் கருதப்படுகிறவர்களுக்கு, அதற்காகத் தண்டனை வழங்காமல், குற்றவாளியைக் கைது செய்யாமல், இப்படிப்பட்ட சூழ்நிலை இந்த



நாட்டிலே உருவாகியிருக்கிறபோது, நீதிபதிமேல், நீதியின்மேல் ஒரு ஐயப்பாடு வருகிறது என்பதை நாமெல்லாம் கருத்திலே கொள்ள வேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்படுகிறது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அதுமட்டுமல்ல, இப்போது Assistant Public Prosecutor-கள், Public Service Commission-ஆல் தேர்வு செய்யப்பட்டிருக்கிறார்கள். ஆனால், அவர்கள் இன்னும் நியமனம் செய்யப்படவில்லை. இப்போது உரிமையியல் நீதிபதிகள் தேர்வு செய்யப்பட வேண்டுமென்று விளம்பரம் வந்திருக்கிறது. அவைகளையெல்லாம் விரைவாக முடிக்க வேண்டும். எப்போதுமே நீதிமன்றங்களில் நீதிபதி பதவிகள் காலியாக இருக்கக் கூடாது. நீதிகள் தேக்கப்படுகிறபோது, பின்விளைவுகள், பிரச்சினைகள் வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது) இதோ பேசி முடித்து விடுகிறேன் ஐயா.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏற்கெனவே இருந்த மாற்றுத் தலைவரும் மணி அடித்தார்கள்.

**திரு. மா. இராமச்சந்திரன்:** ஒரேயொரு நிமிஷம்தான். ரொம்பக் குறைவான நேரம்தான், ஐயாகிட்டே வேறு ஒன்றும் சொல்லவில்லை.

ஆக, இந்தப் பதவிகளெல்லாம் இன்றைக்குக் காலியாக இருக்கிற காரணத்தினாலே அவைகளுக்குப் பணி நியமனம் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேசமயத்திலே, நம்முடைய ஒரத்தநாட்டிலே ஒரு கோர்ட் இருக்கிறது. எங்களுடைய பகுதியிலே இருக்கிற மக்களெல்லாம் அங்கே சென்று வருகிறார்கள். நான் அங்கே வழக்கறிஞராகப் பணியாற்றுகிறவன். அந்த கோர்ட் ஆரம்பித்த காலத்திலேயிருந்து வாடகைக் கட்டடத்திலேதான் இருக்கிறது. இடங்களும் தேர்வு செய்யப்பட்டு விட்டன. ஆகவே, அந்த கோர்ட்டை, நீதிமன்றத்தை—உரிமையியல் நீதிமன்றம் Judicial-*cum*-Munsif Court என்கிற அந்த நீதிமன்றத்தைக் கட்டித் தருவதற்கு ஆவன செய்ய வேண்டும்.

அதேபோல, தாலுகா அலுவலகத்திலே ஒரு சிறைச் சாலையைக் கட்ட வேண்டும். அந்தச் சிறைச்சாலை கட்டப்படாமலேயே நிலுவையில் இருக்கிறது. அதையும் கட்டித்தர வேண்டும்.

(மணியடிக்கப்பெற்றது) குறுகிய காலமாக இருக்கிற காரணத்தினாலே, நம்முடைய பேரவைத் தலைவர் ஆணையின் பேரில், பல்வேறு காரியங்கள் இருந்தாலும், இன்றைக்கு எனக்குக் கொடுத்திருக்கிற வாய்ப்பைக் கருதி இத்துடன் என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்கள், 10 நிமிடங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதி நிர்வாகம், சிறைச்சாலைகள் மானியக் கோரிக்கை விவாதத்திலே பங்கேற்க வாய்ப்பு நல்கிய தங்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியினைக் காணிக்கையாக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

நம்முடைய தமிழகத்தில் நீதி பரிபாலனம் எந்த அளவிற்கு இன்று அச்சுறுத்தலுக்கு ஆளாகியிருக்கிறது என்பதைப்பற்றி எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர்களெல்லாம் இங்கே பல கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். ஒரு Special Court-னுடைய நீதிபதி அவர்களுடைய இரகசியங்களையெல்லாம் வெளியிடுவேன் என்று முன்னாள் முதல்வர் அவர்கள் அறிக்கை வாயிலாக மிரட்டுகிற ஒரு செயலை நாமே பார்த்தோம். நீதித் துறை என்பது எல்லாவற்றையும் கடந்து எந்தவிதமான அச்சுறுத்தலுக்கும் ஆளாகாமல் சீரிய முறையில் பணியாற்ற வேண்டும் என்று சொன்னால் ஒரு சுமுகமான சூழ்நிலையை நம்முடைய அரசும் நம்முடைய நாடும் நீதித் துறைக்கு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியது நம்முடைய தலையாய கடமையாகும்.

*பிற்பகல் 12-35*

ஆனால், இங்கே நான் ஏற்கெனவே கூறியதுபோல், ஊழல் தடுப்புச் சட்டத்தில் உட்பிரிவு 3, உட்பிரிவு 1-ன்படி நம்முடைய தமிழகத்திலே 46 வழக்குகள் முன்னாள் முதலமைச்சர், முன்னாள் அமைச்சர்கள், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் ஏற்கெனவே அவர்கள் முறைகேடாக சொத்து சேர்த்தது குறித்து, அவர்கள் இந்த நாட்டுக்கு இழைத்த துரோகத்தையெல்லாம் ஒன்றாகச் சேர்த்து வழக்கின் வாயிலாகச் சந்திக்க வேண்டும் என்பதற்காக 46 வழக்குகள் போடப்பட்டுள்ளன. நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் அரியணை ஏறிய பின்னால் தமிழகத்தில் நிச்சயமாக ஒரு நல்லாட்சி



மலர்ந்தவுடன் தவறு செய்தவர்களுக்குத் தண்டனை கிடைக்கும் என்று நாட்டு மக்கள் எதிர்பார்த்தார்கள். 3 வருடங்கள் ஓடிவிட்டன. நம்முடைய முதலமைச்சர் அவர்கள்கூட சில இடங்களிலே கொஞ்சம் தைரியமாக நடவடிக்கை எடுக்கவில்லையோ என்ற அச்சம்கூட எங்களுக்கு உண்டு. ஏனென்று சொன்னால் நேற்று இரயில் மறியல் செய்யப் போனேன், உடனே 151 செக்‌ஷன் பிரகாரம் 'you are under arrest' என்று எங்களைப் பிடித்து உள்ளே போட்டுவிட்டார்கள். அதற்காக நான் போலீசையோ அரசையோ குறை சொல்லவில்லை. சட்டப்படி நடவடிக்கை எடுத்த காவல் துறையையும் அரசையும் நான் பாராட்டுகிறேன். ஆனால், ஒரு ஆடிட்டரை செருப்பால் அடித்த வழக்கிலே முதல் தகவல் அறிக்கை இருக்கிறது, அவர் மீது Prima-facie case இருக்கிறது. இருந்தாலும்கூட நம்முடைய முதலமைச்சர் ஏனோ அந்த F.I.R.-ல் இருக்கக்கூடிய பெயர்களுக்கு ஆட்பட்டவர்களைக் கைது செய்யாமல் இருப்பது விந்தையாக இருக்கிறது. சட்டம் தன்னுடைய வேலையை நாட்டில் செய்யவில்லை. முதலமைச்சர் அதிலே கடுமையாக இல்லை என்பதை நாங்கள் நிச்சயமாக இங்கே சுட்டிக்காட்டுவது எங்களுடைய கடமை என்ற வகையிலே இங்கே குறிப்பிட நிச்சயமாகக் கடமைபட்டிருக்கிறேன். சில நேரங்களிலே சட்டம்-ஒழுங்கு பிரச்சினை வருமா என்றெல்லாம்கூட இதில் தயக்கத்தைக் காட்டலாம். ஆனால், அதற்கெல்லாம் அஞ்சுவோம் என்று சொன்னால் நீதி நம்முடைய தமிழகத்திலே பிழைக்காமல் போய்விடும். நீதி பிழைக்க வேண்டும் என்று சொன்னால் சில நேரங்களில் கடுமை இருக்க வேண்டும் என்று நான் பணிவன்போடு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல், மூன்று Special Court-களை போட்டோம். மூன்று Special Court-களை நாம் போட்டும்கூட, மூன்று ஆண்டுகள் ஆகிவிட்டன. இப்போது பார்த்தோம் என்று சொன்னால், இன்றைய காலைப் பத்திரிகையில் பார்க்கும்போது முன்னாள் பாகிஸ்தான் பிரதமர் பெனாசிர் பூட்டோ ஏற்கெனவே 5 ஆண்டு காலம் தண்டனைக்குள்ளாகி ஒரு தீர்ப்பு, 38 கோடி ரூபாய் அவர் கட்ட வேண்டும் என்று தீர்ப்பு, மீண்டும், அவர் அரசியலிலே ஈடுபடக் கூடாது என்று ஒரு நல்ல தீர்ப்பு அங்கு இருக்கக்கூடிய நீதிமன்றம் வழங்கியிருக்கிறது. ஆனால், நம்முடைய நாட்டிலே கொள்ளையடித்தவர்கள் நம்முடைய நாட்டிலே தாங்கள் வகித்து வந்தப் பதவியை துஷ்பிரயோகம் செய்தவர்கள் இன்னும் தண்டனைக்கு

ஆளாகாமல் மூன்று ஆண்டுகள் முடிந்த பின்னாலும்கூட நம்முடைய திரு. சொக்கர் விளக்கியதைப்போல, தனக்கு தமிழிலே குற்றப் பத்திரிகை வேண்டும், எனக்கு அது புரியவில்லை; இது புரியவில்லை என்று சொல்லியே வாய்தா வாங்குவதிலே காலம் கடத்திக் கொண்டிருப்பதை நாம் அனுமதித்துக்கொண்டிருக்கிறோம். நீதி எபபோதுதான் கிடைக்கப் போகிறது? அவர்களுக்கு எப்போதுதான் நீங்கள் தண்டனை வாங்கித் தரப்போகிறீர்கள் என்பதை மாண்புமிகு முதல்வர் அவர்களும் மற்றவர்களும் முடிவு செய்ய வேண்டும். சட்டத் துறை கொஞ்சம வேகமாகச் செயல்பட்டு, கூடியவிரைவிலே தவறு செய்தவர்களுக்குத் தண்டனையை— பெனாசிர் பூட்டோவுக்கு உடனடியாக ஒரு தீர்ப்பு வந்திருக்கிறது, ஆனால் அதேபோல் தீர்ப்பு மற்றவர்களுக்கும் ஏன் நம்முடைய நாட்டிலே வரவில்லை என்பதைக் கொஞ்சம் நீங்கள் ஆழ்ந்து சிந்திக்க வேண்டும் என்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, மதுரை கோர்ட்டினுடைய - High Court Branch பற்றி இப்போது பேசிக்கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூட, முதல்வராக நான்காவது முறையாகப் பொறுப்பு ஏற்றவுடனே பட்ஜெட்டிலே ஒரு அறிக்கை கொடுத்தார்கள் மதுரையிலே High Court-னுடைய கிளை ஏற்படுத்தப்படும் என்று. ஆனால், மூன்று ஆண்டுகள் ஓடிவிட்டன. இன்னும் அந்த High Court-னுடைய கிளை வருமா வராதா என்பதே ஒரு கேள்விக்குறியாக இருக்கிறது. என்னைப் பொறுத்த அளவிலே நான் கொஞ்சம் வெளிப்படையாகவே சொல்கிறேன், உயர் நீதிமன்றத்திற்கும் அரசுக்கும் இடையே ஒரு இடைவெளி இருக்கிறதா என்றுகூட எனக்கு அச்சம் இருக்கிறது. ஏன் உங்களுக்குள் அந்த வேறுபாடு? ஏன் அங்கு இருக்கக்கூடிய ரிஜிஸ்ட்ரார் வருவது இல்லையா? உங்களுக்கு என்ன குறை? இங்கே இருக்கக்கூடிய நீதிபதிகளுக்கு என்ன வசதிகள் வேண்டுமோ, அத்தனை வசதிகளையும் நம்முடைய தமிழக அரசு செய்யத் தயாராக இருக்கிறது. அப்படியிருந்தும்கூட அங்கே கிளை அமைப்பதிலே என்ன சுணக்கம் என்பதை நம்முடைய அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும். இது நம்முடைய சபாநாயகர் அவர்களுடைய ஊர். அந்த ஊரிலே உடனடியாக ஒரு High Court Branch-சே வரவேண்டும். இன்னொன்றுகூட, இதிலே கொஞ்சம் நீங்கள் வேகமாகச் செயல்பட்டால் வேலூருக்கு ஒரு கிளையை நான் கேட்பேன். ஏன் என்று சொன்னால் (குறுக்கீடு) அதனால்தான் சொல்கிறேன். பொதுவாக, நீதி உடனடியாக ஏழை மக்களுக்கு எல்லாம் கிடைக்க



வேண்டும்: உடனுக்குடன் கிடைக்க வேண்டும் என்று சொன்னால் அதைப் பரவலாக்கும் திட்டத்தின்கீழ் நிச்சயமாக ஒரு கிளையை நீங்கள் வேலூருக்கும் கொடுத்தால் அது நலமாக இருக்கும் என்ற காரணத்தால் அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். வேலூரிலே மாண்புமிகு முதல்வர் அவர்கள் அந்த ஒருங்கிணைந்த கோர்ட் வளாகத்தைத் திறந்தபோது 'பி' பிளாக்கை கட்டித் திறந்துவிட்டோம், ஆனால் 'ஏ' இல்லாமல் 'பி' வந்துவிட்டது. 'ஏ' பிளாக்கை நாம் கட்டவேயில்லை. அதிலே 7 கோடி ரூபாய்க்கு முதலிலே ஆணை பிறப்பிக்கப்பட்டு 3½ கோடி ரூபாய் முதலிலே release-ஆகி ஒரு part 'பி' பிளாக் வந்துவிட்டது. 'ஏ' பிளாக் இன்னும் வராமலே இருக்கிறது. கொஞ்சம் நாட்களுக்கு முன்பு கேள்விப்போட்டபோதுகூட நம்முடைய அமைச்சர் அவர்கள் உரிய நேரத்திற்குப் பிறகு நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொன்னார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள்— நிதியை பக்கத்திலே இருக்கின்றவர்களிடமிருந்து கையாளவில்லை என்று கல்வியமைச்சர் அவர்கள் சொன்னாலும்கூட, நிதியைத் தன்னகத்தே வைத்துக்கொண்டிருக்கக்கூடிய நம்முடைய மாண்புமிகு முதல்வரவர்கள்— கருணையோடு எங்களுக்கு-இன்னுமொரு 3½ கோடி அல்லது 4 கோடி வரும்-ஏ பிளாக்கை உடனடியாக நீங்கள் கட்டுவதற்கு ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-40

அங்கே கேன்டீன் இல்லாமல் இருக்கிறது. அதற்கான புரொவிஷன் எல்லாம் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் இதுவரை ஏலம் விட்டு ஒரு கேன்டீனை வைக்க முடியாமல் இருப்பது ஏன் என்று எனக்குப் புரியவில்லை.

அதேபோல, அங்கே இருக்கக்கூடிய கார், மோட்டார் சைக்கிள், சைக்கிள் எல்லாம் நிறுத்தப்படுவதற்கு ஒரு ஷெட் கட்டாத காரணத்தினாலே கோர்ட் பூரா சைக்கிள்களையும், மோட்டார் சைக்கிள்களையும் உள்ளே தள்ளி விட்டு விடுகிறார்கள், நடப்பதற்கே வழியில்லை. ஆகவே, உடனடியாக ஒரு கார் ஷெட், அதேபோல இருக்கக்கூடிய மோட்டார் சைக்கிளுக்கு என்று ஷெட், சைக்கிளுக்கு என்று ஸ்டாண்டு என்று கட்டி வைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

வாணியம்பாடியிலே நம்முடைய மாண்புமிகு மூத்த உறுப்பினர் லத்தீப் அவர்கள் இங்கே பேசுகிறபொழுது சொன்னார்கள். அங்கே

ஒரு District Munsif's Court தனியாக வேண்டுமென்று. ஏற்கெனவே அது இருக்கிறது. ஏற்கெனவே இருந்த மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டோடு அதை இணைத்துவிட்ட காரணத்தினாலே பல்லாயிரக்கணக்கான கேஸ்கள் இப்பொழுது அங்கே பெண்டிங். 4 மாதங்களாக வக்கீல்கள் அங்கே போராடிக்கொண்டிருக்கிறார்கள். 4 மாதங்களாக Boycot பண்ணிக்கொண்டிருந்தாலும்கூட யாருமே அழைத்துப் பேசவில்லை. அதற்கு யாரும் ஒரு முடிவும் சொல்லவில்லை. அந்த இடத்திலே உடனடியாக இப்பொழுது நம்முடைய சட்டத் துறை அமைச்சர்கூட முதலிலே சொல்லும்பொழுது, வாணியம்பாடியை நம்முடைய உயர் நீதிமன்றம் பரிந்துரை செய்யவில்லை என்று சொன்னார்கள். பரிந்துரை செய்து ரொம்ப நாளாகிவிட்டது. அரசுதான் அதைக் கருத்திற்கொண்டு இன்னும் ஏற்றுக் கொள்ளாமல் இருக்கிறது என்பதை நான் தெரிவித்து, உடனடியாக அந்த இடத்திலே ஒரு District Munsif's Court-ஐக் கட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நீலகிரியிலே இப்பொழுது அந்த மாவட்ட நீதிமன்ற வளாகத்தை நெடுந்தொலைவிற்குக் கொண்டு போய் விடுவதாக அங்கே வக்கீல்களெல்லாம் போராடிக் கொண்டிருக்கிறார்கள். அதையும் மறுபரிசீலனை செய்து உடனடியாக நம்முடைய அரசு .....

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, இந்த அரசு ஒரு கோரிக்கையை ஏற்றுக்கொண்டுவிட்ட பிறகும் அதை விட மாட்டேன் என்று பேசுவது எந்த பாணி என்று தயவுசெய்து ஞானசேகரன் அவர்கள் சொல்லிக் கொடுத்தாரானால் அந்தப் பாணியைப் பற்றி ஆராய்ச்சி செய்யலாம். நீலகிரி விவகாரம் ஏற்கெனவே முடிந்துவிட்டது. இப்பொழுது முடிந்துபோன பிறகு போராடிக் கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னால், போராடுவதற்காகப் போராடினால் அதைப் பற்றிக் கவலை இல்லை. முடிந்த விஷயத்திற்காக ஏன் போராடுகிறார்கள்?

**திரு. சி. ஞானசேகரன்:** முடிந்துபோனதைக்கூட மாண்புமிகு முதல்வரவர்கள் சில நேரங்களிலே கோரிக்கையைக் கேட்டு மறுபரிசீலனை செய்கிற காரணத்தினாலேதான் இதைக் கேட்கிறார்கள் அவர்கள். ஆகவே, மாண்புமிகு முதல்வரவர்கள் மீண்டும் அதைப் பரிசீலனை செய்ய வேண்டும். ஏனென்றால் இப்பொழுது POTA பற்றிக்கூட நம்முடைய மாண்புமிகு முதல்வரவர்கள் இங்கே சொல்கிறபோது செலக்ட் கமிட்டிக்கு விடுவதாகச் சொல்லியிருக்கிறார்கள்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன, நீங்கள் கதை பேசிக்கொண்டிருக்கிறீர்கள்? கோரிக்கையை ஏற்றாகிவிட்டது என்று முதலமைச்சரவர்கள் சொல்கிறார்கள். உண்டா, இல்லையா என்று சொல்லுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** அதேயிடத்தில் கட்டுவதற்கு . . .

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, நீலகிரியிலே நீதிமன்றம் கட்டுவது சம்பந்தமான பிரச்சினையை திரு. முபாரக் போன்றவர்களும், அதைப்போலவே நம்முடைய திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் போன்றவர்களும் என்னிடத்திலே எடுத்துச் சொன்னார்கள். அங்கேயுள்ள வழக்கறிஞர்களும் வந்து சொன்னார்கள். அந்தக் கோரிக்கையை ஏற்று நீதிமன்றம் கட்டுகிற இடம் அவர்களுடைய முறையீட்டிலே சொன்னபடி வேறு இடத்திலேதான் கட்டப்படுகிறது; ஏற்கெனவே குறிப்பிட்ட இடத்திலே நீதிமன்றம் கட்டப்படவில்லை. இதைக்கூட தன்னுடைய சொந்தக் கட்சித் தலைவர்களிலே ஒருவரான பாலசுப்பிரமணியன் அவர்கள் இதற்காக வாதாடி, வெற்றி பெற்றதைக்கூட அறிந்துகொள்ளாமல் ஞானசேகரன் இருப்பது, சொந்தக் கட்சிக்குள்ளே உள்ள தொடர்பைத்தான் காட்டுகிறது.

**திரு. சி. ஞானசேகரன்:** பேரவைத் தலைவரவர்களே, சொந்தக் கட்சி என்று இல்லை; ஏற்கெனவே நம்முடைய அமைச்சர் இந்த அவையிலே சொன்னது—ஏனென்றால் நீங்கள் தனிப்பட்ட முறையிலே சொன்னது எங்களுக்குத் தெரியாது. அவையிலே மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சரவர்கள் வன்மையாக எதிர்த்தார்கள். இப்பொழுதுகூட இதைக்கூட நானாகச் சொல்லவில்லை. என்னுடைய நண்பர் அழகிரி அவர்கள் சீட்டிலே இப்பொழுது எழுதிக் கொடுத்து ..... (சிரிப்பு)

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, இந்தப் பணம் செல்லுமா என்று திருடன் கேட்டானாம்; செல்லும் செல்லாததற்குத் திண்ணையிலே செட்டியார் படுத்திருக்கிறார், போய்க் கேள் என்று சொன்ன அந்தக் கதையாக இருக்கிறது. (சிரிப்பு)

***திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரியிலே அந்த நீதிமன்ற வளாகம் மாற்றுவது சம்பந்தமாக முதலமைச்சரவர்கள் திரு. எஸ்.ஆர்.பி. அவர்களிடம் பேசியிருக்கிறார்கள். ஆனால், உள்ளூரிலே அது என்ன பிரச்சினை என்றால்

பத்திரிகைகளிலே அந்தச் செய்தி வரவில்லையே. முதலமைச்சரவர்கள் உங்களிடம் மட்டும்தானே ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். அதிகாரப்பூர்வமாக வரவில்லையே என்கின்ற ஒரு ஐயப்பாடு இருந்ததாகவும், எனவே, சட்டமன்றத்திலே ஒரு உத்தரவாதம் வாங்கி விட்டால் நலமாக இருக்கும் என்று அவர்கள் என்னிடம் சொன்னார்கள். எனவே, வாய்ப்புக் கிடைக்கிறபொழுது ஞானசேகரன் அவர்களிடம் சொல்லிச் சொல்லச் சொன்னேன். நீங்கள் உத்தரவாதம் கொடுத்திருக்கிறீர்கள். நன்றி.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தந்திரத்திற்குப் பாராட்டு.

*பிற்பகல் 12-45*

**திரு. சி. ஞானசேகரன்:** எப்படியோ நீலகிரி கோர்ட் பற்றிய கோரிக்கை நிறைவேறியதற்கு நன்றி. அதைப்போல, பேராவூரணியைச் சேர்ந்த நம்முடைய அருமை நண்பர் திருஞானசம்பந்தம் அவர்கள், பேராவூரணியில் தாலுகா தலைமையிடத்தில் எந்தவிதமான நீதிமன்றமும் இல்லை என்று வருத்தப்பட்டுக்கொண்டு இருக்கிறார்கள். பவானி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.என். பாலசுப்பிரமணியன் அவர்கள் அங்கே இருக்கின்ற நான்கு கோர்ட்டுகள் வாடகைக் கட்டடங்களில் ஆங்காங்கே இயங்கிக்கொண்டு இருப்பதாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அதற்கெல்லாம் நிரந்தரமாகக் கட்டடம் கட்டித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கோரிக்கைகளை விட்டுவிட்டு பொதுப் பிரச்சினைக்கு வருகிறேன். Sandal Wood Court என்று அரசு இரண்டு இடங்களில் வைத்திருக்கிறது. ஒன்று திருப்பத்தூரிலும் இன்னொன்று சேலத்திலும் வைத்திருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு நிமிடம்தான்.

**திரு. சி. ஞானசேகரன்:** நான் இதுவரைக்கும் என் தொகுதி சம்பந்தப்பட்டதற்கே வரவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் வருகிறவரைக்கும் நான் காத்திருக்க வேண்டுமா? ஒரு நிமிடத்தில். பேசி முடியுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** சபாநாயகர் அவர்கள் எங்களுக்காகக் காத்திருப்பார்கள் என்ற நம்பிக்கையோடு.........



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதெல்லாம் முடியாது. தனிப்பட்ட உறுப்பினருக்காகக் காத்திருக்க முடியாது.

**திரு. சி. ஞானசேகரன்:** உங்கள் தொகுதிக்கு உயர் நீதிமன்றக் கிளை வேண்டுமென்று நாங்கள்தானே இங்கே பேசுகிறோம்? (சிரிப்பு) Sandal Wood case-களை கவனிக்க ஸ்பெஷல் கோர்ட்டுகளை நாம் அமைத்தோம். ஆனால், சேலத்திலும் திருப்பத்தூரிலும் இருக்கக்கூடிய Sandal Wood case-களிலே நிறைய வழக்குகள் தேங்கியிருப்பதால், bail எடுப்பதோடு கதை முடிந்துவிடுகிறது. விசாரணைக்கே வருவதில்லை. ஆகவே அந்தத் தனி நீதிமன்றத்தைக் கலைத்துவிட்டு பழையபடி மாஜிஸ்டிரேட் கோர்ட்டிலேயே அவர்கள் அந்த வழக்குகளை நடத்திக்கொள்ளலாம் என்ற நிலையை நீங்கள் உருவாக்கித் தர வேண்டுமென்று இந்த அரசை நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, விவசாயக் கூலிகளுக்குக்கூட குறைந்தபட்சக் கூலியை இந்த அரசாங்கம் நிர்ணயித்து, பெண்களுக்கு என்று சொன்னால் 45 ரூபாய், ஆண்களுக்கு என்று சொன்னால் 54 ரூபாய் என்று நிர்ணயம் செய்திருக்கிறார்கள். ஆனால், வக்கீல்கள் நிலைமை மிக மோசமாக இருந்துகொண்டிருக்கிறது. அதிலே போட்டாபோட்டி காரணமாக, இன்னும் சொல்லப்போனால், பத்து ரூபாய்க்கு, ஐந்து ரூபாய்க்கெல்லாம் bail போடுகிற நிலைமை வந்துவிட்டது. ஆகவே, இதற்கும் ஒரு minimum fees என்ற ஒன்றை வைத்து வழக்குகளுக்கு ஒரு தரத்தை உருவாக்கவேண்டுமென்று சொன்னால், இதிலே இருக்கக்கூடிய unhealthy competition என்பதை நாம் விலக்க வேண்டும். இது இதற்கு minimum fees என்று fix செய்து அவர்களுக்கு நல்ல வளத்தை உருவாக்கித் தர வேண்டும். அதேபோல, ஒரு வக்கீல் இறந்துவிட்டால், Advocate Welfare Fund-லிருந்து 5 லட்சம் ரூபாய் கொடுப்பதற்கு அரசு ஆவன செய்ய வேண்டும். Broker-களுக்குக் கிடைக்கக்கூடிய வருவாய் கூட இப்போது வக்கீல்களுக்குக் கிடைக்கவில்லை. ஆனால் tout-களுக்குத்தான் அதிகமாக வருவாய் கிடைத்துக் கொண்டிருக்கிறது. அந்த tout system என்பதை முழுக்க முழுக்க ஒழித்துவிட்டு வக்கீல்கள் பிழைப்பதற்கு இதிலே வழி செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

நம்முடைய சென்னை உயர் நீதிமன்றத்திலே நிறைய சேம்பர்கள் கேட்டு வழக்கறிஞர்கள் மனு போட்டுக்கொண்டிருக்கிறார்கள். வக்கீல்கள் பெருகிவிட்டார்கள். அதற்குத் தகுந்தாற்போல,

உயர் நீதிமன்றத்திலே நிறைய சேம்பர்களை கட்டி வாடகைக்கு விடுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நம்முடைய சிறைச்சாலைகள் பற்றிச் சொல்லவேண்டுமென்று சொன்னால், சிறைச்சாலைகள் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அவையில் சொன்னபோது, ஆயுதங்களே கைப்பற்றப்படவில்லை, எப்போதும் அதிகாரிகளுடைய கட்டுப்பாட்டில்தான் சிறைகள் இருக்கின்றன என்று சொல்லிக்கொண்டிருந்தாலும்கூட இன்றையதினம் பத்திரிகையைப் பார்த்தால்கூட, கோவையில் முன்னாள் சிறைக் கண்காணிப்பாளராக இருந்த மூர்த்தி என்பவர் சஸ்பெண்ட் செய்யப்பட்டிருக்கிறார் என்று செய்தி வந்திருக்கிறது. சில உண்மைகளை நம்முடைய அமைச்சர் ஒத்துக்கொள்ளவேண்டும். ஏனென்றால் எல்லாவற்றையும் நாம் மூடி மறைத்தால் இன்றைக்கு நாட்டிலே நடப்பதையெல்லாம், உண்மையை மறைத்துவிட்டு அமைச்சர் தவறான தகவல்களை இந்த அவைக்குத் தருகிறார் என்று . . .

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறைக் கண்காணிப்பாளர் மீது இன்றையதினம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்றால், சிறைக்குள்ளே ஆயுதம் இருந்தது, அதனால் நடவடிக்கை எடுக்கப்பட்டது என்ற அர்த்தத்தில் மாண்புமிகு உறுப்பினர் சொல்வது தவறான தகவல்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மன்னிக்கவும். தலைவர் அவர்களே, தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியினுடைய சட்டமன்ற உறுப்பினர் ஆருண் அவர்கள் பேசுகின்றபோது, முஸ்லீம் தீவிரவாதிகள் யாரும் சிறைச்சாலைக்குள் ஆயுதங்கள் வைத்திருக்கவில்லை, வேண்டுமென்றே அதிகாரிகள் அவர்கள்மீது பழியைச் சுமத்தி அவர்களைக் கொடுமைப்படுத்துகின்றார்கள் என்று பேசுகின்றார். அதையும் கேட்டுக்கொண்டுதான் இருந்தேன். அதே கட்சியில் இருக்கக்கூடிய ஞானசேகரன் அவர்கள் பேசும்போது சிறைச்சாலையில் தீவிரவாதிகள் ஆயுதங்களை வைத்துக்கொண்டு இருக்கிறார்கள் என்று இங்கே பேசுகின்றார். நான் இருவரையுமே கேட்டுக்கொள்வது, இந்த இரண்டையும் பேசுகின்ற காரணத்தால் தேவையில்லாத ஒரு சர்ச்சையை - அனைவரும் சேர்ந்து பாடுபட்டு உருவாக்கியிருக்கின்ற அமைதியை நாமே கெடுத்துவிடுவதற்குக் காரணமாகிவிடுமோ என்ற அச்சம் எனக்கு இருக்கிறது. ஆகவே, இந்த விஷயங்களைத் தவிர்ப்பது நல்லது என்று கருதுகிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மொத்தத்தில், திரு. ஞானசேகரன் சீக்கிரம் பேசி முடியுங்கள், இன்னும் ஒரு நிமிடம்தான் கொடுப்பேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றி. தீவிரவாதிகள், இந்த இனத்திற்குச் சொந்தக்காரர்கள், இன்ன ஜாதிக்குச் சொந்தக்காரர்கள் என்று நான் சொல்லவில்லை. தீவிரவாதிகளைப் பற்றி பொதுப்படையாகச் சொல்லிக்கொண்டிக்கிறேனே தவிர எங்களுக்குள்ளே கருத்து வேறுபாடு என்பது இல்லை. தீவிரவாதிகள் என்றால், முஸ்லீம் தீவிரவாதிகள் என்றோ இந்து தீவிரவாதிகள் என்றோ அல்லது வேறு தீவிரவாதிகள் என்றோ பொருள் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் உங்களுக்கு ஒரு நிமிடம் தான் பேச அனுமதி கொடுத்திருக்கிறேன். நீங்கள் திரும்பவும் அதையே பேசிக்கொண்டிருக்கிறீர்கள். வேறு ஏதாவது சொல்வது என்றால் சொல்லுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** சிறையில் வழங்கப்படக்கூடிய உணவுகளைக் கொஞ்சம் தரமாக வழங்கவேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். உணவுப் பொருட்களை வாங்குகிறபோது ஆங்காங்கே இருக்கின்ற கூட்டுறவு நிறுவனங்களிடமிருந்து வாங்குகிறார்கள். அதற்கான அரசாணையும் இருக்கிறது. இதிலே அங்கே இருக்கக்கூடிய உணவுத் துறைக்கும் சிறைத் துறைக்கும் கருத்து வேறுபாடு இருக்கிறது என்று நினைக்கிறேன். அதற்காக நான் சென்ற ஆண்டு ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டுவந்தபோதுகூட அந்தப் பொருட்களையெல்லாம் அங்கே இருக்கக்கூடிய சூப்பர் மார்க்கெட்டில் வாங்கலாம் என்று சொல்லப்பட்டது. ஆனால் அந்த முறையைத் தவிர்த்துவிட்டு சிலபேர் சொந்தச் செல்வாக்கைப் பயன்படுத்தி தனியாரிடமிருந்து பொருட்கள் வாங்குகிற காரணத்தால் தனியாருக்குத்தான் அந்த லாபம் போய்க்கொண்டிருக்கிறது. சிறை நிர்வாகங்கள் எல்லாம் கூட்டுறவுத் துறையில்தான் பொருட்களை வாங்கவேண்டுமென்ற நியதியை மாண்புமிகு முதல்வர் அவர்கள் உருவாக்கித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

புழல் பகுதியிலே ஒரு சிறையைக் கட்டினோம். ஐந்தாறு கோடி ரூபாய் செலவழித்திருக்கிறோம். அதில் அகதிகளை வைத்திருந்தோம். இப்போது யாருமே இல்லை. அந்தப் புழல் சிறையிலே மாற்றங்கள் செய்து உண்மையான சிறைச்சாலையாக மாற்றி அங்கே சிறைக் கைதிகளை வைப்பதற்கு அரசு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிறபகல் 12-50

சிறையில் இருக்கக்கூடியவர்கள்பற்றி இங்கே மாண்புமிகு உறுப்பினர் பெரியசாமி பேசும்போது, மற்ற மாநிலங்களில் ஆயுள் தண்டனைக் கைதிகள் 10 ஆண்டுகளில், சில நேரங்களில் கேரளா போன்ற மாநிலங்களில் 8 ஆண்டுகளிலே விடுதலை செய்யப்படுகிறார்கள் என்ற கருத்தைச் சொல்லி, அவர்களை விடுதலை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். எனவே, மாண்புமிகு முதல்வரவர்கள் இதைப் பரிசீலனை செய்து, ஆயுள் தண்டனைக் கைதிகள் 7 ஆண்டு காலம் அல்லது 8 ஆண்டு காலம் சிறையில் காலம் கழித்த பின்னால் அவர்களை விடுதலை செய்வதற்கு அரசு கருணை அடிப்படையில் விதிகளை மாற்றலாம் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, பாளையங்கோட்டை சிறையில் பணியாற்றிக் கொண்டிருக்கின்றவர்கள் 8 மணி நேர வேலை வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள், மாண்புமிகு அமைச்சரவர்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** உரையை முடித்து விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** சிறைச்சாலைகளில் பணியாற்றிக் கொண்டிருக்கக்கூடியவர்கள் மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையான சம்பளத்தைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். 8 மணி நேர வேலை வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். இவற்றையெல்லாம் மாண்புமிகு முதல்வர் அவர்களும், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களும் கனிவோடு பரிசீலித்து, அவர்களுக்குச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, POTA-வை அன்றைய சூழ்நிலையில் நாம் கொண்டு வந்தோம். மாண்புமிகு முதல்வரவர்கள் Select Committee-க்கு அனுப்ப வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். இப்போது இருக்கக்கூடிய சட்டமே ஓரளவுக்கு சட்டம்-ஒழுங்கைக் கட்டுப்படுத்திக் கொண்டிருக்கின்ற காரணத்தினாலே, இனி அது தேவையில்லை என்றுகூட வாபஸ் வாங்கிக் கொள்ளலாம் என்று பணிவன்போடு தெரிவித்து, வாய்ப்பிற்கு நன்றி சொல்லி, அமைகிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சரவர்கள்.

**திரு. பி. ஆர். சுந்தரம்:** பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சுந்தரத்திற்கு அனுமதி கிடையாது, உட்காருங்கள். என்னுடைய அறையில் வந்து கேட்டீர்கள். உங்களுக்குப் பேசுவதற்கு வாய்ப்பு கிடையாது என்று சொல்லியாயிற்று, உட்காருங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** எதிர்க்கட்சி சார்பில்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எந்தக் கட்சி சார்பிலும் வேண்டாம். எதிர்க்கட்சி சார்பில் நீங்கள்தான் என்றில்லை, உட்காருங்கள். நீங்கள் உட்காருகிறீர்களா இல்லை வெளியேற்றவா?

**திரு. பி.ஆர். சுந்தரம்:** எங்கள் கட்சியைச் சேர்ந்த இரண்டு பேரை வெளியேற்றி விட்டீர்கள். என்னையும் வெளியேற்றி விடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்த மிரட்டல் எல்லாம் என்னிடம் வைத்துக்கொள்ளக்கூடாது. நீங்கள் முறையில்லாமல் தினமும் நடந்துகொள்கிறீர்கள். இப்படிச் செய்தால் கண்டிப்பாகச் அதைச் செய்வேன். மாண்புமிகு சட்டத் துறை அமைச்சரவர்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** முக்கியமான இரண்டு மானியக் கோரிக்கைகள், பேசுவதற்கு அனுமதி வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுக்கு அனுமதி கிடையாது.

(திரு. பி.ஆர். சுந்தரம் நின்று கொண்டே இருந்தார்)

இப்போது நீங்கள் உட்காருகிறீர்களா, இல்லையா? மாண்புமிகு உறுப்பினர் சுந்தரத்தை வெளியேற்றுங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** எனக்குப் பேச அனுமதி வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவரை வெளியேற்றுங்கள்.

**(அவைக் காவலர்கள் அவையினுள் நுழைந்து** திரு. பி.ஆர். சுந்தரம் **இருக்கையை நோக்கிச் சென்றனர்.** திரு. பி.ஆர். சுந்தரம் **அவரது இருக்கையில் அமர்ந்து கொண்டார்.)**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொறுமையைச் சோதித்துக்கொண்டிருக்கிறார். அவரை உட்கார விடாமல் வெளியேற்றுங்கள். இந்த நாடகம் தினமும் நடந்து கொண்டிருக்கிறது. அவரை வெளியேற்றுங்கள்.

(திரு. பி.ஆர். சுந்தரம் பேரவைக் காவலர்களால் அவையிலிருந்து வெளியேற்றப்பட்டார். வெளியேற்றப்படும்போது அவர் ஏதோ கோஷமிட்டுக்கொண்டே சென்றார்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் பதிலுரை.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான்காவது முறையாக நாடாளுகின்ற டாக்டர் கலைஞர் அவர்கள், நான்காவது முறையாக இந்த மானியக் கோரிக்கைகளை முன்மொழிந்து அதற்கு விளக்கமளித்து, பதிலளிக்கின்ற அரிய வாய்ப்பை எனக்குத் தந்ததற்காக, தமிழினத்தினுடைய ஒப்பற்ற தலைவர், ஒரே தலைவர், டாக்டர் கலைஞர் அவர்களுக்கு என்னுடைய நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்து, என்னுடைய பதிலுரையை நான் தொடங்குகின்றேன்.

இந்த மானியக் கோரிக்கைகள்மீது அன்புச் சகோதரர் மாண்புமிகு உறுப்பினர் சொக்கர், மாண்புமிகு உறுப்பினர் விஜயகுமார், மாண்புமிகு உறுப்பினர் அப்துல் லத்தீப், மாண்புமிகு உறுப்பினர் பெரியசாமி, மாண்புமிகு உறுப்பினர் ஆரூண் ரஷீத், மாண்புமிகு உறுப்பினர் ஆண்டமுத்து, மாண்புமிகு உறுப்பினர் ராஜேந்திரன், மாண்புமிகு உறுப்பினர் வல்லரசு, மாண்புமிகு உறுப்பினர் இராமச்சந்திரன், மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் போன்றவர்கள் அரிய கருத்துக்களை, உயர்ந்த எண்ணங்களை, மக்களுக்குத் தேவையான விளக்கங்களை எல்லாம் இந்த மாமன்றத்திற்குத் தந்தார்கள். அவர்களுக்கெல்லாம் என்னுடைய நன்றியையும், பாராட்டையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அவர்கள் எழுப்பிய கோரிக்கைகளை எல்லாம் என்னால் நிறைவேற்ற முடியாமல் இருக்கலாம். ஆனால் அந்தக் கோரிக்கைகள் எல்லாம் நியாயமற்றவை, தேவையற்றவை என்று துளியும் நினைப்பவன் அல்ல நான். அவர்களுடைய உணர்வுகளை, அவர்களுடைய எண்ணங்களைப் புரிந்தவன். இன்று இல்லாவிட்டால் நாளை, நாளை இல்லாவிட்டால், மறுநாள், என்றைக்காவது அவைகளுக்கெல்லாம் செயல் வடிவம் கொடுக்க வேண்டுமென்பதில் இந்த அரசுக்கு உறுதி இருக்கிறது



என்பதை அவர்களுக்கு நான் முதலிலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நீதி, ஓர் அரசுக்கு எவ்வளவு முக்கியம், அது எவ்வளவு தலையாயது என்பதைப்பற்றி வான்புகழ் கொண்ட தேன்மொழி ஆசான் வள்ளுவப் பெருந்தகை ஓர் அற்புதமான குறளில் குறிப்பிட்டிருக்கிறார்.

*'அறனிழுக்கா தல்லவை நீக்கி மறனிழுக்கா*
*மானமுடைய தரசு.'*

என்று சொல்லியிருக்கிறார். அதற்கு எத்தனையோ பேர் உரை எழுதி இருக்கிறார்கள். ஆனால், நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் எழுதியிருக்கின்ற உரைதான் வள்ளுவனுடைய உணர்வை, உள்ளத்தை, முழுக்க முழுக்கப் பிரதிபலிப்பதாக அமைந்திருக்கிறது.

பிற்பகல் 12-55

கலைஞர் அவர்கள் அதற்கு ஓர் உரை எழுதியிருக்கிறார்கள். அறநெறி தவறாமலும் குற்றம் ஏதும் இழைக்காமலும் வீரத்துடனும் மானத்துடனும் ஆட்சி நடத்துபவர்களே சிறந்தவர்கள் என்று எழுதியிருக்கிறார்கள். எனவே, ஓர் ஆட்சிக்கு நீதி வேண்டும், நியதி வேண்டும், அதைவிட மானம், சூடு, சுரணை வேண்டும்; அதன் அடிப்படையில் ஆட்சி நடத்த வேண்டுமென்று அந்தக் குறளுக்கு விளக்கம் அளித்திருக்கிறார்கள். அதேபோன்றுதான் உலகத்திலேயுள்ள அரசியல் மேதைகள் எல்லாம் ஓர் அரசுக்கு நீதி, நெறி, மையமான ஓர் கொள்கையாக இல்லாவிட்டால் அந்த அரசிலே நீதி இல்லாவிட்டால் அந்த அரசுக்கு கொள்கையே இல்லை என்ற நிலை எல்லாம் ஏற்பட்டுவிடும். எனவே, ஒரு நிர்வாகம், ஓர் ஆட்சி, நீதித் துறையை மையமாகக் கொண்டது என்பதை உலகத்திலேயுள்ள மேதைகள் எல்லாம் தெளிவாக சுட்டிக்காட்டியிருக்கிறார்கள்.

கடந்த மார்ச் மாதம் 17 ஆம் தேதி மாண்புமிகு முதல்வர் அவர்கள் நிதிநிலை அறிக்கையை இந்த மாமன்றத்திலே சமர்ப்பித்தபோது 18,530 கோடி ரூபாய் வருகிற நிதியாண்டில் செலவாகும் என்று அவர்கள் மதிப்பிட்டிருக்கிறார்கள். இதில் நீதித் துறைக்கு ரூ.140.31 கோடிதான். இது சிறிய தொகைதான். சிறிய தொகையானாலும் போதுமான தொகை என்று நினைப்பவன் நான். சிறிய தொகை என்றாலும் தேவையான தொகை இருக்கிறது என்று கருதுகிறவன் நான். ஆனால், சிலர் இதைச் சிறிய தொகை என்று இன்னும்கூட கருதிக்கொண்டு இருக்கிறார்கள். ஆனால் இந்தச் சிறிய தொகைதான், இந்தச் சிறிய

தொகையின் மூலம் நடத்துகின்ற நிர்வாகம்தான், சட்டம்-ஒழுங்கைக் காப்பாற்றத் துணை புரிகிறது. இந்தச் சிறிய தொகை மூலம் நடத்துகின்ற நிர்வாகமதான் சமூக விரோதிகளைத் தண்டிக்கிறது. இந்தச் சிறிய தொகை மூலம் நடத்துகின்ற நிர்வாகம்தான் சட்டத்தின் நியாயத்தை நிலை நாட்டுகிறது, சமுதாயத்திற்குப் பாதுகாப்பு அளிக்கிறது, உரிமைக்குக் காவலாக விளங்குகிறது. ஊழல் பேர்வழிகளை உள்ளே நுழைப்பதற்கு உருவிய வாளுடன் செயல்படுகிறது என்பதையும் இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். எனவே, சிறிய தொகை பெரிய காரியத்தைச் சாதிக்கிறது, சிறிய விளக்கு பெரிய இருளை அகற்றிவிடுகிறது, சிறிய திறவுகோல் பெரிய அரண்மனையைத் திறக்கிறது, சிறிய அச்சாணி பெரிய தேர் நகர்வதற்கு ஆதாரமாக விளங்குகிறது. அதேபோன்று, 140 கோடி ரூபாயில் தான் அவ்வளவு பெரிய உயர்ந்த சிறந்த நற்பணிகளை நீதித் துறை செய்கிறது என்பதை சுட்டிக்காட்ட நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

இப்போது தமிழகத்தில், சென்னையிலே உயர் நீதிமன்றத்தில் 28 நீதிமன்றங்கள்—High Court-லே 28 நீதிமன்றங்கள் இருக்கின்றன. இவற்றுக்கு உரிய இடங்கள் 42, ஆனால் இப்போதிருக்கிற நீதிபதிகள் 31 பேர்கள் தான். மாவட்ட நீதிமன்றங்கள் 71 இருக்கின்றன. சார்பு நீதிமன்றங்கள் 82 இருக்கின்றன. வட்ட அளவில் இருக்கின்ற நீதிமன்றங்கள் 381 ஆகும். ஆகவே, சென்னையில் இருக்கிற உயர் நீதிமன்றம் நீங்கலாக தமிழகத்தில் 534 நீதிமன்றங்கள் இருக்கின்றன. இதனாலே நம்முடைய தேவைகள் முடிந்துவிட்டன என்று நான் சொல்லவில்லை. இன்னும் புதிதாக உருவாக்கப்பட்ட மாவட்டங்களில் 4 மாவட்டங்களுக்கு மாவட்ட நீதிமன்றம் இல்லை. நாமக்கல்லில் இல்லை, திருவாரூரில் இல்லை, திருவள்ளூருக்கு இல்லை, தேனிக்கு இல்லை. அதேபோன்று நீதிமன்றங்கள் இல்லாத கோட்டங்கள்—Revenue Division 15. 15 கோட்டங்கள் இருக்கின்றன. புதிதாக அமைக்கப்பட்ட தாலுகாக்களோடு ஒப்பிட்டுப்பார்த்தால் 36 வட்டங்களில் இன்றையதினம் நீதிமன்றங்கள் இல்லை. தமிழ்நாட்டிலே உள்ள மொத்த தாலுகாக்கள், வட்டங்கள், மொத்த மாவட்டங்கள் சென்னை நீங்கலாக 28. ஆனால் நம்மிடத்திலே இருக்கிற நீதிபதிகள் 42. கோட்டங்கள் 73, நீதிபதிகள் 82. வட்டங்கள் 201, அங்கே நீதிபதிகள் 382. இதை நான் எதற்காகச் சொல்கிறேன் என்றால் பல மாண்புமிகு உறுப்பினர்கள் எங்கள் ஊருக்கு நீதிமன்றங்கள் வேண்டும், உடனடியாக வேண்டும், நீண்டநாள் கோரிக்கையாக இருக்கிறது. வாக்குறுதி கொடுக்கப்படுகிறது, ஆனால் அமலாக்கப்படவில்லை



என்றெல்லாம் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். நான் அவர்களுக்கு மெத்தப் பணிவோடு தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுவதெல்லாம் நம்முடைய வட்டத்திற்கு அதிகமான நீதிமன்றங்கள், கோட்டத்திற்கு அதிகமான நீதிமன்றங்கள், மாவட்டத்திற்கு அதிகமான நீதிமன்றங்கள்—District Court-கள் எல்லாம் இருக்கின்றன. இவை தொடர்பாக பேசி முடித்து சில நகரங்களிலே இருக்கிற நீதிமன்றங்களை மாற்றி அமைப்பதன் மூலம் நம்முடைய அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யலாம். இதுபற்றி நான் உள் துறைச் செயலாளரிடம் பேசினேன். சட்டத் துறைச் செயலாளர் அவர்களிடத்திலே பேசினேன். Registrar, High Court-பதிவாளர், உயர் நீதிமன்றம் அவர்களிடத்திலே பேசினேன் எனவே, இன்னும் மூன்று மாதங்களுக்குள் இது தொடர்பாகப் பேசி எந்த எந்த நீதிமன்றங்களை எல்லாம் நகரங்களுக்கு மாற்றலாம், அதன் மூலம் நம்முடைய தேவைகளைப் பூர்த்தி செய்யலாம் என்று நாங்கள் முடிவு எடுத்திருக்கிறோம். அப்படி ஒரு முடிவு எடுக்கும்போது பல கோட்டங்களுக்கு, பல வட்டங்களுக்கு, சில மாவட்டங்களுக்கு உறுதியாக நீதிமன்றம் கிடைக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒருவேளை நாங்கள் அதிக நீதிமன்றம் திறக்கவில்லை என்று யாரும் தவறாக நினைத்துக் கொள்ளக்கூடாது. கடந்த கால ஆட்சியில் 41 நீதிமன்றங்கள்தான், ஐந்து ஆண்டுகளில் 41 நீதிமன்றங்கள்தான் திறந்தார்கள். ஆனால் டாக்டர் கலைஞர் அவர்கள் கடந்த 3 ஆண்டுகளுக்குள் 103 நீதிமன்றங்களுக்கு அனுமதி தந்திருக்கிறார்கள். அவர்கள் காலத்தில், ஆண்டு ஒன்றுக்கு 8 நீதிமன்றங்கள், நமது காலத்தில் 33 நீதிமன்றங்களுக்கு மேல் - அவ்வளவு நாம் திறந்திருக்கிறோம். அரசு எவ்வளவு முனைப்போடு செயல்படுகிறது எப்படி உங்கள் குரலை மதிக்கிறது, எப்படி உங்கள் கோரிக்கையை ஏற்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் எண்ணிப் பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

பிற்பகல் 1-00

அதுபோல, நீதிமன்றக் கட்டடங்கள் வேண்டும், பழுதுபார்க்கப்பட வேண்டும். இவற்றில் எல்லாம் மாறுபட்ட கருத்தே இல்லை. நீங்கள் யாரும் பொழுதுபோக்கிற்கு, ஆடம்பரத்திற்கு எந்தக் கோரிக்கையையும் வைக்கவில்லை, அடிப்படைத் தேவைக்குத்தான் வைக்கிறீர்கள். கடந்தகால ஆட்சியில் இதுபோன்ற நீதிமன்றக் கட்டடங்களுக்கும் நீதி அரசருடைய குடியிருப்புகளுக்கும் செலவழித்த பணம் ரூ.14.34 கோடி.

சொல்லப்போனால் 14½ கோடி ரூபாய் செலவு செய்தார்கள். ஆனால், இதுவரையில் 21.36 கோடி ரூபாய் செலவு செய்திருக்கிறோம் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள நான் விரும்புகிறேன்.

இங்கே பேசிய உறுப்பினர்கள் பெரும்பான்மையோர் ஒரு கருத்தை மையமாக வைத்துச் சொன்னார்கள். அவர்களுடைய கருத்திலே எனக்கு உடன்பாடு உண்டு, மாறுபாடு கிடையாது. வழக்குகள் எல்லாம் தேங்கிக் கிடக்கின்றன. தேங்கிக்கிடக்கின்ற வழக்குகளை, இத்தனை நீதிமன்றங்கள் தொடங்கப்பட்ட பிறகும், இத்தனை நீதிபதிகள் நியமித்தபிறகும் இன்னும் இந்த வழக்குகளினுடைய எண்ணிக்கை ஏன் அதிகரித்துக்கொண்டே போகிறது, ஏன் குறையவில்லை என்ற கேள்வி எழுப்பப்படுகிறது. இது நியாயமான கேள்வி. இப்போது இதற்குப் பதில் அளிப்பதாக இருந்தால், அதற்கென ஒரு மணி நேரம் தேவை. நான் அதிகமாக அதை விளக்க ஆசைப்படவில்லை, ஏனென்றால் அரசியல், சட்டரீதியாக சில மாற்றங்களை செய்தாலொழிய இதற்கு நாம் எதிர்பார்த்த தீர்வை, விரைவில் நிச்சயமாகப் பெற முடியாது என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். அதே நேரத்தில் நீதி, காலம் கடத்தப்படக்கூடாது. காலம் கடத்தப்படுமானால் நீதி கிடைக்காமலே போய்விடும். இன்றைக்கு நீதிமன்றத்திற்கு வருபவர்கள் எல்லாம் நீதி கிடைக்க வேண்டுமென்பதற்காக வருபவர்கள் அல்ல. நீதியைச் சொல்லிவிடக் கூடாது என்பதற்காகவே நீதிமன்றத்திற்கு வருகிறார்கள். அதை நாம் மறந்துவிடக் கூடாது. முன்னாள் முதல்வர் தன்னுடைய வழக்குகளை எப்படிச் சந்திக்கிறார்கள் என்பதைப் பாருங்கள். அவரைப்போல 10 பேர்கள் தமிழ்நாட்டில் இருந்தால் நீதிமன்றமே செயல்படாது. அதாவது மனுக்களைத் தொடுப்பார்கள். வழக்குகளை நடத்த விடாமல் தடங்கலாக இருப்பார்கள் என்பதை மறந்துவிடக்கூடாது. எனவே, இந்த அரசைப் பொறுத்த அளவில் காலம் தாழ்த்தக்கூடாது, காலம் தாழ்த்துவது தவறு என்பதிலே எங்களுக்கு உடன்பாடு உண்டு. அந்த உணர்வுடன் உங்களோடு ஒன்றியிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன். "Justice delayed is Justice denied" என்று இங்கிலாந்து நாட்டின் பிரதமராக இருந்த கிளாட்ஸ்டன் அவர்கள் சொன்னார். "Justice delayed is worse than injustice"—நீதி காலம் கடத்தப்படுமானால் அது அநீதியைவிடக் கொடுமையானது என்று பைரன் சொன்னார். இன்னும் அதைவிட ரிச்சர்டு நிக்சன், அதாவது குடியரசுத் தலைவராக இருந்த ரிச்சர்டு



நிக்சன் குறிப்பிட்டார், "Justice delayed is not only 'justice denied'—" நீதி காலம் கடத்தப்பட்டால் அது மறுக்கப்படுகிறது என்பது மட்டுமல்ல "..it is also 'justice circumvented." இது புறக்கணிக்கப்படுகிறது, மாற்றப்படுகிறது, அதுமட்டுமல்ல 'Justice mocked'— நகைக்கப்படுகிறது. "System of justice is undermined"—அது கீழாக மதிக்கப்படுகிறது என்று குடியரசுத் தலைவர் அவர்களே சொல்லியிருக்கிறார்கள். இன்னொருவர் ரொம்ப குறிப்பாக அழகாகச் சொன்னார். "Delay in justice is injustice"— நீதியில் காலம் கடத்துவதே அநீதி என்று சொன்னார். இப்படியெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். இந்த மன்றத்திலே இருப்பவர்கள் இதனை உணர வேண்டும் என்பதற்காகச் சொல்லவில்லை. நீதிமன்றத்திலே இருப்பவர்களும் இதை உணர வேண்டும் என்ற அடிப்படையில் இந்தக் கருத்தைச் சொல்கிறேன் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 1-05

இங்கே பேசிய நண்பர்கள் எல்லாம், குறிப்பாக மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள், மூன்று ஆண்டுகளுக்கு முன்னாலே கூடுதல் நீதிமன்றங்கள் அமைத்தாகிவிட்டது, தனி நீதிபதிகள் எல்லாம் அமைத்தாகிவிட்டது, இந்த வழக்குகள் எல்லாம் இன்னும் ஆமை வேகத்தில்தானே இருக்கின்றன, ஏன் வேகமாக நடக்கவில்லை, எதற்காக அவர்களைக் கூண்டிலே நிறுத்தவில்லை, ஏன் அவர்களை தண்டிக்கவில்லை, பெனாசிர் பூட்டோவிற்கு நடந்திருக்கின்ற கேலி உங்களுக்குத் தெரியாதா, இன்று காலையிலே பத்திரிகையிலே படிக்கவில்லையா என்ற அடிப்படையில் கருத்துக்களையெல்லாம் இங்கே சொன்னார்கள். நான் இந்த மன்றத்திலே தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுவது என்னவென்றால், முன்னாள் முதலமைச்சர், அவர்களுடைய கூட்டாளிகள் ஆகியவர்கள் மீது 53 வழக்குகள் தொடுக்கப்பட்டிருக்கின்றன. 46 அல்ல, அதற்குப் பிறகு வந்த சில வழக்குகளுடன் 53 வழக்குகள் தொடுக்கப்பட்டிருக்கின்றன. இதிலே ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை பதிவு செய்திருக்கின்ற வழக்குகள் மட்டும் 34 ஆகும். இந்த 34 வழக்குகளில், 11 வழக்குகளில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுவிட்டது. தாக்கல் செய்யப்பட்டு விசாரணை நடந்துகொண்டிருக்கிறது. 17 வழக்குகளில் ஆய்வு முடிந்து Charge Sheet கொடுக்க வேண்டிய நிலையிலே இருக்கிறது.

அதேபோன்று, மாநில குற்றப்புலனாய்வு சார்பில் 19 வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. இவற்றிலே 13 வழக்குகளில் Charge

Sheet குற்றச்சாட்டு கொடுக்கப்பட்டு விட்டது. ஆய்விலே இருப்பது 6 வழக்குகள்தான். அவர்கள் இந்த வழக்குகளை நடத்தவிடாதபடி என்னென்ன யுக்திகளைக் கையாளுகிறார்கள் என்பதெல்லாம் உங்களுக்குத் தெரியும். அதை நான் அதிகமாக விளக்க விரும்பவில்லை. டான்சி வழக்கிலே மட்டும் முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா அவர்கள் 108 முறை வாய்தாக்கள் பெற்றிருக்கிறார்கள். நம்முடைய நிலைமை என்னவென்றால், இன்னும் அதிலே நாம் Charge Sheet கூட போட முடியவில்லை. அந்த அளவிற்குத் தடையாக இருக்கிறார்கள். தடையாக இருக்கிறார்கள் என்பதற்காக நாம் தயங்கவில்லை, அவர்கள் தடையாக இருந்தாலும் தடைக் கற்களாக இருந்தாலும், அதைத் தகர்க்கின்ற தடந் தோள்கள் கலைஞருடைய அரசுக்கு உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி) என்றாலும், சட்டத்தின் அடிப்படையில்தான் எல்லாவற்றையும் நாம் செயல்படுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம்.

நேற்றையதினம், நம்முடைய உச்ச நீதிமன்றத்தினுடைய நீதிபதி அவர்கள், திரு. ஆனந்த் அவர்கள்கூட ஒரு கருத்தைச் சொல்லியிருப்பதாக தினமணி பத்திரிகையிலே வெளியாகியிருக்கிறது. கிரிமினல் குற்றங்களிலே ஈடுபட்டவர்களில் பெரும்பாலானவர்கள் விடுதலை செய்யப்படுவதால், மக்களுக்கு நீதித் துறையின் மீதுள்ள நம்பிக்கை மெல்ல மெல்ல குறைந்து வருகிறது. இவர் acquittal பற்றியே சொல்கிறார். நமக்கு Charge Sheet கூட file பண்ண முடியவில்லை. ஏன் குற்றம் சாட்டப்பட்டவர்கள் விடுதலை செய்யப்படுகிறார்கள்? உண்மையிலேயே அவர்கள் எல்லாம் தண்டிக்கப்பட வேண்டியவர்கள். அப்படித் தண்டிக்கப்பட வேண்டியவர்கள் விடுதலை பெறுவதால் நீதித் துறையின் மீது இருக்கின்ற நம்பிக்கை தளர்ந்து வருகிறது. (குறுக்கீடு)

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்போது Charge Sheet கூட போட முடியவில்லை என்று சொல்கிறார்கள், Charge Sheet போட்ட பிறகுதான் அவர்கள் அந்த வாய்தாவை 108 முறை வாங்கியிருக்க முடியும். ஆகவே, ஒருவேளை Charge frame செய்ய முடியவில்லை என்று சொல்கிறாரா அல்லது Charge Sheet கூட போட முடியவில்லை என்று சொல்கிறாரா?

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** எனக்குக் கொடுத்திருக்கிற தகவல், இன்னும் Charge Sheet கூட போட முடியவில்லை என்பதுதான். Charge frame பண்ணவில்லை என்கிற தகவலை எனக்குத் தரவில்லை.



மாண்புமிகு உறுப்பினர் சொல்வது சரியானால் திரும்ப உங்களுக்கு நேரடியாக சொல்கிறேன். அதிலே ஒன்றும் பிரச்சினையில்லை. எனவே, இன்றையதினம் அவர்கள் ஒவ்வொரு வாய்தாவையும் பெற்று வருகிறார்கள். இங்கே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சொக்கர் அவர்கள் முனியம்மாவின் கதையோடு ஆரம்பித்தார். எப்படி நீதிமன்றம் தமிழாக்கம் கொடுப்பதிலே ஒரு தீர்ப்பு அளித்தது? அதற்கு நாம் தலைவணங்கக் கடமைப்பட்டிருக்கிறோம். தமிழ் ஆட்சிமொழியாக இருப்பதில் நமக்கு பெருமை உண்டு. அதிலே ஒன்றும் மாறுபட்ட கருத்தில்லை. ஆனால், இந்த மனுவை அவர்கள் நீதிமன்றத்திலே தாக்கல் செய்கிறவரை, நீதிமன்றத்திலே எந்த மொழியிலே அவர்கள் மனுக்களைத் தாக்கல் செய்தார்கள்? ஆங்கிலத்திலேதான் தாக்கல் செய்தார்கள். அது செல்வி ஜெயலலிதாவாக இருந்தாலும் சரி, திருமதி சசிகலாவாக இருந்தாலும் சரி அல்லது முன்னாள் அமைச்சர்களாக இருந்தாலும் சரி, அத்தனை பேர்களும் அவர்களுடைய மனுக்களை ஆங்கிலத்திலேதான் தாக்கல் செய்தார்கள். தமிழிலேயே தாக்கல் செய்யவில்லை. இப்போது அந்த வழக்கு தீர்ப்புக்கு வந்த பிறகுதான் தமிழிலே அவர்களுக்கு ஆவணம் கொடுக்க வேண்டுமென்று சொன்ன பிறகுதான், சிறு விண்ணப்பங்களை, மனுக்களை இப்போது அப்படிக் கேட்டுவிட்டோமே என்கிற காரணத்திற்காக தமிழிலே தாக்கல் செய்து கொண்டிருக்கிறார்கள். நீதிமன்றத் தீர்ப்புக்கு நாம் தலைவணங்கக் கடமைப்பட்டிருக்கிறோம். ஆனால், எப்படிப்பட்ட யுக்திகளை அவர்கள் கையாளுகிறார்கள் என்பதை இந்த மாமன்றம் உணர்ந்தாக வேண்டும். எனவே, இந்த மாமன்றத்திற்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புவதெல்லாம் தமிழ் ஆவணங்கள் எல்லாம் இந்த மாத இறுதிக்குள், எல்லா வழக்குகளுக்கும் கொடுக்கப்பட்டாகிவிடும்.

*பிற்பகல் 1-10*

இன்னும் சில வழக்குகள் முடியும் தருவாய்க்கே வந்துவிட்டன. உறுதியாகச் சொல்கிறேன். இவர்கள் எந்த யுக்தியை வேண்டுமானாலும் கையாண்டு பார்க்கட்டும். 6 மாதங்களுக்குள் நிச்சயமாக இந்தக் குற்றவாளிகளை இந்த அரசாங்கம் தண்டித்தே தீரும்; அதற்கான ஆதாரங்களும் ஆவணங்களும் அரசாங்கத்திலே இருக்கின்றன. சுப்ரீம் கோர்ட் வழக்கில் விசாரணை முடிந்து விட்டது. தீர்ப்புக்காக காத்து இருக்கிறோம். (குறுக்கீடு) நம்முடைய ஆவணத்தின் அடிப்படையில், நம்முடைய வாதத்தின் அடிப்படையில் நியாயம் இருக்கின்ற காரணத்தினால், நீதிமன்றம் உறுதியாக நல்ல தீர்ப்பை வழங்கும்

என்பதிலே நமக்கு உறுதியான நம்பிக்கை இருக்கிறது. நான் இன்னும் சொல்லிக்கொள்ள விரும்புவது, அவர்களுடைய தடைகளைப்பற்றி அல்ல; அவர்கள் நினைத்துக் கொண்டிருப்பது எல்லாம், ஏதாவது ஓர் அரசியல் சூழ்நிலை மாற்றத்தைப் பயன்படுத்தி அதன் மூலம் எதையாவது செய்துவிட முடியுமா என்று எதிர்பார்க்கிறார்கள் அவர்கள் எப்படிக் காயை நகர்த்துகிறார்களோ, அதைவிட வேகமாக கலைஞர் அவர்கள் காயை நகர்த்துவார்; (மேசையைத் தட்டும் ஒலி) அது எங்களுக்குத் தெரியும். எனவே, அந்தச் சூழ்ச்சிக்கெல்லாம் இந்த அரசாங்கம் ஒருபோதும் பலியாகிவிடாது என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே நீதித் துறையில் பல்வேறு நீதிமன்றங்களை கேட்டவர்களைப் பற்றி நான் சொலலிக்கொள்ள விரும்புவதெல்லாம், நாங்கள் நீதித் துறைக்கு எவ்வளவு பணத்தை செலவு செய்து வருகிறோம் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். 1989-90-ல் இந்த துறைக்கு வருமானம் 28 1/2 கோடி ரூபாய்; அதே நேரத்தில் செலவு 29 கோடி ரூபாய். 3.96 அல்லது 4 சதவீதம்தான் பற்றாக்குறை. ஆனால், இன்றைக்கு நிலை என்னவென்றால், இப்போது செலவு ரூ. 140.31 கோடி; ஆனால் நீதிமன்றத்திலே Court Fee அபராதம் இவைகளின் மூலம் கிடைக்கின்ற வருமானம் ரூ. 61.22 கோடி. எனவே, இன்றையதினம் 129 சதவீதம் செலவு அதிகரித்து இருக்கிறது. நான் இங்கே இருக்கிற, மாமன்றத்திலே இருக்கிற உறுப்பினர்களையும், இதன் மூலம் வழக்கறிஞர் பெருங்குடி மக்களையும் கேட்டுக்கொள்வது எல்லாம், இன்றைக்கு இருக்கிற Court Fee Act-ல் அதாவது நீதிமன்றக் கட்டணத்தில் ஒரு பெரிய மாற்றத்தைச் செய்தாலொழிய நாம் எதிர்பார்க்கின்ற அளவுக்கு நீதிமன்றங்களினுடைய எண்ணிக்கையை அதிகரிக்க முடியாது; நீதி மன்றத்திற்குத் தேவையான வசதிகளைக் கொடுக்க முடியாது; இதனாலே நாங்கள் கொடுக்கமாட்டோம் என்று யாரும் தவறாக எண்ணிவிடக்கூடாது. இங்கு மாண்புமிகு உறுப்பினர்கள் பேசியபோதெல்லாம், மதுரை மாநகரத்தில் சென்னை உயர் நீதிமன்றத்தினுடைய கிளை தேவை என்பதைப்பற்றி நல்லமுறையிலே வற்புறுத்தினார்கள். நான் அவர்களுக்கெல்லாம் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். எங்களைப் பொறுத்தவரையில் உலகனேரியில் 75 ஏக்கர் நிலத்தை நாங்கள் கையகப்படுத்தி உயர் நீதிமன்றத்திடம் ஒப்படைத்துவிட்டோம். ஒப்படைத்து சுமார் 6 மாதங்கள் ஆகின்றன. இதில் எப்படிக் கட்டடம் கட்ட வேண்டும், என்னென்ன வசதிகள் வேண்டும், எப்படிப்பட்ட அடிப்படையில் நிதி ஒதுக்கீடு வேண்டும்



என்பதை எல்லாம் அவர்கள்தான் தெரிவிக்க வேண்டும். அதுபற்றி உயர் நீதிமன்றத்திலே இருந்து எங்களுக்கு வர வேண்டும்; அதுவரை நாங்கள் காத்து இருக்கிறோம். எனவே, இந்த அரசைப் பொறுத்தளவில் தயக்கம் காட்டுகிறது, தடுமாற்றம் கொள்கிறது என்று யாரும் எண்ணத் தேவையில்லை என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். இன்னும் ஒன்றைச் சொல்கிறேன். கலைஞர் அவர்கள் சொன்னார்கள். நீதிமன்றத்தைப்பற்றிச் சொல்லும்போது, உலகனேரியிலே நீதிமன்றக் கட்டடத்தைக் கட்டுவதற்கு சில ஆண்டுகள் பிடிக்கலாம். இப்போது மதுரை மாநகரத்திலே இருக்கிற மாவட்ட நீதிமன்றத்தினுடைய வளாகம், உயர் நீதிமன்றக் கட்டடத்தை போன்று கம்பீரமாகக் காட்சி அளிக்கிறது; அதிலேயே நீதிமன்றத்தை நடத்துங்கள்; எவ்வளவு செலவானாலும் ஏற்றுக்கொள்கிறோம் என்று சொன்னார்கள். உயர் நீதிமன்றம் ஒத்துக்கொள்ளவில்லை. நாங்கள் என்ன செய்ய முடியும்? எனவே, அரசு இதற்குப் பொறுப்பல்ல, இதிலே துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டிய நிலையிலே இருப்பது இன்றையதினம் உயர் நீதிமன்றம்தான் என்பதைச் சுட்டிக்காட்ட நான் விரும்புகிறேன்.

இங்கே பல நண்பர்கள் எங்களுக்கு நீதிமன்றம் வேண்டுமென்று கேட்டார்கள். உங்களுக்குத் தெரியும். இந்த ஆண்டு நிதிநிலை மிக மோசமாக இருக்கிறது; நெருக்கடியாக இருக்கிறது என்பதை மாண்புமிகு முதல்வர் அவர்கள் தன்னுடைய நிதிநிலை அறிக்கையிலே சொன்னார்கள். அந்த அளவுக்கு இருந்தாலும், வாதாடி, போராடி 3 நீதிமன்றங்களுக்குத்தான், இராமேஸ்வரம், காட்டுமன்னார்கோயில், போச்சம்பள்ளி ஆகிய இடங்களில் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் மன்றம் அமைப்பதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் அனுமதித்து இருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-15

அதேபோன்று, நீதிமன்றங்களுக்குக் கட்டடம் கட்டுவதற்காக 12.84 கோடி ரூபாய், அதற்கும் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

உயர் நீதிமன்றத்தில் புதிதாக அலுவலர்கள் வேண்டுமென்று சொன்னார்கள். அதற்காக 2 கோடியே 80 இலட்சம் ரூபாய் அனுமதிக்கப்பட்டு சுமார் 300 பேர்களைத் தேர்ந்தெடுக்கப்போகிறார்கள். ஆனால், நாம் யாரையாவது தேர்ந்தெடுக்க அனுமதி தருவார்களா?

இதை என்னிடத்தில் பேசாதீர்கள். நாம் கடிதம் கொடுத்தாலே மதிப்பார்களா என்பது வேறு விஷயம். என்றாலும் 300 பேரைத் தேர்ந்தெடுக்க இருக்கிறார்கள் என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

உயர் நீதிமன்றத்தினுடைய நிருவாகம் முழுக்க முழுக்க கணினி பொறியில் அமைய வேண்டுமென்பதற்காக, அதற்காகவும் நம்முடைய கலைஞர் அவர்கள் ரூ. 5 கோடியை அனுமதித்திருக்கிறார் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னும் பல வசதிகளைச் செய்ய வேண்டுமானால் எதிர்பார்த்த அளவிற்கு நீதிமன்றங்களை அமைக்க வேண்டுமானால் இரண்டினால்தான் செய்ய முடியும். ஒன்று சில மாற்றங்களைச் செய்வது. மற்றொன்று-Court Fee Act-நீதிமன்றக் கட்டணச் சட்டத்திலே மாற்றத்தைச் செய்வதினால் மட்டும்தான் நம்முடைய நிதியாதாரத்தைப் பெருக்குவதற்கு துணை புரிவது இயலும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்

எனவே, இந்தச் சந்தர்ப்பத்தில் அடுத்த மானியக் கோரிக்கையான சிறைச்சாலை பற்றி சில கருத்துக்களை மட்டுமே சொல்ல விரும்புகிறேன். சிறைத் துறையை நேர்மையாக நடத்துகிறோம். முறையாக நடத்துகிறோம். நியாயமாக நடத்துகிறோம். எந்தத் தீவிரவாதியையும் நாங்கள் கொடுமைப்படுத்தவில்லை. யாருக்கும் தவறாகச் சலுகை காட்டவில்லை. ஆனால், அதே நேரத்தில் சில பத்திரிகைகள் திட்டமிட்டு நாங்கள் சலுகை காட்டுவதைப்போல, ஒழுங்கான நடவடிக்கை எடுக்காததைப்போல, வேண்டுமென்றே விஷமத்தனமாக பிரச்சாரத்தைச் செய்கின்றன. இதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

இங்கே அருமைச் சகோதரர் மாண்புமிகு உறுப்பினர் ஆரூண் அவர்கள் பேசும்போது குறிப்பிட்டார். அவர் என்ன சொன்னார் என்றால், சில அதிகாரிகள் அரசாங்கத்திற்கு கெட்ட பெயர் வாங்கித் தரவேண்டும் என்பதற்காக இந்தமாதிரி செயல்படுகிறார்கள் என்று. அப்படி எந்த அதிகாரியும் செயல்படவில்லை என்பதை நான் அவர்களுக்கு வணக்கத்தோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். யாரும் அரசினுடைய விருப்பத்திற்கு மாறாகவோ, அரசினுடைய கொள்கைகளுக்கு எதிராகவோ நிச்சயமாகச் செயல்படவில்லை என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவிப்பது என்னுடைய தலையாய கடமையாகும்.



இன்னொரு விவரத்தையும் உங்களுக்குச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். தமிழ்நாட்டிலுள்ள சிறைகளில் மொத்தம் 18,135 பேர்களுக்கு இடமிருக்கிறது. இப்போது சிறையிலே இருப்பவர்கள்17,316 பேர்கள்தான். எனவே இருக்கிற இடம் அதிகமாக இருக்கிறது. என்றாலும், இங்கே இருக்கிற புழல் சிறையை ஒழுங்குபடுத்த வேண்டும். ஏற்கெனவே 5½ கோடி ரூபாய் செலவு செய்யப்பட்டிருக்கிறது. மறுபடியும் கலைஞர் அவர்கள் அதற்கு 1½ கோடி ரூபாய் தந்திருக்கிறார்கள். அதைப் பழுது பார்க்கும் பணியெல்லாம் வேகமாக நடைபெறுகிறது. இன்னும் 6 மாதங்களுக்குள் முடிக்கப்பட்டு, அந்தப் புழல் சிறையிலும் கைதிகள் அடைக்கப்படுவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று, புதுக்கோட்டை மாவட்டத்தில்—உங்களுக்குத் தெரியும்—இளைஞர், சிறார் பள்ளி இருக்கிறது. சிறைப் பள்ளி இருக்கிறது. அந்தப் பள்ளிக்கூடத்தை சேலத்திற்கு மாற்றி, புதுக்கோட்டையில் இருக்கிற சிறைப் பள்ளியை நாங்கள் மாவட்டச் சிறையாக மாற்ற இருக்கிறோம் என்பதையும் நான் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இதையெல்லாம் செய்வதன்மூலம் சிறையிலே எத்தனை இடம் இனி அதிகமாக இருக்குமென்றால், ஏறத்தாழ 3,000 இடங்களுக்கு மேலே இப்போது அதிகமாகவே இருக்கிறது. அந்த அளவுக்கு நம்முடைய சிறையில் வசதிகளும் இருக்கின்றன. இதை நான் சொல்வதற்குக் காரணம், உள்ளே வர வேண்டியவர்கள் சிலர் வெளியே உலவிக்கொண்டிருக்கிறார்கள். சென்னைக்கும், டெல்லிக்கும் உலவிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் நல்ல இடம் வேண்டுமல்லவா? அதற்குத் தாராளமாக சிறையினுள்ளே இடம் இருக்கிறது என்பதை இந்த மாமன்றத்திலே தெரிவித்துக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

சிறைத் துறையிலே சில மாற்றங்களைச் செய்ய வேண்டும்; சில உதவிகளைச் செய்ய வேண்டும் என்று நான் கலைஞர் அவர்களைக் கேட்டபோது, எங்களுடைய சிறைத் துறைச் சார்பில் என்ன என்ன கோரிக்கைகளெல்லாம் கொடுக்கப்பட்டதோ அந்தக் கோரிக்கைகளில் முக்கியப் பகுதிகளையெல்லாம் அவர்கள் ஏற்றுக்கொண்டதற்காக, நான் அவருக்கு நன்றி தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த ஆண்டு—ஏற்கெனவே எங்களுக்கு 172 சிறைக் காவலர்கள் எடுக்க வேண்டிய நிர்பந்தம் இருக்கிறது. அது ஏற்கெனவே உள்ள

இடம். புழல் சிறை தொடங்கப்படும்போது அதில் 231 இடங்கள் இருக்கின்றன. நிதித் துறையைப் பொறுத்தவரையில் இதுகுறித்து பரிசீலிப்பதாக அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அடுத்த ஆண்டு என்னுடைய கணக்குப்படி சுமார் 350 சிறைக் காவலர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று, சிறையிலே பணி செய்கின்ற வார்டன்களுக்கு காவல் துறையினரைப் போன்று ஒரே மாதிரியான படி இருக்க வேண்டும். Risk allowance கொடுக்க வேண்டுமென்பது அவர்களுடைய கோரிக்கையாகும். அந்தக் கோரிக்கையையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள் அதுமட்டுமல்ல, காவல் துறையிலே இருப்பவர்களுக்கு உளுத்தம் பருப்பு, துவரம் பருப்பு, ரவை, மைதா போன்றவைகள் மானியத்திலே கொடுக்கப்படுகின்றன. அதுபோன்று சிறைத் துறையிலே இருப்பவர்களுக்கும் கொடுக்க வேண்டுமென்று கேட்டார்கள். அதற்கும் முதல்வர் அவர்கள் இசைவு அளித்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-20

அதுபோன்று, பெண் சிறைக் கைதிகளை நீதிமன்றத்திற்கு அழைத்துச் செல்வதற்கு பெண் காவலர்களை நாம் பயன்படுத்துகிறோம். அவர்களை தற்காலிகமாகத்தான் பயன்படுத்துகிறோம். அவர்களுக்கு கடந்த ஆண்டு சம்பளம் வெறும் 40 ரூபாய், அதையும் இப்பொழுது 60 ரூபாயாக உயர்த்துவதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் இசைவு அளித்திருக்கிறார்கள் என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

சிறைத் துறை நிருவாகம் ஒழுங்காக இருக்கிறது. முறையாக இருக்கிறது. கடந்த ஆட்சிக் காலத்தில், ஐந்தாண்டுக் காலத்தில் சிறையிலிருந்து தப்பித்தவர்கள் 60-க்கும் மேற்பட்டவர்கள். ஆனால், கடந்த ஆண்டு சிறையிலிருந்து தப்பித்தவர் ஒரே ஒரு ஆள்தான் என்பதை உங்களுக்கு நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். அந்த அளவுக்கு விழிப்போடு, கட்டுப்பாட்டோடு சிறை நடக்கிறது. இந்த அளவுக்கு சிறையை நடத்துவதற்கு துணை புரிகின்ற சிறைத் துறை அதிகாரிகள் அத்தனை பேர்களுக்கும் நான் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன். பத்திரிகைகளிலே வருகின்ற பரபரப்பான செய்தியைப்பற்றி நான் கவலைப்படவில்லை. ஆனால் நிருவாகம் ஒழுங்காக நடக்கிறது. முறையாக நடக்கிறது. சட்டப்படி நடத்தப்படுகிறது என்பதை மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



எங்களுக்குத் தந்திருக்கிற நிதியே மிகக் குறைவு. இதிலே நீங்கள் வேறு வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்து விவகாரத்தை உண்டாக்க வேண்டாமென்று (சிரிப்பு) பணிவோடு கேட்டு, உங்களுடைய வெட்டுத் தீர்மானங்களையெல்லாம் திரும்பப் பெற்று, இந்த இரண்டு மானியக் கோரிக்கைகளையும் ஏகமனதாக நிறைவேற்றித் தருமாறு உங்களையெல்லாம் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது, அரசைப் பொறுத்தவரையில் மதுரையிலே நாங்கள் பழைய நீதிமன்றக் கட்டடத்திலேயே, ஹைகோர்ட் கிளையை ஆரம்பிக்கலாம் என்று சொல்லிவிட்டோம், உயர் நீதிமன்றம் எந்தவிதமான முடிவுக்கும் வரவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். 'பூனைக்கு இப்போது யார் மணி கட்டுவது' என்று எனக்குத் தெரியவில்லை. நம் அரசாங்கம் அறிவித்து நெடுநாட்கள் ஆகிவிட்டன. நீதித் துறையோடு எப்படியாவது பேசுவதற்கு ஒரு குழுவையாவது போடுங்கள். இல்லையென்று சொன்னால், எப்பொழுதுதான் மதுரையில் அந்தக் கிளை வரும் என்றே தெரியவில்லை. ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதற்காக என்ன முடிவு எடுக்கப் போகிறார் என்பதைத் தயவுசெய்து...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன், இதிலே என்ன கிளாரிபிகேஷன் இருக்கிறது? நான் சொல்கிறேன், உட்காருங்கள், இதிலே நான் பேரவைத் தலைவர் என்ற முறையில் எந்தக் கருத்தையும் சொல்லமுடியாது, சொல்லக் கூடாது. ஆனால் வழக்கறிஞர் என்ற முறையிலே சொல்கிறேன், அரசாங்கம் செய்ய வேண்டிய எல்லாக் காரியங்களும் செய்யப்பட்டு விட்டன. நீதிமன்றத்தில்தான் அது நிலுவையில் இருக்கிறது. அதற்குமேல் இப்பொழுது ஒன்றும் சொல்ல முடியாது. திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகளிர் உரிமையைப் பாதுகாக்க, மகளிர் ஆணையம் அமைக்கப்பட்டிருக்கிறது. அதற்கு முழு அதிகாரம் வழங்க சட்டமுன்வடிவு இந்தக் கூட்டத்தொடரிலேயே கொண்டுவரப்படுமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** இதுதொடர்பாக சமூகநலத் துறையோடு பேச்சு வார்த்தை நடக்கிறது. மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய ஒப்புதலோடு சட்டமுன்வடிவு கொண்டு வருவது பற்றி பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டத் துறை அமைச்சர் அவர்கள் விளக்கம் அளிக்கிறபோது, விவாதத்திற்குப் பதிலளிக்கிறபோது, வழக்குகளில் charge sheet-குற்றப்பத்திரிகையே தாக்கல் செய்யப்படவில்லை என்ற ஒரு கருத்தைச் சொன்னார். அந்தக் கருத்து திருத்திக்கொள்ளப்பட வேண்டிய கருத்தாகும். பல வழக்குகளில், அதாவது கடந்தகால ஆட்சியிலே இருந்தவர்கள்மீது போடப்பட்டுள்ள பல வழக்குகளில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. ஓரிரு வழக்குகளில்தான் தாக்கல் செய்யப்படவில்லை என்கிற திருத்தத்தை வழங்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதாவது, குறிப்பேட்டில் charge sheet-க்குப்பதிலாக charge frame செய்யப்படவில்லை என்று தான் இருக்கும். விவாதம் முடிவுற்றது, இப்போது வாக்கெடுப்பு.

### (அ) கோரிக்கை எண் 13—நீதி நிருவாகம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 13-நீதி நிருவாகம், வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. டி. மணி, இருக்கையில் இல்லை. திரு. டி. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்படுகிறது.



திரு. ப. ரங்கநாதன், இருக்கையில் இல்லை. திரு. ப. ரங்கநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பட்டதாகக் கருதப்படுகிறது. திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், இருக்கையில் இல்லை. திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பட்டதாகக் கருதப்படுகிறது.

திரு. சி. வேலாயுதன், இருக்கையில் இல்லை. திரு. சி. வேலாயுதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்படுகிறது.

திரு. ஜி. நிஜாமுதீன், இருக்கையில் இல்லை. திரு. ஜி. நிஜாமுதீன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம் :** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ந. கருப்பண்ண உடையார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி. வெங்கடசாமி.

**திரு. பி. வெங்கடசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. கே. ரவி அருணன், இருக்கையில் இல்லை. திரு. கே. ரவி அருணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பட்டதாகக் கருதப்படுகிறது. திரு. பா. வேல்துரை.

**திரு. பா. வேல்துரை:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பா. வேல்துரை அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"நீதி நிருவாகம் பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.121,98,31,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.



பிற்பகல் 1-25

### (ஆ) கோரிக்கை எண் 14—சிறைச்சாலைகள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 14-சிறைச்சாலைகள். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. ப. ரங்கநாதன், இருக்கையில் இல்லை. திரு. ப. ரங்கநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பட்டதாகக் கருதப்படுகிறது. திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. ஜி. நிஜாமுதீன், இருக்கையில் இல்லை. திரு. ஜி. நிஜாமுதீன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பட்டதாகக் கருதப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் :** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ந. கருப்பண்ண உடையார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. கே. ரவி அருணன், இருக்கையில் இல்லை. திரு. கே. ரவி அருணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பட்டதாகக் கருதப்படுகிறது. திரு. பி. வெங்கடசாமி.

**திரு. பி. வெங்கடசாமி:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"சிறைச்சாலைகள் பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ.56,54,01,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் திங்கட்கிழமை (19-4-1999) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-26 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

141. 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் அட்டவணையில் சில திருத்தங்கள் செய்தது குறித்தும், 1988 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் விதிகளின் அட்டவணை-II-ல் சில திருத்தங்கள் செய்தது குறித்தும் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் 02-05-1997 ஆம் நாளிட்ட 117 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1983) 180 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]

142. 1988 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் விதிகளில் சில திருத்தங்கள் செய்தது குறித்து கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் 05-06-1997 ஆம் நாளிட்ட 160 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1983 ஆம் ஆண்டு

[1999 ஏப்ரல் 16

தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1983) 180 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது)

143. 1988 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் விதிகளின் அட்டவணை-II-ல் சில திருத்தங்கள் செய்தது குறித்து கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் 16-06-1998 ஆம் நாளிட்ட 116 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1983) 180 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.)

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

98. மானியக் கோரிக்கை எண் 13-நீதி நிருவாகம் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு. 1999-2000 (தமிழ், ஆங்கிலம்)

99. மானியக் கோரிக்கை எண் 14-தமிழ்நாட்டில் சிறைகள் நிருவாகம் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1999-2000 (தமிழ், ஆங்கிலம்)

100. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று அறுபத்து நான்காவது அறிக்கை, 1998-99

101. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று அறுபத்து ஐந்தாவது அறிக்கை, 1998-99

102. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று அறுபத்து ஆறாவது அறிக்கை, 1998-99

103. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று அறுபத்து ஏழாவது அறிக்கை. 1998-99

104. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று அறுபத்து எட்டாவது அறிக்கை, 1998-99





## இணைப்பு - I

## மானியக் கோரிக்கை எண் 13

## நீதி நிருவாகம் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு 1999-2000

[54ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க]

### I. தமிழ்நாட்டில் நீதித் துறை சிறப்பு அம்சங்கள்

### 1. முன்னுரை

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் குறிப்பிட்டுள்ள கோட்பாடுகளுக்கிணங்க, அனைத்துக் குடிமக்களுக்கும் நீதி கிடைக்கச் செய்வது இவ்வரசின் கொள்கையாகும். நீதியை நிருவகிப்பது நீதிமன்றங்களின் பொறுப்பாகும். அரசின் செயற்பிரிவு மற்றும் நிருவாகப் பிரிவினின்றும் இது தனித்து செயற்படுகிறது. வழக்கு நிலுவைகளை அகற்றப் புதியதாகவும் கூடுதலாகவும் நீதிமன்றங்கள் அமைப்பதுபற்றி உயர் நீதிமன்றம் பரிந்துரைப்பதின்பேரில் காலந்தாழ்த்தாது அரசு ஒப்புதல் வழங்குவதோடு நீதிமன்றங்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளை செய்வதன் வாயிலாக அரசு தனது பங்கினை ஆற்றுகிறது.

### 2. நீதிமன்றங்களில் படிநிலை அமைப்பு

நீதிமன்றங்களின் படிநிலை அமைப்பு வருமாறு:

புதுடில்லியிலுள்ள உச்ச நீதிமன்றம் நமது நாட்டின் உச்சநிலை நீதிமன்றமாகும். அது மாநிலங்களிலுள்ள அனைத்து உயர் நீதிமன்றங்களையும் தன் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுள்ளது.

**மாநில நீதித் துறையின் படிநிலை அமைப்பு வருமாறு:**

**உயர் நீதிமன்றம், சென்னை**

| உரிமையியல் | | குற்றவியல் | |
|---|---|---|---|
| சென்னை மாநகர் (1) | வெளியூர் (2) | சென்னை மாநகர் (3) | வெளியூர் (4) |
| மாநகர உரிமையியல் நீதிமன்றங்கள் | மாவட்ட நீதிமன்றங்கள் | பெருநகர குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் | அமர்வு நீதிமன்றங்கள் |

[1999 ஏப்ரல் 16

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| சிறுவழக்குகள் நீதிமன்றங்கள் | சார்நிலை நீதிமன்றங்கள் | | மாவட்டக் கூடுதல் நீதிபதி மற்றும் தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் |
| | மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள் | | குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் |
| | மாவட்ட உரிமையியல்-குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் | | |

மேலே குறிப்பிட்ட நீதிமன்றங்களுடன், பல்வேறு சட்டங்களின்கீழ் பின்வரும் நீதிமன்றங்களும்/அலுவலகங்களும் இயங்கி வருகின்றன:

1. நொடித்தவர் சொத்தாட்சியர், உயர் நீதிமன்றம், சென்னை
2. அரசு பொறுப்புச் சொத்தாட்சியர், சென்னை
3. தொழிலாளர் நல நீதிமன்றங்கள், சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருநெல்வேலி, கடலூர், சேலம், திருச்சிராப்பள்ளி மற்றும் வேலூர்
4. தொழில் நடுவர் நீதிமன்றம், சென்னை
5. குடும்ப விவகாரங்கள் குறித்த நீதிமன்றம், சென்னை, மதுரை, கோயம்புத்தூர் மற்றும் சேலம்
6. பொருளாதாரக் குற்றங்கள் குறித்த தனி நீதிமன்றங்கள், சென்னை மற்றும் மதுரை
7. மனித உரிமைகள் பாதுகாப்பிற்கான தனி நீதிமன்றங்கள்
8. "தடா" சட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட தனி நீதிமன்றங்கள்
9. இன்றியமையாப் பொருட்கள் சட்டம் மற்றும் போதை மருந்து மற்றும் மனமயக்கப் பொருள்கள் சட்டம் ஆகிய சட்டங்களின்கீழ் வரும் வழக்குகளை விசாரிப்பதற்கான தனி நீதிமன்றங்கள்



1999 ஏப்ரல் 16]

### 3. தமிழ்நாட்டிலுள்ள நீதிமன்றங்களின் எண்ணிக்கை விவரங்கள்

தமிழ்நாட்டில் தற்போதுள்ள நீதிமன்றங்கள் எண்ணிக்கை பற்றிய விவரம் இணைப்பு 1-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

### 4. செலவின வகைப்பாடு

நீதித் துறைக்கான செலவினங்கள் "சாட்டியவை" "அனுமதிக்கப் பட்டவை" என கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தப்படுகின்றன:—

அ. சாட்டிய செலவினங்கள்

1. உயர் நீதிமன்றம் (உயர் நீதிமன்ற நீதிபதிகள், உயர் நீதிமன்றப் பதிவாளர், அசல், மேல் முறையீட்டுப் பிரிவுகள், மொழிபெயர்ப்பு அச்சிடுதல் துறை, சட்ட நிருபர்கள், பணியாளரமைப்பு, பாண்டிச்சேரி அதிகார வரம்பில் வரும் வழக்குகளைக் கவனிக்கும் உதவிப் பதிவாளர் மற்றும் பணியாளர்கள்) மற்றும்;

2. நொடித்தவர் சொத்தாட்சியரும் அவரின் பணியாளரமைப்பும்.

ஆ. அனுமதிக்கப்பட்ட செலவினங்கள்

1. சென்னை மாநகர உரிமையியல் நீதிமன்றங்கள் உட்பட உரிமையியல் அமர்வு நீதிமன்றங்கள்
2. சிறுவழக்குகள் நீதிமன்றம், சென்னை
3. பெருநகர குற்றவியல் நீதிமன்றங்கள், சென்னை
4. சார்நிலை குற்றவியல் நீதிமன்றங்கள்
5. சார்நிலை உரிமையியல் நீதிமன்றங்கள்
6. அரசு பொறுப்புச் சொத்தாட்சியர், சென்னை
7. அரசு சட்ட அறிவுரையாளர்களும் ஆலோசகர்களும்
8. தொழிலாளர் நீதிமன்றங்கள், சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருநெல்வேலி, கடலூர், சேலம், திருச்சிராப்பள்ளி, வேலூர் மற்றும் தொழில் நடுவர் மன்றம், சென்னை
9. ஆசிரியர் மற்றும் பணியாளர்கள், தமிழ் சட்டப் பத்திரிகை பதிப்பகம், சென்னை
10. குடும்ப விவகார நீதிமன்றங்கள்
11. மத்திய புலனாய்வுப் பிரிவின் வழக்குகளையும் மனமயக்கும் மற்றும் போதைப் பொருள் குறித்த குற்றங்களையும் விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றங்கள்

[1999 ஏப்ரல் 16

**5. உயர் நீதிமன்றம், சென்னை:**

மாநிலத்தில் உச்சநிலை நீதிமன்றமாக உயர் நீதிமன்றம் அமையப் பெற்றுள்ளது. உயர் நீதிமன்றத்திற்காக ஒப்பளிக்கப்பட்ட நீதிபதிகளின் எண்ணிக்கை மாண்புமிகு தலைமை நீதிபதி உட்பட 42 ஆகும். தற்போது உயர் நீதிமன்றம் 30 நீதிபதிகளுடன் இயங்கி வருகிறது.

உயர் நீதிமன்றம், சிவில் விவகாரங்களில் ரிட் மனுக்களையும் அசல் வழக்குகளையும் விசாரணை செய்யும் அதிகாரங்களைப் பெற்றுள்ளது. உரிமையியல் மற்றும் குற்றவியல் விவகார வழக்குகளின்மேல் முறையீட்டு விசாரணை அதிகாரமும் உயர் நீதிமன்றத்திற்கு உண்டு. அசல் வழக்குகளைப் பொறுத்தவரை, சென்னை மாநகரத்திற்குள் எழும் ரூ.10,00,000-க்கும் அதிகமான மதிப்புள்ள வழக்குகளை உயர் நீதிமன்றம் விசாரிக்கிறது. நீதிபதிகளுக்கிடையிலான பணி மாண்புமிகு தலைமை நீதிபதி அவர்களால் பிரித்தளிக்கப்படுகின்றது.

உயர் நீதிமன்ற அலுவலகத்தின் நிருவாகத் தலைவராகப் பதிவாளர் விளங்குகிறார். அவருக்கு உதவ, கூடுதல் பதிவாளர்கள், மாஸ்டர், துணைப் பதிவாளர்கள், அலுவலக நடுவர், வழக்குகள் தொகுக்கும் தனி அலுவலர், உதவிப் பதிவாளர்கள், சார் உதவிப் பதிவாளர்கள், முதுநிலைக் கணக்கு அலுவலர் எனப் பல அலுவலர்களும் உள்ளனர். உயர் நீதிமன்றம், பல கிளைகளை உள்ளடக்கியதாகும். இதில் நிருவாகத் துறை, நூலகம், அசல் தரப்புப் பிரிவு, மேல்முறையீட்டுப் பிரிவு, நொடிப்பு வழக்குகள் பிரிவு, நீதிபதிகளுக்கான தனி உதவியாளர்கள் பிரிவு, உச்ச நீதிமன்றப் பிரிவு, குற்றவியல் பிரிவு, பாண்டிச்சேரி பிரிவு, நீதிமன்ற அலுவலர் பிரிவு, மேல்முறையீட்டு ஆய்வாளர் பிரிவு, ரிட் பிரிவு, மொழிபெயர்ப்பு அச்சிடுதல் துறை, நொடித்தவர் சொத்தாட்சியர் பிரிவு, நகலெடுப்போர் பிரிவு, நடப்புப் பிரிவு, வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டுப் பிரிவு, பதிவுருக்கள் பிரிவு ஆகியவை அடங்கும். உயர் நீதிமன்றம், மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதியான பாண்டிச்சேரி நீதிமன்றங்கள் தொடர்பாகவும் அதிகார வரம்பைக் கொண்டுள்ளது. உயர் நீதிமன்றத்தில் பாண்டிச்சேரி தொடர்பான பணிகளைக் கவனிக்கும் அதிகாரிகள் குறித்த செலவு முதற்கண் தமிழ்நாடு அரசால் செய்யப்பட்டு, பின்னர் அச்செலவுத் தொகை பாண்டிச்சேரி அரசிடமிருந்து திரும்பப்பெறப்படுகிறது.

நீதி வழங்குவதுடன், மாநிலத்தில் உள்ள அனைத்து சார்நிலை நீதிமன்றங்களின் முழு நிருவாகப் பொறுப்பையும் சென்னை உயர் நீதிமன்றம் மேற்கொள்கிறது.



1999 ஏப்ரல் 16]

**6. தமிழ்நாட்டிலுள்ள உரிமையியல் நீதிமன்றங்களின் நிருவாக அமைப்பு**

**(i) சென்னைப் பெருநகர்—**

அ. மாநகர உரிமையியல் நீதிமன்றம், சென்னை

பதினெட்டு சார்நிலை நிதிபதிகள் (உதவி நீதிபதிகள்), 13 மாவட்ட நீதிபதிகள் என மொத்தம் 31 நீதிபதிகள் சென்னை மாநகர உரிமையியல் நீதிமன்றத்தில் பணியாற்றுகின்றனர். மாவட்ட உரிமையியல் நீதிபதி பதவித் தரத்திலான (உரிமையியல் நீதிபதி-இளநிலை) ஒரு தனிப் பதிவாளர், மாநகர உரிமையியல் நீதிமன்றத்தின் நிருவாகத்திற்குப் பொறுப்பு வகிக்கிறார். மாநகர உரிமையியல் நீதிமன்றத்தின் பணம் சார்ந்த அதிகார வரம்பு வழக்குகளில் ரூ.10,00,000 ஆகவும், மேல்முறையீடு வழக்குகளில் ரூ.3,00,000/- ஆகவும் உள்ளது. மாநகர உரிமையியல் நீதிமன்றம், சென்னை, செஷன்ஸ் பிரிவிற்கான அமர்வு நீதிமன்றமாகவும் செயல்பட்டு வருகிறது. சென்னை மாநகர உரிமையியல் நீதிமன்றத்தில் மாவட்ட நீதிபதி பதவித் தரத்திலான சில நீதிபதிகளுக்கு தனிச் சட்டங்களின்கீழ் நடப்பு வழக்குகளை விசாரிக்கும் தனி நீதிபதிகளுக்குரிய அதிகாரங்களும் அளிக்கப்பட்டுள்ளன. முன்னாள் முதலமைச்சர், முன்னாள் அமைச்சர்கள், முன்னாள் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் மற்றும் சில அதிகாரிகள்மீது 1988ஆம் ஆண்டு ஊழல் தடுப்புச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள 46 ஊழல் வழக்குகளை விசாரிப்பதற்கெனத் தனி நீதிபதிகளைக் கொண்ட மூன்று கூடுதல் மாநகர உரிமையியல் நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன.

1999-2000ஆம் ஆண்டில் மாநகர உரிமையியல் நீதிமன்றததைப் பொறுத்தவரையில் ரூ.4,06,13,000 மொத்த செலவு ஆகுமென மதிப்பிடப்படுகிறது.

ஆ. சிறுவழக்குகள் நீதிமன்றம், சென்னை

இந்நீதிமன்றத்திற்கு மாவட்ட நீதிபதி பதவித் தரத்திலுள்ள தலைமை நீதிபதி தலைமை வகிக்கிறார். மேலும், சார்நிலை நீதிபதி பதவித் தரத்தில் (உரிமையியல் நீதிபதி-முதுநிலை) எட்டு நீதிபதிகளும், மாவட்ட உரிமையியல் நீதிபதி பதவித் தரத்தில் (உரிமையியல் நீதிபதி-இளநிலை) ஏழு நீதிபதிகளும் உள்ளனர். நிருவாகப் பொறுப்பிற்கென உரிமையியல் நீதிபதி (இளநிலை) பதவித் தரத்தில் தனியே ஒரு பதிவாளரும் உள்ளார். இவர், குறிப்பிட்ட சில ஆணைகளை நிறைவேற்றல்,

மனுக்களை முடிவு செய்தல் போன்ற சில நீதி நிருவாகப் பணிகளையும் கவனிக்கிறார். தலைமை நீதிபதியும், இதர நீதிபதிகளும் 1882ஆம் ஆண்டு மாகாணச் சிறுவழக்கு நீதிமன்றங்கள் சட்டத்தின்கீழ் வரும் சிறுவழக்குகளை விசாரிக்கும் அதிகாரங்களைச் செலுத்துவர்.

Vஆம், VIஆம் நீதிபதிகள், மோட்டார் வாகனங்கள் சட்டத்தின் கீழ் வரும் வழக்குகளை விசாரிக்கும் தனிப்பட்ட தீர்ப்பாயங்களாகப் பணியாற்றுகின்றனர். தலைமை நீதிபதிக்கும், II, III, IVஆம் நீதிபதிகளுக்கும் மோட்டார் வாகனங்கள் சட்டத்தின்கீழ் வரும் வழக்குகளை விசாரிக்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. X முதல் XVI வரை உள்ள நீதிபதிகள் சென்னை மாநகருக்கான வாடகைக் கட்டுப்பாட்டு நீதிபதிகளாகச் செயல்படுகின்றனர். தலைமை நீதிபதி மற்றும் நீதிபதிகள் II முதல் IV, VII மற்றும் VIII ஆகியோருக்கு வாடகைக் கட்டுப்பாடு குறித்த மேல்முறையீடுகளை விசாரிக்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. 1999-2000ஆம் ஆண்டில் சிறுவழக்குகள் நீதிமன்றத்திற்கான செலவு ரூ.1,92,48,000 என மதிப்பிடப்பட்டுள்ளது. இதில் ரூ.4,04,000/- திருச்சிராப்பள்ளி, சிவகங்கை ஆகிய இடங்களிலுள்ள முன்னாள் ஜமீன்தாரி சொத்துக்கள் மற்றும் இனாம் ஒழிப்பு நடுவர் மற்றும் தொடர்புடைய இழப்பீடு பிரித்தளித்தல் மற்றும் பங்கீட்டு நடுவர் மன்றத்திற்கும் ஆகும் செலவும் அடங்கும்.

(ii) வெளியூர்

*அ. மாவட்ட நீதிமன்றங்கள்*

இம்மாநிலத்தில் 22 மாவட்ட நீதிமன்றங்கள் உள்ளன. 1998ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் திருச்சிராப்பள்ளி நீதித் துறை மாவட்டத்தை திருச்சிராப்பள்ளி, பெரம்பலூர் மற்றும் கரூர் மாவட்டங்களாகப் பிரித்தும், பெரம்பலூர் மற்றும் கரூர் மாவட்டங்கள் ஒவ்வொன்றுக்கும் மாவட்ட அமர்வு நீதிமன்றமும், கூடுதல் மாவட்ட நீதிபதி-தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றமும் ஏற்படுத்தவும் அரசாணைகள் பிறப்பிக்கப்பட்டன. பெரம்பலூர் மற்றும் கரூர் மாவட்டங்கள் உட்பட புதிய வருவாய் மாவட்டங்களுக்கான மாவட்ட நீதிமன்றங்கள் இன்னும் தொடங்கப்படவில்லை. மாவட்ட நீதிபதிகள் அவரவர் பகுதிகளுக்கான அமர்வு நீதிபதிகளாகவும் உள்ளனர். மேலும், தொழிலாளர் நலக் காப்புறுதிச் சட்டம், எஸ்டேட் ஒழிப்புச் சட்டம், மோட்டார் வாகனங்கள் சட்டம் போன்ற சில குறிப்பிட்ட தனிச் சட்டங்களின் கீழ் நடுவர் மன்றங்களாகவும் செயல்படுகின்றனர்.



மாவட்ட நீதிபதிகள் அவரவர் அதிகார வரம்பிற்குப்பட்ட பகுதிகளிலுள்ள சார்நிலை, உரிமையியல் நீதிமன்றங்களையும் கூடுதல் மாவட்ட நீதிபதி—தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றங்களையும் ஆய்வு செய்கின்றனர். இம்மாவட்ட நீதிமன்றங்கள் ரூ.3,00,000 வரையிலான உரிமையியல் மேல்முறையீட்டு வழக்குகளை விசாரிக்கும் அதிகார வரம்பினைக் கொண்டுள்ளன.

**ஆ. சார்நீதிபதி நீதிமன்றங்கள் (உரிமையியல் நீதிபதி-முதுநிலை:**

சார்நீதிபதிகள் தற்போது உரிமையியல் நீதிபதிகள் (முதுநிலைப் பிரிவு) எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்கு அசல் வழக்கில் பண வகையில் வரம்பு ஏதுமில்லை. அவர்களின் அதிகார வரம்பு, உரிமையியல் நீதிமன்றங்கள் சட்டத்தில் விளக்கப்பட்டுள்ளது. சார்நீதிபதிகள் அவரவர் அதிகார வரம்பிற்கு உட்பட்ட பகுதியில் இருக்கும் மவட்ட உரிமையியல் நீதிமன்ற நடுவர்களின் முடிவிற்கெதிராகத் தொடரப்படும் ரூ.30,000 மதிப்பிற்கு உட்பட்ட மேல்முறையீடுகளை விசாரிக்கும் அதிகாரத்தையும் பெற்றுள்ளனர். சார்நீதிபதிகள், உதவி அமர்வு நீதிபதிகளாகவும் செயல்படுகின்றனர். மேலும், மோட்டார் விபத்து உரிமைக் கோரிக்கைகளின் தீர்ப்பாயங்களாகவும் சார்நீதிமன்றங்கள் ஏற்படுத்தப்பட்டு, அவற்றுக்கு சார்நீதிபதிகளே தலைமை வகிக்கின்றனர்.

**இ. மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள் (உரிமையியல் நீதிபதி-இளநிலை)**

மாவட்ட உரிமையியல் நீதிபதிகள் தற்பொழுது உரிமையியல் நீதிபதிகள் (இளநிலைப் பிரிவு) எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் ரூ.30,000 வரையில் மதிப்புள்ள வழக்குகளை விசாரிக்கும் அதிகார வரம்பினைப் பெற்றுள்ளனர். ஒவ்வொரு மாவட்ட உரிமையியல் நீதிமன்றமும், வரையறுத்த அதிகார வரம்பினைக் கொண்டிருக்கிறது. இவை ரூ.20,000 வரையிலான மதிப்புள்ள சிறுவழக்குகளை விசாரிக்கும் அதிகாரமும் பெற்றுள்ளன. இந்நீதிபதிகள், அவரவர் பகுதிகளுக்கான வாடகைக் கட்டுப்பாட்டு அதிகாரிகளாகவும் செயல்படுகின்றனர்.

**ஈ. மாவட்ட உரிமையியல்-குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள்:**

மாநிலத்தில் சில பகுதிகளைச் சேர்ந்த வழக்காடும் மக்கள் அவரவருடைய பகுதிகளில் உரிமையியல் நீதிமன்றங்கள் இல்லாமையால்

தங்களுடைய உரிமையியல் வழக்குகளுக்குத் தீர்வு காண அவர்தம் பகுதிகளுக்கு அப்பாலுள்ள உரிமையியல் நீதிமன்றங்களை நாடுவதில் சில இடர்பாடுகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. அவர்களுடைய குறைபாடுகளை நீக்கும்பொருட்டு, உரிமையியல் நீதிமன்றங்கள் இல்லாத இடங்களில் அமைந்துள்ள 43 குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் மாவட்ட உரிமையியல்-குற்றவியல் நடுவர் நீதிமன்றங்களாக மாற்றப்பட்டுள்ளன. இந்நீதிமன்றங்கள் உரிமையியல் வழக்குகளையும், குற்றவியல் வழக்குகளையும் விசாரிக்கின்றன.

வெளியூர்களில் உள்ள அனைத்து மாவட்ட நீதிமன்றங்கள், சார் நீதிமன்றங்கள், மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள் தொடர்பாக 1999-2000 ஆம் ஆண்டிற்கு ரூ.62,54,50,000/- செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

**உ. தொழிலாளர் நல நீதிமன்றங்கள்**

சென்னையில் மூன்றும், மதுரை, கோயம்புத்தூர், வேலூர், சேலம், திருச்சிராப்பள்ளி, கடலூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் ஒவ்வொன்றுமாக மொத்தம் 10 தொழிலாளர் நல நீதிமன்றங்கள் இம்மாநிலத்தில் இயங்கி வருகின்றன. மாநிலத்தில் அனைத்துப் பகுதிகள் மீதும் அதிகார வரம்பு கொண்ட தொழில் நடுவர் மன்றம் ஒன்றும் சென்னையில் இயங்கி வருகிறது.

தொழிலாளர் நல நீதிமன்றங்கள் மற்றும் தொழில் நடுவர் மன்றம் ஆகியவற்றின் நடுவர்கள் மாவட்ட நீதிபதி பதவித் தரத்தைச் சேர்ந்தவர்கள் ஆவர். அரசு அனுப்பி வைக்கும் தொழில் தகராறுகளையும், பாதிக்கப்பட்டவர்கள் தாக்கல் செய்யும் உரிமை கோரிக்கை மனுக்களையும் தொழிலாளர் நல நீதிமன்றங்கள் விசாரிக்கின்றன.

தொழிலாளர் நீதிமன்றங்கள் மற்றும் தொழில் நடுவர் மன்றம் ஆகியவற்றின் நடுவர்கள் தங்கள் அதிகார வரம்பிற்குட்பட்ட பகுதிகளுக்குச் சுற்றுப்பயணம் சென்று, முகாம் நீதிமன்றம் நடத்தி தொழிலாளர் வழக்குகள் மற்றும் உரிமைக் கோரிக்கை மனுக்கள்மீது விசாரித்துத் தீர்ப்பு வழங்குகின்றனர்.

சென்னையிலுள்ள தொழிலாளர் நல நீதிமன்றங்கள் மற்றும் தொழில் நடுவர் மன்றம் ஆகியவற்றைப் பொறுத்தமட்டில் 1999-2000 ஆம் ஆண்டில் ரூ.1,32,10,000/- செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.





**7. குற்றவியல் நீதிமன்றங்களின் அமைப்பு முறை**

(i) சென்னை மாநகரம்

சென்னை மாநகரில், பெருநகரத் தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், பெருநகரக் கூடுதல் தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் உட்பட மொத்தம் 24 பெருநகரக் குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. XXI-வது மற்றும் XXII-வது பெருநகரக் குற்றவியல் நடுவர்கள் இரு நடமாடும் நீதிமன்றங்களுக்குத் தலைமை தாங்குவர். மேலும், சென்னையில் 4 நடமாடும் நீதிமன்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டுமென்ற சென்னை காவல் துறை ஆணையாளரின் செயற்குறிப்பை அரசு ஏற்றுக்கொண்டு, சென்னை உயர் நீதிமன்றத்துடன் கலந்தாலோசித்த பின்னர், அவற்றை உருவாக்க ஆணை பிறப்பித்தது. பெருநகரத் தலைமைக் குற்றவியல் நடுவர் மாவட்ட நீதிபதி பதவித் தரப்பைச் சேர்ந்தவர் ஆவார். பெருநகரக் கூடுதல் தலைமைப் பொருளாதாரக் குற்றங்களை விசாரிக்க மாவட்ட நீதிபதி பதவித் தரத்தில் பெருநகரக் கூடுதல் தலைமைக் குற்றவியல் நடுவர்கள் இருவர் உள்ளனர். இரண்டாவது, மூன்றாவது, நான்காவது, பத்தாவது மற்றும் பதினொன்றாவது பெருநகரக் குற்றவியல் நடுவர்கள் சார் நீதிபதிகள் பதவி நிலையைச் சார்ந்தவர்கள் ஆவர். ஏனைய அனைத்துப் பெருநகரக் குற்றவியல் நடுவர்களும், மாவட்ட உரிமையியல் நீதிபதி பதவித் தரத்தைச் சேர்ந்தவர்கள் ஆவர். பெருநகரக் குற்றவியல் நடுவர்கள் சென்னை நகரில் அவரவர் அதிகார வரம்பிற்குட்பட்ட காவல்நிலைய வழக்குகள் குறித்து விசாரிக்கும் அதிகாரம் பெற்றவராவர்.

1999-2000 ஆம் ஆண்டில் இம்மாநகரிலுள்ள பெருநகரக் குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் வகையில் ரூ.3,10,12,000/- செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

(ii) வெளியூர்

**அ. தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள்**

தற்போது 21 கூடுதல் மாவட்ட நீதிபதி-தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. கூடுதல் மாவட்ட நீதிபதி-தலைமைக் குற்றவியல் நடுவர்கள் அரவவர் மாவட்டத்திலுள்ள குற்றவியல் நீதிமன்றங்களை ஆய்வு செய்வர். இவர்கள், தங்கள் நிருவாகப் பணிகளுடன் 1973 ஆம் ஆண்டு குற்றவியல் நடைமுறைச் சட்டக் கோவையின்கீழ் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதிகளால் மாற்றப்படும்

[1999 ஏப்ரல் 16

மேல்முறையீடுகளையும் விசாரணை செய்ய மேற்சொன்ன விதிக் கோவையின்கீழ் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. இவர்கள், கூடுதல் அமர்வு நீதிபதிகளாகவும் செயல்படுகின்றனர்.

### ஆ. குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள்

அநேகமாக அனைத்து வட்டங்களிலும் குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. இம்மாநிலத்தில் 176 குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் உள்ளன.

1999-2000 ஆம் ஆண்டு வெளியூர்களில் உள்ள குற்றவியல் நீதிமன்றங்கள் வகையில் ரூ.26,91,97,000/- செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

## 8. தமிழ்நாட்டில் செயல்படும் தனி நீதிமன்றங்கள்

அ. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு எதிராக இழைக்கப்படும் வன்கொடுமைகள் தொடர்பான வழக்குகளை விசாரிக்கும் தனிநீதிமன்றங்கள்:

1989 ஆம் ஆண்டு ஆதிதிராவிடர், பழங்குடியினர் (வன் கொடுமைகள் தடுப்புச்) சட்டம், குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டம் ஆகியவற்றின்கீழ் பதிவு செய்யப்பட்ட குற்றங்களை விசாரிப்பதற்கென நான்கு கூடுதல் அமர்வு நீதிமன்றங்கள் கீழ்வருமாறு எல்லைகளைக் கொண்டு இயங்கி வருகின்றன:-

| நீதிமன்றத்தின் பெயர் (1) | நீதிமன்றத்தின் அதிகார வரம்பு (2) |
|---|---|
| (1) IV கூடுதல் அமர்வு நீதிமன்றம், மதுரை | (1) மதுரை<br>(2) திண்டுக்கல்<br>(3) தேனி<br>(4) இராமநாதபுரம்<br>(5) சிவகங்கை<br>(6) விருதுநகர் |
| (2) II கூடுதல் அமர்வு நீதிமன்றம், தஞ்சாவூர் | (1) தஞ்சாவூர்<br>(2) நாகப்பட்டினம்<br>(3) திருவாரூர் |
| (3) III கூடுதல் அமர்வு நீதிமன்றம், திருநெல்வேலி. | (1) திருநெல்வேலி<br>(2) தூத்துக்குடி<br>(3) கன்னியாகுமரி |
| (4) IV கூடுதல் அமர்வு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி. | (1) திருச்சிராப்பள்ளி<br>(2) கரூர்<br>(3) பெரம்பலூர்<br>(4) புதுக்கோட்டை |



1999 ஏப்ரல் 16]

எஞ்சிய மாவட்டங்களைப் பொறுத்தமட்டில், தொடர்புடைய முதன்மை அமர்வு நீதிமன்றம் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்புச்) சட்டத்தின்கீழ் வரும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு எதிராக இழைக்கப்படும் குற்றங்களை விசாரிக்கும்.

### ஆ. பொருளாதாரக் குற்றங்களை விசாரணை செய்வதற்கான தனி நீதிமன்றங்கள்:

பொருளாதாரக் குற்றங்களை விசாரணை செய்வதற்காக சென்னையில் இரண்டும், மதுரையில் ஒன்றுமாக மொத்தம் மூன்று தனி நீதிமன்றங்கள் உள்ளன. இவற்றில் சென்னையில் மாவட்ட நீதிபதி பதவித் தரத்திலும் மதுரையில் சார்புநீதிபதி பதவித் தரத்திலும் நீதித் துறை அலுவலர்கள் உள்ளனர்.

### இ. சந்தனக் கட்டை கடத்தல் குற்றங்களை விசாரிப்பதற்கான தனி நீதிமன்றங்கள்:

வேலூர் மாவட்டம், திருப்பத்தூரில் ஒன்றும், சேலம் மாவட்டம், சேலத்தில் ஒன்றுமாக சந்தனக் கட்டை கடத்தல் குற்றங்களை விசாரணை செய்ய இரண்டு தனி நீதிமன்றங்கள் உள்ளன. குற்றவியல் நடுவர் பதவித் தரத்தில் நீதித் துறை அலுவலர்கள் இங்கு உள்ளனர்.

### ஈ. இரயில்வே நீதிமன்றங்கள்:

இந்திய இரயில்வே சட்டத்தின் கீழ் பயணச்சீட்டு இல்லாமல் இரயில் பயணம் செய்தல் முதலிய குற்றங்களை விசாரணை

[1999 ஏப்ரல் 16

செய்வதற்காக சென்னையில் எழும்பூர் இரல்வே நிலையத்திலும், சென்ட்ரல் இரயில்வே நிலையத்திலும் இரயில்வே குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் இருப்பதுடன், வேலூர், கடலூர், கோயம்புத்தூர், சேலம், மதுரை, தஞ்சாவூர் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களிலும் இரயில்வே குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் அமைந்துள்ளன. இரயில்வே குற்றவியல் நடுவர் நீதிமன்றங்களுக்கு ஆகும் செலவை மாநில அரசே செய்து வருகிறது. இரயில்வே குற்றவியல் நடுவர் நீதிமன்றம் வசூலித்த அபராதம் நீதித் துறை கணக்கில் வரவு வைக்கப்படுகிறது.

### உ. நடமாடும் நீதிமன்றங்கள்:

சாலைப் போக்குவரத்துத் தொடர்பான குற்றங்களை விசாரிக்க சென்னையில் இரண்டும், கோயம்புத்தூரில் ஒன்றும், மதுரையில் ஒன்றுமாக மொத்தம் நான்கு நடமாடும் நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. 1998-99 ஆம் ஆண்டில் சென்னையில் அனுமதிக்கப்பட்ட மேலும் 4 நடமாடும் நீதிமன்றங்கள் இன்னும் தொடங்கப்படவில்லை.

### ஊ. குடும்ப விவகாரங்களுக்கான நீதிமன்றங்கள்:

சென்னையில் மூன்றும், மதுரை, கோயபுத்தூர் மற்றும் சேலம் ஆகிய இடங்கள் ஒவ்வொன்றிலும் முறையே, ஒன்றுமாக மொத்தம் ஆறு நீதிமன்றங்கள் உள்ளன. குடும்ப நீதிமன்றங்களின் வழக்குரைஞர்களுக்கான வழக்கு விசாரணை ஒன்றிற்குரிய கட்டணத்தை ரூ.30-லிருந்து ரூ.100-ஆக அரசு உயர்த்தியுள்ளது. 1999-2000 ஆம் ஆண்டில் குடும்ப நீதிமன்றங்களுக்காகும் செலவு ரூ.97,30,000/- என மதிப்பிடப்பட்டுள்ளது.

### எ. 1987 ஆம் ஆண்டு "தடா" சட்டத்தின்கீழ் தனி நீதிமன்றங்கள்:

நம் நாட்டில் பயங்கரவாதிகளின் நடவடிக்கைகளை ஒடுக்க 1987 ஆம் ஆண்டு "தடா" சட்டம் இயற்றப்பட்டுள்ளது. தமிழக அரசு உயர்நீதிமன்றத்தின் ஒப்புதலுடன் சென்னையில் இரண்டு தனி நீதிமன்றங்களையும், திருநெல்வேலி, கோயம்புத்தூர் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்கள் ஒவ்வொன்றிலும் தனி நீதிமன்றத்தையும் அமைத்துள்ளது.



1999 ஏப்ரல் 16]

### ஏ. மத்தியப் புலனாய்வுத் துறை வழக்குகளை விசாரிப்பதற்கென சிறப்பு நீதிமன்றங்கள்:

மத்தியப் புலனாய்வு வழக்குகளை விசாரிப்பதற்கென சென்னையில் இரண்டு நீதிமன்றங்கள் மற்றும் மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் ஒவ்வொரு நீதிமன்றமென மொத்தம் 4 சிறப்பு நீதிமன்றங்கள் உள்ளன. இந்த நீதிமன்றங்களுக்கு 1999-2000 ஆம் ஆண்டில் ஏற்பட உள்ள செலவு ரூ.42,43,000/- என மதிப்பிடப்பட்டுள்ளது.

### ஐ. இன்றியமையாப் பொருட்கள் சட்டத்தின்கீழ் வரும் வழக்குகளை விசாரிப்பதற்கான தனி நீதிமன்றங்கள்:

இன்றியமையாப் பொருட்கள் சட்டத்தின் கீழ்வரும் வழக்குகளை விசாரணை செய்ய, மாவட்ட அமர்வு நீதிபதி பதவித் தரத்தில் உள்ளவர்களை நீதிபதிகளாகக் கொண்டு சென்னை, மதுரை, கோயம்புத்தூர், புதுக்கோட்டை, சேலம், தஞ்சாவூர் ஆகிய இடங்களில் ஒவ்வொன்றாக மொத்தம் ஆறு தனி நீதிமன்றங்கள் தற்போது உள்ளன.

### ஒ. போதை மருந்து மற்றும் மனமயக்கப் பொருட்கள் சட்டத்தின் கீழ்வரும் வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றங்கள்:

போதை மருந்து மற்றும் மனமயக்கப் பொருட்கள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகளை மட்டும் விசாரிப்பதற்கென சென்னையில் ஒரு கூடுதல் சிறப்பு நீதிமன்றம் செயல்பட்டு வருகிறது.

### ஓ. மனித உரிமை நீதிமன்றங்கள்:

மனித உரிமைகள் மீறப்படுவதால் ஏற்படும் வழக்குகளை விரைவாக விசாரிப்பதற்கு வகை செய்யும்பொருட்டு, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு குற்றவியல் நீதிமன்றத்தை (Court of Sessions) மனித உரிமைகள் நீதிமன்றமாக மாநில அரசு குறிப்பிடுவதற்கு 1993 ஆம் ஆண்டு மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டம் (மத்திய சட்டம் எண் 10/1994) வகை செய்கிறது. மேலும், மனித உரிமைகள் நீதிமன்றங்களுக்கு அரசு குற்றவியல் சிறப்பு வழக்குரைஞர்களை (Special Public Prosecutors) மாநில அரசு நியமிக்கவும் அச்சட்டம் வழி வகுக்கிறது.

மேற்கண்ட விதிகளுக்கிணங்க, சென்னை உயர் நீதிமன்றத்தின் இசைவுடன் இம்மாநிலத்தில் உள்ள அனைத்துக் கூடுதல் மாவட்ட

நீதிபதி-தலைமைக் குற்றவியல் நடுவர்களையும் (Additional District Judge-*cum*-Chief Judicial Magistrates) சென்னையில் உள்ள இரண்டாவது கூடுதல் அமர்வு நீதிபதி (II Additional Sessions Judge) மற்றும் உதகமண்டலம் அமர்வு நீதிபதி (Sessions Judge) ஆகியோரை மனித உரிமைகள் நீதிமன்றங்களாக மாநில அரசு குறிப்பிட்டுள்ளது. இந்த நீதிமன்றங்கள் 29-01-1996 முதல் செயல்பட்டு வருகின்றன. மனித உரிமைகள் நீதிமன்றங்களில் உள்ள வழக்குகளை நடத்துவதற்காக, மாவட்ட நீதிபதிகளில் உள்ள அரசு குற்றவியல் வழக்கு நடத்துனர்கள், அரசு சிறப்பு வழக்கு நடத்துனர்களாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

இருப்பினும், சென்னை உயர் நீதிமன்றம் அண்மையில் பிறப்பித்த உத்திரவுகளுக்கிணங்க, மனித உரிமை மீறல் வழக்குகளை நீதிமன்றத்தில் நடத்துவதற்காக அரசு குற்றவியல் சிறப்பு வழக்கு நடத்துனர்களை நியமிக்க மாநில அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

### ஔ. தமிழ்நாடு வைப்பீட்டாளர் (நிதி நிறுவனங்களில்) நலன் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் தனி நீதிமன்றம்:

1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு வைப்பீட்டாளர்கள் (நிதி நிறுவனங்களின்) நலன் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் வழக்குகளை விசாரிப்பதற்கென்றே தனி நீதிமன்றம் சென்னையில் இயங்கி வருகிறது.

### (அ அ) வெடிகுண்டு வழக்குகளை விசாரிப்பதற்கென கோயம்புத்தூரிலும் சென்னையிலும் ஒவ்வொரு கூடுதல் அமர்வு நீதிமன்றம்:

வெடிகுண்டு வழக்குகளின் முக்கியத்துவத்தையும், அவ்வழக்குகளை விரைவாக விசாரித்து முடிக்க வேண்டிய அவசியத்தையும் கருத்திற்கொண்டு, கோயம்புத்தூர் மற்றும் சென்னை ஆகிய இடங்களில் வெடிகுண்டு வழக்குகளை விசாரிப்பதற்கென இரண்டு கூடுதல் அமர்வு நீதிமன்றங்களை உருவாக்க அரசு கருதியது. அதன்படி சென்னை உயர் நீதிமன்றத்துடன் கலந்து ஆலோசித்து, கோயம்புத்தூரில் ஒன்றும் சென்னையில் ஒன்றுமாக மாவட்ட அமர்வு நீதிபதி தலைமையின்கீழ் இரண்டு கூடுதல் அமர்வு நீதிமன்றங்களை உருவாக்க அரசு அனுமதி அளித்துள்ளது. சென்னை உயர் நீதிமன்றத்தால் இந்த இரண்டு நீதிமன்றங்களும் தொடங்கப்பட வேண்டும்.



### (ஆ ஆ) மதுரையில் சாதிக் கலவரங்களால் நிகழ்ந்த குற்றங்களை விசாரிப்பதற்கென அமர்வு நீதிமன்றம்:

தென் மாவட்டங்களில் சாதிக் கலவரங்களினால் நிகழ்ந்த குற்றங்களை விரைந்து விசாரித்து முடிக்கப்பட வேண்டும் என்பதற்கிணங்க, மதுரையில் அதற்காக ஓர் அமர்வு நீதிமன்றம் உருவாக்க வேண்டும் என்று அரசு கருதி, சென்னை உயர் நீதிமன்றத்துடன் கலந்து ஆலோசித்து மாவட்ட அமர்வு நீதிபதி தலைமையில் ஒரு அமர்வு நீதிமன்றத்தை உருவாக்க அனுமதி அளித்துள்ளது. இந்த நீதிமன்றம் இன்னும் தொடங்கப்படவில்லை. இந்த நீதிமன்றத்தை விரைவாக தொடங்கிடக்கோரி சென்னை உயர் நீதிமன்றப் பதிவாளரை அரசு கேட்டுக்கொண்டுள்ளது.

### 9. சென்னை அரசு தலைமைச் சொத்தாட்சியர்-பொறுப்புச் சொத்தாட்சியர்:

சென்னையில் உள்ள அரசு தலைமைச் சொத்தாட்சியர்-பொறுப்புச் சொத்தாட்சியர் மாவட்ட நீதிபதி பதவித் தரத்தில் உள்ள ஓர் அதிகாரியாவார். அவருக்கு உதவியாகத் துணைத் தலைமைச் சொத்தாட்சியர்-பொறுப்புச் சொத்தாட்சியர் உள்ளார். உரிய வயதடையாதவர்கள் மற்றும் அறக்கட்டளைகளின் சொத்துக்களுக்கும் மற்றும் காலஞ்சென்றவர்களின் சொத்துக்களுக்கும் இவ்விரு அதிகாரிகளும் பொறுப்பு வகிக்கின்றனர். இவர்கள், அரசுத் தலைமைச் சொத்தாட்சியர் சட்டம் மற்றும் பொறுப்புச் சொத்தாட்சியர் சட்டம் ஆகியவற்றின் விதிமுறைகளின்படி அவர்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள பல்வகைப் பொறுப்புகளையும் கடமைகளையும் நிறைவேற்றி வருகின்றார்கள்.

### 10. தமிழ்நாட்டில் சட்ட அலுவலர்களின் அமைப்பு:

நீதிமன்றங்களில் அரசின் வழக்குகளைச் செம்மையாக நடத்தி, அரசின் நலன்களை பாதுகாப்பதற்கென சட்ட அலுவலர்கள், குறிப்பிட்ட கால அடைப்படையிலும் காலமுறை ஏற்றச் சம்பளம் பெறும் அரசுப் பணி அடிப்படையிலும் அரசால் நியமிக்கப்படுகின்றனர். அரசால் நியமிக்கப்பட்ட சட்ட அலுவலர்களின் பதவித் தரங்கள் விவரம் வருமாறு:

[1999 ஏப்ரல் 16

## சட்ட அலுவலர்கள்

### மாநில அரசு தலைமை வழக்குரைஞர்

| | சென்னை மாநகரம் | வெளியூர் |
|---|---|---|
| வ. எண் | உரிமையியல் | உரிமையியல் |
| 1. | அரசு உரிமையியல் வழக்குரைஞர் | அரசு உரிமையியல் வழக்குரைஞர் |
| 2. | அரசு உரிமையியல் கூடுதல் வழக்குரைஞர்கள் | அரசு உரிமையியல் கூடுதல் வழக்குரைஞர்கள் |
| 3. | அரசு உரிமையியல் தனி வழக்குரைஞர்கள் | அரசுப் பணிகளை ஆற்றும் அரசு உரிமையியல் வழக்குரைஞர்கள் |
| 4. | அரசு வழக்குரைஞர்கள் | |
| | குற்றவியல் | குற்றவியல் |
| 1. | அரசு குற்றவியல் வழக்குரைஞர்கள் | அரசு குற்றவியல் வழக்குரைஞர்கள் |
| 2. | அரசு குற்றவியல் கூடுதல் வழக்குரைஞர்கள் | அரசு குற்றவியல் தனி வழக்குரைஞர்கள் |
| 3. | அரசு குற்றவியல் தனி வழக்குரைஞர்கள் | அரசு குற்றவியல் தனி வழக்குரைஞர்கள் |
| 4. | மாநகரக் குற்றவியல் வழக்குரைஞர்கள் | அரசு குற்றவியல் உதவி வழக்குரைஞர்கள் நிலை-1 நிலை-2 |
| 5. | அரசு குற்றவியல் சிறப்பு வழக்குரைஞர்கள் | |
| 6. | அரசு குற்றவியல் உதவி வழக்குரைஞர்கள் நிலை-1 நிலை-2 | |



வழக்குகளுக்கு தீர்வு காண்பதில் சட்ட அலுவலர்களின் பணி இன்றியமையாதது. அதன் முக்கியத்துவத்தை அனைவரும் அறிவர்.

இச்சட்ட அலுவலர்களில், மாவட்டங்களிலுள்ள தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் மற்றும் சென்னையிலுள்ள பெருநகர தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் ஆகியவற்றிலுள்ள அரசு உதவி வழக்கு நடத்துநர்களும் கூடுதல் வழக்கு நடத்துநர்களும் மட்டுமே நிரந்தர அரசுப் பணியாளர்கள் ஆவர். எஞ்சிய சட்ட அலுவலர்கள் குறிப்பிட்ட கால அடிப்படையில் நியமிக்கப்படுகின்றனர்.

புது தில்லி உச்ச நீதிமன்றத்திலுள்ள நமது வழக்குகளைப் பொறுத்தமட்டில் நான்கு வழக்குரைஞர்கள் உள்ளனர்.

## 11. தமிழில் வெளிவரும் சட்ட இதழ்

"தீர்ப்புத் திரட்டு" எனும் பெயரில் தமிழில் வெளிவரும் சட்டமாத இதழ் அரசால் வெளியிடப்படுகிறது. 1999-2000 ஆம் ஆண்டுக்கான உத்தேச செலவு ரூ.15,30,000 என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த இதழ் ஒன்று விலை ரூ.32 வீதம் வழக்கறிஞர்கள் மற்றும் பொதுமக்களுக்கு வழங்கப்படுகிறது.

## II. நிதி ஒதுக்கீடு

நீதித் துறை தனது அடிப்படை வசதிகள் மேம்பாடு வகையில் மட்டுமின்றி நிதி ஒதுக்கீட்டிலும் பெரும் ஏற்றம் கண்டு வருகிறது. 1989-90- ஆம் ஆண்டில் நீதித் துறைக்கு ரூ.29.70 கோடி மட்டுமே ஒதுக்கீடு செய்யப்பட்டது. இது 1999-2000 ஆம் ஆண்டில் ரூ.140.31 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. கீழ்க்கண்ட பட்டியல், நிதி ஒதுக்கீடு உயர்ந்து வந்துள்ளதைக் காட்டுகிறது:

| ஆண்டு (1) | செலவு (2) | வரவு (3) |
|---|---|---|
| | (ரூபாய் கோடியில்) | |
| 1989-1990 | 29.70 | 28.57 |
| 1990-1991 | 37.25 | 26.16 |
| 1991-1992 | 40.19 | 25.65 |
| 1992-1993 | 45.25 | 28.07 |

| (1) | (2) (ரூபாய் கோடியில்) | (3) |
|---|---|---|
| 1993-1994 | 56.05 | 32.62 |
| 1994-1995 | 64.95 | 38.34 |
| 1995-1996 | 73.14 | 43.04 |
| 1996-1997 | 86.74 | 45.96 |
| 1997-1998 கணக்குகள் | 104.45 | 48.45 |
| 1998-1999 திருத்திய மதிப்பீடு | 137.65 | 58.75 |
| 1999-2000 | 140.31 | 61.22 |

## III. நீதிமன்றங்களில் கணினிகளை நிறுவுதல்

தேசியத் தகவல் தொகுப்பு மையம், உயர் நீதிமன்றத்தில் தேவையான எண்ணிக்கையிலான முனையங்களுடன் கணினித் தொடர்பு ஏற்பாட்டை நிறுவியுள்ளது. இந்த அமைப்பு 1995 முதல் நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது. கணினி விரிவாக்கத்திற்காக 30 கூடுதல் முனையங்களையும் (Computer Terminals) 30 கூடுதல் அச்சு இயந்திரங்களையும் (Computer Printers) இந்த மையம் அளித்துள்ளது. 1998ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில், இந்தக் கூடுதல் வசதியைப் பயன்படுத்துவதற்காக மேசை, நாற்காலி மற்றும் உபகரணங்கள் ரூ.9 இலட்சம் செலவில் வாங்க அரசு அனுமதியளித்துள்ளது.

புது தில்லியில் உள்ள இந்தியத் திட்டக் குழுவின் தேசியத் தகவல் தொகுப்பு மையம் நாட்டிலுள்ள எல்லா மாவட்ட நீதிமன்றங்களையும் கணினி முனையங்கள் மூலம் தொடர்புபடுத்தும் பணியினை கடுவிரைவுத் திட்டத்தின்கீழ் எடுத்துக்கொண்டு சென்னை மாநகர உரிமையியல் நீதிமன்றத்தையும் சேர்த்து 23 மாவட்ட நீதிமன்றங்களுக்கு, கணினிகள் மற்றும் முனையங்கள் வழங்கியுள்ளது. அந்த மாவட்ட நீதிமன்றங்களில் உள்ள ஒவ்வொரு மாவட்டக் கணினி மையமும் செவ்வனே செயல்பட இந்த அரசு தொலைபேசி மற்றும் அறைகலன்கள் ஆகியவற்றை வழங்கியுள்ளது.



## IV. சார்நிலை நீதிமன்றங்களைப் பரவலாக அமைத்தல்

குறிப்பிட்ட ஒரே இடத்தில் பல்வேறு நீதிமன்றங்கள் செயல்படுவதை தவிர்க்கும்பொருட்டும், வழக்காடும் பொதுமக்கள் தற்போது அமைந்திருக்கும் நீதிமன்றங்களுக்குச் சென்றுவருவதில் காணும் சிரமத்திலிருந்து அவர்களை விடுவிக்கவும், மாவட்டங்களிலுள்ள சார்நிலை நீதிமன்றங்கள் வழக்குகளின் புள்ளி விவரங்களைப் பொறுத்து பல்வேறு இடங்களில் அமைக்கப்படுகின்றன.

தற்போது, மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்களின் அதிகார வரம்பு, தமிழ்நாடு உரிமையியல் நீதிமன்றங்கள் சட்டத்தின்கீழ் வரையறுக்கப்பட்டுள்ளது. அதுபோல் மாநகர உரிமையியல் நீதிமன்றங்களின் அதிகார வரம்பு, சென்னை மாநகர உரிமையியல் சட்டத்தின்கீழும், சிறுவழக்குகள் நீதிமன்றங்களின் அதிகார வரம்பு, மாநில சிறுவழக்கு நீதிமன்றங்கள் சட்டத்தின்கீழும் வரையறுக்கப்பட்டுள்ளது.

மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்களின் அதிகார வரம்பு ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வட்டங்களுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது. சார்நிலை நீதிமன்றங்கள் அதிகார வரம்பு ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட உரிமையியல் நீதிமன்றங்களுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது. மாவட்ட மற்றும் குற்றவியல் நீதிமன்றங்களைப் பொறுத்தவரையில். அதன் அதிகார வரம்பு மாவட்டம் முழுமைக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. குற்றவியல் நீதிமன்றங்களைப் பொறுத்தவரையில், அதன் அதிகார வரம்பு, குற்றவியல் நடைமுறைச் சட்டக்கோவையின்கீழ் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. குற்றவியல் நடுவர் நீதிமன்றங்களின் அதிகார வரம்பு இரண்டு அல்லது அதற்கும் மேற்பட்ட காவல் நிலையங்களுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது.

புதிய நீதிமன்றங்கள் அமைப்பதற்காக வழக்குரைஞர்கள் சங்கத்திடமிருந்து அல்லது வழக்காடும் பொதுமக்களிடமிருந்து வரும் முறையீடுகளை, அரசு உயர் நீதிமன்றத்துடன் கலந்தாலோசித்துத் தக்கப் பரிசிலனைக்குப் பிறகு புதிய நீதிமன்றங்களை அமைக்கிறது.

## V. முன்னோடித் திட்டம்

சார்நிலை நீதிமன்றங்களில் மிகப்பெரிய அளவில் நிலுவையில் இருந்த உரிமையியல் மற்றும் குற்றவியல் வழக்குகளைக் குறைப்பதற்கும், அவ்வழக்குகளுக்குப் போர்க்கால அடிப்படையில் தீர்வு

[1999 ஏப்ரல் 16

காண்பதற்காகவும் "முன்னோடித் திட்டம்" என்ற சிறப்புத் திட்டம் கீழ்க்கண்ட மாவட்டங்களில் படிப்படியாக அறிமுகப்படுத்தப்பட்டது:

1. தருமபுரி
2. நாகப்பட்டினம்
3. தூத்துக்குடி
4. விருதுநகர்
5. புதுக்கோட்டை
6. சிவகங்கை
7. நீலகிரி
8. இராமநாதபுரம்
9. விழுப்புரம்
10. கன்னியாகுமரி
11. திருநெல்வேலி
12. கடலூர்
13. ஈரோடு
14. திருவண்ணாமலை
15. தஞ்சாவூர்
16. திண்டுக்கல்

இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட மாவட்டத்தில் இத்திட்டம் முடிவுறும்போது, உயர் நீதிமன்றம் மற்றும் உச்ச நீதிமன்றத்தில் தடையாணை பெறப்பட்ட வழக்குகள் தவிர இரண்டு ஆண்டுகளுக்கு மேற்பட்ட வழக்குகள் எதுவும் நிலுவையில் இருக்கக் கூடாது என்பதுதான் இத்திட்டத்தின் குறிக்கோளாகும்.

1995 ஆம் ஆண்டில், முன்னோடித் திட்டம், முதல் கட்டத்தில் 11 கூடுதல் நீதிமன்றங்களையும், 1996 ஆம் ஆண்டில் இரண்டாம் கட்டத்தில் 55 கூடுதல் நீதிமன்றங்களையும் ஏற்படுத்த அரசு அனுமதி வழங்கியது. எனினும், இரண்டாம் கட்டத்தில் அனுமதிக்கப்பட்ட 37 கூடுதல் நீதிமன்றங்கள் நீதிபதிகள் இல்லாமையால் இன்னும் தொடங்கப்படவில்லை. அந்த நீதிமன்றங்களைத் துரிதமாக தொடங்கிட சென்னை உயர் நீதிமன்றத்தை அரசு கேட்டுக்கொண்டுள்ளது.



1999 ஏப்ரல் 16]

## VI. திட்டப்பணியின்கீழ் நீதித் துறைக்கான உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்

1992-93 ஆம் ஆண்டு வரையில் நீதிமன்றக் கட்டடங்கள், நீதித் துறை அலுவலர்களுக்கான குடியிருப்புகள் ஆகியவற்றைக் கட்டுவதற்கான செலவினம் திட்டம் சாராப் பணியின்கீழ் (Non-Plan) மேற்கொள்ளப்பட்டது. இந்தச் செலவு முழுவதையும் மாநில அரசே செய்து வந்தது. 1993-94 ஆம் ஆண்டு முதல் உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தித் தருவதற்கு ஏற்படும் செலவை மத்திய அரசும், மாநில அரசும் சரிபாதியாகப் பகிர்ந்துக் கொள்வதற்கு நிதி உதவி அளிக்க மத்திய அரசு ஒப்புக் கொண்டது. அது முதற்கொண்டு மேற்சொன்ன கட்டடப் பணிகளை மத்திய அரசின் நிதியுதவியுடன் மாநில அரசு அனுமதித்து வருகின்றது. 1993-94 ஆம் ஆண்டு முதல் 1996ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் வரை ரூ.39.03 கோடி மூலதனச் செலவில் 81 திட்டங்களுக்கு மாநில அரசு அனுமதி அளித்துள்ளது. தற்போதைய அரசு இதுவரை ரூ.31.39 கோடி மூலதனச் செலவில் 12 திட்டங்களுக்கு அனுமதியளித்துள்ளது. 1998ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்களில் கோயம்புத்தூரில் ரூ.165 இலட்சம் செலவில் வழக்கறிஞர்கள் அறைகள் கட்ட அரசு அனுமதி அளித்துள்ளது. திட்டப்பணியின்கீழ் அனுமதிக்கப்பட்ட 93 பணிகளில் இதுவரை 75 பணிகள் நிறைவு பெற்றுள்ளன. இந்த நோக்கத்திற்காக ரூ.70.42 கோடி மொத்தச் செலவில் ரூ.19.16 கோடி நிதியுதவியை மத்திய அரசு அளித்துள்ளது.

## VII. அரசு வழக்குகள் துறை

தமிழ்நாடு அரசின் தலைமை வழக்கறிஞரைத் துறைத் தலைவராகக் கொண்டு, தலைமை வழக்கறிஞர், அரசு உரிமையியல் வழக்கறிஞர், குற்றவியல் வழக்கறிஞர் ஆகியோரின் அலுவலகங்களை உள்ளடக்கிய அரசு வழக்குகள் துறை 1997ஆம் ஆண்டு முதல் இயங்கி வருகிறது. மூன்று சட்ட அலுவலகங்களும் தனித்தனிப் பிரிவுகளாகச் செயல்படுகின்றன. அரசின் தலைமை வழக்கறிஞர், உரிமையியல் வழக்கறிஞர், குற்றவியல் வழக்கறிஞர் முறையே தத்தம் பிரிவுகளுக்கான நியமனம் மற்றும் ஒழுங்கு நடவடிக்கை அலுவலர்களாகச் செயல்படுவர். உயர் நீதிமன்ற சட்ட நடவடிக்கை அலுவலர்களாகச் செயல்படுவர். உயர் நீதிமன்ற சட்ட அலுவலர்களை நியமனம் செய்வதைத் தவிர மேற்சொன்ன துறையானது தலைமைச் செயலகத்தில் உள்ள உள்துறையின் கட்டுப்பாட்டில் செயல்படுகிறது.

[1999 ஏப்ரல் 16

இம்மாநிலத்தின் சட்டக் கல்லூரிகளில் மூன்றாண்டு (முழு நேரம்) சட்டப் படிப்பு, மூன்றாண்டு (மாலை நேரம்) சட்டப் படிப்பு, ஐந்தாண்டு சட்டப் படிப்பு ஆகிய படிப்பு வகுப்புகளின் சேர்க்கைக்கு சிறந்த விளையாட்டு வீரர்களுக்கென மொத்தம் 16 இடங்களை அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

1998-99 ஆம் கல்வியாண்டில் சட்டக் கல்லூரிகளில் அனுமதிக்கப்பட்ட மொத்த இடங்களின் எண்ணிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளன:-

| வ. எண் | சட்டக் கல்லூரியின் பெயர் | அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி, சென்னை (இளநிலை மற்றும் முதுநிலை சட்டப் படிப்புகள்) | 3301 |
| 2. | மதுரை சட்டக் கல்லூரி (இளநிலை மற்றும் முதுநிலை சட்டப் படிப்புகள்) | 1808 |
| 3. | திருச்சி சட்டக் கல்லூரி, திருச்சி (இளநிலை மற்றும் முதுநிலை சட்டப் படிப்புகள்) | 1056 |
| 4. | கோவை சட்டக் கல்லூரி, கோவை (இளநிலை சட்டப் படிப்பு) | 1016 |
| 5. | திருநெல்வேலி சட்டக் கல்லூரி, திருநெல்வேலி (இளநிலை சட்டப் படிப்பு) | 400 |
| | மொத்தம் | **7581** |

1997-98 ஆம் கல்வியாண்டு முதற்கொண்டு, மூன்றாண்டு (முழு நேரம்), மூன்றாண்டு (மாலை நேரம்) மற்றும் ஐந்தாண்டு சட்டப் படிப்பு சேர்க்கைக்கு தமிழ் மொழி வளர்ச்சிக்குப் பணியாற்றியவர்களின் பிள்ளைகளுக்கு ஒரு சதவீத இடத்தினையும், சுதந்திரப் போராட்ட வீரர்களின் பிள்ளைகள் மற்றும் பேரப் பிள்ளைகளுக்கு ஒரு சதவீத இடத்தினையும் ஒதுக்கீடு செய்து அரசு ஆணைகளைப் பிறப்பித்துள்ளது.



1999 ஏப்ரல் 16]

1998-99 ஆம் கல்வியாண்டு முதல் மூன்றாண்டு (முழு நேரம்), மூன்றாண்டு (மாலை நேரம்) மற்றும் ஐந்தாண்டு சட்டப் படிப்பு சேர்க்கைக்கு இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு 5 இடங்களும் தமிழ் வளர்ச்சிக்குப் பணியாற்றியவர்களின் பிள்ளைகளுக்கென ஏற்கெனவே ஒதுக்கீடு செய்யப்பட்ட ஒரு விழுக்காடு இடத்தில் தமிழ் மொழி வளர்ச்சிக்குப் பணியாற்றியவர்களுக்கும் இடஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1998-99 ஆம் கல்வியாண்டு முதல் ஐந்தாண்டு சட்டப் படிப்பு சேர்க்கைக்கு, கிராமப்புறப் பள்ளிகளில் படித்துள்ளவர்களுக்கு 15 விழுக்காடு இடங்களும், பட்டதாரிகள் அல்லாத குடும்பத்தைச் சார்ந்த முதல் 10 மாணவர்களுக்கு இலவசப் படிப்பு, படிப்புக் கட்டணம், புத்தகச் செலவு மற்றும் விடுதிக் கட்டணம் வழங்க அரசு ஆணையிட்டுள்ளது.

அரசின் பல்வேறு சட்டக் கல்லூரிகளில் பயிலுகின்ற மாணவர்கள் கல்வியில் மட்டுமின்றி, பாடத் திட்டத்தில் சேராத ஏனைய துறைகளிலும் சிறந்து விளங்குவதால், சட்ட மாணவர் பயிற்சி வழக்கு வாதம் (Moot Court) போன்ற செயற்முறைப் பயிற்சிகளிலும் தனிச் சிறப்புடன் விளங்கி வருகின்றனர். டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி மாணவர்கள், இந்தியாவின் சார்பில் சட்ட மாணவர் பயிற்சி வழக்கு வாத சர்வதேசப் போட்டியில் கலந்துகொள்வதற்கு அடுத்தடுத்து பல ஆண்டுகளாகத் தேர்வு செய்யப்பட்டு வருகின்றனர். மாணவர்களின் தகுதியினைக் கருத்திற்கொண்டு, சட்ட மாணவர் பயிற்சி வழக்கு வாதத்திறனறி போட்டியில் கலந்து கொள்வதற்கியலும் வகையில் தமிழக அரசு சட்டக் கல்லூரிகளின் மாணவர்களுக்கு நிதி உதவியினை அளிக்கிறது.

மாநிலத்தில் அனைத்து நிலைகளிலும் தமிழை ஆட்சி மொழியாக ஆக்க வேண்டும் என்ற அரசின் கொள்கைக்கேற்ப, 1973-74 ஆம் ஆண்டு முதல் தமிழ் மொழியிலும் சட்டப் பாடங்கள் போதிக்கப்பட்டு வருகின்றன. மாணவர்களின் விருப்பத்திற்கேற்ப தமிழில் சட்டம் பயிலும் மாணவர்களுக்கு ஓராண்டிற்கு ரூ.180 பயிற்சியுதவித் தொகையும் வழங்கப்படுகிறது.

மாணவர்களின் நலனுக்காக, சென்னை, மதுரை மற்றும் திருச்சி சட்டக் கல்லூரிகளில் புத்தக வங்கித் திட்டம் செயல்படுகிறது.

[1999 ஏப்ரல் 16

சட்ட ஆலோசனை தேவைப்படும் ஏழை மற்றும் எளியோர்கள் பயன்பெறும் வகையில் சட்டக் கல்லூரிகளில் இலவச சட்ட உதவி மையங்கள் செயல்பட்டு வருகின்றன.

*கட்டடங்கள்*

திருநெல்வேலி சட்டக் கல்லூரி தவிர, ஏனைய 4 சட்டக் கல்லூரிகள் தற்போது, அரசுக் கட்டடங்களில் செயல்பட்டு வருகின்றன. திருநெல்வேலி சட்டக் கல்லூரி, தற்போது திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி வளாகத்திலுள்ள பொன்னுச்சாமி மாளிகையில் செயல்பட்டு வருகிறது. இதற்காக நிரந்தரக் கட்டடம் கட்ட அரசு ரூ. 177.50 இலட்சத்திற்கு அனுமதி வழங்கியுள்ளது. சென்னையில் மாணவரில்லங்கள் இரண்டு உள்ளன. அவை, அரசுக் கட்டடத்தில் உள்ளன. அவை, முறையே 225 மாணவர்களுக்கும், 60 மாணவிகளுக்கும் இடவசதி அளிக்கின்றன. மதுரை சட்டக் கல்லூரியும் அரசுக் கட்டடங்களில் மாணவரில்லங்கள் இரண்டினைப் பெற்றுள்ளது. அவற்றில் முறையே 30 மாணவர்களுக்கும், 20 மாணவிகளுக்கும் இடவசதி அளிக்கப்பட்டுள்ளது. கோயம்புத்தூரில், மாணவர்களுக்கு மட்டும் ஒரே ஒரு மாணவர் இல்லம் உள்ளது. இது, 70 மாணவர்களுக்கு இடவசதி அளிக்கிறது.

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம், சென்னை.

நாட்டின் முதல் சட்டப் பல்கலைக்கழகம் ஒன்றை டாக்டர் அம்பேத்கர் பெயரில் இந்த அரசு ஏற்படுத்தியுள்ளது. பொதுவாக, சட்டக் கல்வியின் தரத்தினை உயர்த்துவதும், மக்களிடையே சட்ட அறிவினைப் பரப்புவதுமே இப்பல்கலைக்கழகத்தின் நோக்கம் ஆகும். இப்பல்கலைக்கழகம், சட்டக் கல்வியின் வாயிலாக சமுதாய நல்லிணக்கத்தை மேம்படுத்தவும், சமத்துவ சமுதாயக் குறிக்கோளை எய்தவும் முயற்சிக்கும்.

சட்ட மாணவர்கள் மற்றும் சட்ட ஆராய்ச்சியாளர்களிடையே சட்ட அறிவுத்திறனை வளர்க்கவும், இதன்மூலம் சமுதாயத்திற்குச் சேவை செய்யும்பொருட்டு வழக்காடும் திறமையை வளர்க்கத் தேவையான சட்ட உதவி நல்கவும், சட்டங்கள் இயற்றுதல் மற்றும் சட்ட சீர்திருத்தங்கள் கொண்டுவருவதற்குத் தேவையான சட்ட நுணுக்க விளக்கங்களை அளிக்கவும் இப்பல்கலைக்கழகம் செயல்படும். தமிழ்நாட்டிலும், தேசிய அளவிலும்கூட சட்டக் கல்வி மாணவர்களுக்கான "பயிற்சி வழக்காடு மன்றங்களை" (Moot Court)



1999 ஏப்ரல் 16]

இப்பல்கலைக்கழகம் ஏற்படுத்தும். தொலைதூரப் பகுதிகளிலும் கிராமப் பகுதிகளிலும் இருப்பவர்களுக்கு இப்பல்கலைக்கழகம் அடிப்படைச் சட்ட அறிவு புகட்ட தக்க ஏற்பாடுகளைச் செய்யும். அத்துடன், பெண்கள், தொழிலாளர் முதலிய வெவ்வேறு பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் எளிதில் விளங்கிக்கொள்ளும் வகையில் சட்டங்களை எளிய தமிழில் அச்சிட்டு எல்லோரும் அவரவர் துறையில் அறிய வேண்டியவற்றைத் தெரிந்துகொள்ள ஏதுவாகத் திட்டமிட்டு செயல்படும்.

தமிழ்நாட்டிலுள்ள அனைத்துச் சட்டக் கல்லூரிகளுக்கும் ஒரே மாதிரியான பாடத் திட்டம் இருக்கும் என்பதோடு, தமிழ்நாட்டில் உள்ள அனைத்து சட்டக் கல்லூரி மாணவர்களுக்கும் ஒரே நேரத்தில் தேர்வுகள் நடத்தி முடிவுகளை விரைவில் வெளியிட புதிய பல்கலைக் கழகம் ஏற்பாடு செய்யும். பல்வேறு சட்டப் பிரிவுகளுக்குச் சட்ட சிறப்பறிவு பெறுவதற்காகக் கொடுக்கப்படும் கல்வி மற்றும் பயிற்சியின் தரம் மேம்படுத்தப்படும். மக்களுக்கு அவற்றின் பலன்கள் ஒட்டுமொத்தமாகச் சென்று அமைந்திட இப்பல்கலைக்கழகம் ஏற்பாடு செய்யும்.

பெண்களுக்குத் தனியாக நீதித் துறை ஒன்று ஏற்படுத்தப்படும். இது மகளிர் தொடர்பான சட்டச் சிக்கல்களுக்குத் தீர்வு காண்பதில் கவனம் செலுத்தும். ஆண்களுக்கு நிகராக, கிராமப்புற மகளிருக்கும் சமுதாயத்தில் சமநீதி பெற வழிகாட்டும் ஆலோசனை மையமாக இது செயல்படும். இச்சட்டப் பல்கலைக்கழகம், சமுதாய மேம்பாடு, தேசிய ஒற்றுமை, சமநீதி, சமத்துவம், சகோதரத்துவ மனப்பான்மை ஆகியவற்றை எய்த தனது திட்டப் பணிகள் மூலம் பாடுபடும். சட்டம் தொடர்பாக இயங்கக்கூடிய எல்லா அமைப்புகளும் (அரசு, நீதித் துறை, அதன் நிருவாகப் பிரிவு, காவல் துறை, சட்டமன்றம் ஆகியவை) தங்களது சமுதாயப் பொறுப்பினை உணரும்பொருட்டு இப்பல்கலைக்கழகம் ஒருங்கிணைப்பு மையமாகச் செயல்படும்.

## X. குற்றவழக்குத் தொடர்வு இயக்குநர்

குற்ற வழக்குத் தொடர்வு இயக்ககம், நிருவாகக் காரணங்களினால் 1989 ஆம் ஆண்டு நிறுத்திவைக்கப்பட்டு, இத்துறையின் முக்கியத்துவம் கருதி, குற்றவியல் நீதிமன்றங்களில் பணியாற்றும் சட்ட அலுவலர்களின் பணிகளைக் கண்காணித்துக் கட்டுப்பாட்டிற்குள் வைக்கவேண்டும் என்ற நோக்கத்தோடு தொடங்கப்பட்டது.

[1999 ஏப்ரல் 16

மாநிலத்திலுள்ள கீழ்நிலை நீதிமன்றங்களில் பணிபுரிந்து வரும் குற்ற வழக்குத் தொடர்வுத் துறை பணியாளர்களின் நிருவாகப் பணிகளின் கட்டுப்பாட்டு அலுவலராக குற்ற வழக்குத் தொடர்வு இயக்குநர் இருந்து வருகிறார். குற்ற வழக்குத் தொடர்வுத் துறையினைச் சேர்ந்த இணை இயக்குநர் இவருக்கு உதவி புரிந்து வருகிறார். மேலும், மாநிலத்தில் மொத்தம் 11 துணை இயக்குநர்களும், 14 உதவி இயக்குநர்களும் மாவட்டங்களில் உள்ளனர். துணை இயக்குநர்களும், உதவி இயக்குநர்களும், குற்ற வழக்குத் தொடர்வு அலுவலர்களின் பணிகளைக் கண்காணிப்பதுடன், அவர்களுக்கு வழிகாட்டிகளாகவும் இயங்கி வருகின்றனர்.

குற்றவியல் நீதிமன்றங்களிலுள்ள வழக்குகளின் முன்னேற்றம் குறித்து இயக்குநர் ஆய்வு செய்கிறார். காவல் துறை இயக்குநர், காவல் ஆணையர்கள், காவல் கண்காணிப்பாளர்கள் ஆகியோருடன் தொடர்பு கொண்டு குற்றவாளிகளைப் பிடிக்கவும், அவர்களை நீதிமன்றத்தில் ஆஜராக்கவும் தேவையான பயனுள்ள நடவடிக்கைகள் எடுக்கிறார். மாவட்டங்களிலுள்ள குற்ற வழக்குத் தொடர்வு அலுவலர்களுடன் காலமுறை ஆய்வுக் கூட்டங்களை நடத்துகிறார். துணை இயக்குநர்களும், உதவி இயக்குநர்களும் மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்டக் காவல் கண்காணிப்பாளர்கள், கூடுதல் மற்றும் உதவி குற்ற வழக்கு நடத்துநர்கள் ஆகியோருடன் காலமுறை ஆய்வுக் கூட்டங்களை நடத்தி, குற்ற வழக்கு நடத்தும் அலுவலர்களின் செயலாக்கத் திறனை மேம்படுத்த அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கின்றனர்.

நாட்டின் பல்வேறு நீதிமன்றங்களில் அவ்வப்போது வழங்கப்படும் தீர்ப்புகளை, உடனுக்குடன் குற்ற வழக்குத் தொடர்வு அலுவலர்களுக்குத் தெரியப்படுத்தும் நோக்கத்துடன் புத்தாக்கப் பயிற்சி அளிக்க வேண்டுமென அரசு ஆணையிட்டுள்ளது. அதன்படி முதல் பயிற்சி முகாம் 1998 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் நடத்தப்பட்டது.

குற்றவியல் நீதிமன்றங்களில் மாதந்தோறும் தீர்வு செய்யப்பட்ட வழக்குகளின் மொத்த எண்ணிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது:



1999 ஏப்ரல் 16]

| மாதம்/ஆண்டு | எண்ணிக்கை |
|---|---|
| ஜனவரி 1998 | 7394 |
| பிப்ரவரி 1998 | 6805 |
| மார்ச்சு 1998 | 8119 |
| ஏப்ரல் 1998 | 7230 |
| மே 1998 | 6836 |
| ஜூன் 1998 | 7183 |
| ஜூலை 1998 | 8062 |
| ஆகஸ்டு 1998 | 7710 |
| செப்டம்பர் 1998 | 7798 |
| அக்டோபர் 1998 | 8070 |
| நவம்பர் 1998 | 8413 |
| டிசம்பர் 1998 | 8398 |
| **மொத்தம்** | **92,018** |

காவல் துறையுடன் இடைவிடாது தொடர்புகொண்டு பிடியாணைகளை நிறைவேற்றத் தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த நடவடிக்கைகளினால் 31-8-1996 அன்று 52,083 ஆக நிலுவையிலிருந்த பிடியாணைகளின் எண்ணிக்கை 31-12-1998 அன்று 30,588 ஆகக் குறைக்கப்பட்டுள்ளன. தேவையில்லாமல் நிலுவையில் உள்ள வழக்குகளைத் திரும்பப்பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. திரும்பப் பெறுவதற்காக, 15,000 வழக்குகள் கண்டறியப்பட்டுள்ளன. அவற்றில் 6,040 வழக்குகளில் நடவடிக்கை முடிக்கப்பட்டுள்ளது.

## XI. சட்டத் துறையிலுள்ள (சட்ட) ஆட்சிமொழிப் பிரிவு

நெறிபடுத்து குழுவினால் மேற்கொள்ளப்பட்டு வந்த சட்டச் சொற்களஞ்சியத்திற்கு இறுதி வடிவம் கொடுத்து அதனை வெளியிடும் நோக்கத்திற்காகவும் மைய, மாநிலச் சட்டங்கள், அவசரச் சட்டங்கள், அச்சட்டங்களின்கீழ் இயற்றப்படும் விதிகள், அறிவிக்கைகள்

[1999 ஏப்ரல் 16

ஆகியவற்றைத் தமிழில் மொழிபெயர்ப்பதற்காகவும், அரசினால் அவ்வப்போது ஆணையத்திடம் ஒப்படைக்கப்படும் ஏனைய பணிகளை மேற்கொள்வதற்காகவும், மாநில (சட்ட) ஆட்சிமொழி ஆணையமானது, முதன்முதலாக 1965 ஆம் ஆண்டில் நீதியரசர் திரு. மா. அனந்த நாராயணன் அவர்களைத் தலைவராகக் கொண்டு தோற்றுவிக்கப்பட்டது. மேற்சொல்லப்பட்ட ஆணையம் அவ்வப்போது மாற்றியமைக்கப்பட்டு வந்து, கடைசியாக 1989 ஆம் ஆண்டு திரு. மா. சண்முகசுப்ரமணியன் அவர்களின் தலைமையின்கீழ் மீண்டும் மாற்றியமைக்கப்பட்டது.

பின்னர், 1992 ஆம் ஆண்டு மாநில (சட்ட) ஆட்சிமொழி ஆணையமானது, சட்டத் துறையின் கூடுதல் அரசுச் செயலாளரின் தலைமையில், சட்டத் துறையின் ஒரு பிரிவாக, அரசுத் துறையாக்கப்பட்டு, சட்டத் துறை அரசுச் செயலாளரின் ஒட்டுமொத்த கட்டுப்பாட்டின்கீழும், மேற்பார்வையின்கீழும் இயங்கிவருகிறது. பெருமளவில் மொழிபெயர்ப்புத் திறனை வளர்ப்பதற்காகவும், மைய அரசினாலும் ஏனைய சில மாநில அரசுகளாலும் பின்பற்றப்பட்டு வரும் முறையை அடிப்படையாகக்கொண்டு இவ்வாறு செய்யப்பட்டுள்ளது.

ஆட்சிமொழி (சட்டப்) பிரிவானது மத்தியச் சட்டங்களையும், மாநிலச் சட்டங்களையும் தமிழில் மொழிபெயர்த்து வருகின்றது. மத்தியச் சட்டங்கள், மைய அரசிடமிருந்து வரப்பெற்ற முன்னுரிமைப் பட்டியல்களின் அடிப்படையில் மொழிபெயர்க்கப்பட்டு வருகின்றன. இதுவரை ஆட்சிமொழி (சட்டப்) பிரிவானது மைய அரசிடமிருந்து ஐந்து முன்னுரிமைப் பட்டியல்களைப் பெற்றுள்ளது. மேற்சொன்ன பட்டியல்களிலுள்ள மத்தியச் சட்டங்களில் பெரும்பாலானவை மொழிபெயர்க்கப்பட்டு, இறுதி வடிவம் அளிக்கப்பெற்று, பல படிநிலைகளில் ஏற்புபெறும் நிலையில் உள்ளன. முன்னுரிமைப் பட்டியல்களில் காணப்படும் சில மத்தியச் சட்டங்களில் கடைசியாக செய்யப்பட்ட திருத்தங்களையும் சேர்த்து, மீண்டும் மொழிபெயர்க்கப்பட்டு, இறுதி செய்யப்பட்டு அவற்றிற்கு அரசின் ஒப்புதலும் பெறப்பட்டுள்ளது. அதேசமயம், பொது முக்கியத்துவம் வாய்ந்தவையாகக் கருதப்படும் மாநிலச் சட்டங்கள் சில மொழி பெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன.



1999 ஏப்ரல் 16]

ஏற்கெனவே மொழிபெயர்க்கப்பட்டு, குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெறப்பட்ட இருபத்து மூன்று மத்தியச் சட்டங்களின் தமிழ் மொழிபெயர்ப்பின் எட்டு மத்தியச் சட்டங்கள், புத்தக வடிவில் (இருமொழிப் பதிப்பு) (Diglot Edition) வெளியிடப்பட்டுள்ளன. மேலும், அத்தகைய எட்டு மத்தியச் சட்டங்கள் இந்திய அரசிதழில் வெளியிடப்பட்ட பின்பு விரைவில் வெளிவரும் நிலையில் உள்ளன. இது தவிர, 104 மத்தியச் சட்டங்கள் மொழிபெயர்க்கப்பட்டு, குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெறுவதற்காக அனுப்பிவைக்க, நீலத்தாளில் (Azurelaid Paper) அச்சடிக்கப்படுவதற்காக அரசு மைய அச்சகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. இவற்றில் அரசு அச்சகத்திலிருந்து 41 மையச் சட்டங்கள் நீலத்தாளில் அச்சடிக்கப்பட்டு பெறப்பட்ட பின்னர், குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்காக மைய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இருமொழி (ஆங்கிலத்திலும் தமிழிலும்) (Diglot Edition) பதிப்பாக அமைக்கப்பட்டுள்ள இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் திருத்தியமைக்கப்பட்ட தமிழாக்கத்திற்கு மத்திய, மாநில அரசுகள் ஒப்புதல் அளித்துள்ளன. அது 1991 ஆம் ஆண்டு அச்சிடப்பட்டு விற்பனைக்காக வெளியிடப்பட்டுள்ளது. மேலும், மத்திய, மாநில அரசுகளால் ஒப்புதலளிக்கப்பட்ட அறுபத்து ஆறு (66) மத்தியச் சட்டங்களின் மொழியாக்கம் அரசு மைய அச்சகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு, அவை அச்சிடப்பட்டு வருகின்றன. 4 தமிழ்நாடு சட்டங்கள் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு அச்சடிக்கப்படுவதற்காக அச்சகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. மேலும், 20 மத்தியச் சட்டங்களும் 25 மாநிலச் சட்டங்களும் மொழிபெயர்க்கப்பட்டு வருகின்றன.

## XII. தமிழ்நாடு மாநிலச் சட்ட ஆணையம்

சட்டத் சீர்திருத்தத்தின் முக்கியத்துவத்தையும், சட்ட விதிகளையும், பிற சட்டங்களையும் காலத்திற்கேற்ற வகையில் புதுப்பிக்க வேண்டிய சமுதாயத் தேவையையும், இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 246 ஆம் பிரிவின் விதித் துறைகளின் பொருட்செறிவிற்குக் குறையேதும் ஏற்படாமல், மாநிலத்தின் பல்வேறு அங்கங்களுக்கு இடையேயான தொடர்பினையும், செயல் விளைவுகளையும் மேம்படுத்த வேண்டியதன் முக்கியத்துவத்தையும் உணர்ந்து தமிழ்நாடு அரசு 9-5-1994-ல் மாநிலச் சட்ட ஆணையத்தை அமைத்தது.

[1999 ஏப்ரல் 16

மாநிலச் சட்ட ஆணையம் பின்வரும் நபர்களைக் கொண்டதாகும்.

1. தலைவர்
2. இரு முழுநேர உறுப்பினர்கள்
3. இரு பகுதிநேர உறுப்பினர்கள்
4. முழுநேர உறுப்பினர்-செயலர் ஒருவர்

தமிழ்நாடு மாநிலச் சட்ட ஆணையம் மாண்புமிகு திரு. நீதியரசர் மு.மு. இஸ்மாயில் அவர்கள் தலைமையில் 28-1-1997 அன்று மாற்றியமைக்கப்பட்டது.

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் இயற்றப்பட்ட ஒவ்வொரு சட்டத்தையும் அதற்குப் பின்பு இயற்றப்பட்ட சட்டங்களையும் பரிசீலனை செய்வதும், அவை இன்றைய கால சூழ்நிலைக்கு ஏற்றவையா, இல்லையா என்பது குறித்துக் கருத்துத் தெரிவிப்பதும், தேவையானால், அந்தச் சட்டங்களில் செய்யப்பட வேண்டிய மாற்றங்கள் அல்லது திருத்தங்கள் குறித்து அரசுக்குப் பரிந்துரைப்பதும், சட்ட ஆணையத்தின் பணிகளாகும். மேலும், சட்ட ஆணையம் மேற்சொன்ன சட்டங்கள் அனைத்தும் உச்ச நீதிமன்றத்தின் மற்றும் உயர் நீதிமன்றங்களின் பல்வேறு முடிவுகளுக்கு இணங்க உள்ளனவா என்பது குறித்து ஆராய்ந்து, அந்தந்தச் சட்டங்களில் செய்யப்பட வேண்டிய மாற்றங்கள் குறித்து, அரசுக்கு பின்வருமாறு ஆலோசனை கூறும்—

(1) தற்போது இருந்துவரும் சட்டங்களுக்கு தக்க மாற்றங்கள் அல்லது திருத்தங்கள் குறித்துக் கருத்து தெரிவிக்குமாறும்
(2) பொருத்தமான, சமுதாய-பொருளாதாரச் சட்டமியற்றும் நடவடிக்கைகள் பற்றி எடுத்துரைக்குமாறும்
(3) பன்மாநில உறவுகளுக்கு, மைய-மாநில உறவுகளுக்குமான வழிவகைகளை கூறுமாறும்
(4) நீதி நிருவாகச் சீர்திருத்தங்கள் குறித்து, செம்மையாகவும், விரைவாகவும், மேற்கொள்ள வேண்டிய நடைமுறைகள்பற்றி கருத்துரைகளையும், பரிந்துரைகளையும் வழங்குமாறும்
(5) மாநிலச் சட்டங்களுக்கு மட்டுமல்லாமல், இந்த மாநிலத்திற்கும் பொருந்துகின்ற மத்தியச் சட்டங்களுக்கும்கூட மாற்றங்கள் பற்றி கருத்துரைகளை தெரிவிக்குமாறும்

சட்ட ஆணையமானது கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.



1999 ஏப்ரல் 16]

இந்த ஆணையம் கீழ்க்காணும் இரத்து செய்யப்படாத மத்தியச் சட்டங்கள் குறித்த அறிக்கையை 3-12-1997 அன்று அதன் சுருக்கமான பரிந்துரையுடன் அரசுக்கு சமர்ப்பித்தது:

(1) தமிழ்நாடு வாடகை மற்றும் தீர்வை விற்பனைகள் சட்டம், 1839 (சட்டம் VII/1839)
(2) தமிழ்நாடு வருவாய் ஆணையர் சட்டம், 1849 (சட்டம் X/1849)
(3) சென்னை மாநகர நிலத்தீர்வை சட்டம், 1851 (சட்டம் XII/1851)
(4) தமிழ்நாடு கட்டாய வேலைவாங்கும் சட்டம், 1858 (சட்டம் I/1858)
(5) தமிழ்நாடு வனம் (செல்லத்தக்கதாக்குதல்) சட்டம், 1882 (சட்டம் XXI/1882)
(6) தமிழ்நாடு, வங்காளம் மற்றும் பம்பாய் குழந்தைகள் (துணை) சட்டம், 1925 (சட்டம் XXXV/1925) மற்றும்
(7) தமிழ்நாடு குழந்தைகள் சட்டம், 1920 (சட்டம் IV/1920)

இப்போது இந்த ஆணையம், பின்வரும் சட்டங்கள் குறித்து பரிசீலித்து, இதன் அறிக்கையைத் தயாரித்து வருகிறது.

(1) தமிழ்நாடு 1837 ஆம் ஆண்டு பொதுச் சொத்துக்கள் பாதுகாப்புச் சட்டம் (சட்டம் XXXVI/1837)
(2) தமிழ்நாடு 1859 ஆம் ஆண்டு மாவட்ட காவல் சட்டம் (சட்டம் XXIV/1859)
(3) தமிழ்நாடு 1873 ஆம் ஆண்டு சிவில் நீதிமன்றங்கள் சட்டம் (சட்டம் III/1873)
(4) 1892 ஆம் ஆண்டு சென்னை மாநகர சிவில் நீதிமன்றங்கள் சட்டம் (சட்டம் VII/1892) மற்றும்
(5) தமிழ்நாடு 1888 ஆம் ஆண்டு கிராம நீதிமன்றங்கள் சட்டம்

[1999 ஏப்ரல் 16

## XIII. 1998-99 ஆம் ஆண்டில் அனுமதி வழங்கப்பட்ட முக்கியத் திட்டங்கள்

(1) 1998-99 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட நீதிமன்றங்களை உருவாக்க அரசு அனுமதியளித்துள்ளது:

| வ. எண் | அனுமதிக்கப்பட்ட நீதிமன்றங்களின் விவரம் | செலவு | |
|---|---|---|---|
| | | தொடரும் செலவு | தொடராச் செலவு |
| | | (ரூபாய் இலட்சத்தில்) | |
| (1) | (2) | (3) | (4) |
| 1. | மாவட்ட அமர்வு நீதிமன்றம், பெரம்பலூர். | 25.28 | 8.33 |
| 2. | கூடுதல் மாவட்ட நீதிபதி-தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், பெரம்பலூர். | 19.23 | 7.08 |
| 3. | மாவட்ட அமர்வு நீதிமன்றம், கரூர். | 23.06 | 7.08 |
| 4. | கூடுதல் மாவட்ட நீதிபதி-தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், கரூர். | 11.76 | 6.63 |
| 5. | சார்பு நீதிமன்றம், திருவாரூர். | 16.87 | 3.16 |
| 6. | சார்பு நீதிமன்றம், பொன்னேரி. | 16.74 | 3.16 |
| 7. | சார்பு நீதிமன்றம், குடியாத்தம். | 13.74 | 3.16 |
| 8. | சார்பு நீதிமன்றம், மதுராந்தகம். | 14.05 | 3.16 |
| 9. | மேலும் ஒரு குற்றவியல் நடுவர் நீதிமன்றம், விருத்தாச்சலம். | 8.00 | 3.00 |
| 10. | குற்றவியல் நடுவர் நீதிமன்றம், சாத்தான்குளம். | 8.83 | 2.05 |
| 11. | குற்றவியல் நடுவர் நீதிமன்றம், இளையான்குடி. | 9.12 | 4.38 |
| 12. | மேலும் ஒரு குற்றவியல் நடுவர் நீதிமன்றம், நாகப்பட்டினம். | 7.65 | 2.25 |
| 13. | மேலும் ஒரு குற்றவியல் நடுவர் நீதிமன்றம், உசிலம்பட்டி. | 9.15 | 3.31 |
| 14. | குற்றவியல் நடுவர் நீதிமன்றம், பூதப்பாண்டி. | 7.78 | 1.50 |
| 15. | கூடுதல் மாவட்ட உரிமையியல் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், மானாமதுரை. | 16.07 | 1.85 |
| 16. | மாவட்ட உரிமையியல் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், பென்னாகரம். | 17.50 | 4.00 |
| 17. | சார்பு நீதிமன்றம், சிவகாசி. | 12.01 | 2.35 |
| 18. | சார்பு நீதிமன்றம், செய்யாறு. | 17.35 | 3.60 |
| 19. | மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், உத்திரமேரூர். | 17.04 | 3.35 |
| 20. | 4 கூடுதல் நடமாடும் நீதிமன்றங்கள், சென்னை. | 20.22 | 37.22 |
| 21. | குண்டுவெடிப்பு குறித்த குற்ற வழக்குகளை விசாரிக்க சென்னையிலும், கோயம்புத்தூரிலும் கூடுதல் அமர்வு நீதிமன்றங்கள். | 37.24 | 14.52 |
| 22. | தென் மாவட்டங்களில் நிகழ்ந்த சாதிக் கலவரங்கள் குறித்த குற்ற வழக்குகளை விசாரிக்க மதுரையில் அமர்வு நீதிமன்றம். | 16.79 | 4.00 |
| | மொத்தம் | **365.48** | **119.14** |



1999 ஏப்ரல் 16]

(2) உயர்நீதிமன்றத்தின்கீழ் உள்ள சார்பு நீதிமன்றங்களின் சட்ட அலுவலர்களுக்கான கட்டணம் மற்றும் வழக்குகளுக்கான கட்டணம் ஆகியவை திருத்தியமைத்தல்.

(3) சென்னை உயர்நீதிமன்றத்திலும், சார்பு நீதிமன்றங்களிலும் உள்ள நகல் எடுப்பவர்களுக்கு ரூ. 65 இலட்சம் செலவில் 842 தமிழ் தட்டச்சுப் பொறிகள் வழங்க அனுமதித்தல்.

(4) சென்னை உயர்நீதிமன்றத்தின் இணைப்புக் கட்டடத்தில் வழக்கறிஞர்கள், பணியாளர்கள் மற்றும் வழக்காடும் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக ரூ. 27 இலட்சம் செலவில் இரண்டு கூடுதல் மின்தூக்கிகள் அமைத்தல்.

(5) சென்னை உயர்நீதிமன்றத்தில் புதிதாக மாற்றியமைக்கப்பட்டுள்ள நான்கு நீதிமன்றக் கூடங்களில் ரூ. 42 இலட்சம் செலவில் குளிர்சாதன வசதியளித்தல்.

(6) கோயம்புத்தூரில் ரூ. 165 இலட்சம் செலவில் வழக்கறிஞர் அறைகள் கட்ட அனுமதித்தல்.

(7) ஊத்தங்கரை, கோபிச்செட்டிப்பாளையம் மற்றும் காரைக்குடி ஆகிய ஊர்களில் நீதிமன்றக் கட்டடங்களைச் சுற்றியும், திண்டுக்கல்லில் மாவட்ட நீதிபதி குடியிருப்பைச் சுற்றியும் ரூ. 17.25 இலட்சம் செலவில் சுற்றுச் சுவர்கள் கட்டுதல்.

## XIV. அரசு நிறைவேற்ற வேண்டிய முக்கியமான குறிக்கோள்கள்

### அ. சென்னையில் உச்சநீதிமன்ற ஆயம் அமைத்தல்

தமிழகத்தில் சென்னையில் இடம் பெறத்தக்க விதத்தில் உச்ச நீதிமன்ற ஆயம் ஒன்றை அமைப்பதற்கான இவ்வரசின் வேண்டுகோளைப் பரிசீலித்து இது தொடர்பான முடிவினைத் தெரிவிக்குமாறு 1980 ஆம் ஆண்டிலேயே தமிழக அரசு மைய அரசுக்கு வேண்டுகோள் விடுத்தது. நீண்டகால கடிதத் தொடர்புக்குப் பின்னர், 11-05-1994 அன்று உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதியின் தலைமையில் நடைபெற்ற முழு நீதிமன்றக் கூட்டத்தில இப்பொருள் தொடர்பாக பரிசிலனை மேற்கொள்ளப்பட்டதாகவும், தென்னிந்தியாவில் சென்னையிலோ அல்லது இந்தியாவின் வேறு எந்தப் பகுதியிலுமோ, உச்ச நீதிமன்ற ஆயம் நிறுவப்படுவதற்கில்லை



என ஒரு மனதாக முடிவெடுக்கப்பட்டதாகவும், 21-09-1994 அன்று மைய அரசு தெரிவித்தது.

எனினும், உச்ச நீதிமன்ற ஆயத்தை சென்னையில் நிறுவ வேண்டியதன் உயர் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு, தனது முந்தைய நிலையினை மறுபரிசீலனை செய்து சாதகமான முடிவெடுக்கும் விதமாக உச்ச நீதிமன்றத்திடம் இக்கோரிக்கையினை மீண்டும் வலியுறுத்துமாறு 10-10-1996 அன்று மைய அரசு கேட்டுக் கொள்ளப்பட்டது. உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதியின் தலைமையில் நடைபெற்ற முழு நீதிமன்றக் கூட்டத்தில் தில்லிக்கு வெளியே உச்ச நீதிமன்ற ஆயங்கள் அமைப்பது தொடர்பான யோசனைகள் குறித்து பரிசீலிக்கப்பட்டு நிராகரிக்கப்பட்டுவிட்டதாக மைய அரசு தகவல் அளித்தது. சிறிது காலத்திற்குப் பிறகு மைய அரசை மீண்டும் அணுகுவதென இவ்வரசு முடிவெடுத்துள்ளது.

### ஆ. மதுரையில் உயர் நீதிமன்ற ஆயம் அமைத்தல்

மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி முதலிய தென் மாவட்டங்களிலிருந்து வரும் வழக்காடும் மக்களுக்கு நலம் பயக்கும் விதத்தில் மதுரையில் உயர்நீதிமன்ற ஆயம் அமைப்பதை இவ்வரசு விரைவுபடுத்தி உள்ளது. இதுகுறித்து உயர்நீதிமன்றத்தை கலந்தாலோசித்தபோது, தேவையான உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தித்தர வேண்டும் என்னும் நிபந்தனையுடன் மதுரையில் உயர்நீதிமன்ற ஆயம் அமைப்பதற்குச் சென்னை உயர்நீதிமன்றம் இசைவளித்தது. சென்னை உயர்நீதிமன்ற ஆயம் ஒன்றை மதுரையில் நிறுவுவதற்காக மதுரை மாவட்டம், மதுரை வடக்கு வட்டம் உலகநேரி கிராமத்தில் புல எண்கள் 3/2 முதல் 39-எப் வரையில் 30.12.5 ஹெக்டேர் நிலத்தை உயர்நீதிமன்றம் தேர்வு செய்து, அந்நிலத்தை கையகப்படுத்துமாறு சென்னை உயர்நீதிமன்றம் அரசுக்குப் பரிந்துரைத்தது. அதன்படி 1894 ஆம் ஆண்டு நில எடுப்புச் சட்ட விதிகளின்கீழ் நில எடுப்பு நடவடிக்கைகள் முடிக்கப்பட்டு, இந்த நிலம் 9-12-1998 அன்று சென்னை, உயர்நீதிமன்றப் பதிவாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மதுரையில் உயர்நீதிமன்ற ஆயம் நிறுவுவதற்குத் தேவையான கட்டடங்களைக் கட்டுவதற்கு வரைபடங்களையும் மதிப்பீடுகளையும் அனுப்பி வைக்குமாறு சென்னை உயர்நீதிமன்றப் பதிவாளர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார். அவை அவரிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றன.

[1999 ஏப்ரல் 16

இதற்கிடையில், தென் மாநில மக்களின் நீண்டகாலக் கனவை நினைவாக்கும் வகையில் உடனடியாக செயல்வடிவம் கொடுக்கும் விதத்தில் உயர்நீதிமன்ற ஆயத்தினை தற்போதைய மதுரை மாவட்ட நீதிமன்ற வளாகத்திலேயே, போதுமான மேம்பாட்டுப் பணிகளைச் செய்து முடித்த பின்னர், தற்காலிகமாகத் தொடங்குமாறு சென்னை உயர்நீதிமன்றத்திற்கு அரசு கடிதம் எழுதியுள்ளது. இதற்கான ஒப்புதல் உயர்நீதிமன்றத்திடமிருந்து இன்னும் எதிர்பார்க்கப்படுகிறது.

**XV. 1999-2000 ஆம் ஆண்டில் புதிதாக மேற்கொள்ளப்பட உள்ள திட்டங்கள்**

ஆண்டுதோறும் நீதி நிருவாக மானியக் கோரிக்கையின்கீழ் புதியத் திட்டங்களுக்கு அரசு ஒப்புதல் வழங்கி வருகிறது. 1999-2000 ஆம் ஆண்டில் மேற்கொள்ளவிருக்கும் புதியத் திட்ட விவரங்கள் இணைப்பு 3-ல் குறிப்பிடப்பட்டுள்ளன.

**XVI. முடிவுரை**

நீதித் துறையின் தனித் தன்மையைத் தொடர்ந்து பேணி வருவதற்கான சூழலை ஏற்படுத்தும் வகையில் நீதித் துறையின் தேவைகளை நிறைவேற்றவும், அடிப்படை வசதிகளை மேம்படுத்தவும் அரசு உறுதியான நடவடிக்கை எடுப்பதில் தீவிரக் கவனம் செலுத்தி வருகிறது. வழக்காடும் பொது மக்களுக்கு விரைந்து நீதி கிடைப்பதற்காகச் சிறந்த மேம்பட்ட நடவடிக்கைகளை எடுப்பதன் மூலம் கடந்த காலத்தில் இருந்ததைவிடச் சிறந்த முறையில் நீதி நிருவாகத்தைப் பேணவும் அதன் மூலம், நீதித் துறையின்பால் பொது மக்களின் நம்பிக்கைக் குறையாமல் தொடர்ந்து பேணவும் அரசு உறுதி கொண்டுள்ளது.

"நீதிமன்றத்திற்குள் அல்லது நீதிமன்றத்திற்கு வெளியே நீதி வழங்குதல் என்பதற்கு இணையாகக் கூறத்தக்க பொருள் எதுவும் இல்லை" என்று கிளாரன்ஸ் டேரோ கூறியவாறு, நீதி வழங்கத் தேவையானவற்றைச் செய்யவும், நீதி நிருவாகத்தில் எப்போதும் பெருந்தன்மையாக நடந்து கொள்ளவும் திறம்பட்ட வகையில் நீதி நிருவாகம் செய்யவும் இவ்வரசு தொடர்ந்து பாடுபடும்.



1999 ஏப்ரல் 16]

## இணைப்பு - 1

**(அ) சென்னை மாநகரில் செயல்பட்டுவரும் நீதிமன்றங்கள், நடுவர் மன்றங்களின் பட்டியல்:-**

| தொடர் எண். | நீதிமன்றங்களின் பெயர் | மாவட்ட நீதிபதி பதவித் தரத்தில் | துணை நீதிபதி பதவித் தரத்தில் | மாவட்ட உரிமையியல்-குற்றவியல் நடுவர் பதவித் தரத்தில் |
|---|---|---|---|---|
| 1. | மாநகர் உரிமையியல் நீதிமன்றம் | 15* | 18 | 1 |
| 2. | சிறுவழக்குகள் நீதிமன்றம் | 1 | 8 | 8 |
| 3. | பெருநகர் குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் | 3** | 6 | 17 |
| 4. | தொழிலாளர் நீதிமன்றங்கள் | 3 | - | - |
| 5. | தொழில் நடுவர்மன்றம் | 1 | - | - |
| 6. | இன்றியமையாப் பொருட்கள் சட்டத்தின்கீழ் தனிநீதிமன்றம் | 1 | - | - |
| 7. | என்.டி.பி.எஸ். சட்டத்தின்கீழ் தனி நீதிமன்றம் | 1 | - | - |
| 8. | அரசு சொத்து தலைமைப் பொறுப்பாட்சியர் | 1 | - | 1 |
| 9. | தலைமைப் பதிப்பாசிரியர், தமிழ் சட்ட வெளியீடு, உயர்நீதிமன்றம், சென்னை | 1 | - | - |
| 10. | இணை பதிப்பாசிரியர், தமிழ் சட்ட வெளியீடு, உயர் நீதி மன்றம், சென்னை | - | 1 | - |
| 11. | உதவி பதிப்பாசிரியர், தமிழ் சட்ட வெளியீடு, உயர்நீதி மன்றம், சென்னை | - | - | 1 |
| | மொத்தம் | **27** | **33** | **28** |

[1999 ஏப்ரல் 16

*VIII ஆம் கூடுதல் நீதிபதி, தனியார் கல்லூரிகள் மேல்முறையீட்டு நடுவர் மன்றமாகவும், IX, X ஆம் கூடுதல் நீதிபதிகள் மத்திய புலனாய்வுத்துறை வழக்குகளுக்கான தனி நீதிபதிகளாகவும் செயல்படுகிறார்கள். தமிழ்நாடு வைப்பீட்டாளர்கள் (நிதி நிறுவனங்களில்) நலன் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் விசாரிக்க ஒரு தனி நீதிபதி செயல்படுகிறார்.

** பொருளாதாரக் குற்றங்களின் விசாரணைக்கான பெருநகர கூடுதல் தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் இரண்டும் இதில் அடங்கும்.



1999 ஏப்ரல் 16]

(ஆ) மாவட்டங்களில் இயங்கிவரும் நீதிமன்றங்கள் மற்றும் நடுவர் தீர்ப்பாயங்கள்.

| மாவட்டங்கள் | மாவட்ட நீதிபதி பதவித் தரம் | | | | | | | மாவட்ட உரிமையியல் நீதிபதி பதவித்தரம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | மாவட்ட நீதிபதிகள் | கூடுதல் மாவட்ட நீதிபதி-தலைமைக் குற்றவியல் நடுவர்கள் | தொழிலாளர் நீதிமன்றங்கள் | சிவில் உரிமைகள் பாதுகாப்புச் சட்ட வழக்குகள் | இன்றியமையாப் பொருட்கள் சட்ட வழக்குகள் | மத்திய புலனாய்வுத்துறை வழக்குகள் | [illegible] நீதிபதிகள் | மாவட்ட உரிமையியல் நீதிபதிகள் | மாவட்ட உரிமையியல்-குற்றவியல் நடுவர்கள் | குற்றவியல் நடுவர்கள் |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 9 | 9 | 10 | 11 |
| 1. செங்கல்பட்டு | 1 | 1 | - | - | - | - | 7 | 8 | 5 | 13 |
| 2. தூத்துக்குடி | 1 | 1 | - | - | - | - | 2 | 5 | 2 | 5 |
| 3. கோயம்புத்தூர் | 2 | 1 | 1 | - | 1 | 1 | 6 | 7 | 4 | 14 |
| 4. தருமபுரி | 2 | 2 | - | - | - | - | 4* | 3 | 4 | 5 |
| 5. திண்டுக்கல் | 1 | 1 | - | - | - | - | 2 | 5 | 2 | 5 |
| 6. விருதுநகர் | 1 | 1 | - | - | - | - | 3 | 3 | 3 | 6 |
| 7. கன்னியாகுமரி | 1 | 1 | - | - | - | - | 4 | 9 | 1 | 6 |
| 8. மதுரை | 2 | 1 | 1 | 1 | 1 | 1 | 7** | 7 | 3 | 11 |
| 9. நாகப்பட்டினம் | 1 | 1 | - | - | - | - | 4 | 8 | - | 6 |
| 10. நீலகிரி | 1 | - | - | - | - | - | 1 | 1 | 3 | 1 |
| 11. வேலூர் | 1 | 1 | 1 | - | - | - | 3 | 8 | 3 | 15 |

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 12. சிவகங்கை | 1 | 1 | - | - | - | - | 2 | 4 | 2 | 3 |
| 13. ஈரோடு | 2 | 1 | - | - | - | - | 5 | 9 | 2 | 9 |
| 14. புதுக்கோட்டை | 1 | 1 | - | - | 1 | - | 1 | 3 | 2 | 3 |
| 15. இராமநாதபுரம் | 1 | 1 | - | - | - | - | 1 | 3 | 3 | 3 |
| 16. சேலம் | 3 | 1 | 1 | - | 1 | - | 5 | 10 | 2 | 16 |
| 17. கடலூர் | 1 | 1 | 1 | - | - | - | 4 | 6 | 3 | 7 |
| 18. தஞ்சாவூர் | 1 | 1 | - | 1 | 1 | - | 4 | 7 | 2 | 6 |
| 19. திருச்சிராப்பள்ளி | 3 | 1 | 1 | 1 | - | - | 7 | 14 | 1 | 17 |
| 20. திருநெல்வேலி | 2 | 1 | 1 | 1 | - | - | 5 | 10 | 4 | 9 |
| 21. திருவண்ணாமலை | 1 | 1 | - | - | - | - | 2 | 7 | 3 | 5 |
| 22. விழுப்புரம் | 1 | 1 | - | - | - | - | 3 | 12 | 2 | 9 |
| மொத்தம் .. | **31** | **22** | **7** | **4** | **5** | **2** | **82** | **149** | **56** | **176** |

* தருமபுரி - துணை நீதிபதி (குற்றவியல்) பதவித் தரத்தில் கூடுதல் தனி நீதிபதி

** மதுரை - துணை நீதிபதி (குற்றவியல்) பதவித் தரத்தில் ஒரு கூடுதல் தலைமைக் குற்றவியல் நீதிபதி

*** தஞ்சாவூர் - துணை நீதிபதி (குற்றவியல்) பதவித் தரத்தில் ஒரு கூடுதல் தலைமைக் குற்றவியல் நீதிபதி

**குடும்ப நீதிமன்றங்கள் :**

சென்னையில் மூன்று நீதிமன்றங்களும், மதுரை, கோயம்புத்தூர், சேலம் ஆகிய இடங்களில் தலா ஒரு நீதிமன்றமும் ஆக ஆறு நீதிமன்றங்கள் உள்ளன. குடும்ப நீதிமன்ற நீதிபதிகள் 5 ஆண்டு காலத்திற்குத் தற்காலிகமாக நியமிக்கப்படுகின்றனர். அவர்கள், முறையான நீதித் துறைப் பணிகளிலிருந்து வராதவர்கள்.



## இணைப்பு-2

தமிழ்நாடு மாநில சட்டப் பணிகள் அதிகாரமன்றத்தால் 1997 மற்றும் 1998 ஆம் ஆண்டுகளில் முடிக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கையைக் காட்டும் விவர அறிக்கை.

| தொ. எண். | விவரம் | 1997-ல் முடிக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | 1998-ல் முடிக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | சட்ட உதவி அளித்து நீதிமன்றங்களில் நிலுவையாக உள்ள வழக்குகளில் முடிக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | 7304 | 6017 |
| 2. | நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்படாமல் இணக்கப் பணி மையங்கள், ஓய்வூதிய இணக்கப் பணி மையங்கள், ஆலோசனை மையங்கள் ஆகியவற்றில் முடிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | 997 | 1007 |
| 3. | சட்ட ஆலோசனைக்குப் பிறகு முடிக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | 966 | 887 |
| 4. | மக்கள் நீதிமன்றங்கள்: | | |
| | மோட்டார் வாகன விபத்து உரிமை கோரிக்கை வழக்குகள் | 9505 | 11308 |
| | சிவில் வழக்குகள் | 299 | 3036 |
| | குடும்பத் தகராறுகள் | 99 | 228 |
| | குற்ற வழக்குகள் | 316 | 327 |
| | மொத்தம் .. | **19486** | **22810** |

[1999 ஏப்ரல் 16

## இணைப்பு 3

### 1999-2000 ஆம் ஆண்டில் திட்டம் சாரா இனத்தின் கீழ் அனுமதிக்கப்பட்ட புதிய திட்டங்கள் பற்றிய பட்டியல்

| வ.எண். (1) | திட்டங்களின் விபரம் (2) | தொடரும் செலவு (3) | தொடராச் செலவு (4) | 1999-2000-ம் ஆண்டில் செலவு (5) |
|---|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| | **உள்துறை :** | | | |
| 1. | இராமேசுவரத்தில் மாவட்ட உரிமையியல்-குற்றவியல் நடுவர் நீதிமன்றம் அமைத்தல் | 15.92 | 4.00 | 10.37 |
| 2. | காட்டுமன்னார் கோவிலில் மாவட்ட உரிமையியல்-குற்றவியல் நடுவர் நீதிமன்றம் அமைத்தல் | 15.92 | 4.00 | 10.37 |
| 3. | போச்சம்பள்ளியில் மாவட்ட உரிமையியல்-குற்றவியல் நடுவர் நீதிமன்றம் அமைத்தல் | 16.52 | 3.50 | 10.11 |
| 4. | காரைக்குடி, திருப்பத்தூர் ஆகிய இடங்களிலுள்ள மாவட்ட உரிமையியல்-குற்றவியல் நடுவர் நீதிமன்றங்களுக்கு கூடுதல் பணியாளர்கள் அனுமதித்தல் | 8.14 | .. | 3.25 |
| 5. | கோயம்புத்தூரிலுள்ள துணை நீதிமன்றத்திற்குக் கூடுதல் பணியாளர்கள் அனுமதித்தல் | 2.00 | .. | 0.80 |
| 6. | உதகமண்டலத்திலுள்ள துணை நீதிமன்றத்திற்குக் கூடுதல் பணியாளர்கள் அனுமதித்தல் | 3.33 | 0.20 | 1.42 |



1999 ஏப்ரல் 16]

| 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|
| 7. | மாவட்ட உரிமையியல்-குற்றவியல் நடுவர் நீதி மன்றங்களைச் சேர்ந்த 55 அரசு உதவி வழக்கு நடத்துநர்கள், நிலை-2 பதவி களை, அரசு உதவி வழக்கு நடத்துநர்கள், நிலை-1 பதவிகளாக நிலை உயர்த்துதல் | 8.52 | .. | 3.42 |
| 8. | அரசு வழக்கு நடத்துநர்களுக்கு ரொக்க ஊக்கப்பரிசு வழங்குதல் | .. | 0.50 | 0.50 |
| 9. | வழக்குத் தொடர்வு துறை மூலம் வழக்குத் தொடர்வு வழிகாட்டி குறித்த மாதாந்திர சட்டப் பத்திரிக்கை அச்சிட்டு வெளியிடுதல் | 2.00 | .. | 2.00 |
| 10. | மாநிலத்திலுள்ள அரசு உதவி வழக்கு நடத்துநர்களுக்கு சட்டப் புத்தகங்கள் வாங்குதல் | .. | 2.00 | 2.00 |
| 11. | வழக்குத் தொடர்வு துறையில் பிரிவு அலுவலகங்களுக்கும், இயக்ககத்திற்கும் அறைகலன்கள் வழங்குதல் | .. | 5.81 | 5.81 |
| 12. | ஜார்ஜ் டவுன், சைதாப்பேட்டை நீதிமன்ற வளாகங்களில் தற்போதுள்ள நிலை-1 அரசு உதவி வழக்கு நடத்துநர்களுக்கு 2 தொலைபேசி இணைப்புகள் கொடுத்தல் | 0.48 | 0.32 | 0.80 |

| 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|
| 13. | அரசு வழக்கு நடத்துதல் துறைக்கு அறைகலன்கள், சட்டப் புத்தகங்கள், ஜெராக்ஸ் இயந்திரம், நிகரி (FAX) சாதனம், கணினி மற்றும் தொலைபேசி வழங்குதல் | 0.20 | 9.80 | 10.00 |
| | மொத்தம் | 73.03 | 30.13 | 60.85 |
| | **சட்டத்துறை** | | | |
| 14. | ஆராய்ச்சி-வளர்ச்சித் திட்டங்களுக்காக சட்டப் பல்கலைக் கழகத்திற்கு மானியங்கள் | .. | 5.00 | 5.00 |
| 15. | மதுரை சட்டக் கல்லூரியில் கணினி வசதியும், ஆலோசனை மற்றும் பயிற்சிக்கான வசதியும் செய்து கொடுத்தல் | .. | 1.00 | 1.00 |
| 16. | சட்டப் படிப்பிற்கான புத்தறிவுப் பயிற்சி வகுப்புகளை நடத்துதல் | .. | 1.00 | 1.00 |
| | மொத்தம் .. | .. | 7.00 | 7.00 |



## இணைப்பு 4

**தமிழ்நாட்டிலுள்ள நீதிமன்றங்களில் நிலுவையாக உள்ள வழக்குகளின் எண்ணிக்கை பற்றிய விவர அறிக்கை**

| தொ. எண் | நீதிமன்றம் | சென்னை உயர் நீதிமன்றம் மற்றும் மாநிலத்திலுள்ள சார்நிலை நீதிமன்றங்களில் நிலுவையாக இருக்கும் வழக்குகளின் எண்ணிக்கை | | | | | 1998-ஆம் ஆண்டில் சென்னை உயர் நீதிமன்றத்திலும், சார்நிலை நீதிமன்றங்களிலும் தொடரப்பட்ட வழக்குகள் முடிவு அடைந்த வழக்குகள் மற்றும் நிலுவையில் உள்ள வழக்குகள் பற்றிய விவரங்கள் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 1993 | 1994 | 1995 | 1996 | 1997 | இந்த ஆண்டு தொடரப்பட்ட வழக்குகள் | இது வரைக்கு உரிய வழக்குகளின் மொத்த எண்ணிக்கை | இந்த ஆண்டு முடிக்கப்பட்டவை | ஆண்டு இறுதியில் நிலுவையாக இருந்தவை |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) |
| 1. | உயர்நீதிமன்றம், சென்னை | 2,61,115 | 2,94,800 | 2,75,175 | 2,89,473 | 3,04,286 | 96,318 | 4,00604 | 87,952 | 3,12,652 |
| 2. | மாநகர உரிமையியல் நீதி மன்றம், சென்னை | 60,513 | 65,223 | 68,960 | 77,551 | 78,175 | 50,893 | 1,29,068 | 49,765 | 79,303 |
| 3. | சிறுவழக்குகள் நீதிமன்றம், சென்னை | 16,279 | 13,480 | 15,490 | 16,391 | 16,417 | 34,432 | 50,849 | 32,744 | 18,105 |
| 4. | மாவட்ட நீதிமன்றங்கள் | 11,950 | 14,327 | 13,904 | 18,760 | 26,893 | 58,413 | 85,306 | 62,025 | 23,281 |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 5. | மாவட்டக் கூடுதல் நீதிபதி-நீதித்துறை தலைமை மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்கள் | - | - | - | 4,734 | 4,761 | 9,347 | 14,108 | 7,013 | 7,095 |
| 6. | சார்புநீதிமன்றங்கள் | 1,47,158 | 1,62,648 | 1,54,513 | 1,37,040 | 1,68,391 | 1,57,730 | 3,26,121 | 1,55,666 | 1,70,455 |
| 7. | மாவட்ட முன்சிப் நீதிமன்றங்கள் | 3,23,176 | 3,16,624 | 3,42,115 | 2,67,857 | 2,61,613 | 2,56,849 | 5,18,462 | 2,27,392 | 2,91,010 |
| | **மொத்தம் (அ)** | **8,20,191** | **8,67,102** | **8,70,157** | **8,11,806** | **8,60,536** | **6,63,982** | **15,24,518** | **6,22,557** | **9,01,961** |
| | **(ஆ) குற்றவியல் வழக்குகள்** | | | | | | | | | |
| 1. | உயர்நீதிமன்றம், சென்னை | 33,042 | 16,014 | 22,206 | 21,177 | 22,333 | 40,013 | 62,346 | 33,629 | 28,717 |
| 2. | செஷன்ஸ் நீதிமன்றங்கள் | 9,529 | 6,969 | 5,889 | 5,502 | 5,692 | 11,075 | 16,767 | 9,528 | 7,239 |
| 3. | பெருநகர மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்கள் | 65,054 | 46,332 | 48,073 | 44,737 | 48,457 | 2,24,833 | 2,73,290 | 2,19,488 | 53,802 |
| 4. | மாவட்டக் கூடுதல் நீதிபதி-நீதித்துறை தலைமை மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்கள் | 2,17,578 | 2,06,309 | 2,05,447 | 1,55,152 | 1,69,251 | 5,50,205 | 7,19,456 | 5,46,777 | 1,72,679 |
| | **மொத்தம் (ஆ)** | **3,24,203** | **2,75,624** | **2,81,615** | **2,26,568** | **2,45,733** | **8,26,126** | **10,71,859** | **8,09,422** | **2,62,437** |
| | **பெருமொத்தம் (அ)+(ஆ)** | **11,44,394** | **11,42,726** | **11,51,772** | **10,38,374** | **11,06,269** | **14,90,108** | **25,96,377** | **14,31,979** | **11,64,398** |



# இணைப்பு - II

## தமிழ்நாட்டில் சிறைகள் நிருவாகம்

### மானியக் கோரிக்கை எண் 14

### சிறைகள் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு

### 1999-2000

[54 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

**I. முன்னுரை**

சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் குறித்து ஏற்பட்டுள்ள விழிப்புணர்ச்சி கொண்ட இக்காலத்தில், சிறைவாசிகளை நடத்தும் முறையில், சிறை நிருவாகம் மிகவும் இன்றியமையாத பங்கினை வகித்து வருகிறது. ஒரு காலத்தில் அச்சம் நிறைந்த, கடும் தண்டனைகள் அளித்து வந்த இடங்களாக அறியப்பட்ட சிறைச்சாலைகள், தற்பொழுது சிறைவாசிகளை நல்வழிப்படுத்தும் பாதையில் சீராக முன்னேறி வருகின்றன.

2. கடும் தண்டனை அளிக்கப்படும் இடம் என்பதிலிருந்து சீர்திருத்த வழிமுறைகளைப் பின்பற்றும் இடமாக மாறி, தற்போது சிறை நிருவாகம், குற்றவாளிகளைச் சிறையில் அடைத்து மேலும் அவர்கள் குற்றம் இழைப்பதினின்று தடுப்பதோடு மட்டுமல்லாது மனித உணர்வுகளுக்கு மிகுந்த முக்கியத்துவம் அளிப்பதன் மூலம் அவர்களைச் சீர்திருத்தி, மறுவாழ்வு அளிப்பதிலும், சமூகத்தில் அவர்களை கூடிவாழச் செய்யவும் மிகுந்த கவனம் செலுத்துகிறது. இந்த நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு சிறைவாசிகள் விடுதலை பெற்ற பின்னர், சமுதாயத்தில் அவர்களைப் பயனுள்ளவர்களாகத் திகழச்செய்வதற்கு சிறை நிருவாகம், அவர்களின் சீர்திருத்தம், மறுவாழ்வு நோக்கில் செம்மையாகச் செயல்பட்டு வருகிறது. இந்த வகையில், சிறைவாசிகளின் நலனுக்காக மிகுந்த முக்கியத்துவம் அளிப்பதோடு சிறை மற்றும் சிறைவாசிகளின் நலனுக்காக சிறை ஏற்பாட்டில் எண்ணற்ற குறிப்பிடத்தக்க மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**II. நிறுவன அமைப்பு முறை மற்றும் நிருவாக ஏற்பாடு**

**அ. சிறைப் பிரிவு**

3. தற்போது சிறைத் துறை, இந்திய காவல் துறைப் பணி உயர்நிலை அதிகாரியைத் தலைவராகக் கொண்டு செயல்படுகிறது.

அவருக்கு உதவியாக, தலைமையிடத்தில் சிறைத் துறைத் துணைத் தலைவர் ஒருவர் மற்றும் நான்கு சரக சிறைத் துறைத் துணைத் தலைவர்கள் உள்ளனர். இச்சரகங்கள், சென்னை, திருச்சிராப்பள்ளி, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் அமைந்துள்ளன. இவர்கள், தத்தம் சரக எல்லைக்குள் வருகின்ற மத்திய சிறைகள் மற்றும் அந்தந்த சரகங்களில் ஏனைய நிறுவனங்களின் மீது அதிகார வரம்பினைப் பெற்றுள்ளனர். மத்திய சிறை ஒவ்வொன்றும் சிறைக் கண்காணிப்பாளர் ஒருவர் தலைமையில் இயங்குகிறது. இவருக்கு உதவியாக, நிருவாக, மருத்துவ, தொழில்நுட்ப மற்றும் அமைச்சுப் பணியாளர்கள் பலர் பணிபுரிகின்றனர்.

4. சிறைத் துறையின் நிருவாக அமைப்பு பற்றிய விவரம் இந்தக் குறிப்பில் உள்ள இணைப்பில் காணும் அமைப்பு அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில், சிறைகள் நிருவாகம் சிறைத்துறையால் கவனிக்கப்படுகிறது. இது, பின்வரும் நிறுவனங்களின் அமைப்புமுறை, கட்டுப்பாடு, நிருவாகம் ஆகிய பணிகளையும் கவனித்து வருகிறது:—

| | | |
|---|---|---|
| i. | மத்தியச் சிறைகள் | 8 |
| ii. | பெண்களுக்கான தனிச் சிறை | 2 |
| iii. | தனி கிளைச் சிறைகள் | 5 |
| iv. | கிளைச் சிறைகள் | 115 |
| v. | திறந்த வெளிச் சிறை | 1 |
| vi. | சேலம் மத்திய சிறையுடன் இணைந்துள்ள பண்ணைச் சிறை | 1 |
| vii. | சீர்திருத்தப்பள்ளி, புதுக்கோட்டை | 1 |

## ஆ. நன்னடத்தைப் பிரிவு

5. நன்னடத்தைப் பிரிவு, சிறைத் துறைக் கட்டுப்பாட்டின்கீழ் இயங்குகிறது. இது தலைமை நன்னடத்தைக் கண்காணிப்பாளரின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படுகிறது. எனினும் இவர், சிறைத் துறைத் தலைவரின் ஒட்டுமொத்தக் கட்டுப்பாட்டின்கீழும், நேரடி மேற்பார்வையின் கீழும் செயல்படுகிறார். கிளைச் சிறையில் பணிபுரியும் மண்டல நன்னடத்தை அலுவலர் ஒருவரைக் கொண்டு இயங்கும் ஓர் ஆராய்ச்சிப் பிரிவு, நன்னடத்தைப் பிரிவின் ஓர் அங்கமாகும். 1958 ஆம் ஆண்டு குற்றவாளிகள் நன்னடத்தைச்



சட்டத்தை செயற்படுத்துவதும் மற்றும் சிறைவாசிகளுக்கு மறுவாழ்வு அளிப்பதும் இப்பிரிவின் பொறுப்பாகும்.

6. இப்பிரிவில், மண்டல நன்னடத்தை அலுவலர்கள் 12 பேரும், நன்னடத்தை அலுவலர்கள் 96 பேரும் பணியாற்றுகின்றனர். அவர்கள், குற்றவாளிகளின் நடைமுறைப் பழக்கங்கள் மற்றும் அவர்கள் வாழும் இடத்தின் சுற்றுச்சூழ்நிலைகள் குறித்து விசாரணை செய்கின்றனர். தண்டனைக் காலத்திற்கு முன்னரே பிணையில் விடுதலை செய்யப்பட்ட குற்றவாளிகள் அல்லது இளங்குற்றவாளிகள், சீர்திருத்தப்பள்ளி உரிமத்தில் அல்லது இளங்குற்றவாளிகள் சீர்திருத்தப்பள்ளி கண்காணிப்பு இல்லங்கள் முதலியவற்றில் இருந்து விடுதலை செய்யப்படும் குற்றவாளிகள் ஆகியோரது நடைமுறை பழக்க வழக்கங்கள் பற்றி நீதிமன்றங்களுக்குத் தெரிவிப்பதும், அவற்றைக் கண்காணிப்பதும் இப்பிரிவின் முக்கியப் பணியாகும். விடுதலை செய்யப்பட்ட சிறைவாசிகள் மறுவாழ்வினைத் தொடங்க, நாட்டுடைமை ஆக்கப்பட்ட வங்கிகளிலிருந்து நிதியுதவிப் பெறவும் இந்த நன்னடத்தை அலுவலர்கள் உதவி செய்கின்றனர். இந்த நன்னடத்தை அலுவலர்களின் பணியை மண்டல நன்னடத்தை அலுவலர்கள் கண்காணிக்கின்றனர்.

## இ. பணியாளர்களும் செலவினங்களும்

7. சிறைத் துறையின் பல்வேறு வகைப் பணியாளர் தொகுதி அமைப்பில் 4,196 அலுவலர்களும், பணியாளர்களும் பணியாற்றுகின்றனர்.

8. 1994-95 ஆம் ஆண்டிலிருந்து சிறைத்துறையின் செலவு குறித்த விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

| ஆண்டு | செலவு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| 1994-95 | 3,171.10 |
| 1995-96 | 3,655.93 |
| 1996-97 | 3,496.39 |
| 1997-98 | 4,326.28 |
| 1998-99 (திருத்திய நிதி ஒதுக்கீடு) | 5,086.62 |
| 1999-2000 (வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீடு) | 5,010.34 |

[1999 ஏப்ரல் 16

### III. சிறை நிருவாகத்தை நவீனப்படுத்துதல்

9. புதுதில்லி மத்திய அரசு, உள் விவகாரங்கள் அமைச்சகம், 1993 ஆம் ஆண்டு முதல் 1997 ஆம் ஆண்டு வரையிலான கால அளவிற்கு, சிறை நிருவாகத்தை நவீனப்படுத்தும் (நிலை-II) திட்டத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டத்திற்கான கால அளவு 1998-99 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு மாநிலத்திற்கு, மத்திய அரசால் ஏற்பளிக்கப்பட்டத் திட்டத்திற்கான மொத்தச் செலவு ரூ. 522.00 இலட்சம் ஆகும். இத்திட்டத்தின்கீழ், இது தொடர்பாக, மத்திய அரசின் பங்கு, ரூ. 312.75 இலட்சமாகும். பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் தகவல் தொடர்பு வசதிகள் ஆகியவற்றை மேம்படுத்துவதற்கான செலவில் மத்திய அரசால் 75 விழுக்காடு உதவித் தொகை வழங்கப்பட்டிருக்கிறது. எஞ்சிய 25 விழுக்காட்டை மாநில அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும். சிறைச்சாலைக் கட்டடங்கள், போக்குவரத்துச் சாதனங்கள் ஆகியவற்றைப் பழுதுபார்த்து புதுப்பிப்பதற்காகவும், மருத்துவ மற்றும் சுகாதார வசதிகள் ஏற்படுத்திக் கொடுப்பதற்காகவும் மத்திய அரசு 50 விழுக்காடு உதவித் தொகைக்கு அனுமதி வழங்கியுள்ளது. எஞ்சிய 50 விழுக்காடு மாநில அரசால் ஏற்கப்படுகிறது.

10. 1998-99 ஆம் ஆண்டில், சிறை நிருவாகத்தை நவீனப்படுத்தும் திட்டத்திற்காக மத்திய அரசு முதலில் 40.00 இலட்சம் ரூபாயை ஒதுக்கீடு செய்தது. இருப்பினும், 1998-99 ஆம் ஆண்டிற்கு மாநில அரசு ரூபாய் 112.76 இலட்சம் செலவிலானத் திட்டங்களை மத்திய அரசுக்கு அனுப்பியுள்ளது. இரண்டு தவணைகளாக ரூபாய் 56.38 இலட்சத்தை மத்திய அரசு வழங்கியுள்ளது. இத்திட்டத்தின் முக்கிய இலக்கு, 1998-99 ஆம் ஆண்டில் அனைத்து மத்தியச் சிறைகளிலும் தகவல் தொடர்பினை மேம்படுத்த உயர் அழுத்த கம்பியில்லாத் தகவல் தொடர்பு சாதனங்கள் வழங்கவும், சிறைவாசிகளை கண்காணிக்கவும், மற்றும் நேர்காணலின்போது கண்காணிப்பினை மேம்படுத்தவும், பதிவு செய்யும் கருவிகளுடன் கூடிய தொலைக்காட்சி வசதிகளும் அளிப்பதேயாகும். மேலும், ரூபாய் 100 இலட்சம் செலவிலானக் கூடுதல் திட்டங்கள் 50 விழுக்காடு உதவி அடிப்படையில் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளன. 10-வது நிதிக்குழு, இம்மாநில அரசுக்கு கீழ்க்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்து பரிந்துரை செய்துள்ளது. இந்த நிதி ஒதுக்கீடு முறையே, சிறைகளைப் பழுதுபார்த்தலும், புதுப்பித்தலும் மற்றும் சிறைக் கைதிகளுக்கு மருத்துவ



1999 ஏப்ரல் 16]

வசதிகள், சுகாதார வசதிகள் ஆகிய இரண்டு தலைப்புகளில் வழங்கப்பட்டுள்ளன.

| ஆண்டு | குறியீட்டு அளவு (ரூபாய் இலட்சத்தில்) | | மொத்தம் (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| | பழுதுபார்த்தலும் புதுப்பித்தலும் | மருத்துவம் மற்றும் சுகாதாரம் | |
| 1997-98 | 107.34 | 56.26 | 163.60 |
| 1998-99 | 173.67 | 127.03 | 300.70 |
| 1999-2000 | 185.95 | 96.71 | 282.66 |
| மொத்தம் | **466.96** | **280.00** | **746.96** |

1997-98 மற்றும் 1998-99 ஆம் ஆண்டுகளுக்கு அனுமதிக்கப்பட்ட பணிகள் நடந்தேறி வருகின்றன. 1997-98 ஆம் ஆண்டிற்கான பணிகள் முடிவுறும் நிலையில் உள்ளன. சிறைவாசிகளுக்கு நல்ல சுகாதார வசதிகளைச் செய்துகொடுப்பதே இத்திட்டத்தின் முக்கியப் பயனாகும். மேலும் 1999-2000 ஆம் ஆண்டில் சிறைச்சாலைகளிலுள்ள மருத்துவமனைகளுக்குக் கட்டில், லினன் துணிகள், தலையணை போன்றவை வழங்கக் கருதப்பட்டுள்ளது.

### IV. திருச்சிராப்பள்ளி, சேலம் மற்றும் கோயம்புத்தூர் மத்திய சிறைகளில் தீவிரப் பாதுகாப்பு அடைப்புகள் அமைத்தல்

11. பிற மாநிலங்களைச் சேர்ந்த தீவிரவாதிகள் மற்றும் ஆபத்தான சிறைவாசிகள் ஆகியோருக்குத் தீவிரப் பாதுகாப்பு அடைப்புகள் அமைக்கும் பொருட்டு, முழு உதவித் தொகையின் அடிப்படையில், ரூபாய் 155.14 இலட்சம் மதிப்புள்ளத் திட்டங்களுக்கு, மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இதற்காக திருச்சிராப்பள்ளி, சேலம் மற்றும் கோயம்புத்தூர் மத்தியச் சிறைகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. மத்திய அரசு இத்திட்டத்திற்கு ஏற்கெனவே மொத்தம் ரூபாய் 155.14 இலட்சம் அளித்துள்ளது. இத்திட்டத்திற்கானப் பணிகள் முடிவடைந்துவிட்டன. கோயம்புத்தூர் மத்திய சிறையைப் பொறுத்தமட்டில், சில கூடுதல் பணிகள் மேற்கொள்ளப்பட்டு நடைபெற்று வருகின்றன. மேற்கண்ட மத்திய சிறைகளில் பாதுகாப்பு அடைப்புகள் அமைக்கும் பணிகளுக்காக கூடுதலாக ரூ. 44.86 இலட்சம் மத்திய அரசால் தற்போது வழங்கப்பட்டுள்ளது.

[1999 ஏப்ரல் 16

## V. 1999-2000 ஆம் ஆண்டிற்கு ஒப்புதல் வழங்கப்பட்ட புதியத் திட்டங்கள்

12. சிறைத் துறைக்கென 1999-2000 ஆம் ஆண்டிற்குக் கீழே குறிப்பிடப்பட்டுள்ள புதியத் திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது:

| வ. எண் | திட்டங்களின் விவரம் | மொத்தச் செலவு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | சென்னை மத்திய சிறையில் சிறைவாசிகளை நேர்காண வரும் பார்வையாளர்களை பரிசோதனை செய்திட ஒரு பரிசோதனை அறை கட்டுதல் | 2.00 |
| 2. | மதுரை மத்திய சிறை பணியாளர் குடியிருப்புகளில் தனி மின் இணைப்பு வழங்குதல். | 1.51 |
| 3. | சேலம் மத்திய சிறைப் பணியாளர் குடியிருப்புகளில் தனி மின் இணைப்பு வழங்குதல் | 9.50 |
| 4. | வேடசந்தூர் கிளைச் சிறையில் பெண் சிறைவாசிகளுக்கென தனியே நீரடிக் கழிப்பிடங்கள் மற்றும் குளியலறை கட்டுதல் | 1.15 |
| 5. | வேலூர் மத்திய சிறைப் பணியாளர் குடியிருப்புகளில் உள்ள குடிநீர் வழங்கல் ஏற்பாடுகளுக்கு தனி பழுதுபார்ப்புப் பணி மேற்கொள்ளுதல். | 5.00 |
| 6. | வேடசந்தூர் கிளைச் சிறையில், மேல்நிலைத் தொட்டியுடன் குடிநீர் வழங்கல் ஏற்பாடுகளுக்கு வகை செய்தல் | 0.95 |
| 7. | சிறைத் துறைத் தலைவர் அலுவலகத்தில் உள்ள முதுநிலைப் பிரிவு கண்காணிப்பாளர் பதவியை சிறைத் துறைத் தலைவரின் நேர்முக உதவியாளர் பதவியாக உயர்த்துதல். | 0.36 |



1999 ஏப்ரல் 16]

மேலும், மதத் தீவிரவாத அமைப்புகளைச் சேர்ந்த தீவிரவாதிகளைக் காவலில் வைக்கக் கருதப்பட்டுள்ள பூவிருந்தவல்லி தனிக்கிளைச் சிறையின் பாதுகாப்பை வலுப்படுத்த கீழ்காணும் கூடுதல் பணியாளர்களுக்கு உள்துறையின் 17-2-1999 நாளிட்ட 229 ஆம் எண் ஆணையில் (நிலை) அனுமதி வழங்கப்பட்டுள்ளது:

1. துணைச் சிறை அலுவலர் .. 1
2. உதவி சிறை அலுவலர் .. 6
3. இரண்டாம் நிலைக் காவலர் .. 30
4. மின் பணியாளர் .. 1
5. சமையலாள் .. 2

## VI. மனித ஆற்றல், பயிற்சி, வளர்ச்சி மற்றும் ஊக்குவிப்பு

### (அ) சிறைக் காவலர்கள் பயிற்சி மையம், வேலூர்

13. இப்பயிற்சிப் பள்ளி 100 இரண்டாம் நிலை சிறைக் காவலர்களுக்கு பயிற்சி அளிக்கும் திறன் கொண்டது. இப்பயிற்சிக் காலம் ஆறு மாதங்களாகும். உடற்பயிற்சி, ஒழுக்கம், சிறை நிருவாகக் கோட்பாடு, சீர்திருத்த நடைமுறை போன்ற பல்வேறு கூறுகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது. இது தவிர, 25 முதல் நிலை சிறைக் காவலர்களுக்கும், 4 முதல் நிலை தலைமைக் காவலர்களுக்கும், முறையே 30, 15 நாட்களுக்கு நினைவுகூர் பயிற்சி அளிக்கப்படுகிறது. சிறைவாசிகளின் சீர்திருத்தம் குறித்த நவீன அணுகுமுறையை இப்பயிற்சி வலியுறுத்துகிறது. சிறைகளை நவீனப்படுத்தும் மைய அரசின் திட்டத்தின்கீழ், பயிற்சிப் பொருட்கள், நூலகம், தொலைக்காட்சி, வீடியோ கேசட், வாகனம் போன்ற வசதிகளை செய்து கொடுப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதுதவிர, பல்நோக்கு உடற்பயிற்சிக் கூடம், குடியிருப்பு போன்ற அடிப்படை வசதிகளைச் செய்து தரவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த இனங்களுக்காக ரூ. 96 இலட்சம் செலவாகுமென்று கருதப்படுகிறது. பயங்கரவாதிகள், போராளிகள், தீவிரவாதிகள் மற்றும் பயங்கர சிறைவாசிகளை சிறையில் அடைப்பதைக் கருத்திற்கொண்டு, பயிற்றுநர்களுக்கு ஏ.கே. 47, 7.62 மி.மீ. எஸ்.எல்.ஆர். பிளாஸ்டிக் சிறுகுண்டுடன் கூடிய ரியாட் கன், ஸ்டென் கன், கை எறிகுண்டுகள், கைத்துப்பாக்கிகள் முதலிய நவீன ஆயுதங்களைப் பயன்படுத்தும் முறைகளைப் பயிற்றுவிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. அவசரக் காலத்தில்

நிலைமைகளைச் சமாளிக்கும் வகையில், சிறைகளுக்கு நவீன ஆயுதங்களும் வழங்கப்படும். சிறைப் பணியாளர்கள், சிறைப்பணியில் சேருவதற்கு முன்னதாக, அவர்களுக்குச் சிறைத் துறைக் கண்காணிப்பாளரால் இரண்டு வாரங்களுக்கு முன்பயிற்சி கொடுக்கப்படுகின்றது. உள்துறையின் 23-1-1998 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 79-இன்படி, வேலூரிலுள்ள சிறைக் காவலர் பயிற்சிப் பள்ளியில் உள்ள பயிற்சி ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்படும் பயிற்சிப்படித் தொகை அவர்களது அடிப்படைச் சம்பளத்தில் 15 விழுக்காடாக உயர்த்தப்பட்டுள்ளது.

**ஆ. குற்றவாளிகள் சீர்திருத்த மண்டல பயிற்சி நிலையம், வேலூர்.**

14. ஆந்திரப் பிரதேசம், கருநாடகம், கேரளம் மற்றும் தமிழ்நாடு ஆகிய நான்கு தென்மாநிலங்களைச் சார்ந்த சீர்திருத்த அதிகாரிகளுக்கு, 1979 ஆம் ஆண்டு முதல் இம்முன்மாதிரி பள்ளியில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. சீர்திருத்தம் மற்றும் அது சம்பந்தப்பட்ட நிருவாகத்தில் பணியாற்றும் சிறைப்பிரிவு, நன்னடத்தைப்பிரிவு, சீர்திருத்தப்பள்ளிகள் அதுசம்பந்தப்பட்ட ஏனைய நிலையங்களின் அலுவலர்களுக்குப் பயிற்சியளிப்பதே இதன் நோக்கமாகும். குற்றங்களைத் தடுத்தல், குற்றவாளிகளை நடத்தும் முறை ஆகியவை பற்றி இது பயிற்சியாளர்களுக்குப் பயிற்சி அளிக்கிறது. குற்றவாளிகளைக் குற்றவாளிகளாக மாறுவதற்கு முன்பிருந்த பழைய நிலைக்குக் கொண்டு வருவதற்கும், சமுதாயத்தில் மறுவாழ்வு பெறுவதற்கும், இம் மையம் அவர்களைத் தயார் செய்கிறது. குற்றவியல், உளவியல், சமூக வாழ்வியல், சிறை நிருவாகம், இளஞ்சிறார் குற்றங்கள், நன்னடத்தை, சமூகப் பணி, குற்ற வழக்குச் சட்டம் ஆகியவற்றில் பயிற்சியளிக்கிறது. மனித உரிமைகள் தொடர்பான பாடப்பயிற்சிகள் அண்மைக் காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. மத்திய சிறைகளைச் சேர்ந்த உதவி சிறை அலுவலர் முதல் கூடுதல் கண்காணிப்பாளர் வரையில் உள்ளவர்களுக்கும், ஏனைய சீர்திருத்த நிறுவனங்களில் இவர்களுக்கு நிகரான பதவிகளில் உள்ள அதிகாரிகளுக்கும் இங்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. இதுவரை தமிழ்நாட்டைச் சேர்ந்த 307 அதிகாரிகளுக்கு இப்பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இந்நிறுவனத்தின் தொடரின, தொடரா இனச் செலவுகளை நான்கு தென்மாநிலங்களும், சமமாகப் பகிர்ந்துகொள்கின்றன. ஆராய்ச்சி மேம்பாட்டுப்பிரிவு ஒன்று ரூ. 68.92 இலட்சம் செலவில் நிறுவப்பட்டு, ஆராய்ச்சி மேற்கொண்டு சிறை மற்றும் சீர்திருத்தம் குறித்த தகவல்களைச் சேகரித்து ஆய்வு செய்கிறது.



**(இ) சிறைத் துறை நற்பணிக்காக தமிழ்நாடு முதலமைச்சரின் பதக்கம் வழங்குதல்**

15(1). தமிழ்நாடு முதலமைச்சர் சிறைப் பணி பதக்கம் காவல் துறையினருக்கு வழங்கப்படுவது போலவே 1981 ஆம் ஆண்டு முதல் சிறைத் துறையினருக்கும் வழங்கப்பட்டு வருகிறது. இந்தப் பதக்கம் ஒவ்வொரு வருடமும் செப்டம்பர் 15 ஆம் நாள் தமிழ்நாடு சிறைப் பணி மற்றும் சிறைத் துறை சார்நிலைப் பணியினைச் சேர்ந்த தேர்ந்தெடுக்கப்பட்ட பத்து பணியாளர்களுக்கு அவர்களின் சிறப்புமிக்க கடமை உணர்வு மற்றும் வீரதீரச் செயல்களுக்காக வழங்கப்படுகிறது.

இந்தப் பதக்கத்திற்கு கீழ்க்கண்டவாறு ஒட்டுமொத்த மானியம் அளிக்கப்படுகிறது:

| | | |
|---|---|---|
| (1) | முதல் மற்றும் இரண்டாம் நிலைக் காவலர்கள் மற்றும் அதற்கு நிகரான பதவித் தரத்தில் உள்ளவர்கள் (மொத்தம் 5 பதக்கங்கள்) | ஒவ்வொருவருக்கும் ரூ. 2000/- |
| (2) | உதவி சிறை அலுவலர், துணை சிறை அலுவலர் மற்றும் அதற்கு நிகரான பதவித் தரத்திலுள்ளவர்கள் (மொத்தம் 3 பதக்கங்கள்) | ஒவ்வொருவருக்கும் ரூ. 3000/- |
| (3) | தமிழ்நாடு சிறைப் பணியில் சிறைக் கண்காணிப்பாளர் வரையிலான பதவித் தரத்தில் உள்ள அலுவலர்கள் (ஒரு பதக்கம்) | ஒவ்வொருவருக்கும் ரூ. 5000/- |
| (4) | வீரதீரச் செயல்களுக்காக (பதவித் தரம் எதுவாக இருந்தாலும்) (ஒரு பதக்கம்) | மாதாந்திரப்படி ரூ. 100/- |

15(2). தமிழ்நாடு முதலமைச்சரின் பதக்கம் சிறைத் துறையில் சீரிய பணிபுரிபவர்களுக்கு வழங்குவதற்காக 1985 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது. இத்துறைப் பணியாளர்கள் நேர்மை, வாய்மை, கடமையுணர்வு, திறமை, உயரிய ஒழுக்கம், தியாக உணர்வு ஆகியவற்றுடன் பணிபுரிவதை ஊக்குவிப்பதற்காக, ஒவ்வோர் ஆண்டும் பொங்கல் நாளன்று, தெரிந்தெடுக்கப்பட்ட 20 சிறைக் காவலர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இப்பதக்கத்தை வழங்குகிறார். இப்பதக்கம் பெற்ற முதல்நிலை சிறைக்காவலர்கள் மாதம் ஒன்றுக்கு ரூ.50 என்ற நிர்ணயித்த வீதத்திலும், இரண்டாம் நிலை சிறைக் காவலர்கள் மாதம் ஒன்றுக்கு ரூ.40 என்ற நிர்ணயித்த வீதத்திலும், தொகை பெறத்தகுதி உடையவர்கள் ஆவர்.

(ஈ) கருணைத் தொகை மற்றும் ஏனைய சலுகைகள் வழங்குதல்:

16(1) பணியிலிருக்கும்போது இறந்துவிடும் பணியாளர்களின் குடும்பங்களுக்கும், நிரந்தரமாக ஏலாமையுற்றவர்கள், செயல்திறனற்ற சிறைத் துறைப் பணியாளர்கள் ஆகியோருக்கும் கீழ்காணும் அளவில் கருணைத்தொகை வழங்குமாறு அரசு, ஆணை பிறப்பித்துள்ளது:-

| | | |
|---|---|---|
| 1. | பணியிலிருக்கும்போது இறந்தவருக்கு | ரூ.2,00,000/- |
| 2. | நிரந்தரமாக ஏலாமையுற்றவர்களுக்கு | ரூ.50,000/- |
| 3. | கடுமையாக காயமுற்றவர்களுக்கு | ரூ.10,000/- |
| 4. | சிறிய அளவில் காயமுற்றவர்களுக்கு | ரூ.5,000/- |

(2) மேலும், காவல்துறையில் பணியிலிருக்கும்போது வீரதீரச் செயல்களில் இறக்க நேரிடும் காவலர்களின் வாரிசுதாரர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படுவதுபோன்று பணியிலிருக்கும்போது வீரதீரச் செயல்களில் இறக்க நேரிடும் சிறைத் துறைப் பணியாளர்களுக்கும் (சிறைத் துறைக் காவலர் முதல் சிறைத்துறைத் தலைவர் வரை) அவர்கள் இறுதியாகப் பெற்ற ஊதியத்தை அவர்கள் பணிமூப்பில் ஓய்வுபெறும் நாள் வரை அவர்களின் வாரிசுதாரர்களுக்கு குடும்ப ஓய்வூதியமாகவும் அதற்குப் பிறகு, அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய வழக்கமான குடும்ப ஓய்வூதியமும் வழங்குவதற்கு உள்துறையின் 18-2-1999-ஆம் நாளிட்ட 238 ஆம் எண் அரசாணையில் (நிலை) ஆணையிடப்பட்டுள்ளது.

(உ) இரவு உணவு/காலைத் தேநீர்:

17. மத்திய சிறைகளில் இரவு நேரப் பணிபுரியும் காவலர்களுக்கு இரவு உணவு/காலைத் தேநீர் வழங்க உள்துறையின் 14-12-1998 ஆம் நாளிட்ட 1685 ஆம் எண் அரசாணையில் (நிலை) ஆணையிடப்பட்டுள்ளது. இதனடிப்படையில் இத்திட்டம் 1-1-1999 முதல் அமல்படுத்தப்பட்டுள்ளது.

VII. தனித்தன்மையுடைய நிறுவனங்கள்:

(அ) திறந்த வெளி சிறை:

18. தற்போது இம்மாநிலத்தில் கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள சிங்காநல்லூரில் திறந்த வெளி சிறை ஒன்று உள்ளது. இதில் நூறு



சிறைவாசிகள் தங்குவதற்கான இடவசதி உள்ளது. சிறைகளிலுள்ள நெருக்கடியை தவிர்த்தலும், சிறைவாசிகளுக்கு நவீன வேளாண் முறையில் பயிற்சி அளிப்பதும் இதன் நோக்கமாகும். இது அவர்களின் புதுவாழ்விற்கு உதவுவதற்காக ஏற்படுத்தப்பட்டது. இதற்காக உதவி வேளாண்மை அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

(ஆ) சீர்திருத்தப்பள்ளி, புதுக்கோட்டை:

19 (1). சீர்திருத்தப் பள்ளியில் 16 முதல் 23 வரையிலான வயதுத் தொகுதியைச் சேர்ந்த இளங்குற்றவாளிகள் அனுமதிக்கப்படுகின்றனர். அவர்களுக்கு பின்வரும் தொழில்களில் பயிற்சி அளிக்கப்படுகிறது:-

1. தச்சு வேலை
2. கருமார் வேலை
3. புத்தகம் கட்டுதல்
4. தையல் வேலை
5. வேளாண்மை
6. கட்டுமான வேலை
7. சலவைத் தொழில்
8. பினாயில் தயாரித்தல்
9. கூர்நாடா தயாரித்தல்
10. வாத்தியம் இசைத்தல், சமையல் உட்பட வீட்டு வேலை.

(2) விடுதலையான பின்னர், வேலையில் சேர இயலும் வகையில் சிறைவாசிகளுக்கு சான்றிதழ்கள் அளிக்கப்படுகின்றன. இப்பள்ளியில் உள்ள துயிற்கூடங்களில் ஒன்று வளரிளம் பருவத்தினருக்குரிய பயிற்சி மையமாக மாற்றப்பட்டுள்ளது.

(3) இளங்குற்றவாளிகள் 23 வயது வரையில் சீர்திருத்தப்பள்ளியில் வைக்கப்படுகின்றனர். 1894ஆம் ஆண்டு சிறைகள் சட்டத்தின்கீழ் புதுக்கோட்டை சீர்திருத்தப்பள்ளியின் துயிற்கூடம் சிறையாக அறிவிக்கப்பட்டுள்ளது. அவர்கள் விடுதலைக்குப் பின்னர், தொழிற்கருவிகள், கறவை மாடுகள் ஆகிய வகையில் நிதியுதவி அளிக்கப்படுகிறது. அவ்வாறு வழங்கப்படும் கடன் எளிய தவணைகளில் அவர்களிடமிருந்து வசூலிக்கப்படுகிறது.

(4) தமிழ்நாடு சிறை சீர்திருத்த ஆணையம் பரிந்துரைத்தபடி சீர்திருத்தப் பள்ளியைச் சேர்ந்த 25 சிறைவாசிகளுக்கு 15 நாட்களுக்கு ஆண்டு முகாம் நடத்தப்படுகிறது.

20. புதுக்கோட்டை, சீர்திருத்தப் பள்ளியைச் சேர்ந்த வளரிளம் பருவ வயதுடைய சிறைவாசிகளுக்கு ஊட்டச்சத்து வழங்கும்பொருட்டு, அவர்களுக்கு வழங்கப்படும் உணவின் அளவை 370 கிராமிலிருந்து 470 கிராமாக உயர்த்தி, உள் துறையின் 22-5-1997 ஆம் நாளிட்ட அரசாணை 4(டி) எண் 18-இல் அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

**(இ) புழலில் அமையவிருக்கும் நவீன சிறைச்சாலை:**

21. சென்னை மத்திய சிறையில், அதிக எண்ணிக்கையில் சிறைவாசிகள் அடைக்கப்படுவதைக் குறைப்பதற்காக புழல் கிராமத்தில் நவீன அடிப்படையில் ஒரு புதிய சிறையைக் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. புழலில் அமைந்துள்ள மத்திய சிறை ரூ.420.75 இலட்சத்தில் கட்டி முடிக்கப்பட்டிருந்தாலும், இலங்கை அகதிகள் அதனைக் குடியிருப்பாகப் பயன்படுத்தியதால், புழல் சிறையில் சிறைவாசிகள் அனுமதிக்க இயலாமல் இருந்தது. இலங்கை அகதிகள் 1997 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் வேறு இடத்திற்கு மாற்றப்பட்டனர். புழல் சிறை வளாகத்தில் பழுதுபார்த்தல் மற்றும் கூடுதல் பணிகளை மேற்கொள்ள அரசு கூடுதலாக ரூபாய் 122.31 இலட்சம் அனுமதித்துள்ளது. இந்தப் பணிகள் போர்க்கால அடிப்படையில் நடைபெற்று வருகின்றன. அனைத்து வசதிகளும் செய்து முடிக்கப்பட்ட பின்னர், புழல் மத்திய சிறை 1999-2000 நிதியாண்டில் தொடங்கப்பட உள்ளது.

**VIII. சிறைச்சாலைகளின் இடவசதியும், சிறைவாசிகளின் வகைகளும்:**

**(அ) சிறைகளில் இடவசதி:**

22. அனைத்துச் சிறைகளிலும் (கிளைச் சிறைகளையும் சேர்த்து) 18,228 சிறைவாசிகள் தங்குவதற்கான இடவசதி உள்ளது. தற்போது பதிவு செய்யாத இலங்கை அகதிகள் இரண்டு கிளைச் சிறைகளில் வைக்கப்பட்டுள்ளனர். அவை வருவாய்த் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளன.



**(ஆ) சிறையில் தனிமைப்படுத்தி வைப்பதற்காக உள்ள சிறைகளின் வகைகள்:**

23. ஒரு திங்களுக்கு மேலாக தண்டனை அடைந்தவர்கள் மத்திய சிறைகளில் வைக்கப்படுகின்றனர். தண்டனை சிறைவாசிகள் மற்றும் விசாரணை சிறைவாசிகளும் ஒரு மாதத்திற்குக் குறைவாக சிறைத் தண்டனை பெற்றவர்களும் கிளைச் சிறைகளில் வைக்கப்படுகின்றனர். வயது வந்த சிறைவாசிகள் இளங்குற்றவாளிகளிடமிருந்து பிரித்து வைக்கப்படுகின்றனர். பெண் சிறைவாசிகள் ஆண் சிறைவாசிகளிடமிருந்து தனித்தனியே பிரித்து வைக்கப்படுகின்றனர். குற்றம் செய்வதையே வழக்கமாகக் கொண்ட சிறைவாசிகள் சேலம் மத்திய சிறையில் வைக்கப்படுகின்றனர். பெண் சிறை அதிகாரிகளால் முழுமையாக நிருவகிக்கப்படும் பெண் சிறைவாசிகளுக்கென உள்ள வேலூர் மற்றும் திருச்சிராப்பள்ளி பெண்கள் தனிச் சிறைகளில் ஒரு மாதத்திற்கு மேலாக சிறைத் தண்டனை பெற்ற பெண் சிறைவாசிகள் வைக்கப்படுகின்றனர். புதுக்கோட்டையிலுள்ள சீர்திருத்தப் பள்ளி இளங்குற்றவாளிகளை காவலில் வைப்பதற்காக உள்ளது. மனநலம் குன்றிய குற்றவாளிகள் மற்றும் மன நோயுற்ற குற்றவாளிகள், சென்னை அரசினர் மனநலக் காப்பகத்தில் சேர்க்கப்படுகின்றனர்.

**(இ) சிறைவாசிகளின் வகைப்பாடு:**

24. தண்டனை பெறும் குற்றவாளிகள் 'ஏ' மற்றும் 'பி' என இரண்டு வகையாகப் பிரிக்கப்படுகின்றனர். விசாரணை சிறைவாசிகள் மற்றும் விசாரணையை எதிர்நோக்கி உள்ள சிறைவாசிகளுக்கு தனி வகுப்பு, நீதிமன்றத்தால் அளிக்கப்படுகிறது. குற்றவாளி ஒருவரை 'ஏ' வகுப்பு சிறைவாசி என்று நீதிமன்றம் தற்காலிகமாக வகைப்படுத்தி ஆணை பிறப்பிக்கிறது. பின்னர் அவ்வாணை, அக்குற்றவாளியின் சமூகத் தகுதி, கல்வி, வாழ்க்கைத் தரம், நடத்தை மற்றும் முன்வரலாறு ஆகியவற்றின் அடிப்படையில் அரசால் உறுதி செய்யப்படுகிறது. சமூகத் தகுதி, கல்வி, வாழ்க்கைத் தரம் ஆகியவற்றின் அடிப்படையில் உயர்தர வாழ்க்கை வாழ்ந்து பழக்கப்பட்ட சிறைவாசிகள் 'ஏ' என்று வகைப்படுத்தப்பட்ட தகுதியுடையவர்கள். முற்றிலும், நாகரிகமற்ற அல்லது நன்னடத்தையற்ற முறையில் குற்றம் செய்ததற்காக தண்டிக்கப்படும் எவருக்கும் 'ஏ' வகுப்பினைப் பெறத் தகுதியில்லை. சமுதாயத்திற்கு எதிராகக் குற்றம் புரிந்ததற்காக தண்டிக்கப்படும் சிறைவாசிகளும் 'ஏ' வகுப்பைப் பெற தகுதியற்றவர்கள். 'ஏ' வகுப்பைச்

சேராத சிறைவாசிகள் 'பி' வகுப்பு சிறைவாசிகள் என்கிற வகைப்பாட்டில் அடங்குவர்.

## IX. சிறைகளில் செய்து தரப்பட்டுள்ள ஒட்டுமொத்த வசதிகள்/ சிறப்புச் சலுகைகள்

25. விசாரணை தொடங்குவதற்கு முன்னர் அல்லது தண்டனை அளிக்கப்பட்ட பின்னர் குற்றம் புரிந்தவர்களை தடுப்புக் காவலில் வைப்பதற்கு உரிய இடம் சிறைச்சாலையாகும். சிறைவாசிகளுக்கு அளிக்கப்படும் பல்வேறு வசதிகள் மற்றும் சிறப்புச் சலுகைகள் பற்றிய விவரங்கள் சுருக்கமாகக் கீழே தரப்பட்டுள்ளன.

**(அ) உணவு**

26. முன்காலத்தில் பொதுவாக சிறை வாழ்க்கையில் சிறைவாசிகள் துயருக்கும் கொடுமைக்கும் ஆளாக்கப்பட்டதுடன் தரமற்ற உணவும் வழங்கப்பட்ட நிலை இருந்தது. அவர்கள் கடின வேலைகளிலும் ஈடுபடுத்தப்பட்டனர் தற்போதைய நிலை வேறுபட்டதாகும். தற்போது சிறைவாசிகளுக்கு நல்ல உணவு வழங்கப்படுகிறது.

27. 'ஏ' வகுப்பு சிறைவாசிகளுக்குக் கொடுக்கப்படும் உணவின் வகை அவற்றிற்கான செலவு ஆகியவை பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:-

| | சிறைவாசி ஒருவருக்கு நாளொன்றுக்கு ஆகும் செலவு |
|---|---|
| 1. சைவ உணவருந்தும் சிறைவாசி ஒருவருக்கு - வேலை செய்பவர் | ரூ.35.58 |
| 2. சைவ உணவருந்தும் சிறைவாசி ஒருவருக்கு- வேலை செய்யாதவர் | ரூ.32.65 |
| 3. அசைவ உணவருந்தும் சிறைவாசி ஒருவருக்கு- வேலை செய்பவர் | ரூ.35.45 |
| 4. அசைவ உணவருந்தும் சிறைவாசி ஒருவருக்கு - வேலை செய்யாதவர் | ரூ.30.75 |





28. 'பி' வகுப்பு சிறைவாசிகள், சாதாரண விசாரணை சிறைவாசிகள், விசாரணையை எதிர்நோக்கியுள்ள சிறைவாசிகள் ஆகியோருக்கு உணவு வழங்குவதற்காகும் செலவு பற்றிய விவரம் வருமாறு:-

| | அரிசி உணவு | கோதுமை உணவு |
|---|---|---|
| வேலைசெய்வோர் மற்றும் வேலை செய்யாத ஒருவருக்கு நாளொன்றுக்கு | ரூ. 16.95 | ரூ. 17.02 |

29. பாலூட்டும் பெண் சிறைவாசிகளுக்குச் சிறப்பு உணவாக ½ லிட்டர் பால் வழங்கப்படுகிறது. பெண் சிறைவாசிகளுடன் தங்கும் ஒரு வயதுக்குக் குறைவான குழந்தைகளுக்கு மருத்துவ அலுவலரின் பரிந்துரையின்பேரில் குழந்தை உணவுகள் வழங்கப்படுகின்றன.

30. 'ஏ' வகுப்பு சிறைவாசிகள் தங்களுடைய சொந்தச் செலவில் பழங்கள், பிஸ்கட், ஹார்லிக்ஸ் போன்ற ஊட்டச்சத்து வாய்ந்த உணவுப்பொருட்களை வாங்குவதற்கு அனுமதியளிக்கப்படுகிறார்கள். 'பி' வகுப்பு சிறைவாசிகளுக்கு வரையறுத்த அளவிற்கு சைவ உணவு மட்டும் வழங்கப்படுகிறது. எனினும், சில சிறப்பு நேர்வுகளில் சிறைவாசிகளுக்கு மருத்துவக் காரணங்களுக்காக பால், இறைச்சி, முட்டை, ரொட்டி, வெண்ணெய் மற்றும் பழங்கள் ஆகியவற்றைக் கொடுக்க மருத்துவ அலுவலர் அனுமதிக்கலாம்.

31. பொங்கல் மற்றும் சுதந்திர தினம் ஆகிய நாட்களில், ஒவ்வொரு சிறைவாசிக்கும் சிறப்பு உணவு வழங்கப்படுகிறது. இதற்காக பொங்கல் மற்றும் சுதந்திர தினம் ஒவ்வொன்றுக்கும் நபர் ஒருவருக்கு மிகைச் செலவு ரூ.5/- அனுமதிக்கப்பட்டுள்ளது.

32. உள் துறையின் 7-7-1997 ஆம் நாளிட்ட 1000 ஆம் எண் அரசாணையில் (நிலை) பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகளின்படி, விசாரணைக்காக, நீதிமன்றத்திற்கு அனுப்பப்படுகின்ற வயது வந்த மற்றும் இளங்குற்றவாளிகளான விசாரணைக் கைதிகளுக்கு வழங்கப்படுகின்ற உணவுப்படி, 'ஏ' வகுப்பு சிறைவாசிகளைப் பொறுத்தவரையில் ரூ. 4 இலிருந்து ரூ. 15 ஆகவும் 'பி' வகுப்பு சிறைவாசிகளுக்கு ரூ.2-லிருந்து ரூ. 10 ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

## (ஆ) உடையும் படுக்கையும்

33. 'ஏ' வகுப்பு சிறைவாசிகள் சிறை உடையை அணிய வேண்டிய வேலை நேரத்தைத் தவிர மற்ற நேரங்களில் சொந்தப் படுக்கையையும், சொந்த உடையையும் பயன்படுத்த அனுமதிக்கப்படுகிறார்கள். 'ஏ' வகுப்பு சிறைவாசிகள் அவர்களின் உறவினர்களை நேர்காணலின் போது தங்கள் சொந்த உடைகளை அணியலாம். ஆனால், 'பி' வகுப்பு சிறைவாசிகள் எல்லா நேரங்களிலும் சிறைச்சாலை உடைகளையே அணியவேண்டும். பெண் சிறைவாசிகளுக்கு இரண்டு துண்டுகளும், மூன்று ஜோடி வழக்கமான உடைகளும் வழங்கப்படுகின்றன. ஆயுள் தண்டனை பெண் சிறைவாசிகளுக்கு கருஞ்சிவப்பு நிறப் புடவையும், பிற பெண் சிறைவாசிகளுக்கு நீல நிறப் புடவையும் வழங்கப்படுகிறது.

## (இ) பிற வசதிகள் மற்றும் பயன்கள்

34. சிறைவாசிகள் மாதம் ஒருமுறை எண்ணெய் தேய்த்துக் குளிக்கலாம். இதற்காக ஒவ்வொருவருக்கும் மாதம் ஒரு முறை 30 கிராம் நல்லெண்ணெய் வழங்கப்படுகிறது. மேலும், அவர்களுக்கு சிகைக்காய்த் தூளும், சலவை சோப்பும் வழங்கப்படுகின்றன. கோயம்புத்தூர் மத்திய சிறையிலுள்ள நூற்பாலையில் வேலை செய்யும் சிறைவாசிகளுக்கு உடலில் பூசிக்கொள்வதற்காக கூடுதல் எண்ணெய் வழங்கப்படுகிறது. நன்னடத்தை உடைய அனைத்து வகுப்பு சிறைவாசிகளும் தங்களுடைய நண்பர்கள் மற்றும் உறவினர்களிடமிருந்து இரு வாரங்களுக்குத் தேவையான சோப்பு, எண்ணெய், பற்பொடி ஆகியவற்றைப் பெற்றுக்கொள்ள அனுமதிக்கப்படுகிறார்கள்.

35. 'பி' வகுப்பு சிறைவாசிகள், தங்களுடைய துணிகளை சிறையில் உள்ள சலவையகத்தில் அவர்களது சொந்தச் செலவில் சலவை செய்துகொள்ள அனுமதிக்கப்படுகிறார்கள்.

36. 'ஏ' வகுப்பு சிறைவாசிகள். இரும்பு அறைக்கலன்கள், சாப்பாட்டுப் பாத்திரங்கள், கொசுவலை ஆகியவற்றைப் பயன்படுத்த அனுமதிக்கப்படுகிறார்கள். புகையிலை பயன்படுத்தவும், சொந்தமாக சமைக்கவும், சாப்பாட்டுப் பாத்திரங்களை பயன்படுத்தவும் அவர்கள் அனுமதிக்கப்படுகிறார்கள். தண்டனை பெற்ற சிறைவாசிகள், அவர்களுடைய நன்னடத்தையைப் பொறுத்து இரவுக் காவலர்கள், மேற்பார்வையாளர்கள் மற்றும் காவலர்கள் என நியமிக்கப்படுவதற்குத் தகுதியுடையவர்கள் ஆவர்.





37. சிறைவாசிகளின் தேவையை நிறைவு செய்வதற்காக, அனைத்து மத்திய சிறைகளிலும், புதுக்கோட்டையிலுள்ள சீர்திருத்தப் பள்ளியிலும் முடிதிருத்துநர்கள் உள்ளனர்.

## (ஈ) மருத்துவ, சுகாதார வசதிகள்

38. சிறை அதிகாரிகள், சிறைவாசிகளின் நல்வாழ்வு வசதிகள் மற்றும் சுற்றுப்புற நலன் ஆகியவற்றைக் கவனித்துக்கொள்கின்றனர். அனைத்து மத்திய சிறைகளிலும், வேலூர் பெண்கள் தனிச் சிறையிலும், புதுக்கோட்டை சீர்திருத்தப் பள்ளியிலும் மருத்துவமனைகள் உள்ளன. அதில் பகுதிநேர மருத்துவ அலுவலர் ஒருவரும், ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட அறுவை சிகிச்சை உதவி மருத்துவரும், ஒரு செவிலியரும், ஒன்று அல்லது இரண்டு மருந்தாளுநரும், இரண்டு அல்லது மூன்று செவிலி உதவியாளர்களும் உள்ளனர். கண் மருத்துவர் மற்றும் மருத்துவ அதிகாரியின் பரிந்துரையின்பேரில், மூக்குக் கண்ணாடி தேவைப்படுகின்ற சிறைவாசிகளுக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடியும் வழங்கப்படுகிறது. மேலும், சிறையைப் பார்வையிடும் பல் மருத்துவர் சிறைவாசிகளுக்கு பல்நோய் சிகிச்சையும் அளிக்கிறார். தொழுநோயில் துன்புறும் சிறைவாசிகள், தனியாகப் பிரிக்கப்பட்டு, வேலூர் மத்திய சிறையிலுள்ள தொழுநோய் சிகிச்சை இணைப்புக் கட்டடத்தில் சிகிச்சை அளிக்கப்படுகின்றனர். இவர்களைக் கவனித்துக்கொள்வதற்கு உடல் இயக்கப் பயிற்சி மருத்துவர் அமர்த்தப்பட்டுள்ளார். மனநிலை சரியில்லாத சிறைவாசிகள் மனநோய்க் குற்றவாளிகள் ஆகியோர் அரசினர் தலைமையிட மருத்துவமனை உளநோய் மருத்துவர்கள் பரிந்துரையின்பேரில் சென்னை அரசு மனநலக் காப்பகத்திற்கு அனுப்பப்படுகின்றனர். நோயுற்ற சிறைவாசிகளை அரசினர் தலைமையிட மருத்துவமனைக்கு அல்லது மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அழைத்துச் செல்ல அரசு தற்பொழுது ஒவ்வொரு மத்திய சிறைக்கும் ஒரு நோயாளர் ஊர்தி வழங்கி உள்ளது.

39. அனைத்து மத்திய சிறைகள், புதுக்கோட்டை சீர்திருத்தப் பள்ளி, வேலூர் பெண்கள் தனிச் சிறை ஆகியவற்றில் ஆய்வகம் மற்றும் ஈ.சி.ஜி. சாதனம் ஆகியவை சிறைவாசிகளின் நலனுக்காக அளிக்கப்பட்டுள்ளன.

[1999 ஏப்ரல் 16

40. துப்புரவு ஏற்பாட்டைப் பொறுத்தவரையில், அனைத்து மத்திய சிறைகளிலும், தனிக் கிளைச் சிறைகள் மற்றும் அனைத்து கிளைச் சிறைகளிலும் தண்ணீர் வசதியுடன் கூடிய நீரடிக் கழிப்பிடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

(உ) தகவல் தொடர்பு வசதிகள்

(1) நேர்காணல் மற்றும் கடிதங்கள்

41. அனைத்து சிறைவாசிகளும், வாரம் ஒருமுறை கடிதம் பெறுவதற்கும் எழுதுவதற்கும், இரு வாரங்களுக்கு ஒருமுறை ஒரே சமயத்தில் மூவருடன் அரை மணி நேரம் கலந்துரையாடவும் அனுமதிக்கப்படுகிறார்கள்.

(2) நாளிதழ்களும் குறித்த கால வெளியீடுகளும்

42. சிறையின் நான்கு சுவர்களுக்கப்பால் என்ன நிகழ்கிறது என்ற நாட்டு நடப்புகளைத் தெரிந்துகொள்வதற்காக சிறைவாசிகளுக்கு நாளிதழ்களும், குறித்த கால வெளியீடுகளும், 40 சிறைவாசிகளுக்கு ஒரு செய்தித்தாள் என்ற வீதத்தில் அரசு செலவில் இலவசமாக வழங்கப்படுகிறது. வழங்கப்படும் நாளிதழ்களாவன:

1. தினமணி
2. தினத்தந்தி
3. தினமலர்
4. இந்து

ஒவ்வொரு மத்திய சிறைக்கும் இரண்டு 'இந்து' நாளிதழ்கள் வழங்கப்படுகின்றன. தெரிவு செய்யப்பட்ட குறித்த கால வெளியீடுகள், 100 சிறைவாசிகளுக்கு ஒன்று என்ற வீதத்தில் வழங்கப்படுகிறது.

43. சிறைவாசிகள், தங்கள் சொந்தச் செலவில் அரசு ஏற்பளித்த நாளிதழ்கள் மற்றும் பத்திரிகைகளை வாங்கிக்கொள்ள அனுமதிக்கப்படுகின்றனர். கல்வி மற்றும் இலக்கியத் திறன் கொண்ட நல்ல தரமான புத்தகங்கள், சிறைவாசிகள் படிப்பதற்காக சிறை நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளன. பயனுள்ள புத்தகங்கள் உள்ளூர் நூலகத்திலிருந்து பெறப்பட்டு, படிப்பதற்காக சிறைவாசிகளுக்கு வழங்கப்படுகின்றன.



1999 ஏப்ரல் 16]

(ஊ) பொழுதுபோக்கு வசதிகள்

44. சிறைவாசிகளுக்கு விளையாட்டு மற்றும் தொலைக்காட்சி போன்ற பொழுதுபோக்கு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. மேலும், தியான முறை மற்றும் யோகா வசதிகளும் உள்ளன. ஞாயிற்றுக்கிழமைகள் மற்றும் சிறை விடுமுறை நாட்களில் சிறைவாசிகள் கைப்பந்து, கபடி, பூப்பந்து ஆகிய விளையாட்டுகளை விளையாடவும், வேலூரிலுள்ள பெண்கள் தனிச் சிறையில் பெண் சிறைவாசிகள் வளைப்பந்து விளையாடவும் அனுமதிக்கப்படுகின்றனர். ஆழ்நிலை தியான முறை அனைத்து மத்திய சிறைகளிலும், மகரிஷி கிரியேடிவ் இன்டெலிஜன்ஸ் நிறுவனம் மூலம் விரும்பும் சிறைவாசிகளுக்குக் கற்பிக்கப்படுகிறது. சென்னை மத்திய சிறையிலுள்ள சிறைவாசிகளுக்கு சென்னை யோகாசன ஆலயம் மூலம் யோகாசன வகுப்புகள் நடத்தப்படுகின்றன. தற்பொழுது, அனைத்து மத்திய சிறைகள், வேலூர், திருச்சிராப்பள்ளி பெண்கள் தனிச் சிறைகள், சிங்காநல்லூர் திறந்த வெளிச் சிறை, ஆகிய சிறைகளுக்கு தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன.

(எ) கல்வி வசதிகள்

45. சிறைவாசிகளின் கல்வித் தேவைகளை சிறைத் துறை நிருவாகம் நன்கு கவனித்துக்கொள்கிறது. ஒவ்வொரு மத்திய சிறையிலும் தகுதி பெற்ற ஆசிரியர்களைக் கொண்ட தொடக்கப்பள்ளி உள்ளது. முதியோர் கல்வி கற்பிக்க சிறப்புப் பயிற்சி பெற்ற ஆசிரியர்களைக் கொண்டு சிறைகளில் சிறைவாசிகளுக்குக் கல்வி புகட்டப்படுகிறது. முதியோர் கல்வி புகட்டுவதற்கான மற்றும் பயிற்சிக்கான பொருட்கள், மாநில வள ஆதார நிறுவனம் மூலமாக சிறைவாசிகளுக்கு வழங்கப்படுகின்றன. சிறைக் கண்காணிப்பாளர்கள், வெளியிலுள்ள கல்வி நிறுவனங்களிலிருந்து ஆசிரியர்களையும், விரிவுரையாளர்களையும் வரவழைத்து, சிறை விடுமுறை நாட்களிலும், ஞாயிற்றுக்கிழமைகளிலும் விரிவுரையாற்ற ஏற்பாடுகள் செய்கிறார்கள். பல்வேறு முதுநிலை பட்டப்படிப்பு மற்றும் பி.ஜி.எல்., பி.எட்., போன்ற வாழ்க்கைத் தொழிற்படிப்புகளை அஞ்சல் வழிக் கல்வி மூலம் பயில சிறைவாசிகள் அனுமதிக்கப்படுகின்றனர். சிறைவாசிகளுள் ஒருவர் பி.எச்.டி., பட்டம் பெற்றுள்ளார் என்பது மனநிறைவளிக்கும் செய்தியாக உள்ளது. இது தொடர்பாக புத்தகங்களை வாங்கும் செலவு, தேர்வுக் கட்டணம் குறித்த செலவு இதர இடைநிகழ் செலவு ஆகிய செலவுகளை அரசு

ஏற்றுக்கொள்கிறது. தேர்வில் தேர்ச்சி பெறாத சிறைவாசிகள் மூன்று முறை மீண்டும் அரசு செலவில் தேர்வு எழுத அனுமதிக்கப்படுகின்றனர். சிறைவாசிகள் தேர்வு எழுதச் செல்லும்பொழுது, பிறரது கவனத்தை தவிர்க்கும்பொருட்டு சொந்த உடையிலேயே தேர்வு எழுத அனுமதிக்கப்படுகிறார்கள். அதேபோன்று அவர்களை காவல் காத்து அழைத்துச் செல்லும் வழித்துணைக் காவலர்களும் சாதாரண உடை அணிந்து செல்கின்றனர். தற்போது 11 சிறைவாசிகள் உயர்கல்வி கற்கின்றனர். நீதி மற்றும் மதம் சம்பந்தமாக சொற்பொழிவுகள் என்ற பெயரால் மதமாற்றம் செய்தல் கூடாது என்ற நிபந்தனையுடன் சிறையில் மதம், நீதிநெறி வகையான சொற்பொழிவுகள் விருப்பப்படும் சிறைவாசிகளுக்கு அனுமதிக்கப்படுகின்றன.

**(ஏ) சிறைவாசிகளின் விடுப்பு வசதிகள்**

*46.(1)* மூன்று ஆண்டு தொடக்கச் சிறைத் தண்டனை அனுபவித்துள்ள சிறைவாசிகளுக்கு முதலில் ஒரு மாத சாதாரண விடுப்பு சிறைத்துறைத் துணைத் தலைவரால் அளிக்கப்படுகிறது. தனி நேர்வுகளில், இந்த விதியினைத் தளர்த்தி, காப்பு விடுப்பில் செல்ல அரசு அனுமதி அளிக்கிறது. இன்னும் 3 ஆண்டு காலம் மட்டும் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டிய சிறைவாசிகள், சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட பின் வாழ்க்கை அமைத்துக் கொள்வதற்கு இயலும் வண்ணம், ஒவ்வொரு ஆண்டுக்கும் ஒருமாதம் என்ற வீதத்தில் அவர்களுக்கு விடுப்பு அளிக்கப்படுகிறது.

(2) இவ்விடுப்புடன், நன்னடத்தையுள்ள சிறைவாசிகள் தங்களுடைய உறவினர்கள் மிகவும் ஆபத்தான நிலையில் நோய்வாய்ப்பட்டிருந்தாலோ அல்லது இறந்து விட்டாலோ அவர்களைச் சென்று பார்க்கவும், அவர்களுடைய நெருங்கிய உறவினர்களின் திருமணத்தில் கலந்து கொள்வதற்தாகவும் அவர்களுக்கு சிறைக் கண்காணிப்பாளரால் அவசர கால விடுப்பு அனுமதிக்கப்படுகிறது. இத்தகைய அவசர கால விடுப்பு, ஓர் ஆண்டில் நான்கு முறையாக, 15 நாட்களுக்கு மேற்படக்கூடாது என்ற நிபந்தனைகளுக்குட்பட்டதாகும்.

**(ஐ) தண்டனைக் குறைப்பு மற்றும் அரசால் வழங்கப்படும் சிறப்பு தண்டனைக் குறைப்பு**

*47.(1)* சிறைவாசிகளின் மிக முக்கியமான தனி உரிமையாக இருப்பது சிறைவாசிகளுக்கு வழங்கப்படும் தண்டனைக் குறைப்பு ஆகும்.



பலவிதமான தண்டனைக் குறைப்புகள் சிறைவாசிகளுக்கு அனுமதிக்கப்படுகின்றன. சிறைவாசிகளின் நன்னடத்தைக்காக ஒரு மாதத்திற்கு இரண்டு நாட்கள் தண்டனைக் குறைப்பும் அவர்கள் செய்யும் சிறந்த பணிக்காக ஒரு மாதத்திற்கு இரண்டு நாட்கள் தண்டனைக் குறைப்பும், சாதாரண வகை தண்டனைக் குறைப்புகளாக அளிக்கப்படுகின்றன. இவ்விதிகளின்கீழ் அவர்கள் ஈட்டிய ஏனைய தண்டனைக் குறைப்புடன், சிறைப் பணிகளுக்காக அதாவது ஞாயிறு அன்றும் ஏனைய சிறை விடுமுறை நாட்களிலும் சமையற்காரர்களாகவும், துப்புரவாளர்களாகவும் பணியாற்றும் சிறைவாசிகளுக்கு ஒரு காலாண்டிற்கு 3 நாட்கள் தண்டனைக் குறைப்பு வழங்கப்படுகிறது. தண்டனை சிறைவாசிக் காவலர்கள் மாதத்திற்கு எட்டு நாட்கள் தண்டனைக் குறைப்பு பெறுகிறார்கள். சிறைகளில் ஒழுங்கு அல்லது கட்டுப்பாட்டைப் பேணிவரும் சிறைவாசிகளுக்கு சிறைக் கண்காணிப்பாளரால் சிறப்பு தண்டனைக் குறைப்பாக ஓர் ஆண்டிற்கு 30 நாட்களும் சிறந்த நற்பணிக்காக சிறப்பு தண்டனைக் குறைப்பாக ஓர் ஆண்டிற்கு 60 நாட்களும் சிறைத் துறைத் தலைவரால் அளிக்கப்படுகிறது. கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்து கொள்ளும் சிறைவாசிகள் அதிகபட்சமாக ஓராண்டுகால சிறப்புத் தண்டனைக் குறைப்பு பெறுகிறார்கள். மேலும் இரத்ததானம் செய்யும் சிறைவாசிகளுக்கு ஒரே சமயத்தில் 15 நாட்கள் தண்டனைக் குறைப்பும் அளிக்கப்படுகிறது. இதைத் தவிர, மூன்றாண்டுகள் அல்லது அதற்கு மேல் தண்டனை அடைந்த சிறைவாசிகளை முன்னதாக விடுதலை செய்வது குறித்து ஆலோசனைக் குழு பரிசீலனை செய்கிறது. சிறைவாசியின் கடந்தகாலக் குறிப்பையும், உள்ளூர் அதிகாரிகளான மாவட்ட ஆட்சித் தலைவர், நன்னடத்தை அலுவலர், கண்காணிப்பாளர் ஆகியோர் அளித்த அறிக்கையையும் பரிசீலித்து, அச்சிறைவாசியை அவருக்கு அளிக்கப்பட்ட சிறைத் தண்டனைக் கால அளவு முடிவடைவதற்கு முன்னரே விடுவிப்பதற்காக அரசு பரிசீலிக்கும்பொருட்டு, இக்குழு தனது பரிந்துரையினை அரசுக்கு அனுப்பி வைக்கிறது.

(2) குற்றவியல் நடைமுறை விதித்தொகுப்பு 433-ஏ பிரிவின்படி 18-12-1978 அன்றோ அல்லது அதற்குப் பின்னரோ ஆயுள் தண்டனை பெற்ற சிறைவாசிகள் 14 ஆண்டு காலம் தண்டனை அனுபவித்த பின்பே உரிய காலத்திற்கு முன் விடுதலை செய்யப்படுவதற்குப் பரிசீலனை செய்யப்படுகிறார்கள்.

[1999 ஏப்ரல் 16

(3) இருப்பினும், 18-12-1978-க்கு முன் ஆயுள் தண்டனை பெற்ற கடும் நோயுற்ற, வயதான சிறைவாசிகளை மருத்துவக் காரணங்களை முன்னிட்டு முன் விடுதலை செய்வது தொடர்பாக சிறை மருத்துவ அலுவலரின் சான்றிதழின்பேரில், மாநில சிறைச்சாலை நடைமுறை நூலில் உள்ள விதிகளின்படி பரிசீலனை செய்யப்படுகிறது.

(4) நடைமுறையிலுள்ள விதிகளுக்கிணங்க, கீழ்க்காணும் வகையைச் சேர்ந்த சிறைவாசிகளை உரிய காலத்திற்கு முன் விடுதலை செய்யப்படுவதற்குப் பரிசீலிக்கப்படக்கூடாது:—

(அ) கற்பழிப்பு, பொய்க் கையெழுத்து, கொள்ளை ஆகிய குற்றங்களுக்காகத் தண்டனை பெற்ற சிறைவாசிகள் மற்றும் பயங்கரவாத குற்றவாளிகள் மற்றும் மாநிலத்திற்கெதிரான குற்றங்களுக்காக தண்டிக்கப்பட்ட சிறைவாசிகள் மற்றும் இந்திய தண்டனைச் சட்டக்கோவையின் பிரிவுகள் 224, 376, 396 முதல் 400 வரை, 402, 467, 471, 472, 474, 489-ஏ, 489-பி மற்றும் 489-டி ஆகிய பிரிவுகளின்கீழ் தண்டனை அடைந்த சிறைவாசிகள்.

(ஆ) பொருளாதாரக் குற்றங்களுக்காகத் தண்டிக்கப்பட்ட சிறைவாசிகள், பொருட்களைப் பதுக்கி வைத்தல், கள்ளக்கடத்தல் மற்றும் அதிகாரத்தைத் தவறாக பயன்படுத்தியதற்காக தண்டனை பெற்ற சிறைவாசிகள்.

(இ) இலஞ்ச ஒழிப்புச் சட்டம் மேலும் பரத்தமைத்தடைச் சட்டம், போதை மருந்துகள் சட்டம் மற்றும் உணவுக் கலப்படத் தடுப்புச் சட்டம் ஆகியவற்றின்கீழ் தண்டிக்கப்பட்ட சிறைவாசிகள்.

(ஈ) புதுக்கோட்டை சீர்திருத்தப் பள்ளியில் உள்ளோரைப் பொறுத்தவரையில், தண்டனைக் காலம் முடியும் முன் விடுதலை செய்யும் முறை (விடுதலை அல்லது நல்லிணக்கத்தின்கீழ் விடுதலை செய்தல்) செயலில் உள்ளது. 1925 ஆம் ஆண்டு சீர்திருத்தப் பள்ளிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1926) 15 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) ஆம் உட்பிரிவின்படி நல்லிணக்கத்தின்பேரில் விடுதலை செய்யப்படுவதைப் பொறுத்தமட்டில், இப்பள்ளிக் கண்காணிப்பாளர் நல்லிணக்கத்தின்பேரில் விடுதலை செய்யக் கருதியுள்ளவர்களின் பெயர்களையும் அவர்கள் பெற்ற வாழ்க்கைத் தொழில் பயிற்சிகளையும் வெளியூர்களைப் பொறுத்தமட்டில் மாவட்ட நன்னடத்தை அதிகாரிகளுக்கும், சென்னையைப் பொறுத்தவரையில் தலைமை நன்னடத்தைக் கண்காணிப்பாளருக்கும் அனுப்ப வேண்டும். குழு கூடும் நாளுக்கு ஆறு வாரங்களுக்கு முன்னர் இவற்றை அனுப்ப வேண்டும். நல்லிணக்கத்தின்பேரில், விடுதலை செய்வதற்காக பார்வையிடும் குழு, பரிந்துரைத்துள்ள இளங்குற்றவாளிகள் பற்றி சிறைத்துறைத் தலைவர் பரிசீலித்து பிறகு ஆணை வெளியிடுகிறார்.



## (ஒ) தற்போதைய அரசால் வழங்கப்பட்ட பொது மன்னிப்பு

48. இந்த அரசு, நல்லெண்ணத்தின்பேரிலும், மனித நேயத்தின் பேரிலும், பேரறிஞர் அண்ணா பிறந்த தினத்தை முன்னிட்டு பொது மன்னிப்பு வழங்கியது. அதற்கேற்ப 107 ஆயுள் சிறைவாசிகள், குறுகிய கால, நீண்ட கால தண்டனை பெற்றிருந்த சிறைவாசிகள் 15-9-1998 அன்று விடுதலை செய்யப்பட்டனர்.

## (ஓ) சிறைவாசிகளுக்கு இலவச சட்ட ஆலோசனை உதவி வழங்குதல்

49. தமிழ்நாடு மாநில சட்ட உதவி ஆலோசனைக் கழகம் விசாரணை சிறைவாசிகளுக்கும், தண்டனை சிறைவாசிகளுக்கும் இலவச சட்ட ஆலோசனை உதவி வழங்கி வருகிறது. சிறைவாசிகளுக்கு இலவச சட்ட ஆலோசனை உதவி வழங்குவதற்காக இக்கழகம் பணி வழக்குரைஞர்களை அனைத்து சிறைகளுக்கும் அனுப்பி வருகிறது. தமிழ்நாடு மாநில சட்ட உதவி ஆலோசனைக் கழகத்தின் உதவியால் பெருமளவில் சிறைவாசிகள் பயன்பெறுகின்றனர்.

## (ஔ) சிறையில் புகார் பெட்டிகள் வைத்தல்

50. சிறைவாசிகள் தங்கள் குறைகளைத் தெரிவிக்கும்பொருட்டும், அவர்களிடமிருந்து புகார்களைப் பெறும்பொருட்டும் திறக்கமுடியாத உலோக முத்திரையிட்டு மூடி வைக்கப்பட்டுள்ள புகார் பெட்டிகள் வைக்கப்பட்டுள்ளன. அனைத்து மத்திய சிறைகளிலும் புதுக்கோட்டை சீர்திருத்தப் பள்ளியிலும் மூன்று முத்திரையிடப்பட்ட புகார் பெட்டிகளும், வேலூரில் மகளிருக்கான தனிச் சிறைச்சாலையில் இரண்டு புகார் பெட்டிகளும் வைக்கப்பட்டுள்ளன. சிறைவாசிகளுக்கு எழுதுபொருட்களும் கொடுக்கப்படுகின்றன. ஒவ்வொரு மாதமும் வரக்கூடிய முதல் பணி நாளன்று சிறைத் துறை அதிகாரிகள் அந்த புகார்ப் பெட்டிகளைக் கொண்டுவந்து சம்பந்தப்பட்ட மாவட்ட அமர்வு நீதிபதியிடம் அளிப்பர். அவர் அப்பெட்டிகளைத் திறந்து அவற்றிலுள்ள புகார் மனு ஒவ்வொன்றையும் படித்துப் பார்த்து, சிறை அதிகாரிகளால் அல்லது அரசால் அல்லது சிறைத் துறைத் தலைவரால் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியவற்றின் பகுதி

நகல்களை சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்பி வைப்பார். இவ்வாறு சிறைவாசிகள் கொடுக்கும் புகார் மனுக்களின்மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

### (க) சிறைகளைப் பார்வையிட சிறைப் பார்வையாளர்களுக்கு வசதி செய்து கொடுத்தல்

*51.* அரசு சார்பு சிறைப் பார்வையாளர்களால், சிறைச்சாலைகள் ஆய்வு செய்யப்படவேண்டியதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தத் தேவையில்லை. இந்த ஏற்பாடானது சிறைச்சாலைகளில் ஏற்படக்கூடிய முறைகேடுகள் நிகழவொட்டாமல், தடுத்து கட்டுப்படுத்தும் ஒன்றாக அமைகின்றது. மாஜிஸ்டிரேட்டுகளையும், நீதிபதிகளையும், மருத்துவம், நல்வாழ்வு, தொழில்கள், தீயணைப்புப் பணிகள் மற்றும் ஏனைய துறைகளிலிருந்து அரசு சார்புள்ள பார்வையாளர்கள் நியமிக்கப்படுகின்றனர். சிறைவாசிகளை நடத்தும் விதம், சிறைகளை நிருவகிப்பது தொடர்பான சட்டங்கள், விதிகள், ஒழுங்குமுறை விதிகள் ஆகியன சிறைகளில் உரியவாறு செயல்படுத்தப்படுகின்றனவா என்று அவர்கள் கண்டறிகின்றனர். மேலும் அவர்கள் சிறைகளைப் பார்வையிட்டு சிறைவாசிகளைச் சந்தித்து குறைகளையும் கேட்கின்றனர்.

### (கா) சிறைவாசிகளுக்கான நலப் பணிகள்

*52.* சிறைவாசிகளின் நலனுக்காக, எட்டு மத்திய சிறைகள் ஒவ்வொன்றிற்கும் ஒரு நல அலுவலர் வீதமும், வேலூரிலுள்ள பெண்கள் தனிச் சிறை மற்றும் புதுக்கோட்டை சீர்திருத்தப்பள்ளியில் ஒவ்வொரு நல அலுவலர் வீதமும் உள்ளனர். இந்த நல அலுவலர்கள், சிறையின் நடைமுறை விதிகளுக்கேற்ப சிறைவாசிகளுக்கு அவ்வப்போது வேண்டிய உதவிகளை அளித்து வருகின்றனர். அவர்களுடைய உறவினர்களுடன் கடிதத் தொடர்புகொள்ள உதவி செய்தும் வருகின்றனர். மேலும், தனிப்பட்ட முறையில் மேல்முறையீடு செய்ய வசதி இல்லாத சிறைவாசிகளுக்கு மேல்முறையீடு செய்யவும் உதவி செய்கின்றனர்.

*53.* பெண் சிறைவாசிகளின் குழந்தைகள் 6 வயதுக்குள் இருந்தால், அக்குழந்தைகள் தாயோடு சிறையில் வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுகின்றனர். அக்குழந்தைகளுக்காக வேலூர் மகளிர் தனிச் சிறையில் குழந்தைகள் காப்பகம் ஒன்று செயல்பட்டு வருகிறது. அக்குழந்தைகள் 6 வயது அடைந்தவுடன் அவர்களை சரியான முறையில் வைத்து பராமரிக்க எவரும் முன்வராவிட்டால், சென்னையில்



உள்ள பாலமந்திர் மருத்துவமனைக்கும், மதுரை காந்திகிராமத்திலுள்ள சிறுவர் இல்லத்திற்கும் அனுப்பப்படுகின்றனர். தற்போது தாம்பரத்திலுள்ள எஸ்.ஓ.எஸ். கிராமத்தில் சிவானந்தா அனாதை இல்லத்தில் சிறைவாசிகளின் குழந்தைகளை கவனித்துக்கொள்ள அனுமதிக்கப்படுகிறது. ஒவ்வொரு மத்திய சிறையிலும் பண்பாட்டுக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இந்தப்பண்பாட்டுக் குழு சிறைவாசிகளின் நன்மைக்காக சிறை வளாகத்திற்குள் கால முறைப்படி வெளியில் உள்ளவர்களைக் கொண்ட பலவகைக் கேளிக்கை நிகழ்ச்சிகளை நடத்த ஏற்பாடு செய்வதோடு திரைப்படமும் காட்டுகிறது. அனைத்து மத்திய சிறைகளிலும் திரைப்படம் காட்டும் கருவிகள் உள்ளன.

*54.* மத்திய சிறைகள் அனைத்திலும் சிறைவாசிகளுக்காக சிற்றுண்டி விடுதிகள் செயல்பட்டு வருகின்றன. தங்கள் கணக்கில் பணம் வைத்திருக்கும் சிறைவாசிகளும் பணிக்கொடையும் ஊதியமும் ஈட்ட இயலும் சிறைவாசிகளும் அனைத்து மத்திய சிறைகளிலுமுள்ள இந்த சிற்றுண்டி விடுதி வசதியைப் பயன்படுத்த அனுமதிக்கப்படுகின்றனர். இத்திட்டத்தின்கீழ், 'ஏ' வகுப்பு சிறைவாசிகள், தனி வகுப்பு விசாரணை மற்றும் விசாரணையை எதிர்நோக்கியுள்ள சிறைவாசிகள், தனி வகுப்பு தடுப்புக் காவல் சிறைவாசிகள் ஆகியோர் சிறை தேநீர் விடுதியிலிருந்து காபி, தேநீர், பன், பிஸ்கட் மற்றும் இதர பொருட்கள் வாங்கும்பொருட்டு அனுமதி அளிக்கப்பட்ட தொகையின் உச்ச வரம்பு 1996 ஆம் ஆண்டு அக்டோபர் முதல் ரூ.45இல் இருந்து ரூ.75ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இதேபோல 'பி' வகுப்பு சிறைவாசிகள் சாதாரண விசாரணை சிறைவாசிகள் மற்றும் விசாரணையை எதிர்நோக்கியுள்ள சிறைவாசிகள் ஆகியோர் சிறை தேநீர் விடுதியிலிருந்து காபி, தேநீர், பன், பிஸ்கட் ஏனைய பொருட்கள் வாங்க அனுமதிக்கப்பட்ட தொகையின் உச்ச வரம்பினை ரூ.30இல் இருந்து ரூ.45ஆகவும் உயர்த்தி ஆணை வழங்கப்பட்டுள்ளது.

*55.* மரண தண்டனை சிறைவாசிகளைக் காண வரும் அவருடைய நெருங்கிய உறவினர்களுக்கு போக்குவரத்துச் செலவினை அளிப்பதற்கு அனைத்து மத்திய சிறை கண்காணிப்பாளர்களுக்கும், சீர்திருத்தப் பள்ளி, புதுக்கோட்டை, பெண்கள் தனிச் சிறைச்சாலை, 'வேலூர் மற்றும் திருச்சிராப்பள்ளி கண்காணிப்பாளர்களுக்கும் அரசு அனுமதி வழங்கியுள்ளது. இச்சலுகை, சிறைவாசியின் தந்தை, தாய், மனைவி, கணவன், மகன், மகள், சகோதரன், சகோதரி போன்ற ஐந்து நெருங்கிய

உறவினர்களுக்கு மட்டுமே அனுமதிக்கப்பட்டுள்ளது. இப்பயணச் செலவு, இம்மாநிலத்திற்குள் சாலை வழியாக அல்லது புகைவண்டி மூலம் குறுகிய வழித்தடத்தில் குறைந்தபட்ச வகுப்பில் பயணம் செய்வதற்கு மட்டும் வழங்கப்படும். இச்சலுகை பல்வேறு சிறைகளில் மரண தண்டனை பெற்ற குற்றவாளிகளின் நெருங்கிய உறவினர்கள் அவர்களை மரண தண்டனை நிறைவேற்றுவதற்கு முன் சென்று பார்ப்பதற்காக அரசால் அனுமதிக்கப்படுகிறது.

**(கி) தியானப் பயிற்சி மற்றும் சிறப்பு நிகழ்ச்சிகள்**

56. வேலூர் மத்திய சிறை மற்றும் வேலூர் பெண்கள் தனிச் சிறை ஆகியவை மாதிரி சிறைகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு அவ்விடங்களில் கீழ்க்கண்ட நிகழ்ச்சிகள் தொடங்கப்பட்டுள்ளன:-

(1) 'விபாசனத்' தியானப் பயிற்சி முறைக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. விபாசனா மையங்களில் பயிற்சி பெற்ற நபர்கள் இந்த வகுப்புகளை நடத்துகின்றனர்.

(2) இராஜயோகப் பயிற்சி, பிரஜபிதா பிரம்மகுமாரி பயிற்சி நிறுவனத்தின் மூலம் அளிக்கப்படுகிறது.

(3) உளவியல் வல்லுநர் மூலம் போதைப் பொருள் அடிமைப் பழக்கத்திலிருந்து விடுதலை பெற பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

(4) சிறைவாசிகளுக்கு முதியோர் கல்வி அறிவு புகட்டும் பணியினை அறிவொளி இயக்கம் ஏற்றுக்கொண்டுள்ளது.

**(கீ) விடுதலை அடைந்த சிறைவாசிகளுக்கு புதுவாழ்வு அமைப்புப் பணிகள்**

**(1) தமிழ்நாடு விடுதலை பெற்ற சிறைவாசிகள் உதவிச் சங்கம்**

57. தமிழ்நாடு விடுதலை பெற்ற சிறைவாசிகள் உதவிச் சங்கம் 1921ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது. விடுதலையாகும் சிறைவாசிகளுக்கு அவர்களுக்குத் தேவையான உதவிகள் செய்து கொடுத்து, அவர்கள் புதுவாழ்வைத் தொடங்க உதவுவதே இதன் முக்கிய நோக்கமாகும். தற்செயலாகக் குற்றம் புரிபவர்களும், இளங்குற்றவாளிகளும் கைதேர்ந்த குற்றம் புரிபவர்களாக மாறுவதைத் தடுக்கும் நோக்குடன் விடுதலை செய்யப்பட்டவர்கள் சிறுதொழில் நடத்தவும், கருவிகள், தேநீர், கெட்டில், தையல் இயந்திரங்கள் ஆகியவற்றை வாங்குவதற்கும், இச்சங்கம் உதவி வழங்குகிறது.





தொழில்களில் பயிற்சி பெறுவதற்கு கடன்கள் வழங்கப்படுகின்றன. வேலைவாய்ப்பைத் தேடிக்கொள்ள நிதி உதவி அளிக்கப்படுகிறது. இது சட்ட உதவி அளிப்பதோடு விடுதலை அடைந்தவர்கள் முதியோர் உதவிப் பணம் பெறுவதற்கும் உதவுகிறது. ஆடைகள், மூக்குக் கண்ணாடிகள் போன்றவற்றையும் விடுதலையான சிறைவாசிகளுக்கு வழங்குகிறது. அரசு இச்சங்கத்திற்கு ஆண்டொன்றுக்கு உதவி மானியமாக ரூ.18,000/- வழங்குகிறது.

**(2) விடுதலையாகும் சிறைவாசிகளுக்கு நிதியுதவி**

58. சிறைச்சாலைகளிலிருந்து விடுதலை செய்யப்பட்ட சிறைவாசிகளுக்கு நிதியுதவி அளிக்கும்பொருட்டு 1994-95 ஆம் ஆண்டிலிருந்து ஒதுக்கீட்டுத் தொகையை அரசு, ரூபாய் ஒரு இலட்சத்திலிருந்து ரூபாய் பத்து இலட்சமாக உயர்த்தியுள்ளது. தற்பொழுது, இந்தத் தொகையைச் சிறைவாசிகளுக்கு எவ்வாறு பயன்தரத்தக்க முறையில் வழங்கலாம் என்பதற்கான திருத்த வரைமுறைகள் வகுக்கப்பட்டு வருகின்றன. விடுதலை செய்யப்பட்ட சிறைவாசிகள் பயனுக்காக இத்தொகை செலவிடப்படும்.

**X. சிறையிலுள்ள தொழிற்கூடங்களிலும், தொழில்களிலும் சிறைவாசிகளைப் பயன்படுத்துதல்**

59. சிறைவாசிகளுக்கு மறுவாழ்வு அளிக்கும் நோக்கத்துடன், அவர்களுக்கு சிறையிலுள்ள தொழிற்சாலைகளில் தொழிற்பயிற்சி அளிக்கப்படுகின்றது. கடுந்தண்டனை விதிக்கப்பட்டுள்ள சிறைவாசிகள், விருப்பப்படும் காவல் வைப்பில் உள்ள சிறைவாசிகள், விசாரணை சிறைவாசிகள் ஆகியோர் இந்த சிறைத் தொழிற்சாலைகளில் வேலை செய்வதோடு அதற்கான ஊதியமும் பெறுகின்றனர். இவ்வாறு செய்வதால், சிறைவாசிகள் விடுதலை அடைந்த பின்பு தாங்களே தங்கள் புதுவாழ்வினை அமைத்துக்கொள்ள அவர்களுக்கு இப்பயிற்சி உதவியாக இருக்கும். சிறைகளில் கடின உழைப்பு, நடுத்தர உழைப்பு, எளிய உழைப்பு வேலைகள் என சிறைவாசிகளுக்கு மருத்துவ அலுவலரின் ஆலோசனையின்படியே, வேலை கொடுக்கப்படுகிறது. சிறைவாசிகள் விடுதலைக்குப்பின் அவர்களுக்கு உதவியாக இருக்கும் வகையில் தச்சு வேலை, தையல் வேலை, நெசவு வேலை, சாயம் தோய்த்தல், கருமார் வேலை, தோல்பொருட்கள் செய்யும் பணி, புத்தகம் கட்டுதல், காகிதம் தயாரித்தல், சோப்புத் தயாரித்தல் மற்றும் பினாயில் தயாரித்தல் ஆகிய தொழில்கள் கற்றுக் கொடுக்கப்படுகின்றன.

[1999 ஏப்ரல் 16

நவீன வேளாண்மை முறைகள், பால்பண்ணை ஆகிய தொழில்களிலும், அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. தமிழ்நாடு சிறை சீர்திருத்தக் குழு செய்த பரிந்துரையின் அடிப்படையில், எட்டு மத்திய சிறைகளிலும், புதுக்கோட்டையிலுள்ள சீர்திருத்தப் பள்ளியிலும் உள்ள சிறைவாசிகளுக்கு கீழ்க்காணும் எளிய புதிய தொழில்பயிற்சிகள் கற்றுக்கொடுக்கப்படுகின்றன:-

| | |
|---|---|
| 1. செங்கல் கட்டுமானத் தொழில் | மத்திய சிறை, வேலூர் |
| 2. குழாய்களை பழுதுபார்த்து இணைத்தல் | மதுரை, சேலம், திருச்சிராப்பள்ளி பாளையங்கோட்டை ஆகிய மத்திய சிறைகள். |
| 3. எளிய மின் இணைப்புப் பயிற்சி | சென்னை, கடலூர் மத்திய சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பள்ளி, புதுக்கோட்டை. |
| 4. வண்ணம் பூசுதல் (விளம்பரப் பலகை எழுதுதல் உட்பட) | கோயம்புத்தூர், மத்திய சிறை |

கோயம்புத்தூர் மத்திய சிறையில், நெசவுப் பிரிவு மற்றும் சாயப் பிரிவு ஆகியவற்றுடன் சிறைவாசிகளால் நடத்தப்படும் துணி நூல் ஆலை ஒன்று உள்ளது. இந்த சிறைத்தொழில் பிரிவுகளில் சுமார் ஐந்து இலட்சம் சிறைவாசிகள் வரை வருடந்தோறும் பணியில் ஈடுபடுத்தப்படுகின்றனர். அரசு, சிறைத்துறையை "பணித்துறையாக" அறிவித்துள்ளது. எனவே, சிறைத்தொழில் பிரிவுகளில் செய்யப்பட்டு பல்வேறு அரசுத் துறைகளுக்கு அனுப்பப்படும் பொருட்களுக்கு தொகை ஏதும் செலுத்த வேண்டியதில்லை. இதனால், இந்தச் சிறைத் தொழிற்கூடங்களில் தயாரிக்கப்படும் பொருட்களைப் பயன்படுத்தும் துறைகளிடமிருந்து தேவைப்பட்டியல்களை சிறைத்துறை அதிக அளவில் பெறுகின்றது. இதனைத் தொடர்ந்து சிறைத்தொழிற்கூடங்களில் உற்பத்தியும் அதிகரித்துள்ளது. சிறைத் தொழிற்பிரிவுகளின் ஆண்டு சராசரி உற்பத்தி மதிப்பு சுமார் ரூ.4 கோடி எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

60. வேலூர், பெண்கள் தனிச்சிறையிலுள்ள இருபது பெண் சிறைவாசிகளுக்கு ஒவ்வோராண்டும் வேலூர் நேரு யுவகேந்திரா பயிற்சி



1999 ஏப்ரல் 16]

ஆசிரியர்கள் மூலம் தையல் பயிற்சி அளிக்கப்படுகிறது. அத்தொழில்களில் தேர்ச்சி பெற்றவர்கள், அரசினர் தொழில் நுட்பத் தேர்வுக்கு அனுப்பப்படுகின்றனர். இத்தகைய பயிற்சி இனங்கள் அனைத்திலும், ஓராண்டில் சராசரியாக 1000 சிறைவாசிகளுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

61. அனைத்து மத்திய சிறைகளிலும், புதுக்கோட்டையிலுள்ள சீர்திருத்தப் பள்ளியிலும் மற்றும் வேலூர் மற்றும் திருச்சிராப்பள்ளியிலுள்ள பெண்கள் தனிச் சிறைகளிலும் சிறைவாசிகள் ஊதியம் ஈட்டும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. சிறையிலுள்ள தொழில் பிரிவுகளில் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ள சிறைவாசிகள் தங்கள் தொழில் திறமைக்கேற்ப இத்திட்டத்தின்கீழ் வழங்கப்படுகின்ற ஊதிய வீதங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:-

| | |
|---|---|
| 1. தேர்ச்சி பெற்றவர் | ரூ.6.00 |
| 2. ஓரளவு தேர்ச்சி பெற்றவர் | ரூ.4.00 |
| 3. தேர்ச்சி பெறாதவர் | ரூ.2.00 |

சிறைவாசிகளின் ஊதிய வீதத்தை உள் துறையின் 4-1-1998 ஆம் நாளிட்ட 4 ஆம் எண் அரசாணை (நிலை) யில் கீழ்க்கண்டவாறு மாற்றம் செய்து அரசு ஆணையிட்டுள்ளது.

| | |
|---|---|
| 1. தேர்ச்சி பெற்றவர் | ரூ.10.00 |
| 2. ஓரளவு தேர்ச்சி பெற்றவர் | ரூ.6.00 |
| 3. தேர்ச்சி பெறாதவர் | ரூ.3.00 |

(துப்புரவுப் பணியாளர்கள் உட்பட)

இவ்வூதியம் ஈட்டும் திட்டம் சிறைவாசிகள் பொருளீட்டவும் தங்களால் சேமிக்கப்பட்ட இந்தப் பணத்தினை விடுதலைக்குப்பின் பிற்கால வாழ்க்கைக்குப் பயன்படுத்தவும் உதவும்.

**XI. முடிவுரை**

62. மேலேயுள்ள பத்திகளில் கொடுக்கப்பட்டுள்ள விவரங்களில் இருந்து சிறை நிருவாகத்தை நவீனமயமாக்கும் திட்டத்தின்கீழ், இம்மாநிலச் சிறை நிருவாகத்தை நவீனப்படுத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பது தெளிவாகும். பத்தாவது நிதிக் குழுவின் பரிந்துரையின்கீழ், மத்திய

[1999 ஏப்ரல் 16

அரசு அளிக்கும் சிறைகள் மேம்பாட்டுக்கான மானியத்தைக் கொண்டு வரும் ஆண்டுகளில் இந்நிறுவனங்கள் மேலும் வலுப்படுத்தப்படும். சிறைவாசிகள் மறுவாழ்வுக்கும் சீர்திருத்தத்திற்கும் முக்கியத்துவம் அளித்து, அவர்கள் விடுதலை அடைந்த பின்னர் சட்டத்திற்கு கட்டுப்பட்டு நடப்பவர்களாகவும், சமுதாயத்திற்குப் பயனுள்ளவர்களாகவும் வாழும்பொருட்டு, அவர்களைச் சீர்திருத்தி அவர்கள் இடர்பாடின்றி சமுதாயத்தோடு ஒன்றுகலந்து நல்வாழ்வினைத் தொடங்கி வாழச் செய்வதே இத்திட்டங்களைச் செயல்படுத்துவதன் நோக்கமாகும்.




1999 ஏப்ரல் 16]

## இணைப்பு

**(இனம் II-ஐக் காண்க)**

சிறைத்துறையின் நிர்வாக அமைப்பு வரைபடம்




1. சிறைத்துறைத் தலைவர்
2. சிறைத்துறைத் துணைத் தலைவர், (தலைமையிடம்)
3. சிறைத்துறைத் துணைத் தலைவர், சென்னை சரகம்.
4. சிறைத்துறைத் துணைத் தலைவர், திருச்சிராப்பள்ளி சரகம்.
5. சிறைத்துறைத் துணைத் தலைவர், கோவை சரகம்.
6. சிறைத்துறைத் துணைத் தலைவர், மதுரை சரகம்.
7. தலைமை நன்னடத்தைக் கண்காணிப்பாளர்.

[1999 ஏப்ரல் 16

8. மத்தியசிறை சென்னை, கிளைச்சிறைகள், செங்கற்பட்டு, காஞ்சிபுரம் ஆண்கள் பிற்காப்பு இல்லம், புழல், சென்னை மற்றும் மத்தியசிறை வேலூர், மகளிர் தனிச்சிறை, வேலூர், திருவண்ணாமலை மற்றும் வேலூர் மாவட்ட கிளைச்சிறைகள். சிறைக் காவலர் பயிற்சி பள்ளி வேலூர்.

**9. தலைமையக அலுவலகம்.**

10. மத்தியசிறை திருச்சிராப்பள்ளி, தனிக்கிளைச்சிறை, திருச்சிராப்பள்ளி பெண்கள் தனிச்சிறை, திருச்சிராப்பள்ளி, கிளைச்சிறைகள் திருச்சிராப்பள்ளி, கடலூர் மத்திய சிறை, கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்ட கிளைச்சிறைகள், புதுக்கோட்டை பார்ஸ்டல் பள்ளி, தஞ்சாவூர் நாகப்பட்டினம் மற்றும் புதுக்கோட்டை மாவட்ட கிளைச்சிறைகள்.

11. மத்திய சிறை, கோவை திறந்த வெளிச்சிறை, சிங்காநல்லூர் தனிக்கிளைச்சிறை, கோவை, கோவை, பெரியார் மற்றும் நீலகிரி மாவட்ட கிளைச்சிறைகள் மத்தியசிறை, சேலம், தனிக் கிளைச்சிறை, சேலம், சேலம் நாமக்கல் மற்றும் தர்மபுரி மாவட்ட கிளைச்சிறைகள்.

12. மத்தியசிறை, மதுரை, மதுரை, இராமநாதபுரம், விருதுநகர், திண்டுக்கல் மற்றும் சிவகங்கை மாவட்ட கிளைச்சிறைகள், மத்தியசிறை, பாளையங்கோட்டை, தனிக்கிளைச்சிறை, கொக்கிரக்குளம், திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்ட கிளைச்சிறைகள்.

13. மண்டல நன்னடத்தை அலுவலர்கள்.

14. நிர்வாகம்

15. கணக்குகள் மற்றும் தணிக்கை

16. சிறைத்துறைத் தலைவரின் நேர்முக உதவியாளர்

17. கணக்கு அலுவலர்

18. நன்னடத்தை அலுவலர்கள்.

221078



அரசு மைய அச்சகம், சென்னை-600 079.

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
816, Anna Salai,
Chennai-600 002.

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.